வடமொழி இலக்கிய வழிகாட்டி

வேதம் முதல் இன்று வரை



A.V.சுப்பிரமணியம்

– வடமொழி –

இலக்கிய வழிகாட்டி

[வேதம் முதல் இன்று வரை]

அ.வெ. சுப்பிரமணியன்

கலா நிலையம்

244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

உரிமை பதிப்பு

முதற் பதிப்பு - 2003.

© ஆசிரியர்

விலை :ரூ. 60.00

Laser Typeset by : Sri Viknesh Graphics, Chennai - 14

Printed at Jai Ganesh Offset Printers, Chennai-4

முன்னுரை

பாரத சமுதாயத்தின் மூச்சுப் போன்றது சம்ஸ்கிருத மொழி. அதன் இலக்கியத்தைத் தமிழ் மக்கள் மிக எளிதில் சுவைத்து இன்பம் பெறக்கூடும். ஆயினும், போதிய மொழி அறிவு இல்லாமையினால் சம்ஸ்கிருத இலக்கியத்தைச் சுவைக்க முடியாதவர் களுக்கு உதவக்கூடும் என்ற கருத்திலே இச்சிறு நூலைத் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

தமிழ் இலக்கியம் படித்தவர்கள் இந்நூலைச் சுவைக்கப் பின்னும் உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில் அங்கங்கே தமிழ் இலக்கியத்தி லிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டிருக் கின்றன. இது நூலின் இலக்கியச் சுவையைச் சிறிது பெருக்கி நூலை வளமாக்கும் என்பது என் நம்பிக்கை.

இலக்கிய இன்பம் ஊட்டுவதே இந்நூலின் லட்சியம் என்றாலும், சம்ஸ்கிருத இலக்கியத்தைப் பற்றிய செய்திகளை, வேதத்திலிருந்து இன்றையக் கவிதைவரை விரிந்திருக்கும் இலக்கியத்தின் சாரமான கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவதும் இந்நூலின் நோக்கமே. சம்ஸ்கிருத மொழியில் உள்ள மந்திரங்களும், தோத்திரங்களும் பாமர மக்களுக்கு அறிமுகமானவை. மனமொத்த

காதலும், பிரிவும், ஊடலும், இல்வாழ்க்கையும் இம்மொழியில் பாடப் பட்டிருக்கின்றன என்பதை இந்நூலின் முகத்தால் காட்டியிருக்கிறேன். இறவாத அமர வாழ்க்கையைப் பற்றிக் கூறுவ தோடு பிறப்பு இறப்பினிடையே மனிதன் நடத்தும் போராட்டமும் சம்ஸ்கிருத இலக்கியத்திற்கு இலக்காகும் பொருள் என்பதைச் சித்தரித்து இருக்கிறேன்.

1956 இல் நான் எழுதி அல்லயன்ஸ் வெளியிட்ட நூல் மேலும் விரிவாக்கி வெளி வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். சம்ஸ்கிருத இலக்கியத்தின் வரலாறு தமிழ் மக்களுக்குப் புலப்படும் வகையில் இதில் சுவைகுறையாது வழங்கப்பட்டிருக்கிறது. 1956க்குப் பிறகு வெளியான சம்ஸ்கிருத நூல்களைப் பற்றிய குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த 47 ஆண்டுகளில் எனக்குள் வளர்ந்த அனுபவ ஞானத்தைக் கொண்டு அங்கங்கே திருத்தி அழகு சேர்க்க முயற்சி செய்திருக்கிறேன். தமிழ் வாசகர்களுக்குப் பயன்படும் என்ற நம்பிக்கையில் இது வெளியிடப் பெறுகிறது. அல்லயன்ஸ் கம்பனியின் புதிய தலைவர் திரு சீனிவாசனுக்கு என் நன்றி, அவருடைய உற்சாகமும் திறமையும் தமிழின் வளர்ச்சிக்குப் பெருமளவு ஊக்கம் அளிக்கின்றன. அவை இன்னும் பெருகட்டும்! தமிழ் நூல்களின் வளர்ச்சி இன்னும் உயர்வதாக!

தமிழ் நாட்டில் சம்ஸ்கிருத மொழியறிவு பரவ வேண்டும். அதன் இலக்கியத்தைத் தமிழ் மக்கள் பெருவாரியாகப் படித்துச் சுவைக்க வேண்டும்.

இவற்றின் பயனாகத் தமிழ் மொழியும் இலக்கியமும் வளம்பெற்று வளரும் என்பது உறுதி. இவ்வாறு தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றுக் கொன்று சார்வாய், அன்றுபோல் இன்றும் இசைந்து சமுதாயத்துக்குத் தொண்டாற்ற வேண்டும். இந்த நோக்கத்துடன் இச்சிறு நூலை மொழியன்பிலே சிறந்த தமிழ் மக்களுக்கு எனது அன்பின் காணிக்கையாக அளிக்கின்றேன்.

அ. வெ. சுப்பிரமணியன்

பொருளடக்கம்

1.	அழியா இலக்கியம்	-	7
2.	வேத இலக்கியம்	-	12
3.	ராமாயணம்	-	28
4.	மகாபாரதம்	-	54
5.	பழமையான சமய நூல்கள்	-	73
6.	புதிய இலக்கியத்தின் பொது இயல்புகள்	-	82
7.	காளிதாசன்	-	95
8.	நாடக இலக்கியம்	-	132
9.	காவியம்	-	160
10.	நீதி இலக்கியம்	-	183
11.	அன்பிலக்கியம்	-	197
12.	இன்றைய நிலை	-	221

1. அழியா இலக்கியம்

உமையின் தாளத்துக்கு ஏற்பச் சிவபெருமான் நடனம் ஆடும்போது அவன் உடுக்கையினின்றும் வெளிப்பட்டது சம்ஸ்கிருத மொழி; இம்மொழியைத் தேவர்கள் தம் பேச்சிலே வழங்குகிறார்கள்; பாரத மக்களின் உள்ளத்தில், ஆழத்திலே ஊறிக் கிடக்கும் நம்பிக்கைகள் இவை. தோற்றத்திலேயே இறைவனின் சம்பந்தம் பெற்றதாலும், தேவர்களின் பேச்சு வழக்கில் இருந்து வருவதாலும் சம்ஸ்கிருத மொழி அமரபாரதி என்ற பெயரோடு வழங்குகின்றது; அமரர்களைப் பற்றிய துதிகள் நிரம்பிய வேதங்களும் மற்ற நூல்களும் சம்ஸ்கிருதத்தில் அமைந்திருப்பதாலும் இதை அமர மொழி என்று அழைக்கின்றோம். அமர மொழியின் இலக்கியமே அமர இலக்கியம். காதலைப் பேசினாலும், நீதியைப் போதித்தாலும், இறவாத அமர வாழ்வினை மனிதன் பெறவேண்டும் என்ற லட்சியத்தை விடாமல் வற்புறுத்தும் இவ்விலக்கியம் என்று சிறப்பாக வழங்கப்படும்.

உலக சரித்திரத்திலே பல இலக்கியங்கள் தோன்றி அழிந்து போயிருக்கின்றன. சில இலக்கியங்கள் கால வெள்ளத்தை எதிர்த்து உறுதியுடன் நிற்பதையும் நாம் காண்கிறோம். அழியும் இலக்கியங்களில் என்ன

குறைவு இருந்திருக்கும்? சாகாத இலக்கியத்தின் சிறப்பியல்புகள் என்ன என்ன? இலக்கியம் ஒரு லலித கலை. கலைகளெல்லாம் மனிதனின் அழகுணர்ச்சிக்கு உணவளித்து வளர்க்கின்றன. மனித உள்ளத்தில் அடிப்படையாக, பிறப்பிலிருந்து மரணம் வரையில் மாறாது, ஊறிக்கிடக்கும் இயல்புகளில் அழகுணர்ச்சியும் ஒன்று. சின்னஞ்சிறு குழந்தையிடம் நான்கு சோழிகளைக் கொடுத்தால் அவற்றைச் சதுரமாகவோ வேறு வகைகளிலோ ஏதோ ஓர் ஒழுங்குக்கு உட்படுத்தி அமைத்து விடும். சிற்றில் சமைப்பதும் வர்ணச் செப்புகளைச் சேமிப்பதும் இதன் தூண்டுதலால் செய்யப்படுபவையே. வயது முதிர, முதிர, அநுபவம் பெருகப் பெருக இவ்வழகுணர்ச்சி சித்திரம் வரைவது, சங்கீதம் பயில்வது, கவிதை பாடுவது என்ற துறைகளில் வெளிப்படுகிறது. குறைந்த அளவில் இதைப் பெற்றிருப்பவன் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதிலோ, அழகாக உடை உடுத்துக் கொள்வதிலோ தன் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகிறான். உடல் மறைந்த பின் உயிர் சென்றடையும் இடங்களிலும், நல்ல உயிர்கள் அழகு நிரம்பிய உலகுக்குப் போய் இன்பம் பெறுகின்றன. மற்றவை கொடுமையில் பட்டு அல்லல் உறுகின்றன என்று மனிதன் நம்புகிறான். இறைவனையே 'எழுதிக் காட்டொணாத' பேரழகு படைத்தவனாக அன்பு மனம் வழிபடுகிறது!

இவ்வுணர்ச்சிக்குப் போதிய உணவு அளிக்காத கலையை - இலக்கியத்தை - மனித உள்ளம் புறக்

கணித்து விடுகிறது. அழகுணர்ச்சிக்கு ஊட்டம் அளித்துப் பெருக்கி, வாழ்வைக் கலைமயமாக்கி விடும் இலக்கியம் சாகாது, அமரத்தன்மை பெற்றுக் காலத்தை எதிர்த்து நிற்கிறது.

இந்நோக்கில் பார்க்குமிடத்து, சம்ஸ்கிருத இலக்கியம் அழியாத இலக்கியம் என்பது உண்மை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து பெருகி வாழ்ந்து வருகின்றது. இவ்விலக்கியம். படிப்பவர் களின் எண் இன்று குறைந்துவிட்ட போதிலும் அது அவர்கள் உள்ளத்துக்கு இன்பம் ஊட்டத் தவறுவ தில்லை; அழகுணர்ச்சிக்கு உணவளித்து மனிதனை உணர்வுமயமாக்கும் திறனை அது இழந்து விட வில்லை. வேத காலத்துக் கவி - முனிவர்களின் இதயத்தில் தோன்றிய கவிதை மலர்கள் நீராவி யுகம்- அணுக்குண்டின் சகாப்தம் - என்று வழங்கும் இந்நாளிலும் வாடாது எங்கும் மணம் வீசுவதைக் காண்கிறோம்.

சம்ஸ்கிருதச் சொற்கள் வட நாட்டுப் பேச்சு மொழிகளிலும் விரவி வருவதை இவ்வாசிரியர் நேரிடையாக உணர்ந்திருக்கிறார். தென்னாட்டு மொழிகளிலும் இவை வெகுவாகப் பயன்படுத்தப் பெறுகின்றன. தமிழில் இவை எண்ணிக்கையில் குறைவு என்றாலும் பேச்சில் சம்ஸ்கிருத சொற்கள் அங்கங்கே குமிழிட்டு வருவதைக் காண்கிறோம். கேரளத்தின் சிறந்த பேச்சாளர் ஒருவர் உயர்ந்த தரத்து இலக்கிய மலையாளத்தில் பேசியதை இவ்வாசிரியர் கேட்க நேர்ந்தது; மலையாள மொழியறிவு சிறிதும்

இல்லாவிடினும் அவருடைய உரையை இவரால் பொருள் தெரிந்து சுவைக்க முடிந்தது. தெலுங்கிலும் கன்னடத்திலும் அப்படித்தான். சிறப்பாக சம்ஸ்கிருதப் பெயர்ச் சொற்களை இம்மொழியாளர்கள் அப்படியே பயன்படுத்துகிறார்கள்.

பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் தமிழில் இயற்றப்பட்ட நூல்களில் சம்ஸ்கிருத மொழியின் தாக்கம் மிகுதியாக இருப்பதை நாம் காண்கிறோம். அருணகிரிநாதர் தமது கந்தரனுபூதியில்

உல்லாஸ நிராகுல யோக இதச்
சல்லாப விநோதனும் நீயலையே

என்று பாடுவார். அவருடைய திருப்புகழிலும் இவ்வாறே சம்ஸ்கிருதச் சொற்கள் விரவி வருவதைக் காணலாம். வில்லி பாரதத்திலும் மற்றும் தூது, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங் களிலும் இவ்வாறே சம்ஸ்கிருதத்தின் ஆதிக்கத்தைக் காண முடிகிறது. சங்க இலக்கியத்தில் சம்ஸ்கிருதத்தின் தாக்கம் மிகக் குறைவாகவே இருந்தது. காலத்தின் போக்கில் இது வளர்ந்து 19ம் நூற்றாண்டு வரை மிக அதிகமாகவே இருந்து வந்தது.

சம்ஸ்கிருதம் பாரதத்தின் மிகத் தொன்மையான செம்மொழி (Classical language). மேனாட்டவர்க்குக் கிரேக்க, லத்தீன் மொழிகளும், யூதர்களுக்கு ஹீப்ரு மொழியும், அரேபியா போன்ற பல நாட்டு மக்களுக்கு அரபு மொழியும் செம்மொழியாகப் போற்றப் பட்டு வருகின்றன. இது போலவே

சம்ஸ்கிருதம் பாரத நாட்டின் செம்மொழியாகப் போற்றப்பட வேண்டும். பயிலப்பெறவேண்டும். பாரதத்தின் மொழிகளுக்கு- தமிழ், தெலுங்கு, இந்தி போன்றவற்றுக்கு எவ்வகை இடையூறும் ஏற்படாது. இது உறுதி. சம்ஸ்கிருதத்தைச் செம்மொழியாகப் பயில்வதால் பேசும் மொழிகளுக்கு ஊட்டம் கிடைக்கும் என்பதே மெய்யான நிலை.

இத்தகு சிறப்புகளும் பெருமையும் பழமையும் நிறைந்த சம்ஸ்கிருத மொழியின் இலக்கியத்தை அந்த மொழி பயிலாத வாசகர்கள் சுவைத்து இன்புற வேண்டும் என்ற பேராவலின் உந்துதலினால் இவ்வாசிரியர் இந்த நூலில் அதன் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக அளிக்க முன்வந்துள்ளார். 3000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்து வந்து இவ்விலக்கியத்தை 300 பக்கங்களுக்குள் வழங்க முயல்வது எளிதான பணியல்ல; பற்பலவற்றை விட்டு விடும்படியாக நேரிடும் என்பதை இவ்வாசிரியர் உணர்ந்திருக்கிறார். இதற்காக அவரை மன்னித்து, வழங்கப் பட்டதைச் சுவைத்து இன்புற வேண்டும் என்று வாசகப் பெருமக்களை அன்புடன் ஆசிரியர் அழைக்கின்றார்.

2. வேத இலக்கியம்

மனித வர்க்கத்தின் அருணோதயத்தில் தோன்றியது வேத இலக்கியம். எங்கும் இருள் சூழ்ந்து நின்ற அந்நாள் இங்கு பாரத தேசத்தில் வேதக் கவிதைகளைப் பாடிய நம் முன்னோர்கள் மனித சமுதாயத்தின் முதல் வழிகாட்டிகள் என்பதை மறுக்க முடியாது. எழுத்துத் தோன்றுவதற்கு முன்னால் தோன்றிய வாய்மொழியாக வழங்கி வந்தது வேதம். இதனால் தமிழில் 'எழுதாக்கிளவி' என்று குறிக்கப் பட்டது. மிகப் பழந்தமிழ் இலக்கியத்திலும் வேதத்தின் தொன்மைப்பற்றிப் பல குறிப்புக்களைக் காணலாம். முதற் சங்ககாலத்துப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் வேதத்தில் கூறப்பட்டுள்ள முத்தீ வழி பாட்டினைப் பற்றிப் பாடியிருக்கிறார்.

"அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீவிளக்கில் துஞ்சும்....." [புறநானூறு]

சிவபெருமானின் கழுத்திலுள்ள கறை 'மறை நவில் அந்தணர் நுவலகம் படுமே' (புறம்) என்றும், விஷ்ணு 'வேதமுதல்வன்' (நற்றிணை) என்றும் பாரதம் பாடிய பெருந்தேவனார் குறிப்பிடுவது வேதங்களின் பழமையைக் காட்டுகின்றது.

இந்தப் பழைய இலக்கியம், இது தோன்றிய காலம், உள்ளடங்கிய பொருள் முதலியவைபற்றி நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிலெல்லாம் மிகப் பழையது ரிக்வேதம். ரிக்வேதம் முழுதும் கவிதையாகவே அமைந்திருக்கிறது. ரிக்வேதச் செய்யுட்களைப் பின் தோன்றிய மற்ற மூன்று வேதங்களும் மிகுதியாகப் பயன்படுத்திக் கொண்டன. ஒரு தத்துவத்தை நிலை நாட்டுவதற்கு ஏற்ற காரணங்களைக் கூறும் பகுதிகளில் யஜுர் வேதம். "இதற்கு ரிக்வேதத்தில் சான்று உள்ளது" என்று முடிவாகக் கூறும்; இப்பழக்கத்தினால் அந்நாளில் ரிக்வேதத்துக்கு என்ன மதிப்புக் கொடுத்து வந்தார்கள் என்பதை உணர்கிறோம்.

வேத இலக்கியம் மிகத் தொன்மையானது என்றும், அதில் முதலில் தோன்றியது ரிக்வேதமே என்றும் சொல்வதனால், மனிதனின் அறிவு பண்படாத காலத்தில் ஏதோ அரைகுறையாக அவன் மனம் கவிதை பாட முயன்றபோது வெளி வந்தவையே ரிக்வேதச் செய்யுட்கள் என்று நினைக்க இடமில்லை. இந்தக் கவிதையில் ஈடுபட்டவர்கள், "மனித ஜாதியின் மிக உயர்ந்த கருத்துக்கள் அழகு மிக்க சொற்களில் வடிக்கப்பட்டு, ரிக்வேதக்கவிதையாக அமைந்திருக்கின்றன" என்றே கருதுகிறார்கள். ஓர் உயர்ந்த நாகரிகத்தின் முதிர்ந்த பருவத்திலே பாடப்பட்ட கவிதையே ரிக்வேதம். ரிக்வேதச் செய்யுட்களில், "இவ்வாறே பழைய கவிகளும் கூறுவார்கள்" என்ற கருத்து அங்கங்கே விரவி வருகின்றது; இதனால்

ரிக்வேதம் இயற்றப்படுவதற்கு முன்பே கவிபாடும் மரபு நாட்டிலே இருந்திருக்க வேண்டும் என்றும், ரிக்வேத இலக்கியம் தோன்றிய காலத்தில் உலவி வந்த அப்பழைய செய்யுட்கள் நாளடைவில் மறைந்து போயிருக்க வேண்டும் என்றும் ஊகிக்கலாம். இதில் எடுத்தாளப்படுகின்ற சொற்களின் ஆழம், கவிபாடும் முறை, கருத்துக்களின் செறிவு, கவிதைகளின் மூலம் நமக்குத் தெரிய வரும் சமூகநிலை இவைகளை ஆராய்ந்து பார்த்தால் நெடு நாட்களாக வளர்ந்து வந்த ஓர் ஒப்பற்ற நாகரிகத்தின் இலக்கிய மலர்ச்சியே ரிக்வேதக் கவிதை என்பது தெளிவாகிறது.

ரிக்வேதத்தின் நோக்கம் பெரும்பாலும் இறைவனின் புகழ் பாடுவதே ஆகும். அக்கினி, சோமன், இந்திரன், வருணன் என்ற தேவர்களின் துதிப்பாடல்களே ரிக் வேதத்தில் விரவி வருகின்றன. இவை தவிர, தேவனின் பெயர் கூறாமல் ஆழ்ந்த தத்துவமாகப் பாடப்படும் இடங்களும் இருக்கின்றன. பொழுது விடிவதை வேதகாலத்து முனிவர்கள் அழகுத் தேவதையின் மலர்ச்சியாகவே கற்பனை செய்து பாடுகிறார்கள். சந்தியாதேவியைக் குறித்து இயற்றப் பட்ட இப்பாடல்கள் அழகிய கவிதையாக அமைந்துள்ளன. விடியற்காலைப் பொழுதையே ஓரழகிய பெண்ணாகச் சித்தரித்து வேதரிஷிகள் பாடிய பாடல்களுக்குள் ஒன்று:

"ஓரிளம்பெண் தன் அழகின் மிடுக்கோடு காதலனைக் காணச் செல்வதுபோல உஷஸ் ஆகிய தேவியே உன்னைக் காணத் தவித்திருக்கும்

தேவனைப் பார்க்க அவனுடன் கூடுவதற்காக நீ செல்கிறாய்! புன்முறுவல் செய்து கொண்டே இளவயதினளாகிய நீ உன் மார்பைத் திறந்து கொண்டு செல்கிறாய்!"

உஷஸ் என்னும் தேவியைக் குறித்துப் பாடப் பெற்ற சூக்தங்களில் காதற்சுவையைச் சித்தரித்து வேத ரிஷிகள் சிறப்பான கவிதையைப் புனைந்திருக்கிறார்கள்.

வேதகாலத்து ரிஷிகள் சிறந்த இலக்கிய அன்பர்கள்; விருத்தங்களில் ஒன்றாகிய காயத்திரியைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் இந்த இலக்கிய அன்பிலிருந்தே பிறந்தது. புலவர்களிற் சிறந்த புலவன் இறைவனே என்று இந்தக் கவி - முனிவர்கள் கருதினார்கள்.

"கவிகளுக்குள் உயர்ந்த கவி"

"கவிகளுக்குள் சிறந்தவன் என்று நின்னைக் கூறுவர்"

சிறந்த கவிஞன் இறைவன் என்றதோடு வேதம் நிற்கவில்லை; அவன் பிற கவிஞரின் படைப்பினை நுகர்ந்து அனுபவிப்பதில் நிகரற்றவன் என்பதையும் தெளியக்காட்டி விடுகிறது. 10ஆவது மண்டலத்தில் இந்திரனே கூறுவதாக அமைந்த ஒரு மந்திரத்தில் (பாடலில்):

தாய், கன்றுக்குப் பசி தோன்றியதை அறிந்து விரைவாக அதனிடம் வந்து பாலைக் கொடுக்கும். கன்றைப் போல் நான் கவிதைக்காகப் பசித் திருக்கிறேன். தாய் போல் கவிஞன் எனக்குக் கவிதைகளை அளித்து என் பசியை ஆற்றுகிறான்!

என்று பாடுவான்! அன்பன் இறைவனைப் பெரிதும் நேசிக்கிறான் என்பதை நான் அறிவோம். இது போன்ற பாடல்களின் வழியாக வேதம் நமக்குப் புகட்டும் வியத்தகு விளக்கம், "மனிதன் இறைவனை விரும்புவதை விட இறைவன் மனிதனைப் பன் மடங்கு மிகுதியாக நேசிக்கிறான்! அவனை ஆட் கொள்ளப் பெரிதும் விழைகிறான்!" என்பதாகும். இதே கருத்தினைப் பிற்காலத்தில் அன்பிலக்கியம் பாடிய நாயன்மாரும் ஆழ்வார்களும் சிறப்பாக விளக்கிக் கூறினார்கள். திருமால் பாற்கடலில் படுத்திருக்கிறான் என்பதும் திருப்பதி, திருவரங்கம் போன்ற தலங்களில் கோயில் கொண்டிருக்கிறான் என்பதும் உண்மையே. ஆனால் இதெல்லாம் எதற்காக என்பதை அறிய வேண்டும். திருமால் விரும்பும் இடம் மனிதனின் இதயக் கோயிலே அன்றி வேறல்ல. அங்கு வந்து அமர வாய்ப்பினை எதிர் பார்த்துக் கொண்டுதான் திருப்பதி, திருவரங்கம் போன்ற இடங்களில் தங்கியிருக்கிறான். சிறிதளவு மனிதன் அவன்மேல் அன்பு காட்டினால் போதும்! இறைவன் விரைந்தோடி வந்து அன்பர் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொள்வான்! இதுவே பக்தி இலக்கியத்தின் மாபெரும் தத்துவம் ஆகும்.

இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவு எத் தன்மையது என்பதை அன்றிலிருந்து இன்றுவரை அறிஞர்கள் எல்லோரும் சிந்தித்து வந்திருக்கிறார்கள். ரிக்வேதத்தில் இறைவன் நமக்குத் தாயாகவும்,

தந்தையாகவும், குழந்தையாகவும் வருணிக்கப் படுகிறான். ரிக்வேத காலத்துக் கவி - முனிவர் ஒருவரின் கருத்தை அழகியதொரு செய்யுளின் மூலம் உணர்கிறோம்.

முல்லை நிலத்துச் சிற்றூரில் மாலைக் காட்சி: புல் மேய்ந்துவிட்டுக் 'கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர' வரும் தாய்ப் பசுக்களைக் கன்றுகள் வரவேற்கின்றன. ஊரின் மக்களும் அன்போடு வரவு கூறுகிறார்கள். மேய்க்கச் சென்ற கோவலன் மாடுகளைத் தொழுவத்தில் கட்டிவிட்டு வீடு நோக்கி நடக்கிறான். வாயிலில் அவனை எதிர்நோக்கி நிற்கும் மனைவி முகத்தில்தான் என்ன மலர்ச்சி! மாட்டுக்கும் கன்றுக்கும், மாட்டு மந்தைக்கும் கிராம மக்களுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தோன்றும் காதல் போன்றதுதான் இறைவனுக்கும் அடியார்க்கும் இடையே நிலைத்திருக்கும் உறவு என்கிறது ரிக்வேதம்.

> **"மாட்டு மந்தைக்கும் கிராமத்துக்கும், குதிரைகளுக்கும் வீரர்களுக்கும், கறவைப் பசுவுக்கும் கன்றுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும் இடைவிடாத தொடர்பும் அன்பும் இருப்பது போல, இறைவனிடம் நமக்கு நீங்காத உறவு உண்டு. ஒளி வாய்ந்த பரமன் விண்ணையும் மண்ணையும் நம்மையும் காக்கிறான்."**

கன்றுக்கு மாடு இன்றியமையாத துணையாக இருப்பது போல் மாட்டுக்கும் கன்று தேவையாக இருக்கிறது. மாட்டின் தாய்மையுணர்ச்சியைத் தாங்கி

நிற்கும் பாத்திரமே கன்றின் உரு. கணவன்-மனைவி உறவும் அவ்வாறே பரஸ்பரம் அண்டி நிற்பது. அன்பர்களுக்கு இறைவன் வேண்டும்; இறைவனுக்கும் அன்பர்கள் வேண்டும். அன்பர்களிடத்தே அன்பைச் சொரிந்து காத்து நிற்பதால்தான் இறைவன் இறைத் தன்மையை அடைகிறான் என்ற அழகிய கருத்தை வேதம் இப்பாட்டில் வெளியிடுகிறது.

பின் வந்த இலக்கியங்களில் வழக்கமாக எடுத்தாளப் படும் உவமைகளுக்கெல்லாம் ரிக் வேதமே பிறப்பிடம். இறைவன் நம் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களையெல்லாம் நமக்குக் கொடுத்துக் காப்பாற்றுவது, ஒரு தாய் தன் குழந்தையை அன்புடன் வளர்ப்பதற்கு ஒப்பிடப் படுகிறது. ஸரஸ்வதி என்ற தெய்வத்தைத் தாயாகக் கருதி அன்புடன் அழைத்து, "எங்களைக் காத்துப் புரப்பாயாக! வெயிலில் நடப்பவன் நிழல் தருவை ஆவலுடன் அடைவது போல உன்னை நாங்கள் வந்தடைகிறோம்!" என்பார் ஒரு மகரிஷி.

ஒரு பாட்டில் இந்திரனை அன்புடன் அழைத்து, "எம்மைக் காப்பாயாக! நீயே உண்மையான நண்பன்; தந்தையர்க்கெல்லாம் சிறந்த தந்தை! வாழ்வையும் வாழச் சிறந்த பரந்த இடத்தையும் அளித்தவன் நீயே, அன்றோ?" என்று ஒரு வேதப்புலவர் பாடுவார்.

தேவனைச் சிறந்த நண்பன் என்று வேதம் பல இடங்களில் அழைக்கும். அவனையே தம் உள்ளத்தில் தனியிடம் பெற்ற காதலராகப் பல ரிஷிகள் அழைப்பர். ஒரு மந்திரத்தில்,

"இந்திரனே காதலன். அவனே எல்லோர்க்கும்
கணவன்" என்றும், பிறிதொரு பாட்டினில்
"மனைவி கணவனை ஆரத்தழுவுவது போல்
என் பாடல்கள் உன்னை அடைந்து
இன்புற வேண்டும்!" என்றும்

மனைவி-கணவன் உறவுமுறையை அடிப்படையாகக் கொண்டு பக்தி நெறி பாடப்பெறுகிறது.

சமயச் சிந்தனையும் உணர்ச்சிகளும் பெருகப் பெருகப் பின்னாளில் இப்பாடல்களின் அடிப்படையில் புத்திர மார்க்கம், சகமார்க்கம் என்பவையும், சிறப்பாக நாயகி - நாயக பாவம் என்ற மதுர மார்க்கமும் பெரு வளர்ச்சி பெற்று நாயன்மார், ஆழ்வார்கள் பாடல்களில் பயன்படுத்தப் பெற்றன.

ருத்திரனைக் குறித்து இயற்றப்பட்ட ஒரு பாட்டில் அழகியதொரு உவமை எடுத்தாளப் படுகிறது; "இப்பூமியில் நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும். இறுதியில் மெல்ல மெல்ல வாழ்க்கை என்ற பந்தத்திலிருந்து விடுபட்டு வீடு என்னும் பேற்றை அடையவேண்டும். வாழ்க்கையின் நடுவில் நிறைவு என்னும் நிலை ஏற்படுவதற்கு முன்பாகவே மரணம் வராதவாறு என்னைக் காக்க வேண்டும். வெள்ளரிப் பழம் தண்டிலிருந்து விடுபடுவது போல் என் உயிரும் உடலிலிருந்து பிரியவேண்டும். இறவாத தன்மையும் பேரின்பமும் எனக்குக் கிடைக்க வேண்டும்" என்ற கருத்துள்ள இக் கவிதை இன்றும் பக்தர்களால் படிக்கப்படுகிறது.

"நன்மணம் வாய்ந்து வலிமையூட்டும் முக்கண்ணனை நாங்கள் வேண்டுகிறோம். கூட்டிலிருந்து விடுவிப்பது போல், அவன் எங்களைச் சாவிலிருந்து விடுவித்து அமரர் களாகச் செய்வானாக."

இங்கே நிறைந்த நல்வாழ்வு வாழ்ந்து முடிவில் நற்கதியை எல்லோரும் அடைய வேண்டும் என்பது ரிக்வேதத்தின் குறிக்கோள். அதனால் அரசனின் கடமையும், இயற்கையின் பேரெழிலும் என்றும் அழியாத 'ரிதம்' என்னும் உலகத்தின் செல்முறையும், மக்கள் வாழ்க்கையும், தேவர் இயல்பும், இல்லறத்தின் இணையில்லாத சிறப்பும் ரிக்வேதத்தில் ஒருங்கே பேசப்பட்டுள்ளன.

சூதாடித் தோற்ற கயவனின் புலம்பலை ஓர் அழகான ரிக்வேதக் கவிதை கற்பனையில் அமைத்துக் காட்டுகிறது! ஒரு சூதாடி வீட்டைக் கவனியாமல் தன் மனைவி பற்றிச் சிறிதும் நினையாமல் சூதாட்டத்தைப் பற்றியே எண்ணி அதிலேயே தன் வாழ்க்கையை வீணாக்குகிறான். மனைவி தன் துயரம் தீர என்ன வழி என்று யோசித்துப் பின் தன் தாயை வருவித்துத் தன் வீட்லே இருக்கச் சொல்கிறாள். அவளுக்குப் பக்கபலம் பெருகி விட்டதால் "இப்பொழுதெல்லாம் என்னை வெறுத்துத் திட்டுவதே அவள் தொழில்! நான் சூதாடி விட்டு நேரங்கழித்து வீடு திரும்பினால் அவள் கதவைத் திறக்க மறுக்கிறாள்! நான் இரவு முழுவதையும் வெளியிலேயே கழிக்க நேர்கிறது!" என்று சூதாடி புலம்புவான்.

சூதாட்டத்தில் ஈடுபட்டோரால் அதை விட்டு அதைத் துறந்து விடுதலை பெற முடிவதில்லை. இதைப் பற்றி மனக்கசப்புடன் பேசும் சூதாடி. "இந்தச் சூதாட்டக்காய்க்களுக்குக் கை என்பதே இல்லையே! பின் எப்படி என்னை இத்தனை உறுதியாகக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றன?" என்று வியந்து கூறுவான். இன்றும் சீட்டாட்டம், குதிரைப் பந்தயம், பங்குகளை விற்பதும் வாங்குவதுமாகிய சூதாட்ட வகைகள் மனிதனை இறுகப் பிடித்து வைத்திருப்பதை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பேயும் மனிதனின் இயல்பு இப்படியே இருந்திருக்கிறது; இந்த நீண்ட காலத்தில் அவன் அடிப்படையில் சிறிதும் மாறவில்லை என்பதை இதிலிருந்து உணர்கிறோம்!

கபிலர் பாரியைப் பாடிச் சிறப்பித்தது போல் ரிக்வேதப் புலவர்களும் தம் புரவலரைப் பாடியிருக் கிறார்கள். இந்தக் கவிதைகள் 'தான ஸ்துதி' என்று பெயர் பெறும். சுமர் 30 கவிதைகள் இவ்வகையில் ஈகை பற்றிக் கூறுவனவாக அமைந்துள்ளன.

யஜுர் வேதம் வசனத்தால் ஆனது. யாகங்களில் பயன்படுத்த வேண்டிய மந்திரங்களும் கிரியை விவரங்களும் அடங்கியது. சிவபக்தர்களால் படிக்கப் படும் 'ஸ்ரீருத்ரம்' என்னும் ஸ்துதி யஜுர் வேதத்தில் இருக்கிறது. சாமவேதம் முழுதும் கவிதைகளால் ஆனது; சங்கீதக் கலைக்குச் சாம வேதமே மூலம் என்று கூறலாம். சிவனைச் சாமவேதப் பிரியன் என்று ஏத்துவர். கண்ணனும்

கீதையில் 'வேதங்களுள் நான் சாமவேதம்' என்று சொல்லியிருக் கிறான். யஜுர் வேதமும் சாம வேதமும் ரிக்வேதத்தி லிருந்து அநேகம் பாக்களை எடுத்தாண்டிருக்கின்றன. அதர்வ வேதம் காலத்தால் மிகப் பிற்பட்டது; முதல் மூன்று வேதங்களின் உயர்வும் மதிப்பும் அதர்வத்துக்கு இல்லை.

பல்லாயிரம் ஆண்டுகளாக ஓதப்பட்டு வந்த போதிலும் வேதங்கள் உருவத்திலும் ஸ்வரத்திலும் சிறிதும் மாறுபாடு இல்லாமல் நிலைத்திருப்பது இலக்கிய உலகில் பெரியதொரு விந்தையே! முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் வாழ்ந்த ஷேக்ஸ்பியரின் நூல்களில் பாட பேதங்கள் தோன்றியுள்ளன. இதை எண்ணிப் பார்க்கும் போது வேதத்தின் பெருமை தெளிவாகத் தெரியவரும். கிரமம், பதம், கனம், ஜடை என்ற நான்கு முறைகளை வகுத்து இம் முறைகளில் வேதத்தை ஓதுவதை வேதப் பயிற்சியில் ஒரு முக்கியமான அங்கமாக நம் பெரியோர்கள் வகுத்திருக்கிறார்கள். இவற்றின் பயனாக வேதத்தின் ஒவ்வொரு வார்த்தையும் மாற்ற முடியாமல் நிலை பெற்றுவிடுகிறது. ஓர் எழுத்தும் சேதப்படாமல் ஸ்வரம் மாறாமல் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வேதத்தை ஓதிவரும் நம் பெரியோர்களின் ஊக்கத்தையும் பக்தியையும் என்னவென்று சொல்வது!

பொதுவாக, வேதங்களில் மூன்று வெவ்வேறு பிரிவுகளைக் காணமுடியும். இறைவனுடைய துதி என்ற மந்திர பாகமும், அதை அடுத்து வரும் அர்த்த வாதம் என்னும் உரைப் பகுதியும் சேர்ந்து கர்ம

காண்டம் எனப் பெயர் பெறும். அர்த்த வாதத்தில் யாகம் செய்ய வேண்டிய முறை முழுதும் விவரிக்கப் படுகிறது. மந்திரங்களைப் பற்றிய அநேகம் செய்திகளை அர்த்தவாதப் பகுதியில் காணலாம்.

வேதத்தின் இறுதியில் உள்ளது உபநிஷத். இதை ஞான காண்டம் என்று சொல்லுவர். வேதத்தின் முடிவில் இருப்பதால் இதற்கு வேதாந்தம் என்று பெயர். எண்ணிக்கையில் உபநிஷத்துக்கள் பல இருந்தாலும் நம் ஆசிரியர்கள் 108 உபநிஷத்துக்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவற்றிலும் 10 உபநிஷத்துக்களே சங்கரர் முதலிய பெரியோர்களால் மிக உயர்வானவை என்று கருதப்படுகின்றன. அவற்றுள் கடோபநிஷத் ஒன்று. வாஜசிரவஸ் என்ற பிராம்மணர் பெரியதொரு யாகத்தைத் தொடங்குகிறார். தம்மிடம் உள்ள உயர்ந்த பொருள்களை வறியோருக்கு ஈவதே யாகத்தின் முறை. வாஜசிரவஸ் மனம் உவந்து கொடுக்கும் பழக்கம் இல்லாதவர். பால் வற்றிப் போன மாடுகளைத் தானம் செய்ய முற்பட்டார். அவருடைய குமாரன் நசிகேதஸ் ஒப்பற்ற மனத் தூய்மை பெற்றவன். இந்த யாகம் அவனுக்கு வெறுப்பையே தந்தது. தந்தையிடம் போய், "அப்பா, என்னை யாருக்குத் தானம் செய்கிறீர்கள்?" என்று கேட்டான்.

தந்தையின் நோக்கில் உயர்ந்த பொருள் மகனாகிய தானே என்று பையன் நினைத்தான். தன்னையே கொடுத்தாவது தந்தை யாகத்தின் பலனை அடையவேண்டும் என்பது அவன் விருப்பம்.

தந்தைக்குக் கோபம் வந்தது. "எமனுக்குக் கொடுக்கிறேன் உன்னை" எனக் கூச்சலிட்டார். தொந்தரவு செய்யும் பையனை அனுப்பிவிட்டோம் என்ற திருப்தியுடன் மேலே யாக காரியங்களைக் கவனிக்கலானார். இணையற்ற மனத்திட்பம் படைத்தவன் நசிகேதஸ். அவன் உண்மைக்காகத் தன்னைத் தியாகம் செய்துகொள்ளத் துணிந்தான். நேரே எமனுடைய உலகுக்குத் துணிவுடன் நடந்து போனான்! எமன் அச்சமயம் வீட்டில் இருக்க வில்லை; மூன்று நாட்கள் எமனுக்காக உணவு உறக்கம் இல்லாமல் காத்துக் கிடந்தான் நசிகேதஸ். எமன் திரும்பி வந்து நிலைமையை அறிந்து வருந்தினான். ஒரு விருந்தினனை மூன்று நாட்கள் தன் வீட்டில் பட்டினி கிடக்கச் செய்ததால் எமன் மூன்று வரங்களை அவனுக்குக் கொடுத்துத் தன் பிழையைத் தீர்த்துக் கொண்டான்.

முதல் இரண்டு வரங்களால் சாதாரணமான பொருள்களை யாசித்துப் பின் நசிகேதஸ் எமனை நோக்கி, "அந்தகனே, மரணத்துக்குப் பின் வாழ்வு உண்டா? இதுபற்றி அறிய வேண்டும் என்று விரும்புகிறேன். இதுவே என் மூன்றாம் கோரிக்கை" என்று கூறினான்.

எமன் திடுக்கிட்டான். பையனைப் பார்த்து, "அப்பா, இதைக் கேட்காதே! வேறு எது வேண்டு மானாலும் கேள்; தருவேன்" என்று கூறினான். "நூறு வயது வாழும் புத்திரர், பெயரன்களைக் கணக் கில்லாமல் தருவேன். பரந்த இவ்வுலகத்தை ஒரு

குடையின் கீழ் ஆளும் பெரு வாழ்வும் அருள் புரிவேன்" என்று ஆசை காட்டினான்.

"தேர்களோடும் இனிய வாத்தியங் களோடும் கூடிய இந்த அழகியர், மனிதர் களால் பெறத் தக்கவர்களல்ல. நான் கொடுக்கும் இவர்களை நீ பேணி இன்புறு வாயாக; நசிகே தஸே, சாவைப் பற்றிய வினாவை என்னிடம் கேட்காதே."

என்று கூறி அழகில் நிகரற்ற பெண்களையும், தேவர்களையும் வாத்தியங்களையும் கொணர்ந்து கண் முன்னே நிறுத்தி, "ஏற்றுக்கொள்" என்று வேண்டினான்.

நசிகேதஸ் கலங்கவில்லை. ஆத்ம ஞானம் பெற விரும்பிய அவனுக்கு, அழியக்கூடிய இப்பொருள்களின் மேல் பற்று ஏற்படவில்லை.

சிறுவனின் உறுதி கண்டு எமன் வியந்தான். "உன்னைப் போன்ற சிஷ்யன் எனக்குக் கிடைத்தது பெரும் பேறாகும்" என்று கூறி நசிகேதசுக்கு எமன் ஆத்ம ஞானத்தை உபதேசித்தான்.

"ஆத்மா அழிவற்றது. உடலில் இருப்பினும் உடலில் அடங்காதது. மனத் தூய்மையினாலும், நேர்மையினாலும் மனிதன் ஆத்மாவை அறியக் கூடும். புலன்களை அடக்கிய பெரியோர் களே ஆத்மஞானம் அடையத் தக்கவர்கள்.

"இந்த அறிவைப் பெற்றவர்கள் இந்த வாழ்க்கையிலேயே பேரின்பத்தைப் பெற்றவர்கள் ஆவர். அவாவை நீத்தவர்கள் ஆத்மாவைப் போல் அழிவற்றவர்களாகப் பிரகாசிப்பார்கள்.

ஆசையும், கோபமும் நீங்காத மனத்தினர், முடிவற்ற சம்சாரச் சுழலில் அகப்பட்டு உழல் கிறார்கள். உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் பிறத்தல், இறத்தல் என்னும் பிடியி னின்றும் தன்னை விடுவித்துக் கொள்ள முயல வேண்டும். இவ்விடுதலைக்கு ஆத்ம ஞானமே திறவுகோலாகும்" என்பது உப தேசத்தின் சுருக்கம்.

அழகிய ஒரு கதையின்மூலம் சிறந்த உபதேசத்தை வெளியிடும் இந்நூல் உலக மக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது "தத்துவ ஞானத்தின் களஞ்சியம்" என்று கடோபநிஷத் உலகெங்கும் போற்றப்படுகிறது.

தைத்திரீயம், பிருஹதாரணியகம், சாந்தோக்கியம், மாண்டூக்கியம், முண்டகம் என்பவை உபநிஷத் இலக்கியத்தில் தலைமை பெற்றவை. குரு சிஷயனுக்கு உபதேசம் செய்யும் முறையில் சம்பாஷணை வடிவ மாகவே இந்த நூல்கள் அமைந்திருக்கின்றன. தெளிவும், ஆழமும், அழகும் இவற்றின் சிறப்பு இயல்புகள். இவை அன்றிலிருந்து இன்று வரை உலக மக்களுக்குச் சமய நெறியைக் காட்டும் நந்தா விளக்குகளாக ஒளி வீசி நிற்கின்றன.

தத்துவ உலகத்தில் உபநிஷத் வழி காட்டியாக அமைந்தது போல வேதங்கள் மற்றத் துறைகளில் பாரதத்தின் வாழ்க்கையைச் செப்பனிட்டுத் திருத்திப் பாதுகாத்து வந்திருக்கின்றன. சம்ஸ்கிருதத்திலும் மற்ற இந்திய மொழிகளிலும் உள்ள காவிய நாடகங்கள்

பெரும்பாலும் வேதக் கதைகளையோ கருத்துக் களையோ ஆதாரமாகக் கொண்டவை. கவிதை அமைக்கும் முறையே வேதத்திலிருந்து எடுத்தது என்றால் பொருந்தும். உணவு உடை, வீடு கட்டுவது, நகர அமைப்பு சுகாதாரம், மனிதனது கடமை, அரசன் நெறி, குடிகளின் உரிமைகளும் கடமைகளும் என்ற எல்லாத் துறைகளிலும் வேதம் வழி அமைத்துக் காட்டுவதால், யாராவது நம்பிக்கையாகவும் உறுதியாகவும் ஒரு சொல் சொன்னால், அதை 'வேத வாக்கு' என்று சொல்வது வழக்கமாகி விட்டது.

3. ராமாயணம்

சரித்திரம் தோன்றாத காலந்தொட்டே வால்மீகியின் ராமாயணம் கவிகளுக்கு ஒரு வழி காட்டியாகவும் பாரத மக்களுக்கு ஓர் ஒப்பற்ற கலங்கரை விளக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. சம்ஸ்கிருதத்தில் தோன்றிய காவிய நாடகங்கள் எல்லாம் ராமாயணம் போன வழியிலே பின்பற்றிச் செல்லுகின்றன.

"கவிகளுக்கெல்லாம் வழிகாட்டி"

என்று சம்பூ ராமாயணம் பாடிய போஜராஜன் வால்மீகி முனிவருக்குத் தன் நன்றியைச் செலுத்து கிறான். கவியரசன் காளிதாசனும், "வால்மீகி பாடிய காவியத்தை முன்மாதிரியாகக் கொண்டே ரகுவம்சத்தை இயற்றினேன்" என்று அடக்கமாகக் கூறுகிறான். தந்தை சொல்லைக் காக்கக் கானகம் புகுந்த ராமனும். கற்புக்கரசி ஜனககுமாரியும், தொண்டுக்காகவே பிறந்த லக்ஷ்மணனும், தியாகக் கொழுந்தாக வாழ்க்கை நடத்திய பரதனும் பாரத மக்களின் வாழ்க்கையில் நிலையான இடம் பெற்று விட்டார்கள். வங்கத்திலிருந்து சிந்து நதி தீரம்வரை, இமயத்திலிருந்து குமரி வரை - வடநாட்டிலும் தென்னாட்டிலும் - ராமன், சீதை என்ற பெயர் தாங்கி

உலவி வரும் இந்திய மக்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதது.

ராமாயணக் கதையும் தத்துவங்களும் கடல்கடந்து மலேயா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் எல்லாம் மக்கள் மனத்தைக் கவர்ந்து இன்னும் ஆட்சி புரிகின்றன. இந்தோனீசியாவில் முஸ்லிம்கள் வீட்டுத் திருமணங்களிலும் ராமாயணக் கதையைப் பொம்மலாட்டமாகக் கண்டு மகிழ்வது இன்றும் வழக்கமாக இருந்து வருகிறது. இந்நாடுகளின் இலக்கியங்களில் ராமாயணத்தின் தாக்கம் மிகுதியாக இருப்பதைக் காணலாம். தாய்லாந்தில் அனுமனுக்கு இரு மனைவியர் என்று கற்பித்து வழங்குகிறார்கள்!

புஜபலத்திலும், தொண்டிலும் தெளிந்த அறிவிலும் சிறந்த அனுமன் தனித்த முறையிலே அநேக மக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வமாகி விட்டான். இன்று சிறப்பாக வடநாட்டில் உடற் பயிற்சி செய்வோர் அனுமனைத் தம் இறைவனாகப் பூசிக்கிறார்கள். ராமாயணம் பற்றிய சமயச் சொற்பொழிவுகளே அதிகமாக நடக்கின்றதால், பிரசங்கி பாகவதம் சொன்னாலும் 'ராமாயணப் பிரசங்கம்' என்றே குறிப்பது வழக்கமாகி விட்டது. ஆழ்வார்களிற் பெரியாரான நம்மாழ்வாரும், "கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ?" என்றார் அவன் கருணை பற்றி.

ராமனுக்கும் அவன் வரலாற்றுக்கும் இத்தனை ஏற்றம் ஏன்? "இந்தியர்கள் கதை சொல்லும் கலையில்

உலகிலேயே மிகத் தேர்ந்தவர்கள். இந்தியர்களின் ஒப்பற்ற கதை ராமாயணம். இதனால் அது உலகில் இணை இல்லாத கதையாகும்" என்று ஏ. டபிள்யூ. ரைடர் என்ற அமெரிக்க ஆசிரியர் எழுதுகிறார். சுவைமிக்க கதைப் போக்கில், "மேலே என்ன நடக்கும்?" என்ற ஆவலைத் தூண்டும் நிகழ்ச்சிகள் செறிந்து வருவதால் இதில் குழந்தைகள் முதல் எல்லோரும் ஈடுபடுகிறார்கள். அழகாக, அழுத்தமாக வரையப்பட்ட குணசித்திரங்கள். கதைத் தலைவனும் தலைவியும், ராமனுடைய தம்பியரும் ராவணனின் தம்பியரும், அரசியர் மூவரும், வேடர்கள் வேந்தனும், காட்டில்வாழ் முனிவர்களும் குரங்குகளும் கரடியும் கழுகும்காகமும், நாட்டில் வாழ்மந்திகளும் இலக்கியம் உள்ள அளவும் அழியாத அமர சித்திரங்கள் ஆகும். கதையின் போக்கிலே ஆசிரியர் கூற்றாகவும், பாத்திரங்களின் வாய்ச்சொல்லாகவும் ஒப்பற்ற நீதிகள், உபதேசங்கள், அரிய அறிவுரைகள் விரவிக் கிடக்கின்றன. மனிதனின் வாழ்க்கைக்கு லட்சியம் ஒன்றினைக் கொடுத்து உதவி அவனைப் படைப்பிலே உயர்த்திக் கொண்டு போகும் நோக்கம் இந்த நூலின் பரம தத்துவமாக அமைந்திருக்கிறது.

வால்மீகியின் ராமாயணம் என்பது ஒரு கவிதைச் சோலை. அதன் அழகை முற்றும் அநுபவிக்கத் தம் வாழ்நாள் முழுவதும் செலவிட்டவர்கள் உண்டு. சில காட்சிகளை மாத்திரம் கண்டு இங்கு ஓரளவு சுவைக்க முயல்வோம்.

தந்தையின் சொல் கேட்டுத் தம்பியுடனும் மனைவியுடனும் சென்ற ராமன் கங்கையைக் கடந்து சித்திரகூடம் என்ற மலையை அடைந்தான். பரத்துவாஜ முனிவரின் சொற்களை ஏற்று அம்மலையிலேயே தங்கிவிடும் எண்ணத்தோடு லக்ஷ்மணனைப் பர்ண சாலை அமைக்கும் படி கூறினான். எல்லா வசதிகளையும் கொண்ட அழகிய சிறு குடிலை லக்ஷ்மணன் நொடியில் நிர்மாணித்து விட்டான். ராமனும் சீதையும் லக்ஷ்மணனும் சித்திரகூட மலைச்சாரலில் பர்ண சாலையில் இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

ஒரு நாள் குடிலின் வெளியே அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் ராமனும் லக்ஷ்மணனும் கீழே காட்டிலிருந்து புழுதி கிளம்புவதையும், மிருகங்களும், பட்சிகளும் பயந்து ஓடுவதையும் கண்டார்கள். "லக்ஷ்மணா, இதன் காரணம் என்ன என்று பார்த்து வா" என்று ராமன் கூற, லக்ஷ்மணன் அருகில் இருந்த உயர்ந்த பலா மரத்தின் மேல் ஏறிக் கீழே கிழக்குத் திசையில் நோக்கினான்.

தூரத்தில் யானைப்படையும் குதிரைப்படையும் புழுதியைக் கிளப்பி வர, ஏராளமான காலாட்களுடன் பரதன் வருவது லக்ஷ்மணனுக்குப் புலப்பட்டது. சீற்றத்தை அடக்க முடியாமல் மரத்திலிருந்து கீழே குதித்து ஓடினான் லக்ஷ்மணன். 'அண்ணா, ஹோம அக்கினியை அணைத்து விடுங்கள். நம்மைக் கொல்லப் பரதன் பெருஞ் சேனையுடன் வருகிறான். இந்த ஆசிரமம் அவன் கண்களில் படுவதற்கு முன்

சேனையுடன் அவனையும் அழித்துவிட்டு வருகிறேன். விடை கொடுங்கள்" என்று பதறினான்.

தம்பியைப் பார்த்து ராமன் சாந்தமாகப் பேசினான்:

"குழந்தை பரதனா வருகிறான்? எத்தகைய அன்பு அவனது! உன்னையும் என்னையும் அவன் மதனியையும் காணாது மிக வருந்தியிருப்பான் அவன். மாமன் வீட்டிலிருந்து திரும்பியதும் நம்மைக் காண விரைந்து இங்கு வந்திருக்கிறான். அவனைக் கண்டு ஏனப்பா படபடக்கிறாய்?"

லக்ஷ்மணன் கோபத்திற் சிரித்தான்; "அண்ணா, அன்பான தம்பி அண்ணன்மாரைப் பார்க்க வரும் போது இவ்வளவு பெரிய சேனை எதற்கு அவனுடன் வரவேண்டும்? தங்களைப் போலவே பிறரை எண்ணி ஏமாந்துவிடுகிறீர்கள், அண்ணா. நாம் பேசிக் காலதாமதம் செய்கிறோம், விரோதி அண்மையில் வந்து கொண்டிருக்கும் போது" என்றான். அவன் கையிலிருந்த வில்லும் துடித்தது; வாள் பளீர் பளீரென்று ஒளி வீசியது, அவன் கோபச் சொற்களைப் போல.

ராமன் நிதானத்தை இழக்கவில்லை. தம்பியைப் பார்த்து, "குழந்தாய், அவ்வாறே கெட்ட எண்ணத்துடன் பரதன் வந்திருக்கிறான் என்றாலும், நமக்கு வில் எதற்கு, வாள் எதற்கு? வில் ஏந்திப் போர்புரிந்து பரதனை வென்றுவிட நம்மால் முடியுமா? இணையற்ற வில்லாளி அன்றோ பரதன்?" என்றான்.

"பெருவில்லாளனும் பேரறிஞனுமான பரதன் தானாக வந்திருக்கும் போது, இங்கே வில்லினாலோ, கத்தியினாலோ பயன் யாது?"

"லக்ஷ்மணா, படபடப்பை விட்டுப் பரதனின் தன்மையை எண்ணிப் பார். சகோதர அன்பு என்னும் குணமே உருக் கொண்டவன் பரதன். எனக்கும் உனக்கும் தம்பியாக, நம் தந்தையின் மைந்தனாகப் பிறந்தவனும் தீய எண்ணம் கொள்ளுவானா? அயோத்தியில் வசிஷ்டரிடம் படிக்கும் போதும், வில்வித்தை பயிலும் போதும் விளையாட்டு மண்டபத்திலும், உணவுச் சாலையிலும் ஒருயிராக என்னுடன் பழகிய பரதனை இன்னும் நீ அறிந்து கொள்ளவில்லை. அரசில் அவா என்னும் கொடிய பேயினாலும் அவன் தூய உள்ளத்தைக் கெடுக்க முடியாது. பொறாமைக்கு அவன் மனத்தில் இட மில்லை. தன்னைப் பற்றி நினைப்பதையே அறியாத பரதனுக்குச் சுயநலம் தோன்ற இடமுண்டா? லக்ஷ்மணா, குழந்தை பரதன் இங்கு வந்தவுடன் அவன் மனத்தைப் பரீட்சிக்க ஒரு நாடகம் நடத்தப் போகிறேன். நாடாளும் ஆசை பரதனைப் பிடித்து விட்டது என்று சொன்னாய். 'பரதா, அயோத்தி ராஜ்யத்தை லக்ஷ்மணனுக்குக் கொடுத்து விடு. நீ சடை தரித்து இங்கே இருந்து எனக்கு அடிமை செய்' என்று நான் அவனிடம் சொல்லப்போகிறேன். என் சொற்களுக்கு அவன் என்ன விடை சொல்வான் என்று எண்ணுகிறாய்?' என்றான், ராமன். பரதன் இதற்குச் சம்மதிப்பான் என்பதே ராமனின் முடிவு.

பரதனின் மனம் ராமன் ஒருவனுக்கே தெரியும் அல்லவா?

> **"அரசாட்சிக்காக நீ இப்படிப் பேசுகிறாய் என்றால் நான் பரதனிடம், 'இவனுக்கு ஆட்சியைக் கொடு, அப்பனே' என்று சொல்லி விடுகிறேன். என் பேச்சுக்கு அவன், 'சரி' என்று மறுமொழி உரைப்பான்"**

என்பது வால்மீகி வாக்கு.

லக்ஷ்மணன் வெட்கத்தால் குன்றிப் போனான். பரதனின் உள்ளத் தூய்மையை அன்று புதியதோர் வடிவில் லக்ஷ்மணன் தெரிந்து கொண்டான். அதோடு மட்டுமா? ராமனது குணசௌந்தரியத்தையும் கண்டு கண் கூசித் திகைத்து நின்றான். ராமனது உள்ளம் பரதனுக்குத் தான் தெரியும். பரதனின் மனத்தையும் ராமன் ஒருவனே அறியத் தக்கவன். என்ன இணைப்பு இருவரிடையே! குணத்தின் உயர்வும், உடன் பிறந்த வாஞ்சையின் பெருமையும் ஒருங்கே பளிச்சிட்டன, லக்ஷ்மணனின் உள்ளத்தில்.

பிறகு பரதன் வந்து பேரரசினை ராமன் காலடியில் வைத்த கதையும், ராமன் மறுத்துத் தன் கால் பாதுகைகளைக் கொடுத்த கதையும் தொடர்கின்றன. "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியினம்மா" என்று குகனாலும், "நின்னிலும் நல்லவன்" என்று ராமனின் முன் கோசலையினாலும் புகழப் பெற்ற பரதன், வால்மீகத்திலும் சிறந்த குணசித்திரமாகப் பிரகாசிக்கிறான். ராமனும் லக்ஷ்மணனும் கோதாவரிக்

கரையில் வசித்து வந்த போது விடியற் காலையில் எழுந்து ஆற்றுக்குச் செல்கிறார்கள். 'இந்நேரம் பரதன் எழுந்து ஸரயு நதியில் குளிக்கப் போவான்' என்ற எண்ணம் லக்ஷ்மணனுக்குத் தோன்ற அவன் பரதனின் குணங்களை வாயாரப் புகழ்ந்து பேசுகிறான்.

"சுகத்துக்கே உரியவன், வருத்தம் அறியாதவன்- குழந்தை பரதன்- தங்கள் மேல் இருக்கும் அன்பினால் ஒரு தவம் இயற்றுகிறான். அரசனுக்குரிய மஞ்சத்தில் அவன் படுப்பதில்லை. குளிர்ந்த தரையிலேயே துயில் கொள்கிறான். உணவைக் குறைத்துப் புலன்களை அடக்கி முனிவன் போல் வாழ்க்கை நடத்துகிறான். தன் உடலையும் ஆவியையும் அவன் தங்களிடமே அர்ப்பணித்திருக்கிறான். அத்தகைய பிள்ளையைப் பெற்ற கைகேயி எப்படித்தான் தங்களுக்கு இத்தகைய தீங்கையும் இழைத்தனளோ?" என்று பேசி வந்தான்.

ராமன் தம்பியை நிறுத்தி, "லக்ஷ்மணா கைகேயியை இகழ்வது தகாத செய்கை. பரதனைப் பற்றிப் பேசி வந்தவன் திடீரென்று அவள்மேல் பேச்சைத் திருப்பி விட்டாயே! என் பரதனைப்பற்றிய பேச்சாகவே இன்னும் சற்றுப் பேசமாட்டாயா?" என்று கேட்கிறான்.

சரண்புகுந்த விபீஷணனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சுக்கிரீவன் வாதம்புரியும் போது, "இவன் அண்ணனுக்குத் துரோகம் நினைத்தவன். இவனை எங்ஙனம் நம்புவது?" என்கிறான். ராமன் சற்றுச் சிரித்துக் கொண்டான். "நீயும் சகோதர

வாஞ்சைக்குப் பெயர் பெற்றவன் அல்லனே" என்று இடித்துக் கூறவில்லை. தம்பி பரதனைப்பற்றிய நினைவு வந்துவிட்டது ராமனுக்கு. "சுக்கிரீவா, இவ்வுலகில் பரதனுக்கு ஒப்பான தம்பி எங்கும் இருக்க மாட்டான்" என்றான். பதினான்கு ஆண்டுகள் நிழல் போல் தொடர்ந்து குற்றேவல் புரிந்து வந்த லக்ஷ்மணனின் முன்னிலையில் சொல்லப்பட்டது இது! ராமன் தொடர்ந்து, "அப்பனே, உன் போன்ற நண்பர்களும் இல்லை. இவ்வுலகத்தில்" என்று சொன்னதும் சுக்கிரீவன் வெட்கமும் மகிழ்வும் மேலிட்டவனாய்த் தன் ஆட்சேபத்தை மறந்து நின்றான்.

> **"எல்லாச் சகோதரர்களுமே பரதனைப் போல இருக்க மாட்டார்கள்; தந்தை சொல் கேட்கும் என்னைப் போன்ற புதல்வர்களும், உன்னைப் போன்ற நண்பர்களும் கிடைப்பதும் அது போலவே அரிதுதான்."**

'லக்ஷ்மணனுக்குப் படபடப்பு அதிகம். அவன் எளிதில் நிதானத்தை இழந்து விடுவான்' என்பதை எல்லோரும் அறிவோம். ஆயினும், லக்ஷ்மணன் தன் தமையன் மேல் கொண்ட மாறாத அன்பினால்தான் அவனுக்கு உணர்ச்சி மேலிட்டுவிடுகிறது; கோபம் பொங்கி வருகிறது.

'அன்பு மிகுந்தால் கவலை வளர்ந்து தகாத எண்ணங்கள் தோன்றும்' என்றபடி அன்பின் மிகுதியினால் அவனுக்கு உலகில் எல்லோருமே ராமனுடைய விரோதிகள் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

காட்டில் பதினான்கு வருஷங்கள் உடனிருந்து ராமனுக்கு அடிமை செய்தல் என்னும் பேறு பெற்றவன் தம்பியருள் லக்ஷ்மணன் ஒருவனே. கைங்கரியம் செய்வதில் உள்ள பேராசையினால் முடிவில் இளவரசுப் பட்டமும் வேண்டாம் என்று துறந்துவிட்டான். தன்னைத் தவிர வேறு யாருக்கும் அடிமைப் பேறு கிடைக்கக்கூடாது என்பதில் அக்கறையாக, 'சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம்' என்றபடி பாற்கடலில் நாராயணனுக்குத் தொண்டு புரிந்த ஆதிசேஷனின் அவதாரமல்லவா? லக்ஷ்மணனுக்கு ராமன் மேல் உள்ள அன்பு தந்தை, மகன் உறவுக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. பஞ்சவடி என்ற இடத்தில் கோதாவரிக் கரையிலுள்ள சோலையைக் கண்டு அதன் அழகில் ஈடுபட்ட ராமன் அங்கேயே சிலகாலம் வசிக்க வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டான். உடனே அங்கு லக்ஷ்மணன் தன் கைகளாலேயே அழகிய ஒரு பர்ணசாலையை நிர்மாணித்தான். மரங்களை வெட்டிக்கொண்டு வந்து பொருத்திக் குடிலைப் பலப்படுத்தினான். உலர்ந்த புற்களைத் திரட்டிக் கொண்டு வந்து நெருக்கமாகக் கூரை வேய்ந்தான்.

தான் அமைத்த குடிலை லக்ஷ்மணன் ராமனிடம் காட்டியபோது, மகிழ்ச்சி மேலீட்டால் தம்பியைக் கட்டி அணைத்துக் கொண்டான். பிறகு, "என் நோக்க மறிந்து, தேவை உணர்ந்து இக்குடிலை நீ அமைத்திருக்கிறாய். நீ இங்கு இருப்பதனால் தந்தை

இறந்தும் நான் தந்தை உள்ளவனாகவே நினைத்திருக்கிறேன்" என்று உள்ளன்போடு கூறினான் ராமன்.

> **"இலக்குவனே, கருத்தறிந்து, நன்றி மிகுந்து, அறத்தில் ஊன்றிய நீ இருப்பதனால் தர்மாத்மா வான என் தந்தை காலமான தாகவே நான் எண்ண வில்லை."**

தமையன் ராமனிடமிருந்து புகழ் மொழிகளை லக்ஷ்மணன் பெற்றதில் வியப்புக்கு இடமில்லை. சீதையும் லக்ஷ்மணனை அவ்வாறே நினைத்திருந்தாள். அசோக வனத்தில் அனுமனிடம் சீதை ராமனின் நலம் விசாரித்த பிறகு சொல்லுவாள்: "சுமித்திரையின் செல்வர், என் நாதரின் பின் பிறந்து காட்டிலும் பின் தொடர்ந்து வந்த தம்பி லக்ஷ்மணரின் நலத்தையும் நான் கேட்டதாகச் சொல்லுவாயாக. என் மாமனாரை ஒத்திருக்கும் அவரைப் பார்த்தபொழுதெல்லாம் என் நாதர், மறைந்த தம் தந்தையைப் பார்த்தாற்போல் ஆறுதல் அடைவார். தூய உள்ளம் அவருடையது; தொண்டில் முதல்வர்; சக்தி மிக்கவர்; சொல்லிற் சுருங்கியவர்" என்று ஒரு தாய் தன் பாசத்தினால் மகனைப் பற்றிப் பேசுவது போலவே அமைந்திருந்தது சீதையின் உரை.

லக்ஷ்மணன் சீதையிடம் பழகிய முறை நம் சமுதாயத்தின் மிக உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. ராமனும் லக்ஷ்மணனும் சீதையைத் தேடிக் கொண்டு வரும்போது சில குரங்குகள் கண்டெடுத்துக் கொடுத்த

நகை மூட்டையைப் பார்க்கிறார்கள். "அவை சீதையின் நகைகளா என்று பார்த்துச் சொல்" என்று ராமன் சொல்ல, லக்ஷ்மணன் மூட்டையைப் பிரித்தான். தோளில் அணியும் கேயூரம் முதலில் கிடைத்தது. அதை எடுத்து அப்பால் வைத்தான். பின்பு, காதின் அணிகளான குண்டலங்களையும் எடுத்து வைத்து விட்டான். காலில் அணியும் சிலம்புகளைக் கண்டதும் அவற்றை எடுத்து உவகையோடு ராமனிடம் காட்டினான். "அண்ணா, இவை என்னுடைய மதனியின் நகைகளே" என்று உணர்ச்சியோடு சொன்னான். சீதையை லக்ஷ்மணன் என்றும் நிமிர்ந்து பார்த்திராததால் அவளுடைய கேயூரத்தையும் குண்டலங்களையும் அவன் அறியவில்லை. ஆனால் பணிவோடும், பக்தியோடும் அவள் கால்களிலே தினமும் வணங்கி வரும் வழக்கத்தினால் அவளுடைய சிலம்பின் அடையாளம் அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

> **"நான் தோள்வளைகளை அறியேன்; காதணிகளை அறியேன்; எப்பொழுதும் திருவடிகளைப் பணிவதனால் அவள் சிலம்புகளை மட்டும் நன்கறிவேன்."**

"சீதைக்கேற்ற கணவன் ராமனே; ராமனுக்கு ஏற்ற மனைவி சீதையே" என்ற உண்மை ராமாயணம் முழுவதும் வற்புறுத்தப்படுகிறது. பாற்கடலில் என்றும் பிரியாமல் இருக்கும் இறைவன் இறைவி என்ற இரு தத்துவங்கள் மண்ணில் தோன்றி வாழும் போதும் பிரிக்க முடியாத சேர்க்கையிலே

இணைந்திருக்கின்றன. இவ்வாறு இணைந்த இறைவன் இறைவியர்க்குத் தொண்டு புரிவதற்காகவே லக்ஷ்மணனும் அரண்மனையை விட்டு வனவாசத்தை மேற்கொண்டான். காமத்தால் நெறி பிறழ்ந்த ராவணன் இந்தச் சேர்க்கையைப் பிரித்து இறைவியை இலங்கையில் சிறை வைக்கிறான். பிரிக்கப்பட்ட இருவரும் ஒன்று சேரத் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில்தான் அனுமன் முதன் முதலாக இருவரையும் பார்க்கிறான். ராமன் சீதையின் பிரிவால் வருந்துவதைக் கண்டு (பிரம்ம சாரியாக, புலன்களை வென்றவனாக இருப்பதால்), 'ராமன் மிகப் பெரியவன் என்று சொல்கிறார்கள். மனைவியை இழந்ததற்காக இப்படித் துடிப்பது அவன் பெருமைக்கும் ஓர் இழுக்கல்லவா?' என்று நினைத்தான். புலன்களை அடக்காத ஒரு காமுகனே ராமன் என்று அனுமன் எண்ணியதில் வியப்பில்லையே!

ராமனின் கணையாழியை எடுத்துக் கொண்டு அனுமன் கடலைத் தாண்டி இலங்கைக்குச் செல்கிறான். அங்கே பல இடங்களில் தேடிவிட்டு முடிவில் அசோகவனத்தில் சீதையைக் காண்கிறான். சீதைக்குக் காவலாக இருக்கும் அரக்கிகள் அவளைப் பலவாறாகத் துன்புறுத்துகிறார்கள். சீதை பிரிவாற்றாமையினால் உடல் இளைத்து மேனி அழகெல்லாம் இழந்து, துயரத்தின் உருவாகக் காட்சியளிக்கிறாள். சுற்றிலும் இருக்கும் அரக்கிகளையும், அழகிற் சிறந்த அசோக வனத்தையும் அவள் பார்ப்பதாகவே

அனுமனுக்குத் தோன்றவில்லை. 'உளமும் புலனும் ஒரு வழிச் சென்றுருக' ராமனையே நினைத்த வண்ணம் சீதை அமர்ந்திருக்கிறாள்.

> **"இவள் அரக்கிகளைக் காணவில்லை; பூத்துக் கனி குலுங்கும் மரங்களைக் காணவில்லை. உள்ளத்தில் ஒரே நோக்கத் தோடு ராமனையே எப்பொழுதும் காண்கிறாள்."**

அழகை இழந்த நிலையில் சீதை பெண்மையின் பேரெல்லையாகத் தோன்றுகிறாள் அனுமனுக்கு. "ராமனுக்கேற்ற மனைவி இவளே" என்று அவன் தனக்குள் தீர்மானித்துக்கொள்கிறான். மரத்தின்மேல் அமர்ந்து கீழே சீதை என்ற ஒப்பற்ற தெய்வத்தைப் பார்த்துக் கொண்டே இருந்த அனுமனுக்கு எண்ணங்கள் அலை அலையாகத் தோன்றுகின்றன. "எப்படிப்பட்ட சேர்க்கையைப் பாவி குலைத்து விட்டான்!" என்று உருகிப் போகிறான் அனுமன். ராமன் மேலும் இந் நிலையில் சற்றுக் கோபம் ஏற்படுகிறது அவனுக்கு. 'பெண் குலத்தின் ஈடில்லாத மாணிக்கத்தை இழந்ததும் ராமன் உடலில் இன்னும் உயிரைத் தரித்திருக்கிறான். என்ன கடினசித்தம் அவனுடையது!' என்று கூட அனுமன் எண்ணமிடத் தொடங்குகிறான்.

> **'இவளை விட்டுப் பிரிந்து வாழும் வள்ள லான ராமன் செய்தற்கரிய செய்கையைச் செய்திருக்கிறான். தன் உடலைத் தாங்கித் துன்பத்தினால் நலியாமல் அவன் இருப்பது மிகப் பெருஞ் செயல்.'**

'ஒரு பெண்ணுக்காகப் பெரியவன் வருந்தக் கூடாது' என்று நினைத்த அனுமனுக்குப் பெண்ணின் உயர்வு புலப்பட்ட கணத்தில் எத்தகை மனமாற்றம் ஏற்பட்டு விடுகிறது!

பரதனைப் பற்றியும், லக்ஷ்மணனைப் பற்றியும், சீதையைக் குறித்தும் அனுமனைக் குறித்துந்தான் மேலே கூறிவந்தோம். ஆனால் அவையும் ராமனின் குணவர்ணனையாகவே அமைந்துவிட்டன. இதுவே ராமாயணத்தின் சிறப்பியல்பு. மற்றப் பாத்திரங்கள் எல்லாம் ராமனை நேசிப்பவர்களும் வெறுப்பவர்களுமாகவே அமைந்து விட்டன. அன்புத்தளைகளாலும் வெறுப்பு விலங்குகளாலும் ராமாயணப் பாத்திரங்கள் எல்லாம் ராமனுடன் பிரிக்க முடியாமல் கட்டுண்டு கிடக்கின்றன. இந்த நூலில் ராமன் தலைவனாக அமைந்திருப்பது போல் வேறு எந்தக் காவிய, புராண, இதிகாசங்களிலும் தலைவன் அமையவில்லை பாரதத்தில் ஐந்து பாண்டவர்கள் தலைவர்கள். அவர்களுக்கு ராமன் அளவு முதன்மை இல்லை. கிருஷ்ணன் ஆட்டுவிக்க, ஆடும் பொம்மைகளாகவே அவர்கள் காட்சி அளிக்கிறார்கள். ஆனால் கிருஷ்ணனைப் பாரதத்தின் தலைவனாக நினைக்கவும் இடமில்லை. பாகவதத்தில் ஒவ்வொரு ஸ்கந்தத்திலும் பல அரசர்கள், பக்தர்கள் பேசப் படுவதால் அதை ராமாயணத்தோடு ஒப்பிடவே முடியாது. 'ராமனைப் பற்றிய நாடகங்கள் எண்ணிறந் தனவாய் இருக்க, நானும் ஏன் ராமனைப் பற்றியே (அனர்க்க ராகவம் என்ற நாடகத்தை) எழுத

வேண்டும்?" என்று தன்னையே கேட்டுக்கொண்டு முராரி கவி, "நாடக இலக்கண நூல்களில் தலைவனின் குணங்கள் விரிவாய்க் கூறப்படுகின்றன. இவை எல்லாம் பொருந்திய தலைவன் ராமனைத் தவிர வேறு ஒருவனும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. ராமனே உலகிற் சிறந்த தீரோதாத்த புருஷன்" என்று தீர்மானித்துப்பின் ராமனையே தலைவனாக அமைத்துத் தன் நாடகத்தை இயற்றினான்.

ராமாயணத்தின் ஆசிரியரான வால்மீகியும் ராமனுக்காகத் தான் நூலையே எழுதினார். மற்றவர்கள் எல்லோரும் தம் இதயத்தில் நாதனான ராமனுக்குச் சார்வாய் அமைந்தவர்களே தவிர அவர்களுக்குத் தனியான உயிர்ப்பே இருப்பதாகக் கவி நினைக்கவில்லை. தாம், ராமன் பின்னால் போவதுடன், வால்மீகி நம்மையுங் கூடக் காட்டிலும் ராமனுக்குப் பின்னணியாக அழைத்துப் போவார். ராமனைப் பற்றியே 24,000 சுலோகங்களைக் காவியமாக எழுதினார் கவி என்பது மிகையில்லை. பாதுகா பட்டாபிஷேகம் வரை கவி சித்திர கூடத்தில் இருந்த ராமனைப்பற்றியும், அயோத்தியில் இருந்த பரதனைப் பற்றியும் மாறி மாறிக் கூறிவந்தார். பரதன் ராமனுக்காகச் செய்த பெரிய தியாகம்பற்றிச் சொல்ல வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். பாதுகைகளைத் தலையில் சுமந்து பரதன் ராமனை விட்டுப் பிரிந்து போன பின் அவனை ராவண வதத்திற்குப் பின்பே நேரில் சந்திக்கிறோம். குழந்தை பரதன் நந்திக்

கிராமத்தில் லட்சிய அரசியல் நடத்தி வந்தாலும் வால்மீகிக்கு அவன் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. பின்னால் பரதனைப்பற்றி லக்ஷ்மணன் கோதாவரிக் கரையில் கூறுவதும். ராமன் கடற்கரையில் விபீஷண சரணாகதி கட்டத்தில் பரதனைப் புகழ்ந்து பேசுவதும் தவிர அவனை நேரில் எங்கும் கவி வர்ணிக்கவே இல்லை. ராமன் என்ற ஒப்பற்ற பாத்திரம் உருவா வதற்கு இசைவாக மற்றப் பாத்திரங்கள் தொழில் புரியும் வரையில்தான் கவிக்கு அவர்களால் பயன் உண்டு. மற்றச் சந்தர்ப்பங்களில் அவர்களை இரக்கமில்லாமல் ஒதுக்கிவிடுவது வால்மீகி வழக்கம்.

ராமன் நேரில் வராத கட்டங்கள் - ஆரண்ய காண்டத்திலிருந்து நூலின் முடிவு வரை - அநேகம் உண்டு. சூர்ப்பணகை ராவணனிடம் சென்று தனக்கு நேர்ந்த அவமானத்தைக் கூறி முறையிடுகிறாள். இந்த கட்டம் ராமனின் புகழ்ச்சியாகவே முடிந்துவிடுவது ஓர் அதிசயம். சூர்ப்பணகை ராமனின் அழகு, வீரியம் இவைகளை அங்கே வர்ணிப்பது போல் தண்டகையில் எந்த முனிவரும் செய்யவில்லை என்பது பெரியோரின் அநுபவம்.

சீதையைக் கவர மாரீசனின் உதவியை வேண்டி ராவணன் அவனுடைய ஆசிரமத்துக்குப் போகிறான். ராவணனின் எண்ணத்தை அறிந்து மாரீசன் நடுநடுங்கிப் போய், "அப்பா, என்ன மதியீனம் இது! ராமனின் பகையைத் தேடிக்கொள்வதினும் எமனின் பகைமை சிறந்ததாகும்!" என்று சொல்லுகிறான். அங்கே மாரீசன் ராமனின் பெருமையைப் பேசுவது போல்

பக்தர்களால் பேச முடியவில்லை! "எங்கும் ராமனையே நான் காண்கிறேன். 'ர' என்று தொடங்கும் சொற்களைக் கேட்டால் - ரத்தினம், ரதம் என்று யாரேனும் குறிப்பிட்டால் ராமன் வருகிறான் என்று பதறிப் போய்விடுகிறேன்" என்கிறான்!

> **"ராவணா, மரவுரியும் மான்தோலும் அணிந்த அவனை நான் மரங்களையும், மான் களையும் காணுந்தோறும் காண்கிறேன். ரத்தினம், ரதம் முதலிய ரகரத்தில் தோன்றும்சொற்கள்யாவும் எனக்குத் திகிலளிக்கின்றன."**

சுந்தர காண்டத்தின் பெரும்பகுதி இலங்கையில் நடக்கும் செய்திகளைச் சொல்வது; ராமன் நேரில் தோன்றுவதில்லை. ஆனால் இந்தப் பகுதி முழுவதுமே வாசகர்கள் ராமனை மறக்க முடியாதபடி செய்துவிடுகிறார் கவி. அனுமன் சீதைக்காக இலங்கை முழுவதும் தேடுகிறான்; ராவணனுடைய அந்தப் புரத்தில் மாற்றுருவத்தில் நுழைந்து ஓர் இடம் விடாமல் தேடிப் பார்க்கிறான்; சீதை அவனுக்குத் தோற்றுவதில்லை; ராமனுக்குத் தான் பயன்படாமல் போய்விட்டதை நினைத்து மனம் நொந்து கொள்கிறான்.

திடீரென்று ஓர் எண்ணம் அவன் மனத்தில் பளிச்சிடுகிறது. 'நான் புறப்படுவதற்கு முன்னால் எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டேன். ஆனால் ராமனை மாத்திரம் மனத்தால் நினைக்க வில்லை' என்று உணர்ந்து ராமனைப் பிரார்த்திக் கிறான்.

"இலக்குவனோடு விளங்கும் ராமனுக்கு வணக்கம். ஜனகன் மகளான தேவிக்கு வணக்கம். ருத்திரன், யமன், வாயு ஆகிய தெய்வங்களுக்கு வணக்கம். வெண்மதி, கதிரவன், மருத்து ஆகிய தேவர்களுக்கு வணக்கம்."

அந்தக் கணமே அசோக வனம் அனுமன் கண்ணில் பட, அவன் வனத்துள் நுழைந்து சீதையைக் கண்டான் என்பது கதை. ராமன் பணியாய் வந்த அனுமன் ராமன் அருளாலேயே பணியை நிறைவேற்றினான் என்று கவி வற்புறுத்துகிறார்.

ராமன் நேரில் தோன்றும் இடங்களிலெல்லாம் அவன் குணசித்திரமே சிறப்பாகப் பிரகாசிப்பதைக் காண்கிறோம். விபீஷணன் ராவணனை விட்டு ஆகாய மார்க்கமாகக் கிளம்பி வந்து அக்கரையில் ராமனின் முகாம் இருந்த இடத்தை அடைகிறான். மேல் இருந்தவண்ணம் தான் யாவன் என்று உரத்த குரலில் கூறி, "நான் வந்திருப்பதை ராமரிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று குரங்குகளை வேண்டுகிறான். விரோதியின் பக்கலிலிருந்து வந்த விபீஷணனைச் சேர்த்துக் கொள்வதா கூடாதா என்பது பற்றி ராமனுக்கெதிரே நண்பர்களிடையில் வாதம் நடக்கிறது. பல வானரத் தலைவர்கள் எழுந்து, "விபீஷணனை ஏற்றுக் கொள்ளக் கூடாது" என்று காரணங்களுடன் வாதித்தனர். அண்ணனை இராமன் கொன்ற பின் முடி சூட்டிக்கொண்ட சுக்கிரீவன், "அண்ணனை ஆபத்தில் தவிக்க விட்ட விபீஷணனை நம்பக் கூடாது" என்று தீவிரமாக ஆட்சேபித்தான்!

ராமன் புன்சிரிப்புடன் இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அனுமனை நோக்கினான். அறிவிற் சிறந்த அனுமனும் எல்லோரும் வியக்கும் வண்ணம் வாதித்து விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று யோசனை கூறினான். முடிவில் தன் மனத்திலுள்ளதை ராமன் வெளியிடத் தொடங்கியதும் சபையில் எல்லோரும் கவனித்தார்கள்.

ராமன் சொன்னது: "விபீஷணன் சரியான காலத்தில் சரண் புகவில்லை என்று கூறுவது தவறாகும் ராவணனின் மனம் மாறிச் சீதையை நம்மிடம் திருப்பிக் கொடுத்து விடுவான் என்றே அந்தத் தர்மாத்மா இதுகாறும் எண்ணிக்கொண்டு இருந்திருப்பான். போருக்கு ஏற்பாடுகள் நடப்பதையும், ராவணன் மனம் தீ நெறியில் நிலைத்து நிற்பதையும் கண்டு அவன் நம்மை நோக்கி விரைந்து வந்திருக்கிறான். அவன் வந்த காலமும் இடமும் சரியாகவே அமைந்துள்ளன. அவனைக் கைவிடுவது எங்ஙனம் தர்மமாகும்? துயரத்திலுள்ளவன் - சோகத்தால் உருகி நைந்து போயிருப்பவன் - ஒருமுறை வாய்விட்டு என்னிடம் 'நீயே சரண்!' என்று கூறி அடைக்கலம் புகுந்தானானால் அவனுக்கு அபயம் அளித்துக் காப்பது என் கடமை ஆகிறது. சரண் புகுந்த ஜீவனுக்கு அபயம் அளித்தல் என் வாழ்க்கையின் ஒப்பற்ற லட்சியமாகும்" என்றான்.

"யான் உன்னுடையவன் என்று கோரி ஒரு தடவை என்னைப் புகலடைந்த எல்லா உயிர்களுக்கும் அபயம் தருகிறேன். இதுவே என் விரதம்."

"விபீஷணன் என் விரோதியின் பக்கலிலிருந்து வந்திருப்பதால் அவனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கூறினீர்கள். 'அபயம்' என்று கூறிவந்ததால் விபீஷணனை ஏற்றுக் கொள்ளப் போகிறேன். 'அபயம்' என்று கூறிக்கொண்டு ராவணனே வந்தாலும் பகையை விடுத்து ராவணனையும் ஏற்றுக் கொள்வேன்!" என்றும் கூறுகிறான்.

ராமன் தனது வாழ்க்கையின் லட்சியத்தைக் கூறும் இப்பகுதி இந்நூலின் சிகரமாக அமைந்திருக்கிறது. பகைமையை மூழ்கடித்துவிடும் ராமனின் அன்பு வெள்ளம் அவனுடன் நெருங்கிப் பழகிய வானர வீரர்களையும் திகைப்பில் ஆழ்த்திவிடுகிறது. தர்மத்தின் உருவாகப் பொலிகின்ற ராமனின் ஒளிப்பிழம்பில் மற்றப் பாத்திரங்கள் ஒளியிழந்து நிற்கின்றன.

பகையை மறந்து பகைவனை மன்னித்துவிடும் ராமனின் தன்மையை இந்நூலில் எங்கும் பார்க்கலாம்.

பலநாள் கடும்போர் புரிந்து ராமன் ராவணனை வீழ்த்தினான். ராவணன் இறக்குமுன் ராமனுக்கு எத்தனையோ வகைகளில் மனக் கிலேசத்தை உண்டாக்கியிருந்தான். என்றும் பிரியாத தேவியை ராமனிடமிருந்து பிரித்து இலங்கையில் சிறை வைத்தான். தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்றும், ராமனை மறந்துவிடவேண்டும்மென்றும் சீதையை வற்புறுத்தினான். கொடுமைகள் பல

இளைத்தான். துயரம் தாங்க முடியாமல் சீதை ஒரு சமயம் தற்கொலை செய்துகொள்ளவும் துணிந்தாள். பிறகு நடந்த யுத்தத்தில் ராவணன் லக்ஷ்மணனைக் கீழே வீழ்த்தினான். சகோதர பாசத்தால் கட்டுண்ட ராமன் லக்ஷ்மணன் மேல் விழுந்து நெஞ்சு வெடித்துவிடுவது போல் கதறினான். ராமனது அன்புக்குப் பாத்திரமான அனுமன் முதலிய தொண்டர்களை ராவணன் ஆயுதங்களினால் போரில் துன்புறுத்தினான். இணையில்லாத வீரத்தோடு போர்புரிந்து ராமனையே திகைக்க வைத்தான்.

அத்தகைய கொடியோன் தேசழிந்து போர்க்களத்தில் பிணமாகக் கிடந்தான். உடன் பிறந்த பாசத்தால் கதறி அழும் விபீஷணனுக்கு ராமன் பலவாறாக ஆறுதல் மொழிகளைக் கூறித் தேற்றினான். "அண்ணனுக்கு மரணக்கிரியைகளைச் செய்யமாட்டேன்" என்று வெறுப்பினால் கூறிய விபீஷணனை நோக்கி ராமன் கூறுவான்:

"க்ஷத்திரியர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டால் நற்கதியை அடைகிறார்கள். அவர்களின் மரணத்தைக் குறித்து ஒருவரும் வருந்த வேண்டுவதில்லை. க்ஷத்திரியனின் கடமை யுத்தத்தில் செம்மை வழுவாது போர் புரிய வேண்டும் என்பதே. வெற்றியும் தோல்வியும் யுத்தத்தில் மாறி மாறி வரும் இயல்புடையவை. யுத்தத்திற்குச் செல்லும் போர் வீரன் வெற்றியுடன் திரும்பினாலும், தோல்வியுற்று மரணம் அடைந்தாலும் அவன் புகழுக்கு யாதொரு களங்கமும் ஏற்படாது.

"ராவணன் உயிருடன் இருந்தகாலை நீ அவனுக் கெதிராகப் போர் புரிந்தாய். போர்க்களத்தில் உயிரிழந்த அவன்மேல் கொண்ட பகையை இந்தக் கணத்தோடு மறந்துவிட வேண்டும். வெறுப்பும் பகையும் மரணத்தோடு முடிவு பெறுகின்றன. இறந்துபட்ட உன் உடன் பிறந்தவனுக்கு ஈமக் கடன்களைச் செம்மையாகச் செய்து முடிப்பாயாக."

'பகைமைகள் யாவும் சாவுடன் முடிவெய்துகின்றன'

ராமனின் இந்தச் சொற்கள் பகைமையை மறக்கும் அன்பு உள்ளத்தின் வெளியீடாக என்றும் போற்றப்படுகின்றன. இவற்றை, ராமன் சொல்லி விபீஷணனைத் தேற்றுவதாக அமைந்த பகுதியில் - கொன்று வீழ்த்தப் பட்ட அண்ணனைக் கண்டு தம்பி புலம்புவதாக அமைந்த கட்டத்தில் - வதம் செய்த ராமனின் குணத்தழகே சுடர் வீசிப் பொலிகின்றது. ராமன் அரங்கத்தில் தோன்றினாலும், தோன்றாது விடுத்தாலும் அவன் பெயர், அவனது வீரம், அவன் கருணை, அவனுடைய மேனியின் வனப்பு என்ற அம்சங்களில் ஒன்றோ பலவோ நம் கவனத்தை ஈர்த்துவிடும்; ராமனை மறவாது அவனையே சிந்தித்திருக்கும்படி நம்மைச் செய்து விடும்.

ராமன் எப்படி இருந்தான்? எவ்வாறு வாழ்ந்தான்? அவனது அழியாப் புகழுக்குக் காரணம் என்ன? - இவற்றுக்கு விடையாக அமைந்ததே ராமாயணம் என்னும் பெருங் காப்பியம். ராமன் பேரழகு படைத்தவன்; சீதையும், ஜனகனும், விசுவாமித்திரனும்,

அனுமனும், சூர்ப்பணகையும் திரும்பத் திரும்ப அநுபவித்துச் சொற்களால் தம் அநுபவத்தை வெளியிட முடியாமல் திகைத்து நிற்கிறார்கள். எல்லோரையும் வசீகரிக்கும் மேனி யழகு படைத்தவன் என்பதால்தான் ராமன் என்று அவனுக்குப் பெயரிட்டார்கள். பின்னர் மனத்திற்கு இனியனாகவும் இருந்து மக்களைத் தன் வசமாக்கினான் என்பது பக்தர்களின் அனுபவம்.

அழகுக்கு இணையாக வீரமும் இருந்தது, ராமனுக்கு. அவன் அழகைப் பார்த்து மயங்கி, "இந்தக் கோமளமான சிறுவனால் இதைச் செய்யவும் கூடுமோ?" என்பவரைத் தன் வீரத்தால் ராமன் திகைக்கச் செய்தான். ஜனகன் அரண்மனையிலும், ஜனஸ்தானத்திலும் கிஷ்கிந்தையிலும், இலங்கை யிலும் வீரம் விளைத்து. ராமன் 'மகா வீரன்' என்ற சிறப்புப் பெயரும் பெற்றான். "வில்லாளிகளுக்குள் நான் ராமனாக இருக்கிறேன்." என்றான் கீதா சாரியனும்.

ஆனால் வால்மீகியின் மனத்தை அன்று கவர்ந்ததும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாரத மக்களின் உள்ளத்தை உருக்குவதும் ராமனின் குணத்தழகே ஆகும். மக்களுக்குத் தர்மத்தைப் புகட்ட வந்தவர் வால்மீகி. தர்மம் அன்று ராமன் வடிவிலே வந்தது.

"ராமன் அறமே வடிவானவன்"

ஆகவே, ராமனைப் பாடினார் வால்மீகி. ராமன் தந்தை சொல் காக்கக் காடு புகுந்தான். முனிவர்களைக்

காக்க அரக்கர்களைக் கொன்றான். அரசின் தூய்மையைக் காக்க மனைவியைத் துறந்தான்: வாழ்க்கையில் தனது ஒவ்வொரு செய்கையையும் தருமம் என்ற உரைகல்லில் இட்டு ஆராய்ந்தான். தருமத்திற்கு இசைந்ததை ஏற்றான்; மற்றதைத் தீவினை என்று நீத்தான்.

வால்மீகியின் ராமன் தெய்வமா, மனிதப் பிறவியா என்ற கேள்வியை முடிவில்லாமல் ஆராய்கிறார்கள். ராமனை வால்மீகி மனிதனாகக் காவியத்தில் காட்டினார் என்பது மட்டுமல்ல: மனிதன் என்றே நம்பினார். காவியத்தின் முதலில் உள்ள சம்க்ஷேப ராமாயணத்தில். "முடிவில் ராமன் பிரம்மலோகத்தை அடைவான்" என்று இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ராமனின் முடிவை எதிர்காலத்தில் உணர்த்தியிருக்கிறார்.

காவியத்தில் எந்த இடத்திலும் ராமனின் செய்கையைக் கவி இறைவன் என்ற பார்வையால் வர்ணிப்பதே இல்லை. விராதன், சீதையைக் கவர்ந்து போவதைப் பார்த்த ராமன் ஆற்றாமையினால், "கைகேயி, உன் எண்ணமும் பலித்துவிட்டதே!" என்று கதறுகிறான். இறைவனின் அவதாரமாக ராமனைக் கருதியிருந்தால் கவி அந்த இறைத் தன்மைக்கு இழுக்கை உண்டாக்கும் முறையில் இதைப் பாடி இருக்கமாட்டார். காவியம் முழுவதிலும் அங்கங்கே ராமனுக்கு உவமையாக இந்திரனைக் காட்டுகிறார். விஷ்ணுவின் அவதாரமான ஒரு தலைவனை இந்திரனுக்கு ஒப்பிடுவது முன்னோன் புகழைக்

குலைப்பதாக முடியும். ராமனிடம் இணையற்ற பக்தி உள்ள அனுமனும் ராமனைத் தெய்வமாக நினைக்க வில்லை. மனிதருள் உத்தமனாகவே வழிபட்டான். சீதையைக் கண்டதும், "உங்களைப் பிரிந்தும் ராமன் இன்னும் இறக்காமல் உயிர்வாழ்ந்திருப்பது அதிசயம்" என்று அனுமன் சொல்வது, 'இறைவன் கொள்கைக்கு' ஒவ்வாதல்லவா?

4. மகாபாரதம்

சகுந்தலையின் மகன் பரதனின் வம்சத்தில் வந்தவர்கள் பாரதர்கள்; பாண்டவர்கள் பாரதர் களாகையால் அவர்களின் வரலாறு பாரதம் ஆயிற்று. அளவிலும், உயர்விலும் மிகப் பெரிது என்பதால் 'மகா' என அடைமொழியைச் சேர்த்து மகாபாரதம் என்று நூலுக்குப் பெயர் வழங்குகிறோம்.

அளவில்தான் இது எத்தனை பெரிது! இந்நூலில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சுலோகங்கள் அடங்கியிருக்கின்றன. 'பகவத் கீதை' என்ற ஒரு முழு நூல் இதன் ஒரு பாகமாக இயற்றப்பட்டது. நளனின் சரிதையை இதிலிருந்து எடுத்துத் தனிக் காவியமாக அநுபவிக்கிறோம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சம்ஸ்கிருதம் படிக்கும் மாணவர்களுக்கு நளசரிதமே முதலில் போதிக்கப் படுகிறது. பாண்டவர்களின் வரலாற்றைச் சொல்லும் இந்த இதிகாசத்தில் பாண்டவர் கதை எனும் நிலைக் களத்தில் பின்னப்பட்ட உபகதைகள் கணக்கின்றிச் செறிந்து கிடக்கின்றன.

பாரதத்தில் உள்ள ஒருலட்சம் சுலோகங்களில் ஒரு பத்தாயிரம் மட்டுமே கதையைச் சொல்லிக் கொண்டு போகப் பயன்படும். மற்றவை எல்லாம்

உபகதைகளைச் சொல்வதற்கும் நீதிகளை விரிவாகப் புகட்டவுமே பயன்படுவன. பகவத் கீதை, சநத்சுஜா தீயம் போன்ற முழுத்தனி நூல்கள் பாரதத்தின் பகுதிகளாக அமைந்துள்ளன. தவிர சாந்தி பருவம், ஆனுசாஸனிக பருவம் என்ற முழுப் பர்வங்களும் நீதி புகட்டும் பகுதிகளே. இதனால் இற்காலத்து ஆராய்ச்சியாளர்கள், பாரதத்தின் கதைப் பகுதியை மட்டுமே வியாசர் எழுதியிருக்க வேண்டும் என்றும் மற்றவை பிற்காலத்தில் இடைச் செருகல்களாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருதுகிறார்கள். நடையை மட்டும் எடுத்து ஆராய்ந்தால் நடை நூலில் பெருமளவில் வேறு படுவதைக் காணலாம். வியாசரின் நடை - கதை சொல்லப்படும் பகுதியின் நடை சாதாரணமாகத் தனிச் சிறப்பு இல்லாததாகத் தோன்றுகிறது. பகவத்கீதை மிக அழகிய கவிதை நடையில் அமைந்திருக்கிறது.

நடையை விட்டுப் பொருளைக் கவனித்தாலும் சில வேறுபாடுகள் தெரிகின்றன. கீதையின் தத்துவம் ஆழமானதாக அமைந்துவிட, சாந்தி பருவத்தில் எடுத்துக் கூறப்படும் தத்துவத்தின் தரம் அத்துணை ஆழமுடையதாக இல்லை. சநத்சுஜாதீயத்தின் தரம் கீதையின் தரத்தை விட மிகத் தாழ்த்ததாக இருக்கிறது. இவை அனைத்தையும் ஒரே புலவர் எழுதியிருக்க முடியுமா என்ற ஐயம் இக்காரணங்களினால் வலுப் பெறுகின்றது.

சிக்கல் நிறைந்த இந்தப் பெருநூலை இயற்றியவரின் கற்பனை வளமும், அறிவுத் தெளிவும்

எத்தகையன என்று எண்ணிப் பார்த்தால் வியப்புத் தோன்றும். ஆதிபர்வத்தில் ஏற்பட்ட ஒரு சாபத்துக்குக் கர்ண பர்வத்தில் முடிவு சொல்லப்பட்டிருக்கும். இதில் வரும் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் சொந்தப் பெயரைத் தவிர அவருடைய ஊரைப்பற்றியோ, தகப்பனைப்பற்றியோ ஏற்பட்ட ஒரு காரணப் பெயரும் இருக்கும். ஜயத்ரதன் சிந்து நாட்டின் அதிபதி என்பதால் சைந்தவன் என்றும் அழைக்கப் படுவான். துரியோதனனுக்குத் தார்த்தராஷ்டிரன் என்ற பெயரும் வழங்கி வரும். ஆயிரக்கணக்கான பாத்திரங்கள் உலவும் இந்தப் பெருங் காவியக் கானகத்தைக் கவி வியாசர் பெயர்த் தடுமாற்றம் நிகழ்ச்சிக் குழப்பம் இல்லாமல் அமைத்துப் போவதைப் பார்த்தால் இவர் மனிதப் பிறவி அல்லர் என்றே நமக்குத் தோன்றும்.

பாரதத்தின் தனிச்சிறப்பு தர்ம சங்கடமான சம்பவங்களில் அதன் பாத்திரங்கள் அகப்பட்டுக் கொண்டு மீள்வதுதான். கர்ணன் குந்தியின் முதல் பிள்ளையே என்று கண்ணன் அவனுக்கு எடுத்துக் காட்டி, "நீ பாண்டவர்களின் பக்கத்தில் கௌரவர் களுக்கு எதிராகப் போர் புரிய வேண்டும். இந்த யுத்தத்தில் பாண்டவர்களுக்கே வெற்றி" என்று வற்புறுத்தினான். கர்ணன் பெரிய தர்மசங்கடத்தில் சிக்கிக் கொண்டான். துன்பத்தில் உழலும் தன் உடன்பிறந் தோருடன் சேர்ந்து அவர்களுக்கு உதவியாகப் போர் புரிவது ஒரு கடமை; ஆனால் துரியோதனன் பக்கத்தில் இருந்து யுத்தம் செய்வது 'செஞ்சோற்றுக் கடன்' ஆகும்.

சோறிட்டு வளர்த்தது மட்டுமா? சிறுவயதில் பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரு பந்தயத்தில் தமது உடல் வன்மையைக் காட்டும் சமயத்தில் கர்ணனும் பந்தயத்தில் ஈடுபட விரும்பினான். ஆனால் அர்ஜுனன், 'நீ தேர் ஓட்டியின் மகன். க்ஷத்திரிய குமாரர்களாகிய நாங்கள் உன்னுடன் போரிட மாட்டோம்'' என்று கூறி மறுத்தான். உடனே துரியோதனன் முன்வந்து, "கர்ணன் தேர் ஓட்டியின் மகனல்லன். இதோ அவனை அங்க நாட்டுக்கு அரசனாக ஆக்கிவிட்டேன். இனிக் கர்ணன் க்ஷத்திரியர் களோடு சமமாக பந்தயத்தில் ஈடுபடலாம்!" என்று கோஷமிட்டான். சொன்ன படியே அங்க நாட்டு அரசனாகக் கர்ணனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து அவனைச் சமூக நிலையிலே உயர்த்திவிட்டான்.

துரியோதனனின் தூய நட்பை நினைத்துக் கர்ணன் கண்ணீர் உகுத்தவண்ணம் கிருஷ்ணனிடம் சொன்னான்: "பாண்டவர்களுக்கே வெற்றி என்பது எனக்குத் தெரியும். துரியோதனனின் கட்சி தோல்வி அடையும்; அவனைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் அழிந்து போவார்கள். இதுதான் தர்மம்; இப்படித் தான் நடக்கவேண்டும். ஆனால் என் கடமை தெளிவாக எனக்குப் புலப்படுகிறது. அன்றையி லிருந்து என்னை ஆளாக்கிய துரியோதனனை நான் கைவிடமாட்டேன். அவனுக்காகப் போரிட்டு உயிர் துறப்பதே என் கடமையாகும்."

கதாநாயகர்களுடைய எதிரிகளின் கூட்டத்திலே இத்தகைய உயர்ந்த நட்பைக் காட்டுவதற்குச்

சாதாரணக் கவிஞர்களுக்குத் துணிவிருக்காது. உயர்ந்த மனப்பண்பு உள்ள வியாசர் போன்றவர்களால் தான் அது முடியும். இவ்வாறே வியாசகவி துரியோதனனின் தாய் காந்தாரியைச் சிறந்த குணவதியாகச் சித்தரிக்கிறார். "பாண்டவர்களுடன் யுத்தம் செய்யாதே! உன் கட்சியில் தர்மம் இல்லை" என்று மகனுக்கு அவள் இடித்துரைக்கிறாள். தீவினையால் தூண்டப்பட்ட துரியோதனன் அவளுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறான்; கதை மேலே தொடர்கிறது. போரின் தீமைபற்றிக் காந்தாரி சொல்வது இக்காலத்திலும் பொருந்தும் நல்லுரையாகும்: "போரினால் நன்மையை அடைய முடியாது. அறமும், பொருளும் யுத்தத்தின் பயனாகக் கிடைப்பதில்லை, யுத்தத்தில் வெற்றி நிரந்தரமாக இருப்பதில்லை. ஆகவே, போர் செய்யும் எண்ணத்தை விட்டுவிடு!" என்பதே அவளது நல்லுரை. ஒரு தலைமுறையில் இரு பயங்கரமான மாகயுத்தங்களைப் பார்த்திருக்கும் நமக்கு இது எத்தகைய படிப்பினை!

கர்ணனைப் போல பாரதத்தில் அநேக பாத்திரங்களுக்குச் சங்கடமான நிலை ஏற்படுகிறது. பகவத்கீதை என்ற உபதேசம் தர்மசங்கடத்தில் அகப்பட்ட அர்ஜுனனை மீட்பதற்காகச் செய்யப் பட்டதே. திரௌபதி துரியோதனனின் சபையில் அவமதிக்கப்படும்போது பாண்டவர்கள், "மனைவியின் மானத்தைக் காக்க வேண்டும். ஆனால் சூதாட்டத்தில் தோற்றுவிட்டதால் அவள் நம்

உடைமை என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும்" என்ற இரு தர்மங்களின் நடுவில் அகப்பட்டு நிலை குலைந்து போகிறார்கள். யுத்தம் தொடங்குமுன் பீஷ்மருக்கும் துரோணருக்கும் இதே போன்ற சங்கடம் ஏற்படுகிறது.

"பாண்டவர்களின் கட்சியில் தர்மம் இருக்கிறது. அவர்களுக்கே நாம் உதவி செய்ய வேண்டும்" என்று ஒரு புறமும், துரியோதனன் சோறிட்டுக் காப்பாற்றியவன் என்பதால் அவன்பால் நன்றி பாராட்டவேண்டிய கடமை ஒரு புறமும் இழுக்கின்றன. இரு தர்மங்கள் இருவேறு வழி காட்டும்போது எதைப் பின்பற்றுவது என்ற திகைப்பைச் சித்தரிக்கும் திறன் பாரதம் பாடிய வியாசரிடம் சிறப்பாக அமைகிறது.

பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்ய நேர்ந்ததை நினைத்துக் காட்டில் யுதிஷ்டிரர் துக்கப்பட்டுக் கொண்டு இருக்கையில் பிருகதசுவர் என்ற முனிவர் வந்து நளன் கதையைக் கூறுகிறார். சூதாட்டத்தில் ராஜ்யத்தை இழந்து, மனைவியுடன் நளன் காட்டில் நடந்து போகிறான். தன் அங்கவஸ்திரமும் பறி போய் விட்ட நிலையில் இடுப்புத் துணியோடு நிற்கும் நளன் தமயந்தியின் துயரம் கண்டு பெரிதும் வருந்திக் கூறுவான்: "அன்பிற் சிறந்தவளே! இதோ பல வழிகள் பிரிகின்றன. நமக்கு முன்பாக. விதர்ப்ப நாட்டுக்குப் போகும் வழி இதுதான்: இதில் நடந்து போனால் உன் தாய்வீட்டை அடையலாம்" என்று குறிப்பாகச் சொல்கிறான்.

குறிப்பறிந்த தமயந்தி துயரம் தாங்காமல் சொல்கிறாள்: "ஆரியபுத்திரரே, நாட்டை இழந்து காடு புகுந்து பசியும் களைப்பும் மேலிடத் தவித்து நிற்கும் தங்களை விட்டு நான் தாய் வீடு செல்வது தகுமா? இந்த நிலையில் உள்ள புருஷனுக்கு மனைவியே உற்ற துணைவி யாவாள். வியாதி கண்டவனுக்கு மருந்து போல் துயர் உற்ற புருஷனுக்கு மனைவியைக் காட்டிலும் சிறந்த மாற்றம் இல்லை."

பெண்ணின் பெருமையை இப்படிக் கூறிய வியாசர் பெண்ணுக்கு ஆண்மகனே உற்ற துணை என்றும் காட்டுகிறார். கபோதோபாக்கியானத்தில் வேடன் பசி தீர்வதற்குப் புறா தன் உடலையே தியாகம் செய்து விட்டபின் அதன் பேடை கதறி அழுகிறது. "தந்தை மகளுக்குச் செய்யும் உதவி சிறிது. சகோதரர்களும் வயிற்றில் பிறந்த மக்களும் ஓர் அளவுதான் உதவி செய்வார்கள். கணவனிடத்தில் தான் பெண் கோரிய பயனை முழுவதும் அடையக்கூடும். கணவன் புரியும் பேருபகாரத்தை நினைத்துப் பார்க்கும் பெண் அவனைத் தெய்வமாகவே நினைப்பாள்" என்கிறது பெண் புறா. பெண் தன்மை ஆண்மையுடன் கலக்கும்போதுதான் முழுமையை அடைகிறது. "வேயுறுதோளி பங்கன்" ஆகிய அர்த்த நாரீசுவரனுக்கும், "தம் ஆகத் திருமங்கை தாங்கிய சீர்மார்வனா"ம் திருமாலுக்கும் உள்ள பூர்த்தி, தனியாக நின்று இயங்கும் சிவனுக்கும் மாலுக்கும் இல்லை என்பது பக்தர்களின் அநுபவம் அல்லவா?

நளோபாக்கியானம் என்ற தனிக் காவியம் பாரதத்தில் பதிக்கப்பட்டிருப்பது போல் ராமன் கதையும் சாவித்திரி சரித்திரமும், கங்கோற்பத்தியும், கந்தன் வரலாறும் உபாக்கியானங்களாக வருகின்றன. ஒவ்வொரு கதையும் ஒரு தர்மத்தைக் கற்பிக்கும்; ஓர் உயர்ந்த உண்மையைக் கண்ணாடிபோல் தெளியக் காட்டும். இவை தவிர, பாரதத்தில் நடமாடும் அநேக புண்ணிய புருஷர்கள் நல் உபதேசம் அருளும் வகையில் முழுதும் தர்மதத்தையே போதிக்கும் இடங்கள் விரவியிருக்கின்றன. காந்தாரி துரியோதனனுக்கு உரைப்பது விதுரர் திருதராஷ்டிரனுக்குச் சொல்வது, யட்சனின் கேள்விகளுக்குத் தருமபுத்திரர், விடையளிப்பது, கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிப்பது, பிஷ்மர் யுதிஷ்டிரருக்கு விரித்துக் கூறுவது இவை முழுதும் நீதிகளும் தர்மங்களும் அடங்கிய பகுதிகள் ஆகும்.

பாண்டவர்கள் காட்டில் வசிக்கும் பொழுது ஒரு முறை நீண்ட நேரம் வேட்டையில் ஈடுபட்டதால் அவர்களுக்குக் கடுந்தாகம் ஏற்பட்டது. யுதிஷ்டிரனின் ஆணையால் நகுலன் ஒரு மரத்தின் மேல் ஏறி நான்கு புறங்களிலும் பார்த்து, "அதோ அங்கே மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. கொக்குகளின் கூட்டத்தையும் அங்கே காண்கிறேன். அங்கு ஒரு நீர்நிலை இருக்கத்தான் வேண்டும்" என்றான். தாகமுற்ற சகோதரர்களுக்கு நீர் கொண்டுவர நகுலன் மரம் அடர்ந்த இடத்தை நோக்கி விரைந்து போனான். நகுலன் எதிர்பார்த்தபடியே நிர் நிறைந்த ஒரு குளம்

தென்பட்டது; ஆவலோடு அவன் நீர் எடுக்கப் போனபொழுது எங்கிருந்தோ ஒரு குரல் பேசியது: "குழந்தாய், நில்! நான் கேட்கும் கேள்விகளுக்கு விடை அளித்துவிட்டுத்தான் நீ இந்த நீரைக் குடிக்கலாம்."

நகுலன் இதை அசட்டை செய்து நீரை வாரி வாரிக் குடித்தான். குளத்தில் கரையிலேயே மயங்கிக் கீழே விழுந்தான்!

வெகு நேரம் ஆகியும் நகுலன் திரும்பி வராததால் தருமபுத்திரர் சகதேவனை அனுப்பினார். பின்னால் அர்ஜுனனையும், பிறகு பீமனையும் அனுப்பினார். நான்கு சகோதரர்களும் திரும்பி வராதது கண்டு கவலையுற்றுத் தாமே குளக்கரைக்கு விரைந்து போனார். அங்கே பீமனும் அர்ஜுனனும், நகுல சகதேவர்களும் உயிர் இழந்து கரையில் கிடப்பதைக் கண்டார். சோகத்தினால் கதறி அழுது கொண்டே யுதிஷ்டிரர் குளத்தில் இறங்கினார். அசரீரியான ஒரு குரல் எங்கிருந்தோ பேசியது:

"நான் இங்கே மீன்களைத் தின்றுகொண்டு குளத்தில் வாழும் ஒரு கொக்கு. உன் தம்பிகளைக் கொன்றவன் நானே. நான் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. தகுந்த பதில் அளிக்க உன்னாலும் முடியாவிட்டால் உன்னையும் கொன்றுவிடுவேன்."

தர்ம: பலத்தில் நிகரில்லாத என் சகோதரர்களைக் கொன்ற நீங்கள் யார் என்று தெரியவில்லை. துயரத்தால் என் உள்ளம் உடைந்துவிட்டது. தாபத்தை

என்னால் தாங்க முடியவில்லை. இந்த வீரர்களை வீழ்த்திய தாங்கள் யார் என்று எனக்குச் சொல்ல வேண்டும்.

யட்சன்: உனக்கு மங்களம் உண்டாகட்டும். நான் கொக்கல்ல என்பதை உன் அறிவால் நீ தெரிந்து கொண்டுவிட்டாய். என் உண்மை உருவத்தை இப்பொழுது பார்: உன் தம்பிகளைக் கொன்ற நான் ஒரு யட்சனே.

உடனே யுதிஷ்டிரர் தம் எதிரில் ஒரு கோரமான உருவம் நிற்பதைக் கண்டார். அவருக்குப் பயம் ஏற்படவில்லை. "உங்கள் கேள்விக்கு என்னால் முடிந்தவரை பதில் கூறுவேன்" என்றார் தைரியமாக.

யட்சன் தன் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்: கேள்விகள் எல்லாம் மனிதரின் இயற்கை, தத்துவ ஞானம் இவைபற்றியனவாகவே அமைந்தன. அவற்றுள் சிலவற்றைப் பார்க்கலாம்.

யட்சன்: பூமியை விடப் பெரியது எது? ஆகாயத்தை விட உயர்ந்தது எது? காற்றை விட வேகமுள்ளது எது?

தரும: பூமியை விடப் பெரியவள் அன்னை. ஆகாயத்தினும் உயர்ந்தவர் தந்தை. மனிதனின் மனந்தான் காற்றைவிட விரைந்து செல்லக் கூடியது.

யட்சன்: வெளியூர் செல்பவனுக்கு நண்பன் யார்? வீட்டில் இருப்பவனுக்கு யாவர் துணை?

தரும: வெளியூர் செல்பனுக்குக் கல்வியே சிறந்த நண்பன். வீட்டிலுள்ளவனுக்கு மனைவியே உற்ற துணை.

யட்சன்: செல்வம், லாபம், சுகம் ஒவ்வொன்றிலும் சிறந்தது எது?

தரும: கல்வியே சிறந்த செல்வம். லாபங்களில் ஒப்பற்றது ஆரோக்கியம். சுகங்களிலெல்லாம் இணையற்றது 'போதும்' என்ற மனம்.

யட்சன்: புகழுக்குக் காரணம் எது? சுகத்திற்கு எது அடிப்படை?

தரும: புகழுக்கு வண்மையே காரணம். ஒழுக்கமே சுகத்திற்கு அடிப்படை.

யட்சன்: இம் மண்ணுலகில் மிகப் பெரிய அதிசயம் எது?

தரும: தன்னைச் சுற்றிலும் உறவினர்கள், நண்பர்கள் ஒவ்வொருவராக இறப்பதைப் பார்த்துக் கொண்டே, தான் மாத்திரம் இவ்வுலகில் அழியாமல் என்றும் நிலைத்திருக்கப் போவதாக எண்ணுவதே விந்தையினும் விந்தையாகும்.

யட்சன் தருமபுத்திரரின் விடைகளைக் கேட்டுத் திருப்தியடைந்தான். அன்போடு அவரை நோக்கி, "குழந்தாய், உன் அறிவும் திறனும் போற்றத் தக்கவை. இறந்துபட்ட உன் சகோதரர்களில் யாரேனும் ஒருவனை நான் உயிர் மீட்டுத் தருவேன். யாரை வேண்டுகிறாய்? சொல்" என்றான்.

பின்னால் நடக்கவிருக்கும் பாரதப் போரில் அர்ஜுனனும் பீமனும் நமக்குப் பேருதவியாக இருப்பர் என்பதை யுதிஷ்டிரர் அறிவார். அவ் விருவரையும் விட்டு, "நகுலனை எனக்குத்

தரவேண்டும்" என்று யட்சனிடம் வேண்டிக் கொண்டார்.

யட்சன் மிகுந்த ஆச்சரியத்துடன். 'உன் அன்புக்குப் பெரிதும் பாத்திரமான அர்ஜுனனைக் கேட்கவில்லை: வீரனான பீமனையும் யாசிக்கவில்லை. நகுலனைக் கேட்கக் காரணம் என்ன?" என்றான். தருமபுத்திரர், "என் தந்தையாகிய பாண்டுவுக்கு இரு மனைவிமார். குந்தியின் வயிற்றில் பிறந்தவர்களுக்குள் நான் ஒருவனாவது உயிர் வாழ்ந்திருப்பதால் அவளுடைய துயரம் மிகுதியாக இராது. மாத்ரியின் இரு புதல்வராகிய நகுல சகதேவர்களில் நகுலனையாவது உயிர் மீட்டுக் கொடுத்தால் மாத்ரிக்கு ஆறுதலா யிருக்கும். இக்காரணம் பற்றியே நான் இவ்வாறு வேண்டினேன்' என்று பதிலளித்தார்.

யட்சன் மறைந்து போனான். அவன் இருந்த இடத்தில் எமன் மகிழ்ச்சியுடன் தோன்றினான். தந்தையைக் கண்டதும் தருமபுத்திரர் வணங்கி எழுந்தார். தருமதேவன் யுதிஷ்டிரரை அன்போடு ஆசீர்வதித்தான். இறந்த பாண்டவர்களை மீட்டுத் தந்தான். ஐவருக்கும் பல வரங்களை அளித்துவிட்டுத் தருமதேவன் மறைந்தான்.

யட்ச உருவத்தில் தருமதேவன் கேட்ட கேள்விகளும் தருமபுத்திரர் அளித்த விடைகளும் சிறந்த நீதி வாக்கியங்களாக போற்றப்படுகின்றன.

விதுரர் திருதராஷ்டிரனுக்குச் சொல்லும் நல்லுரை 'விதுர நீதி' என்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

உத்தியோக பர்வத்தில் இது ஒரு தனி நூல் போல் அமைந்திருக்கிறது. அரசனின் கடமையிலிருந்து தொடங்கிச் சமுதாயத்தில் மனிதனின் கடமைகளை எல்லாம் பரக்கக் கூறுவது இந்நூல்.

"தேவர்கள் ஒருவனுக்குத் துணை புரிய எண்ணம் கொண்டால், தாமே ஆயுதந் தாங்கி வந்து (இடையன் மாடுகளைக் காப்பதுபோல்) காப்பதில்லை. அவனுக்கு நல்ல அறிவைக் கொடுப்பதோடு நின்று விடுகிறார்கள். அறிவின் பலத்தால் வேறு துணையின்றியே தன்னை அவன் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான்.

நல்ல கருத்துக்கள் தோன்றும்போதெல்லாம், மனம் நல்ல வழியில் செல்லும்போதெல்லாம், நமக்கு இறைவன் திருவருள் இருக்கிறது என்று நினைக்க வேண்டும் என்பது இந்த விதுரநீதி சுலோகத்தால் தெளிவாகிறது அல்லவா?

"மூப்பு அழகைக் கொள்ளை கொள்கிறது. ஆசை நெஞ்சுறுதியை அழித்துவிடுகிறது. யமன் உயிரைக் களவாடுகிறான். அறத்தைப் பொறாமையும், ஆக்கத்தைச் சினமும், ஒழுக்கத்தைத் தீயோர் கேண்மையும், வெட்கத்தைக் காதலும் கெடுத்து விடுகின்றன. எல்லா நற்குணங்களையும் இறுமாப்பு என்னும் வைரி அடியோடு அழித்து விடும்" என்ற விதுரநீதி வாழ்க்கைக்குப் பொருத்தமாக அமைகிறது. அழகைச் சதம் என்றிருக்கும் பெண்ணினத்தாருக்கும் அழுக்காறு, அவா, வெகுளி இவை நிறைந்த

வாழ்க்கை நடத்துவோருக்கும் அச் செய்யுள் ஓர் எச்சரிக்கையாக விளங்குகிறது.

பாரதப்போர் தொடங்குவதற்கு முன்னால் யுத்த களத்தில் அர்ஜுனனுக்குக் கண்ணன் பகவத் கீதையை உபதேசிக்கிறான். உலகில் பைபிளுக்கு அடுத்த படியாக அதிகமாகப் பிறமொழிகளில் பெயர்த்து எழுதப்பட்ட நூல் பகவத் கீதையாகும். பாரத சமுதாயம் என்ற வண்டிக்குப் பகவத்கீதையும், திருக்குறளும் இரண்டு அச்சுக்கள் என்று திருவள்ளுவ மாலையில் நல்கூர் வேள்வியார் பாடியிருக்கிறார். மூன்று சமயாசாரியர்களும் கீதைக்கு உரை இயற்றியிருக்கிறார்கள். கீதைச் சொற்பொழிவு களுடன், கீதாயக்ஞம், கீதா ஹோமம், கீதா பாராயணங்களும் பாரததேசம் எங்கும் நடை பெறுகின்றன. இந்நாட்டில் தத்துவ ஞானத்துக்கு அளவு கோல் கீதைப் புலமையேயாகும்.

நம் நாட்டின் தத்துவ சாஸ்திரத்திற்கு அடிப்படையான நூல்கள் மூன்று என்பர் பெரியோர். அவை பிரம்ம சூத்திரம், உபநிஷதம், பகவத்கீதை. அவற்றைச் சேர்த்துச் சொல்லின் 'பிரஸ்தானத்ரயம்' என்று அழைக்கப்படும். அவற்றில் பிரம்ம சூத்திரம் மிகச் சுருக்கமான சூத்திர முறையில் அமைந்தி ருப்பதால் பொருள் எளிதில் விளங்காது. உரைகளோடு ஆசிரியர் உதவியைக் கொண்டு பல வருஷம் ஆராய்ந்தால்தான் பொருள் காண முடியும். உபநிஷதங்கள் பல வேதசாகைகளின் பாகங்களாக அமைந்திருப்பதால் பல கூறாக உண்மையைப்

புலப்படுத்தும். தத்துவத்தில் பழக்கப்படாத மாணவர்களுக்கு அறிவு குழம்பக்கூடும். தவிர, ஒவ்வோர் உபநிஷதமும் தத்துவத்தின் ஒரு சில அம்சங்களையே கூறும். அவற்றையெல்லாம் திரட்டிப் பொருத்திப் பார்க்கத் திறமையுள்ள மாணவனே உபநிஷதங்களால் பயன் பெறலாம்.

பகவத் கீதை இறைவன் உபதேசித்தபடி வியாசரால் எழுதப்பட்டது; ஒரே ஆசிரியரால் ஒரு திட்டப்படி முறையாக வகுக்கப்பட்டது. எளிமை யோடு அழகும் சேர்ந்த சுலோகங்களால் தத்துவத்தின் சாரம் தெளிவாக இதில் சொல்லப் பட்டது. உபநிஷதங்களைப் பசுக்களாகக் கற்பனை செய்தால் இடையன் மகன் கண்ணன் அந்தப் பசுக்களைக் கறந்து கீதை என்னும் பாலை அறிவாளி சுவைக்கத் தருகிறான் என்பர். பால் நிற்காமல் சுரக்கக் கன்று வேண்டு மல்லவா? உப்தேசம் ஒரு கட்டத்தில் நிற்கும் போதெல்லாம் கேள்விகள் கேட்டுத் தூண்டி விடும் அர்ஜுனனே மாட்டுக்குக் கன்று ஆகிறான்.

சொல்லழகைப்பற்றிக் குறிப்பிட்டோம். கீதையின் பொருள் விளங்காதவர்களுக்கும் சுலோகங்களின் நாதம் கவர்ச்சியாயிருக்கும். வறண்ட தத்துவத்தை அழகு மிகுந்த காவியமாக உருவாக்குவது இந்த நாட்டில்தான் சாத்தியமாயிற்று. தத்துவ உலகில் நாம் சாதாரணமாகக் கையாளும் அநேக உண்மைகள் கீதையிலிருந்தே தோன்றியனவாகும். வாழ்க்கையில் ஒட்டாமல் வாழும் பெரியவர்களைத் தாமரை இலையில் ஒட்டாமல் இருக்கும் தண்ணீருக்கு

ஒப்பிடுதலும், புலன்களால் அலைக்கழிக்கப்பட்ட மனத்தைப் புயலில் அலமந்த படகுக்கு உவமித்தலும் கீதையில் தோன்றிய கருத்துக்களே. அர்ஜுனன் இறைவன் விசுவரூபத்தைக் கண்டு வியந்து பாடுவதும் புருஷோத்தமனின் தன்மைபற்றிப் புருஷோத்தமனே வர்ணித்துக் கூறுதலும் காவியக் கலையின் சிகரங்களாக அமைந்துள்ளன.

உபதேசத்தின் சுருக்கம் இதுதான்:

"ஆத்மா அழிவில்லாதது. மனிதன் இறக்கும் போது உடல்தான் நாசம் அடைகிறது. உடலை அழிப்பது உன் கடமையாக ஏற்பட்டால் தயங்காமல் அழி.

"கருமத்தைச் செய்வதுதான் உனது குறிக்கோள். கருமத்தின் பலனை மனத்தாலும் நினைக்காதே! பலனை விரும்பாமல் செய்யப்பட்ட கருமம் மனிதனைக் கட்டுப் படுத்துவதில்லை.

"கருமத்தைப் புறக்கணித்துத் துறவறம் மேற்கொள்ளுவதைக் காட்டிலும் இல்லற வாழ்க்கையில் இருந்து கொண்டு பலனை விரும்பாது செயல் புரிவதே மேலானது. இறைவனாகிய நானே இடையறாது செயல் புரிவதில் ஈடுபட்டிருக்கின்றேன். என்னைப் பின்பற்றி நற்கருமங்களைப் பயன் கருதாமம் செய்து வந்தால் நற்கதி கிடைப்பதில் ஐயமில்லை.

"பயன் நோக்காது செயல் புரிவதோடு இறைவன் பால் அன்பு செலுத்த வேண்டும். நீ அநுபவிக்கும்

பொருளெல்லாம் இறைவனதே என எண்ணி முழு மனத்துடன் துய்க்க வேண்டும். இறைவன் பணியே புரிந்து இறைவனுக்காக இவ்வுலகில் வாழ முயல வேண்டும்"

"பயன் நோக்காது இறைவனிடம் அன்போடு கருமத்தைச் செய்துவந்தால் உனக்கு மெய்ஞ்ஞானம் தோன்றும். அழியும் பொருள் இது, அழியாத பொருள் இது என்ற விவேகம் ஏற்படும். அதன் பயனாகப் பேரின்ப நிலையை அடையத் தாகம் பிறக்கும். கீழ்மையினில் சேர்க்கும் செருக்கு, பொய், அவா இவற்றை அழித்து உணவு முதலியவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டு வாழ்ந்து வந்தால் கருமங்களின் கட்டுத் தளரும். அறிவில் தெளிவு பிறக்கும்; ஆத்மா விடுதலை அடைந்து என்றும் அழிவில்லாத பேரின்ப நிலையை அடையும்."

இந்தக் கருத்துக்களை விளக்கி வரும்போது கண்ணன் எத்துணையோ நல்லுரைகளை அள்ளித் தருகிறான். தியான நிலை கூடுவதற்குப் படிப்படியாக முறைகளை வகுத்துக் கூறுவான். யோகம் தவறியவர்கள் அடையும் நிலையையும் மறக்காமல் சொல்லுவான். "இறைவன் எங்கும் உளன்" என்று காட்ட "ஒவ்வொர் இனத்திலும் சிறந்தவன் நானே" என்று மாலை போல் கோத்துக் கூறுவான்.

நிலையில் திரியாது அடங்கியவர்களின் தன்மை பற்றி இரண்டாம் அத்தியாயத்திலும், பக்தனைப் பற்றிப் பன்னிரெண்டாம் அத்தியா யத்திலும்,

முக்குணங்களையும் வென்ற குணாதீதனைப் பற்றிப் பதினான்காம் அத்தியாயத்திலும் இறைவன் சித்திரம் எழுதிக்காட்டுகிறான். இவை இந்நூலின் பரம சாரமான இடங்கள். ஸ்திதப் பிரக்ஞராகவும், பக்தராகவும், குணாதீதராகவும் வாழ்க்கை நடத்திய காந்தி மகானும் இந்தப் பாகங்களையே பாராயணம் செய்யக் கேட்பது வழக்கம்.

இவ்வரிய நூலுக்கு இரண்டு உரைகள் தமிழில் பாட்டாகவும் அநேக உரைகள் வசன நடையிலும் ஏற்பட்டிருக்கின்றன. கீதார்த்த சங்கிரகம் தேசிகர் பாடியது; 'கீதை வெண்பா' முத்து ஐயர் இயற்றியது. சுப்பிரமணிய பாரதியாரும் கீதைக்கு ஓர் உரை எழுதி இருக்கிறார். எத்தனை உரைகள், கட்டுரைகள், உபந்நியாசங்கள் கீதை விஷயமாகத் தோன்றினாலும் அவற்றில் எல்லாம் ஒரு புதுமையைக் காண்கிறோம்: புதிய கருத்துக்கள் பளிச்சிடுவதை உணர்கிறோம். கடலில் ரத்தினங்கள் முயற்சிக்கு ஏற்றபடி அகப்படுவதுபோல் இந்தத் தத்துவசாகரத்திலும் புது உண்மைகள், அநுபவங்கள் , விளக்கங்கள் கிடைத்த வண்ணம் இருக்கின்றன.

கீதையின் பெருமையினைச் சொல்லால் விரித்துக் கொண்டே போகலாம். அதற்கு முடிவு இல்லை. ஆகவே, ஒன்று கூறி முடிப்போம்: அநுபூதி பெற்ற ஆழ்வார்களில் ஒருவரான திருமழிசைப்பிரான், கீதை 'மாயன் அன்று ஓதிய வாக்கு. அதனைக் கல்லார் உலகத்தில் மெய்ஞ்ஞானம் இல்லாதவர்களே' என்று பாடினார். மேலும் அவர், "என் உள்ளத்தில் கீதை

ஊறிக் கிடப்பதால் என்னை எமனும் நெருங்க மாட்டான். வினைப் பயனும் என்னைக் கட்டுப் படுத்தாது" என்று இறுமாந்திருப்பர்!

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா; தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன் – ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைகிடக்கும் உள்ளத்து எனக்கு.

5. பழமையான சமய நூல்கள்

அந்தணர்கள் தினசரி வாழ்க்கையில் செய்யும் சடங்குகளின் முறை வேதங்களிலேயே சொல்லப் பட்டிருக்கிறது என்ற தவறான எண்ணம் சிலரிடையே இருந்து வருகிறது. சடங்குகளில் வேத வாக்கியங்கள் மிகுதியாக வழங்கப்படுவது உண்மையே; ஆனால் சடங்குகளின் முறைபற்றிக் கூறும் நூல்கள் சூத்திரங்கள் ஆகும். வேள்விகளைப்பற்றியவை சுரௌத சூத்திரங்கள் எனவும், வீட்டுச் சடங்குகளைப் பற்றியவை கிருஹ்ய சூத்திரங்கள் எனவும் அழைக்கப்படும்.

கிருஹ்ய சூத்திரங்களில் குழந்தை பிறப்பதற்கு முன்பே செய்யவேண்டிய பும்சுவனத்திலிருந்து இறந்தபின் செய்யும் ஈமக்கடன் வரை சொல்லப் பட்டிருக்கிறது. இந்தச் சூத்திரங்களில் அந்தணர்களுக்கு நாற்பது சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் உபநயனமும் விவாகமும் முதன்மை யானவை. கிருஹ்ய சூத்திரங்களை இயற்றிய ரிஷிகளில் முக்கியமானவர்கள் ஆபஸ்தம்பர், போதாயனர். ஆசுவலாயனர் என்போர். தென்னாட்டில் ஆபஸ்தம்ப சூத்திரத்தைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை பெரிது.

இவைதவிர, பாகப்பிரிவினை முதலான சட்டங்களை வகுக்கும் தரும சூத்திரங்களும், யாகபூமி, யாக குண்டம் இவற்றை அமைக்கும் வழியை க்ஷேத்திர கணிதத்தின் வாயிலாகக் காட்டும் சூத்திரங்களும் உள்ளன. சம்ஸ்கிருத மொழியின் இலக்கண நூலாகிய பாணினி வியாகரணமும் சூத்திரமாகவே அமைந்திருக்கிறது.

சூத்திரங்களில் உள்ள சொற்செட்டு அளவிற்கு மீறியதாயிருக்கும். ஒரு சூத்திரத்திலே இன்னும் அரை மாத்திரை குறைக்க வழி தெரிந்துவிட்டால் இலக்கணப் புலவனுக்குப் பிள்ளை பிறந்த மகிழ்ச்சி ஏற்படுமாம்!

சொல்லில் இத்தனை சிக்கனம் இருப்பதால் சூத்திரங்களின் பொருள் தெரிய ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் எழுத்துக் கண்டு பிடிக்காத காலத்திலே மனப்பாடமாக ஞாபகத்தில் இருத்திக் கொள்ளச் சூத்திர முறை கை வந்ததாகும். இவற்றில் இலக்கியச் சுவையைக் காணமுடியாது. பயன் ஒன்றையே கருதி இயற்றப்பட்டவை இந்த நூல்கள். அந்த நாளின் வாழ்க்கைமுறையை அறிந்துகொள்ளவும் இவை ஓரளவு பயன்படும்.

இன்று ஜகத்குருவின் ஆசியின்மேல் திருப்பாவை - திருவெம்பாவை - ஆறங்க மகாநாடுகள் தமிழ் நாடெங்கும் நடக்கின்றன. ஆறங்கங்கள் என்பவை என்ன? வேதப் பொருளை அறிய உதவும் அறிவுத் துறைகள் ஆறாக வகுக்கப் பட்டன; சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்பம்

என்று உச்சரிப்பை நிர்ணயிப்பது சிக்ஷை. இலக்கணமே வியாகரணம்; சந்தஸ் என்பது பாக்களின் முறைபற்றிக் கூறும் யாப்பிலக்கணம், சொற்களின் மூலத்தை ஆராய்ந்து பொருளை அறிவிக்கும் நூல் நிருக்தம். கல்பம் என்பது சடங்கு முறையை விளக்கும் நூல். இவற்றைக் கொண்டே பிற்காலத்தில் வேதங்களின் பொருளை அறிந்து உரை ஆசிரியர்கள் உரைகளை இயற்றினார்கள். வேதகாலம் தொடங்கியே இருந்து வரும் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி நூலாக இயற்றப் பட்டவை இவை. இவற்றின் பழமையும் பெருமையும் வியக்கத் தக்கனவாகும்.

வேதத்தில் கருத்துக்களை வெளியிடும்போது பல இடங்களில் வேதத்தாய் கதை சொல்லுவாள். கேட்க இனியனவாய் இருக்கும் இக்கதைகளின் மூலம் கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்ளலாம். இந்த முறையில் பின் நாளில் இயற்றப்பட்டவை புராணங்களாகும்; பதினெட்டு மகாபுராணங்களும் கணக்கில்லாத உபபுராணங்களுமாய், இது ஒரு பேரிலக்கியமாக வளர்ந்து விட்டது. இவற்றில் முதன்மையாக எண்ணக் கூடியவை சிவ புராணம், ஸ்காந்தம், விஷ்ணு புராணம், பத்ம புராணம், பாகவதம் என்று ஐந்தே. இவற்றிலெல்லாம் பாகவதமே புராண திலகம் என்று சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பகவத் குணங்களையும் பக்தர் வரலாறுகளையும் பரக்கக் கூறுவது பாகவத புராணம். ஏழு நாட்களில் மரணம் அடைவாய் என்ற சாபம் பெற்ற பரீக்ஷித்

மன்னனுக்கு வியாசரின் குமாரர் சுகப்பிரம்மம் உபதேசித்தபடி அமைந்தது இந்நூல். நம் நாட்டில் கிராமந்தோறும் வழங்கும் பிரகலாதன், துருவன் என்ற பக்தர்களின் கதைகள் இதிலிருந்தே பெற்ற செல்வங் களாகும். கண்ணனின் கதையை நாடு முழுவதும் அறியச் செய்த பெருமை பாகவதத்தையே சாரும். பாகவத்தில் விருத்திரன் என்ற அசுரனும், துருவனும். பிரகலாதனும், தேவஹூதியும், கோபிகைகளும், அக்ரூரரும் இறைவனைத் தோத்திரம் செய்யும் கட்டங்களில் பக்தி நிரம்பி அலைமோதுவதைக் காணலாம். ருக்மிணியும், ஆய்ச்சியரும் இறைவன் மேல் கொண்ட காதலை வர்ணிக்கும் இடங்கள் நல்ல காவியச் சுவை பெற்று விளங்கும்.

கண்ணனைப் பார்க்காமலேயே அவன் குணங்களைப் பற்றிக் கேள்வியுற்ற மாத்திரத்தில் அவன்மேல் காதல் கொண்டாள் ருக்மிணி. தன் காதலையெல்லாம் அவள் ஏழு சுலோகங்களில் வடித்து அவற்றை ஒரு கடிதமாக எழுதிப் பிராம்மணன் ஒருவனிடம் கொடுத்து, அதனைக் கண்ணனிடம் சேர்ப்பித்தாள். அதில் , 'அச்சுத, உன் குணங்களைப் பற்றி அறிந்த நான் உன்மேல் காதல் கொண்டேன். உன் புகழ் என் உள்ளத்தின் தாபத்தை நீக்கும் திறனுள்ளதாய் இருக்கிறது. காதலின் வேகத்தினால் என் மனம் பெண்களுக்கு இயல்பாக இருக்கும் வெட்கத்தையும் இழந்து உன்னுடன் ஒன்றுபட்டுவிட்டது' என்று சொல்லுகிறாள்.

மேலும் கண்ணனின் பெருமைகளைக் கூறிவிட்டுத் தனக்கு நேரவிருக்கும் ஆபத்தை விளக்கிச்

சொல்கிறாள். விவாக தினத்தன்று தேவி பூஜை முடிந்து திரும்பும் போது தன்னைக் கண்ணன் தேரில் ஏற்றிக் கொண்டு போய்க் காப்பாற்றாவிட்டால் தனக்கு வாழ்வில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறாள்.

கடிதத்திலே கண்ட காதலால் கட்டுப்பட்ட கண்ணனும் அவ்வாறே செய்து ருக்மிணியை மணந்து கொண்டான் என்பது வரலாறு.

ஒரு குல ஸ்திரீ முன்பு பார்த்திராத ஓர் அந்நிய புருஷனுக்குக் கடிதம் எழுதுவது தவறான செய்கை; ஆனால் ருக்மிணி எழுதிய காதற் கடிதம் தருமத்தின் நியதியை மீறாமல் அமைந்துவிட்டது! காதலின் வேகத்தால் - "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் கண்டாய்" என்ற தீர்மானத்தினால் தூண்டப்பட்டவளாய் வேறு வழியின்றி ருக்மிணி தேவி அந்தணரின் மூலம் கடிதத்தைக் கண்ணனுக்கு அனுப்பினாள். அவ்வாறு எழுதிய கடிதத்திலும் தன் தூய ஒழுக்கத்துக்கும் உயிரினும் சிறந்த கற்புக்கும் களங்கம் ஏதும் ஏற்படாதவண்ணம் தன் உள்ளக் கிடக்கையைத் திறந்து கண்ணனிடம் காட்டினாள். ருக்மிணியின் பெண்மை நலனுக்கும் புருஷோத்தமனான கண்ணனின் உயர்வுக்கும் ஏற்றபடி அமைந்த இக்கடிதம் சம்ஸ்கிருத இலக்கியத் திலேயே ஒப்பற்ற காதற் கடிதமாகப் போற்றப் படுகிறது.

பாகவதத்தில் கண்ணன் கதையில் பெரும்பகுதி அவன் திருவாய்ப்பாடியில் "பற்று மஞ்சள் பூசிப்

பாவை மாரோடு, சிற்றில் சிதைத்தெங்கும் தீமை செய்து திரிந்த" கதையே கூறப்படுகிறது. இளவாய்ச்சிமார்கள் கண்ணன் மேல் கொண்ட காதலுக்கும் ஓர் அளவில்லை. அவன் திருவாய்ப் பாடியில் இருந்த காலத்தில் அவனுடனேயே சுற்றித் திரிந்து இன்பமாகப் பொழுதைக் கழிப்பார்கள். கண்ணன் மாடு மேய்க்கக் காடு சென்றபின் ஆய்ச்சிமார்கள் அவனுடைய விளையாட்டுக்களை நினைவு கூர்ந்து பொழுதைக் போக்குவார்கள்; "யானைக் குட்டி போல் விளையாடிக் கொண்டு கண்ணன் மாலை நேரத்தில் ஆய்ப்பாடி திரும்புவான். அவன் வருகை சந்திரன் உதித்தாற்போல் இருக்கும். மகிழ்ச்சியோடு அவன் ஆய்ப்பாடியின் பசுக்களுக்கு வெயிலின் தாபம் நீங்கக் குளிப்பாட்டி வருவான். காட்டிலிருந்து திரும்பும் பொழுது அவன் பூக்களையும் தழைகளையும் சேர்த்துத் தொடுத்த வனமாலையை அணிந்திருப்பான். அவன் இனிய குழலூதி வருவான்; ஆய்ப்பிள்ளைகளோடு ஆடிவருவான்" என்றெல்லாம் சொல்லிச் சொல்லி உருகுவார்கள். கண்ணன் திரும்பிவிட்டால் ஆய்ப்பாடியில் ஒரே கோலாகலம்! "மழை கொலோ வருகின்றது" என்று வியந்து அவன் வருவதைப் பார்த்து நிற்பார்கள். தம்மையும் மறந்து, அவன் சிரிப்பைப் பார்ப்பதிலும், அவன் சொல்லைக் கேட்பதிலும், அவர்களுக்கு இருக்கும் ஆனந்தம் வேறெதிலும் இருப்பதில்லை. கிருஷ்ணனே, கோபிகளின் உயர்நிலை லட்சியம் என்றவண்ணம் ஆய்ப்பாடியில் வாழ்க்கை நடக்கிறது.

ஆய்ச்சியருக்கு ஒருமுறை கர்வம் மேலிடக் கண்ணனை அலட்சியம் செய்யத் தொடங்கினார்கள். யமுனை நதிக்கரையில் கண்ணன் திடீரென்று மறைந்து விட்டான். கண்ணனைக் காணாமல் ஆய்ச்சியர் காடெங்கும் தேடி அலைந்தார்கள். கண்ணன் இல்லாமல் தமக்கு வாழ்வு இல்லை என்பதை உணர்ந்து கதறி அழத் தொடங்கினார்கள். அவர்கள் கண்ணனைக் குறிந்துப் பாடிய பாட்டு 'கோபிகா கீதம்' எனப் பெயர் பெறும்.

> **'அவனையே நெஞ்சில் கொண்டு, அவன் பெயரையே பிதற்றி, அவன் தொழிலையே ஆற்றி, அவனில் ஈடுபட்டவர்கள்'**

என்றபடி பக்தி நிலையின் பேரெல்லையில் நின்ற கோபிகைகள் விரக தாபத்தில் பாடிய 'கோபிகா கீதம்' கேட்பவர் மனத்தை உருக்கி, இறைவனின் குணாநுபவத்தில் ஈடுபடுத்தி விடும்.

"எங்களை நீ யமுனை மடுவில் வாழ்ந்த பாம்பி லிருந்தும் பேரிடி மழையிலிருந்தும் காத்தாய். நீ ஆய்ப் பாடிச் சிறுவன் அல்லன்; எல்லாப் பிராணிகளிடத்தும் உறைகின்ற தெய்வம். கண்ணா. உன் தாமரை முகத்தைக் காட்டி எம்மைக் குளிர்விக்க மாட்டாயா?

"ஒரு பகல் நீ காட்டில் மாடு மேய்க்கப் போனாலும் எங்களுக்கு ஒவ்வொரு கணமும் ஒரு யுகம் போல் தோன்றும். இந்தப் பிரிவை நாங்கள் எப்படிச் சகிப்போம்? எம் கணவன்மார், மக்கள், சுற்றத்தார் எல்லோரையும் விட்டு உன் குழலோசை

கேட்டு இரவில் இங்கு வந்தோம். எங்களைக் கை விடுவாயா?"

ஆய்ச்சியர் படும் துன்பம் கண்டு பத்தவத்ஸலனான பெருமான் அவர்களுக்கு எதிரே தோன்றுகிறான். ஆய்ச்சியரும் உயிரை இழந்து பெற்றவர்கள் போல் மகிழ்கிறார்கள். பல வழிகளாலும் அவன் வருகையைக் கொண்டாடித் தம் உவகையைத் தெரிவிக்கிறார்கள். செருக்கழிந்து நிற்கும் ஆய்ச்சியருக்குக் கண்ணன் அருள் வெள்ளத்தைப் பெருக விடுகிறான்.

கோகுலத்தில் மழைக்காலம் வருவதைக் கவி வர்ணிக்கும் போது இயற்கையின் ஒவ்வோர் அம்சத்துக்கும் பக்தி, தத்துவ சம்பந்தமான ஓர் உவமையைச் சொல்கிறார். மழை மேகங்கள் வருவது கண்டு மயில்கள் மகிழ்வடைகின்றன, துக்கம் நிறைந்த வீட்டிற்கு விஷ்ணு பக்தர்கள் வந்தவுடன் அவ்வீட்டார் மகிழ்வது போல்.

மாரிக் காலத்தின் இறுதியில் மேகங்கள் நீங்க ஆகாயம் நிர்மலமாகப் பிரகாசிக்கிறது. சந்திரன் எங்கும் ஒளி வீசி நிற்கிறான். நட்சத்திரக் கூட்டங்களின் நடுவில் சந்திரன் விளங்கியது, விருஷ்ணி வம்சத்தவர் களிடையே கிருஷ்ணன் தோன்றியது போல் இருந்ததாம்!

சுகப்பிரம்மத்தின் அன்பு உள்ளத்தில் இயற்கையின் காட்சிகளும் இறைவனின் ஞாபகத்தை எழுப்பி, "எல்லாம் அவன் விபூதியே" என்ற தத்துவத்தைச் சுட்டிக் காட்டி நிற்கின்றன.

மற்றப் பதினேழு புராணங்களை எழுதியும் மனச்சாந்தி காணாத வியாசர் பக்தி பரமான பாகவதத்தை எழுதித்தான் அமைதி பெற்றார் என்பது கதை. இன்று பாகவத புராணத்தைப் படித்தவர்களுக்கு மன அமைதி கிடைக்கிறது. ராமாயணத்திற்கு அடுத்த படியாகச் சொற்பொழிவாளர்களால் விரும்பப் பெறுவது பாகவதமே. எளிதில் சுவைத்து இன்பம் பெறக்கூடிய நூல் ஆகையால் பாகவதத்தை வேத விருட்சத்தின் பழமாகப் பெரியோர்கள் உருவகப் படுத்துகிறார்கள்; இந்தப் பழத்தின் சாற்றைப் பருக வாருங்கள் என்று ரசிகர்களை அன்புடன் அழைக்கிறார்கள்.

6. புதிய இலக்கியத்தின் பொது இயல்புகள்

ராமாயணமும் பாரதமும் சம்ஸ்கிருதத்தின் ஒப்பில்லாத இரு மணிகளாக ஒளி வீசுகின்றன; ஆயினும், இலக்கியம் என்று சம்ஸ்கிருதத்தில் குறிப்பிடுவது காவிய நாடகங்களைத்தான். காவியங்கள் எல்லாம் ராமாயணம் சென்ற முறையை ஒட்டியே புனையப்பட்டவை. காவியங்களுக்கும் நாடகங்களுக்கும் வேண்டிய கதையும் சம்பவங்களும் ராமாயண, பாரதங்களிலிருந்தே எடுக்கப்பட்டன. இதனால் இப்புதிய இலக்கியம். பழைய இலக்கியத்தின் செல்வக் குழந்தையே என்பது புலனாகும்.

இந்தப் புதிய இலக்கியத்தைச் சம்ஸ்கிருதம் படித்த மேற்கத்தியர்கள் அரசவை இலக்கியம் என்பார்கள். சிறப்பாக இச் சொல்லுக்கு ஒரு பொருத்தமும் இல்லை. நம் நாட்டில் எல்லாக் கலைகளுக்கும் அரசர்களே ஆதரவு அளித்தார்கள். காவியமும் நாடகமும் அரசவையில்தான் வளர்ந்தன. காவியத்தை மாத்திரம் தனியே பிரித்து எடுத்து அரசவைக் கவிதை என்பதில் பொருளில்லை. அரசர்கள் அந்நாளில் இலக்கிய ரசனையில் ஊன்றிய

கருத்துடையவராக இருந்ததால் புலவர்களை உயர்வாக மதித்துப் போற்றினார்கள்.

"வரிசைக்கு வருந்தும் பரிசில் மாக்க"ளாகிய புலவர்களும் தம்மை ஆதரிக்கும் அரசர்களின் அன்பிலே இன்பம் கண்டார்கள். காளிதாசனை விக்கிரமாத்தியன் போற்றிப் பாதுகாத்ததாக ஒரு கதை வழங்குகிறது. பாசனை ராஜசிம்மனும், பாணனை ஹர்ஷனும் பவபூதியை யசோவர்மனும், பில்ஹணனை விக்கிரமாங்க தேவனும் ஆதரித்தார்கள். நைஷதீயத்தை எழுதிய ஸ்ரீஹர்ஷன் என்ற புலவனுக்குக் கான்யகுப்ஜேசுவரன் இரட்டைத் தாம்பூலம் கொடுத்துச் சிறப்பித்ததாக ஒரு சுலோகம் அறிவிக்கிறது.

கோதாவரி தீரத்தில் பிறந்து டில்லியில் முகலாயர் ஆதரவில் கவிதை பாடிய ஜகந்நாத பண்டிதராஜன், "என் இளம் வயது டில்லி மன்னனின் தளிர்க் கரத்திலே கழிக்கப்பெற்றது" என்று எக்களிப்போடு பாடுகிறான். தமிழில் கபிலரும் பாரியும். பரணரும் பேகனும், ஔவையும் அதியமானும் போல் சம்ஸ்கிருத உலகிலும் புலவர் - புரவலர்கள் இணை இணையாக மனக் கண்முன் தோன்றுகிறார்கள். இத்தகையை இணைப்பு இரண்டாயிரம் ஆண்டுகளாக - பாசன் முதல் நீலகண்ட தீக்ஷிதர் வரை - இடையறாமல் இருந்தது. இன்று, "பாடுநரும் இல்லை. பாடுநருக்கு ஈகுநரும் இல்லை" என்ற வகையில் நிலை தடுமாறி நிற்கின்றது. இன்று சம்ஸ்கிருதத்தில் கவிதை இயற்றினால் அதை அச்சிட்டு வெளியிட

வெளியீட்டாளர்கள் தயங்குவதால் பல கவிதை நூல்கள் அச்சிடப்படாமல் கிடக்கின்றன. இது இவ்வாசிரியர் அனுபவத்தில் அறிந்த உண்மையாகும்.

இறைவனின் வாய்மொழியாக வந்தது வேதம். அவன் பெருமையே பேசுபவை ராமாயணமும், பாரதமும். இவற்றின் அடிச் சுவட்டிலே வந்த புதிய இலக்கியமும், இறைக் கொள்கையையே கொழு கொம்பாகப் பற்றிக் கொண்டு படர்ந்தது. அழகை லட்சியமாகக் கொண்டது இலக்கியம். அழகே இறைவன் உறைவிடம் ஆகும். அதனால் இலக்கியத்தின் தொழில் இறைவன் புகழ் பேசுவதாய் அமைகிறது. இலக்கிய ரசனையை ஒரு வழிபாட்டு முறையாக நம் பெரியோர்கள் நினைத்தார்கள். "நாடகம் என்பது தேவர்களுக்கும் இனிமையான ஒரு வேள்வியே" என்று நட்டுவனார் கணதாஸர் சொல்லுவதாகக் காளிதாசன் 'மாளவிகாக்னி மித்ரம்' என்ற நாடகத்தில் அமைத்திருக்கிறான்.

நாடகத்தின் பயன் இறைவனை அடையும் வழியைக் காட்டுவது என்பது மாத்திரம் அல்ல; நாடகம் என்ற இயக்கமே - இலக்கிய ரசனையே - ஓர் ஆன்மிகப் பயிற்சி என்று நம்மவர்கள் நினைத்தார்கள்.

சாகுந்தலத்தைப் பாருங்கள்! காதற்சுவை சொட்ட எழுதப்பட்ட நாடகம் இது. ஆனால் நாடகம் முழுதுமே வர்ணிக்க முடியாத ஓர் ஆன்மிகச் சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. கண்வரின் ஆசிரமத்தில் கதை தொடங்குகிறது. முனிவர்களும், மரவுரியும் மான்களும் நிறைந்த சூழலில் காதல்

அரும்புகிறது. சகுந்தலை கர்ப்பிணியாகி நகரத்திற்குச் செல்லும்வரை நான்கு அங்கங்களுக்குத் தபோவனமே நிலைக்களனாக அமைகிறது. ஓர் அங்கம் சகுந்தலையைத் துஷ்யந்தன் புறக்கணிக்கும் கடுமையான நிகழ்ச்சியைக் கொண்டது. அங்கத்தின் முடிவில் தேவலோகத்துப் பெண் மேனகை சகுந்தலையை அப்சரதீர்த்தம் என்ற இடத்திற்குக் கொண்டுபோகிறாள். தர்மத்திற்குத் தாழ்வு ஏற்படுகிறது, இந்த அங்கத்தில்; ஆனால் நாடகாசிரியர் அமானுஷ்யமான இச்சம்பவத்தைச் சிருஷ்டித்துச் சகுந்தலையின் பிறப்பை நமக்கு நினைவூட்டி அழகிற் சிறந்த அப்சரப் பெண்ணையும் தவத்திற் சிறந்த விசுவாமித்திரரையும் மனக் கண்முன் நிறுத்திவிடுகிறார். நாடகத்தின் தரத்தையும் உயர்த்திவிடுகிறார்.

அடுத்த அங்கம் கணையாழி கண்டு மன்னன் சகுந்தலையை நினைவு கூரும் அங்கம். இது முழுதும் அரசனின் தலைநகரை நிலைக்களனாகக் கொண்டு பின்னப்பட்டது. ஆனால் பெரும் பகுதி சானுமதி என்ற அப்சரப் பெண் மறைந்திருந்து அரண்மனைத் தோட்டத்திலே நடக்கும் சம்பவங்களைக் கவனிப் பதாகவே அமைந்திருக்கிறது. வேலைக்காரப் பெண்களும், கஞ்சுகியும், விதூஷகனும், அரசனும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது நடுநடுவே சானுமதி தனக்குள்ளாகச் சகுந்தலைப்பற்றியும் அப்சர தீர்த்தம் பற்றியும் பேசுகிறாள்; பேசி மேலுலகுக்கும் மண்ணு லகுக்கும் ஓர் இணைப்பை உண்டாக்கி விடுகிறாள்.

ஏழாம் அங்கம் முழுதுமே இந்த "இருள் தருமா ஞால"த்துக்குப் புறம்பாக அமைந்துவிட்டது. இந்திரன் துஷ்யந்தனுக்குச் செய்த உபசாரத்திலிருந்து தொடங்கி, கிம்புருஷர்கள் வாழும் ஹேமகூட மலையில் மரீசி முனிவரின் ஆசிமரத்தில் முடிவடைகிறது. கடைசியில் அரசன் பரத வாக்கியம் பாடுகையில், "அரசன் மக்களின் நன்மைக்காகவே தொழில் புரியவேண்டும். கல்வியில் உயர்ந்தவர்கள் நாட்டில் சிறப்புற வேண்டும். மறுபிறப்பு இல்லாமல் நானும் வாழ்க்கையின் இறுதியில் இறைவனின் திருவடியை சேர வேண்டும்" என்று வேண்டுகிறான். இந்தப் பேரின்பப் பெருவாழ்வு பெறும் உயர்ந்த லட்சியத்திற்காகவே இந்த நாடகம் நம்மை முதல் அங்கத்திலிருந்தே தயார் செய்தது என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

காளிதாசனின் மற்றச் சிருஷ்டிகளும் இப்படித் தான். ரகு வம்சம் இறைவனின் அவதாரமாகிய ராமனின் சரித்திரத்தைப் பதக்கமாக வைத்துத் தொடுக்கப்பட்ட ஒரு முத்துமாலை. 'குமாரசம்பவம்' உலகின் தாய் தந்தையராகிய உமையும் சிவனும் மணந்து கொள்ளும் வரலாற்றைச் சொல்கிறது. கதை முழுதும் இமய மலையின் சார்பிலும் தேவ லோகத்திலும் பிரம்மலோகத்திலும் கைலாயத்திலும் நடக்கிறது. கதா பாத்திரங்கள் மண்ணின் சம்பந்தம் பெறாமல் உயர்ந்த இடங்களிலேயே நடமாடு கிறார்கள். ஆயினும், மண்ணில் பிறந்து மண்ணிலே சேரும் நாம் இந்தப் பாத்திரங்களிடம் முழுமனத்துடன்

ஈடுபட்டு நம்மையே மறந்துவிடுகிறோம் என்பது இக்காவியத்தின் தனிச் சிறப்பு.

மேக தூதம் ஒரு யக்ஷனின் பிரிவாற்றாமையைக் கூறுகிறது. மேகம் தூதாகச் செல்லும்போது பாதை வர்ணனையும் இறுதியில் யக்ஷர்கள் வாழும் அலகாபுரி வர்ணனையும், உயர்ந்த தரத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன; சிறுமையின் சேர்க்கை அவற்றில் சிறிதும் காணக் கிடைக்காது. 'விக்கிர மோர்வசீயம்' என்ற நாடகத்தில் கதாநாயகி ஊர்வசி அப்சரப்பெண். தலைவன் புரூரவஸ் விண்ணுலகில் இந்திரனுக்கு உதவியாக அசுரர்களுடன் போரிட்டு அடக்குவதில் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவிடும் மண்ணுலகின் மன்னன்! பாரவியின் கிராதார்ஜுனீயமும், பவபூதியின் உத்தரராம சரிதமும், மாகனின் சிசுபால வதமும், ஸ்ரீஹர்ஷனின் நைஷதீயமும் இந்த இறைத் தன்மையையே தம் அமைப்பிலும் பாவத்திலும் சொற்களிலும் காட்டுவனவாக நிற்கின்றன. சம்ஸ்கிருத நூல்களைப் படிப்பவர் மனத்தில் நிலையாக இடம் பெறும் உணர்ச்சி இதுதான்: "கலைகளின் பயனாக - இசையின் நயமாக - சொற்களின் பொருளாக - அமைந்தவன் ஈசன். அவனது புகழ் பேசுவதே இசையின் பணி, நாட்டியத்தின் தொழில், இலக்கியத்தின் உயர்ந்த லட்சியம்!

இறைவன் புகழ் பாடுவதில் ஈடுபட்ட இந்த மொழி, தத்துவத் துறையில் அடிப்படையான பெரிய உண்மைகளை உலகில் முதன்முதலாகக் கண்டு

பிடித்து வெளியிட்டது என்பதில் வியப்பில்லை. ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசினாலும் மதத்தின் அடிப் படையான தத்துவ சாஸ்திரம் சம்ஸ்கிருத மொழியில்தான் முதன்முதலாக தோன்றியது. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், மீமாம்சை முதலிய தரிசனங்கள் எல்லாம் இந்த மொழியில்தான் முதன்முதலாக வெளியிடப்பட்டன; சங்கரரும் ராமாநுஜரும் மத்வரும் தம் பாஷ்யங் களையும் மற்ற நூல்களையும் சம்ஸ்கிருதத்தில்தான் எழுதினார்கள்.

தத்துவம் மாத்திரமா? இந்திய வாழ்க்கையில் அடிப்படையாக உள்ள எல்லா அறிவுத் துறைகளிலும் லட்சண நூல்களை முதலில் வகுத்தவர்கள் சம்ஸ்கிருத அறிஞர்களே. இன்று இந்திய மொழிகளில் தனித்தனியே வழங்கும் இலக்கணங்கள் எல்லாம் சம்ஸ்கிருத வியாகரணத்தைத் தழுவியே இயற்றப் பட்டன. பழமை மிகுந்த தமிழின் மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியமும்.

"மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமையோனே"

என்றபடி சம்ஸ்கிருத இலக்கண நூலாகிய ஐந்திரத்தைத் தழுவியே தொல்காப்பியர் தம் இலக்கணத்தை இயற்றினார். தெலுங்கு மொழியில் சம்ஸ்கிருத விருத்தங்கள் அநேகம் வழக்கில் இருக்கின்றன; மலையாளத்திலும் அப்படித்தான். இவற்றின் அணி இலக்கணங்களிலெல்லாம்

சம்ஸ்கிருதத்தின் நிழல் படிந்திருப்பதைக் காணலாம்.

அந்நாளில் இந்நாட்டின் நான்கு மூலைகளிலும் சற்றுப் படித்தவர்களுக்கெல்லாம் சம்ஸ்கிருதம் அறிமுகமாயிருக்கும். தமிழிலும், குஜராத்தியிலும், தெலுங்கிலும், வங்காளியிலும் மக்கள் சொன்னதையும் எழுதியதையும் சம்ஸ்கிருதத்தில் மொழிபெர்த்து அநுபவிப்பார்கள், சம்ஸ்கிருதக் கருத்துக்களைத் தாய்மொழியில் கையாள்வார்கள். இதனால் ஒரு பக்கத்துக்கும் வலிவு ஏற்பட்டது. சிறப்பாக, இந்தியா முழுவதும் பரவியிருந்த சம்ஸ்கிருதத்தில் எல்லா மொழிகளின் கருத்துக்களும் வந்து படிந்ததால் சம்ஸ்கிருதம் உற்ற லாபம் பெரியது; இப்படிப் படிந்த கருத்துக்களில் சிறந்தவை காலத்தை எதிர்த்து நின்று அமரத்துவம் அடைந்தன.

தமிழில் சங்க காலத்தில் அகப்பொருளை ஐந்து திணைகளாக வகுத்தார்களல்லவா? அகம், புறம், இவ்விருவகைப் பிரிவும், அகத்தை ஐந்து திணைகளாகப் பிரித்தலும் தமிழுக்கே சிறப்பாக அமைந்த தன்மையாகும். முல்லை நிலத்தில் கார் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிய தலைவன், அவனது வரவு பார்த்து ஏங்கி நிற்கும் தலைவி - இவர்களைக் குறித்துப் பாடப்படுவது முல்லைத் திணை இலக்கணம். இதை ஒட்டியே காளிதாசன் மேகதூதத்தில் யட்சன் மேகத்தைப் பார்க்கும் போது ஏற்படும் மன நெகிழ்ச்சியை வர்ணிக்கிறான்.

"இன்பம் நுகர்ந்து இருக்கும் மனிதனுக்கும் உன்னைப் பார்த்தால் சற்று மனவெழுச்சி உண்டாகும். மேகமே, மனைவியை விட்டுப் பிரிந்திருக்கும் நான் உன்னைக் கண்டால் படும் பாடு சொல்லத் தரமில்லை" என்கிறான்.

அதே காவியத்தில் யட்சன் தன் மனைவியிடம் மேகம் சொல்லத் தக்க தூத வாக்கியத்தைத் தெரிவிக்கும்போது, "மங்கலமுடையவளே, உன் கணவனுக்கு மனத்துக்கினிய நணபன் நான். அவன் கூறிய தூதினை ஏற்று நான் உன்னிடம் வந்திருக்கிறேன். பிரிந்திருக்கும் தம்பதியைச் சேர்த்து வைக்கும் பேறு என்னுடையது. ஏனெனில், என் இடி முழக்கத்தால் வழி நடந்துவரும் காதலர்களை விரைந்துபோய்த் தலைவியரிடம் சேரும்படி தூண்டிவிடுவது என் பணியே அல்லவா?" என்கிறான். "அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம். அவரொருவர் நாமொருவர் ஆன மழைக்காலம்" என்று வருந்திப் பாடப்பெற்ற மழைக் காலத்தில் தலைவியுடன் சேரவேண்டும் என்ற துடிப்பை உண்டாக்கத் தலைவனை உந்தித் தள்ளுவது மேகமேயல்லவா?

வேதாந்த தேசிகன் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் சிறந்த புலமை படைத்தவர். அவர் திவ்யப் பிரபந்தத்தில் ஆழங்கால் பட்டு நின்றமையால் அதன் கருத்துக்களைத் தம் சம்ஸ்கிருத சுலோகங்களில் அமைத்துப் பாடியிருக்கிறார். பெரியாழ்வார்

யசோதையின் தன்மையைத் தம்மேல் ஏறிட்டுக் கொண்டு, "குடையும் செருப்பும் கொடாதே" கண்ணனை மாடு மேய்த்துவரக் காட்டுக்கு அனுப்பியது பற்றி இரங்கிக் கூறுவதாய் அமைந்த பதிகத்தை ஓர்ந்து அநுபவித்த தேசிகர் அதே கருத்தை யாதவாப்யுதயத்தில் நான்காவது ஸர்க்கத்தில் ஒரு சுலோகத்தில் அமைத்திருக்கிறார்.

மாடுகள் மேய்த்துவிட்டுத் "தன்னேராயிரம் பிள்ளைகளோடு" மாலையில் "குழல்களும் கீதமும் ஆகி எங்கும் கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு" ஆய்ச்சியர் காமுற்று நிற்பதாக வரும் பெரியாழ்வார் திருமொழிப் பதிகத்தை மனத்தில் இருத்திக் கொண்டு தான் தேசிகர் பிறி தோரிடத்தில் இவ்வாறு எழுதி இருக்க வேண்டும்: "பாடியில் உள்ள ஆய்ச்சியரை மன்மதன் நான்கு வகைச் சேனைகளால் தோற்கடித்து வசப்படுத்தினான். மன்மதனின் சேனைகள் கண்ணனின் குழலோசையும், கன்றுகளின் கால் புழுதியும், மாலையின் வருகையும், வனமாலை அணிந்த கண்ணனின் தோற்ற முந்தான்" என்ற பொருளுள்ள இந்தச் சுலோகத்தை அவர் பாடியிருக்கிறார்.

முல்லை நிலத்தில் காதலின் எழுச்சியைத் தூண்டுவதில் "மாலைக்கண் கோவலர் வாய்வைத்த குழல்" முதன்மையானது என்று முத்தொள்ளாயிரத் தலைவி வருந்திக் கூறுவாள். அதுபற்றியே தேசிகனும் குழலோசையை மன்மதனின் சேனைகளில் முதலாவ தாகக் கூறினார், இந்தப் பாட்டிலே!

ஆய்ப்பாடி, முல்லை நிலத்தில் அமைந்த ஒரு சிற்றூர். அதில் கண்ணன் என்னும் தலைவன் காலையில் மாடுகளுடன் காடு சென்றபின் ஆய்ச்சியர் என்ற தலைவியர் பிரிவாற்றாமையால் வருந்து கிறார்கள். மாலை வேளையில் கண்ணன் திரும்பு கிறான். அவன் குழலோசையைக் கேட்டு ஆவலோடு வந்து பார்க்கிறார்கள் இவ்வாய்ச்சியர்கள். கருத்த நிறமுடைய கண்ணன் புழுதியைக் கிளப்பி வரும் தோற்றம் அளிப்பது கண்டு, 'மழை கொலோ வருகின்றது?' என்று வியந்து நிற்கிறார்கள். கண்ணன் அருகில் வர, அவன் கழுத்திலுள்ள வனமாலையும் அதில் கொடுத்திருந்த முல்லைப் பூக்களும் தோன்றிப் பூக்களும் தெரிகின்றன. இதையெல்லாம் கண்டு, "இள ஆய்க்கன்னிமார் காமுற்றனர்" என்ற வர்ணனை முல்லைத்திணை இலக்கணத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகின்றது அல்லவா? ஆழ்வார்களின் பாடல்கள் தமிழ் இலக்கிய மரபை ஒட்டியே இயற்றப்பட்டன. இவற்றின் தாக்கம் பாரதமொழி இலக்கியங்களில் பெருமளவில் தெரிகின்றது.

சம்ஸ்கிருத இலக்கியத்தின் ரசனையில்ஆழ்ந்திருப் பவர்களுக்கு சம்ஸ்கிருத மொழியின் தன்மையே இலக்கியத்தின் சிறப்புக்கு முக்கியமான காரணம் என்பது புலப்படுகிறது. இந்த மொழியில் பெயர்ச் சொற்களுக்கெல்லாம் பால் அமைந்திருக்கிறது. உயிரில்லாத பொருள்களின் பெயர்களுக்கும் ஆண் அல்லது பெண்பால் ஏற்பட்டிருக்கிறது. மலை (பர்வத:) ஆண் பால்; பாறை (சிலா) பெண்பால்;

மரம் (வ்ருக்ஷ:) ஆண்பால்; கிளை (சாகா) பெண்பால். புஷ்பமும் இலையும் பழமும் அஃறிணைப் பெயர்கள். இதனால் கற்பவர்களுக்குத் தொடக்கத்தில் சற்று அயர்வு ஏற்பட்டாலும் இந்த லிங்க பேதங்களின் முழுப் பயனையும் கவிதையிலே காணலாம். கொடி வளர்ந்து மரத்தைச் சுற்றிப் படர்கிறது. மரத்தை வெட்டிக் கீழே வீழ்த்தினால் கொடியும் வாடிப்போய் விடும். கொடி (லதா, வல்லீ, வீருத்) என்ற சொல் சம்ஸ்கிருதத்தில் எப்போதும் பெண்பால். ஆண்பாற் பெயராக இருக்கும் மரத்தைக் கணவனாகவும் கொடியைப் பெண்ணாகவும் கற்பித்து எழுந்த கவிதைகள் எத்தனை எத்தனையோ! இதுபோல் இரவு பெண்பாற் பெயர். சந்திரன் ஆண்பாற் பெயர். இரவின் கணவன் சந்திரன் என்று கற்பனை செய்து கவி பாடுவதோடு சந்திரனுக்கே 'ரஜனீபதி:' என்று பெயர் சூட்டி அழைக்கிறார்கள். சம்ஸ்கிருதத்தில் (பால்) லிங்க பேதங்கள் எல்லாம் கவிதைக் கருவிலிருந்தே பிறந்தவை. சொற்களின் லிங்கத்தை மனத்தில் நினைத்துவிட்டாலே கவிதை பிறந்துவிடும். கவிதை ஊற்றைப் பெருகச் செய்யும் சக்தியுடையது சம்ஸ்கிருத மொழியின் லிங்கப் பாகுபாடு!

சொல்நயமும் படைத்தது சம்ஸ்கிருத மொழி. ஒரு சுலோகத்தை இசையுடன் பாடக் கேட்டால் மொழியின் காம்பீரியத்தைச் சுவைக்கலாம். அழுத்தமாக உச்சரிக்க வேண்டிய எழுத்துக்கள் சம்ஸ்கிருதத்தில் அதிகம். அவற்றை இடந்தெரிந்து அளவுக்கு மீறாமல் பயன் படுத்துவர் உயர்ந்த புலவர்; அவர்களின் பாட்டுக்கள்

மனத்தை எப்படிக் கவர்ந்து விடுகின்றன! புலிகளைத் தசரதன் வேட்டையாடும் வர்ணனையில் காளிதாசன் அழுத்தமான சொற்களையே கையாண்டு ஒருவகையான பயம் நிறைந்த சூழ்நிலையைச் சிருஷ்டித்து விடுகிறான்.

பாஸன் இயற்றிய 'ஸ்வப்ன வாசவதத்தம்' என்ற நாடகத்தில் அரசியான வாசவதத்தை இறந்து போன துக்கத்தில் ஊறி இருந்த வத்ஸ ராஜன் கூறும் சுலோகம் ஒன்று வருகிறது.

அதில், கடைசி இரண்டு வரிகளில் 'ஹ' என்ற எழுத்து ஐந்து இடங்களில் வருகிறது. 'ஹ'வை உச்சரித்தாலே பெருமூச்சு விடுவது போல் இருக்கும். இந்தச் சுலோகத்தைப் படிக்கும் ரசிகர்கள் எல்லோரும் வாசவதத்தையின் பிரிவினால் வருந்திப் பெருமூச்சு விடும்படி செய்துவிட்டான், பாஸன் இந்தப் பாட்டிலே!

கண்ணன் காளிங்க நர்த்தனம் செய்கிறான், யமுனை மடுவில் ; வேதாந்த தேசிகன் இதைக் கூறும் பாட்டில் அமைந்துள்ள சப்த ஜாலங்களால் நடனத்துக்கு ஏற்றபடி மிருதங்கம் வாசிப்பது போல் ஒரு பிரமை ஏற்படுகிறது கேட்பவர்களுக்கு. இத்தகைய ஓசை யின்பம் எல்லா இலக்கியங்களிலும் உண்டு என்றாலும், சம்ஸ்கிருத மொழியில் சப்தங்கள் எல்லா வகையான உணர்ச்சிகளையும் எழுப்பக் கூடியனவாய் இருப்பதால் சம்ஸ்கிருத கவிகளுக்கு வாய்ப்பு அதிகம்; உயர்ந்த சம்ஸ்கிருதப் புலவர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு ஒலி உலகத்தின் இறுதியை இலக்கியத்திலேயே கண்டவர்கள் ஆனார்கள்.

7. காளிதாசன்

சம்ஸ்கிருதக் கவிகளுக்குத் தலைமை வகிப்பவன் காளிதாசன். கவி சார்வபௌமன் (கவிச் சக்கரவர்த்தி) என்றும், கவி குலகுரு (கவிகள் குலத்தின் முதல்வன்) என்றும் மற்றக் கவிகளால் பாராட்டப் பெற்றவன். பண்டிதக் காய்ச்சலையும் மறந்து இப்புலவர் கோமானுக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தனர் மற்றப் புலவர்கள் எல்லோரும். பிற்காலத்தில் தோன்றிய புலவர்களைப் புகழ்வதற்கும் காளிதாசன் ஓர் அளவுகோலாக விளங்குகிறான். "சில இடங்களில் இவர் கவிதை காளிதாசனின் நடையை நினைவூட்டுகிறது" என்று கூறுவதைப் புகழ்ச்சியின் பேரெல்லையாகக் கருதுகிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக இவன் புகழ் சம்ஸ்கிருதம் படிக்கப்படும் இடங்களிலெல்லாம் பரவி, "சம்ஸ்கிருத இலக்கியம் என்றால் காளிதாசன்" என்ற மயக்கத்தை உண்டாக்கி விட்டது. பாரவி, மாகன் போன்ற புலவர்களின் பெயரையும் அறியாத மேல்நாட்டினர் பலருக்குக் காளிதாசன் குன்றாத இலக்கிய இன்பத்தை அளித்து வருகிறான். ஜெர்மனியின் கவியரசன் கெதே 'சாகுந்தல'த்தை

உலகிற் சிறந்த இலக்கிய நிதியாகக் கருதினான். ஜப்பானில் காளிதாச பக்தர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. இங்கிலாந்தில் வெளியான முதல் சம்ஸ்கிருத நூல் சாகுந்தலம்! சர் வில்லியம் ஜோன்ஸ் முதன்முதலாகச் சாகுந்தலத்தை வெளியிட்ட போது ஆங்கிலேயர் உலகில் பெருத்த பரபரப்பு ஏற்பட்டது. "நம் ஆளுகைக்கு உட்பட்ட அடிமை நாட்டிலா இந்த விலை மதிப்பற்ற ரத்தினம் உண்டாயிற்று!" என்று ஆங்கிலேயர் தம் வியப்பைத் தெரிவித்தார்கள். அவர்களில் பலர் சாகுந்தலத்தின் உயர்வைக் கண்டு அதற்கு வசப்பட்டவர்களாய்ச் சம்ஸ்கிருத மொழியைப் பயிலத் தொடங்கினார்கள். சம்ஸ்கிருதக் கல்வி மேல்நாடு முழுதும் பரவியது: இந்த நூற்றாண்டில் மேனாட்டில் பல்லாயிரம் சம்ஸ்கிருதப் பண்டிதர்கள் இந்திய மண்ணை மிதித்தும் அறியாதவர்கள் - சம்ஸ்கிருத இலக்கிய ரசனையைத் தம் வாழ்நாளின் ஒரே இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள்.

காளிதாசனின் நூல்கள் உலகம் முழுவதிலும், எல்லா மொழிகளிலும் படிக்கப்பட்டு வருவதற்கும், இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபிறகும் அவற்றின் புகழ் குன்றாமல் வளர்வதற்கும் காரணமென்ன? வெளித்தோற்றங்கள் உரு மாறினாலும் மனிதர் உள்ளக்கிடையில் எழும் வேட்கைகள் மாறுவதில்லை. அந்த வேட்கைகளுக்குக் காளிதாசன் தன் கவிதைகளில் அழியாத இடம் தேடிக் கொடுத்திருக்கிறான். அழியாத தத்துவங்களைக் கூறும் அவன்

கவிதைகளுக்கும் என்றும் அழிவில்லை. படைப்பில் உள்ள இரண்டு பெருஞ்சக்திகள் - மனிதனின் எண்ணங்கள், ஆசாபாசங்கள் என்ற சக்தியும் மனிதனுக்குப் புறம்பாயுள்ள இயற்கை என்ற சக்தியும்- காளிதாசன் கவிதைகளில் ஒன்றுக்கொன்று சார்வாய் இசைந்து நிற்கின்றன. மனித உள்ளத்தைக் காளிதாசன் இயற்கையின் நிலைகளனில் உணர்ந்து அறிவான்; இயற்கையை மனித உள்ளத்தின் உணர்ச்சிகளோடு பார்த்துத் தெளிவான்; அவன் கவிதையில் இவ்விரு பெருஞ் சக்திகளும் முரணின்றி இசைந்து இயங்குகின்றன. இந்த அழியாத சக்தித் தத்துவங்களைக் கலையழகு நிரம்பப் பெற்ற சொற்களால் வடித்துத் தந்த காளிதாசனின் கவிதை எந்நாளும் அழியக்கூடாத ஒரு சொற் சிற்பம். அவன் கவிதை, மொழி, நாடு, காலம் இவற்றை எல்லாம் கடந்து நிற்பதன் ரகசியம் இதுதான்.

காளிதாசன் மூன்று நாடகங்களையும் மூன்று காவியங்களையும் எழுதியிருக்கிறான். நாடகங்கள்; சாகுந்தலம், விக்கிரமோர்வசீயம், மாளவி காக்கினி மித்திரம் என்பன. காவியங்கள்: ரகுவம்சம், குமார சம்பவம், மேக தூதம் என்பவை. ருது ஸம்ஹாரம் என்ற சிறு காவியமும் காளிதாசன் இயற்றியதா இது என்ற சந்தேகம் எழுகிறது. சம்ஸ்கிருதத்தின் தலை சிறந்த கவியைப்பற்றி உறுதியாகச் சொல்லக் கூடிய செய்திகள் அதிகம் கிடைக்கவில்லை. சுங்க வம்சத்தைச் சேர்ந்த அக்கினிமித்திரன் காலத்தில் அவன் வாழ்ந்தான் என்பது ஒரு கூற்று. இது உண்மை

யானால் காளிதாசன் கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன் என்று கொள்ளலாம். ஆங்கில ஆய்வாளர்கள் குப்தர் காலத்தில் தோன்றினான், காளிதாசன் என்று வரையறுக்கிறார்கள். இதன்படி காளிதாசன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கொள்ளலாம். அவன் பிறந்த நாடு, குலம் இவைபற்றி ஒன்றும் திட்டமாகச் சொல்ல முடிய வில்லை. காளிதாசன் என்பதே அவனுடைய இயற் பெயரா அல்லது ஏதோ காரணத்தால் அவனுக்கு ஏற்பட்ட பெயரா என்பதைக் கூட வரையறுத்துக் கூற முடியாத நிலையில் இருக்கிறோம். காளிதாசன் இடத்து உள்ள பக்தியால் அவனைப் பற்றி எழுந்த அநேகக் கதைகளும், சுலோகங்களும் நம் நாட்டில் வழங்கி வருகின்றன. இவை ஒன்றும் ஆதாரமாக நாம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை. உறுதியாகச் சொல்ல முடியாத வரலாற்றுப் பகுதியை விட்டுக் கவியின் இதயத்தைத் திறந்து காட்டும் அவன் கவிதையைச் சுவைத்துப் பார்ப்போம்.

சூரிய வம்சத்து அரசர்களின் வரலாற்றைக் கூறுவது 'ரகுவம்சம்' என்ற மகா காவியம். இவ்வரசர்கள் இளம் வயதில் கல்வி கற்று, யௌவனப் பருவத்தில் விஷய சுகங்களை நுகர்வார்கள். வயோதிக நிலையில் இம்மன்னர்கள் தம் குமாரனுக்கு முடி சூட்டிவிட்டுக் காட்டுக்குச் சென்று தவ வாழ்க்கையை மேற் கொள்வார்கள். அவர்கள் பொருள் ஈட்டிய தெல்லாம், 'தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டே.' உண்மை வழுவாமல் இருப்பதற்காக அவர்கள்

மிதமாகப் பேசுவார்கள். புகழுக்காகப் போர் புரிவார்கள். வெறும் காமநுகர்ச்சிக்காக அல்லாமல், நன்மக்களைப் பெறுவதற்காகவே மணம் புரிந்து கொள்வார்கள்.

இந்த வம்சத்திலே திலீபன் பிறந்தான். அவன் காமதேநுவின் மகளாகிய நந்தினியை வழிபட்டதன் பயனாக ரகுவை மகனாகப் பெற்றான். ரகு தக்க பருவத்தை அடைந்ததும் திலீபன் அவனுக்கு முடி சூட்டிவிட்டுக் காடு சென்றான். ரகு தன் புஜ பலத்தால் பாரத நாடு முழுவதையும் வென்று, ஒரு குடைக் கீழ்ச் சிறப்பாக அரசாண்டு வந்தான். ஒருமுறை 'விசுவஜித்' என்ற யாகத்தில் பொருளை யெல்லாம்தானம் செய்துவிட்டு நல்கூர்ந்த நிலையில் இருந்த ரகுவிடம் குருதட்சிணைக்காகப் பதினான்கு கோடி பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு போகக் கௌத்ஸன் எனற சிறுவன் வந்தான். அந்நிலையிலும் 'இல்லை' என்று சொல்லிச் சிறுவனை அனுப்ப எண்ணாமல் ரகு குபேரனுடன் போர் புரிந்து பொருளைப் பெறலாம் என்று தீர்மானித்தான். ரகு போருக்குப் புறப்படுமுன் குபேரன் அவன் வேண்டியதற்கு மேல் பெருந்தொகையை மழையாகப் பெய்து விட்டான்!

"குபேரனிடமிருந்து வந்த தொகை முழுதும் தங்களையே சேரவேண்டும். இந்த ஒட்டகங்களின் மேல் ஏற்றித் தருகிறேன்; எடுத்துச் செல்வீர்களாக" என்று ரகு அன்புடன் சிறுவனை வேண்டினான். கௌத்ஸன், "எனக்கு வேண்டியவை பதினான்கு

கோடி பொற்காசுகளே. அவற்றுக்குமேல் ஒரு காசைக் கூட அதிகமாகப் பெற்றுக் கொள்ள மாட்டேன்" என்று பிடிவாதமாக மறுத்தான். இந்த இருவரின் மன உயர்வைக் கண்டு அயோத்தி மக்கள் வியந்து பாராட்டினார்கள். கௌத்ஸன் அரசனுக்கு வந்தனம் கூறிவிட்டு, "மன்னனே, உன்னிடம் குறை ஒன்றும் இல்லாததால் நான் எப்படி உனக்கு ஆசி கூறுவேன்? ஒன்றுமாத்திரம் சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன்: உன் தந்தை உன்னைப் பெற்றது போல் நீயும் ஒப்பில்லாத ஒரு புத்திரனைப் பெறுவாயாக!" என்றான்.

கௌத்ஸனின் ஆசியை மெய்யாக்க ரகுவுக்கு அஜன் பிறந்தான். பிள்ளைப்பிராயம் தாண்டி மணப்பருவத்தை அடைந்த அஜன் விதர்ப்ப நாட்டு மன்னனின் அழைப்பின்மேல் பெரிய சேனையுடன் புறப்பட்டு விதர்ப்ப தேசத்தை அடைந்தான். மன்னனின் தங்கை இந்துமதியின் சுயம்வரம் நடக்கும் மண்டபத்திற்கு மிக்க மரியாதையோடு அழைத்துச் செல்லப்பட்டான். எல்லாத் தேசத்து மன்னர்களும் வந்து கூடியதும் சுயம்வரம் தொடங்கிற்று.

கையிலே மாலை ஏந்தி வந்த விதர்ப்ப நாட்டு அரசகுமாரி, அழகாக அலங்கரிக்கப்பட்ட சுயம்வர மண்டபத்தில் தோன்றினாள். சுயம்வரத்துக்கு அழைக்கப் பட்டிருந்த ஐம்பத்தாறு நாட்டு மன்னர்களும் இளவரசர்களும் அங்கே கூடி இருந்த அழகை ஒரு கணம் இந்துமதி கண்களால் பருகினாள். பக்கத்தில் நின்று சுநந்தை என்னும் தோழி, ஆண்மகனைப்

போல் தைரியம் நிறைந்த சொல்லாட்சி பெற்றவள். சுநந்தை அரசர்களின் பெருமைகளை வருணித்து வர, அரசகுமாரி மண்டபத்தில் மெல்ல நடந்து வந்தாள்.

அங்கநாட்டு மன்னன் அழகில் சிறந்தவன். இந்துமதியின் பேரழகில் ஈடுபட்டு அவள் தனக்கு மாலையிட வேண்டும் என்ற ஆவலில் சிறப்பாகத் தன்னை அலங்கரித்து வந்திருந்தான். அவனைக் காட்டிச் சுநந்தை சொன்னாள்: "இந்த மன்னர் ஒரு முறை இந்திரலோகம் போயிருந்த போது அப்ஸர மங்கையரும் இவரைக் கண்டு காமுற்றனர். சாதாரணமாகச் சேர்ந்து வாழும் தன்மையே இல்லாத லட்சுமியும் ஸரஸ்வதியும் இவரிடம் சேர்ந்து வாழ்கின்றார்கள். இவரை நீ மணந்து கொண்டால் சேராச் சேர்த்தியாக இருக்கும்; சம்மதிக்கிறாயா?" என்றாள்.

அங்க மன்னனை ஒரு முறை ஏறப்பார்த்துவிட்டு இந்துமதி, "போகலாம்" என்று அறிவித்தாள். இத்தனை சிறப்புள்ள அங்க மன்னனை ஏன் இந்துமதி விரும்ப வில்லை என்ற வியப்பு எல்லோருக்கும் ஏற்பட்டது. அரசன் பெருமையில் குறைந்தவனா? இந்துமதிதான் சீர் தூக்கிப் பார்ப்பதில் தாழ்ந்தவளா?

இல்லை. இரண்டும் இல்லை. காதல் என்பது காரணம் தெரியாமலேயே தோன்றுவது. ஓர் உள்ளம் விரும்பும் பொருளை மற்றொன்று வேண்டாது. அழகு, குணம் என்னும் இவைபற்றி ஒருவருக்கு ஒருவர் பிரேமை தோன்றிவிடும் என்றும் சொல்ல

முடியாது. இதற்குக் காரணம் கற்பிக்க முயல்வது வீணாகும்.

"என்ன நடக்குமோ? என்னையும் புறக்கணித்து விடுவாளோ?" என்று அரசர் கூட்டத்தில் ஒவ்வொரு வரும் தவித்து இருக்க, இந்துமதியைத் தோழி, அவந்தி நாட்டரசனிடம் அழைத்துப் போனாள். "இவர் சிறந்த வீரர். இவருடைய தலைநகரான உஜ்ஜயினியில் உள்ள மகாகாலர் எனும் சிவன் கோயில் புகழ் பெற்றது. மகாகாலரின் தலை ஆபரணமாகச் சந்திரன் என்றும் தேய்வில்லாமல் ஒளி வீசித் திகழ்கிறான். இவரை மணம் கொண்டால் இவருடைய மற்ற மனைவி களுடன் நீ தேய்பிறையிலும் நிலவு விளையாட்டுக் களை விளையாடலாம்" என்றாள் சுநந்தை.

எத்தனை பெருமை அவந்தி மாதேவிக்கு! இந்துமதி இவனுக்கே மாலையிடுவாள் என்று சபையில் பலர் எண்ணத் தொடங்கினார்கள். ஆனால், இந்துமதி. "மேலே செல்லலாம்" என்று கண்களால் சைகை செய்யச் சுநந்தை நடந்தாள். "அவந்தி மன்னனின் மனைவியாக ஆனால் இன்ப நுகர்ச்சி பெரிதே என்றாலும் பல மனைவியருள் ஒருத்தியாகத்தான் நீ இருக்க வேண்டும்" என்பதைத் தோழி சொல்லாமல் சொல்லிவிட்டாள் அல்லவா?

வேறு மன்னர்கள் - அழகிலும் வீரத்திலும் புகழிலும் மேம்பட்டவர்கள் - பலரையும் ஒதுக்கி விட்டாள் இந்துமதி; மன்னர்கள் உள்ளத்திலே

கோபக் கனலை மூட்டிய வண்ணம் மெல்ல நடந்து கொண்டே போனாள். "இவர் கார்த்தவீரியர் வழித் தோன்றல்", "இவர் கலிங்க மன்னர் ஹேமாங்கதர்" என்று தோழி அறிமுகப்படுத்திவர, இந்துமதி மாலையைத் தாங்கியபடி நடந்து போனாள்.

பாண்டிய மன்னன் இருந்த ஆசனத்துக்கு அருகே வந்த சுநந்தை நின்று, "தேவி, இவரைப் பார்" என்று சொல்லிப் பாண்டியனின் புகழைப் பாடத் தொடங்கினாள். இந்துமதியும் பாண்டியனின் சிறப்பைப் பற்றி அறிந்திருந்தாளாகையால் மாலையுடன் நின்று கவனித்தாள்.

"தேவி, இவ்வரசர் தென்னாட்டுக்கு அதிபர். கடலைக் குடித்த குறுமுனி அகஸ்தியரும் இவருடைய உற்ற நண்பராவார். வணங்காமுடி ராவணனும் இவர் தோள்வலி கண்டு அஞ்சி இவருடன் நட்பு உடன் படிக்கை செய்துகொண்டான். பாண்டிய நாடு வளமிக்க நாடு. கமுகு மரங்களைச் சுற்றி வளரும் வெற்றிலைக்கொடிகளும், சந்தன மரங்களைப் பற்றிக்கொண்டு படரும் ஏல லதைகளும் நாட்டின் வளத்தைப் பறைசாற்றும். நீல வண்ணம் படைத்த இந்தப் பாண்டியரை நீ மணந்து கொண்டால் உன் செவ்விய மேனி மேகத்திடையே பட ரும் மின்னல் கொடியை நிகர்த்திருக்கும்" என்று சுநந்தை உற்சாகத்துடன் பேசினாள்.

பாண்டியனின் சிறப்பு எந்தப் பெண்ணின் இதயத்தையும் கவரத் தக்கதே. இந்துமதி மேலே

நடந்தாள். சுநந்தை அவள் மனத்தை அறிந்தவளாய் அடுத்து அமர்ந்திருக்கும் மன்னர்களின் புகழைக் கூறலானாள்.

சுநந்தை ஒவ்வோர் இளைஞனின் புகழையும் வர்ணிக்கும் போது அவன் முகம் பிரகாசத்தை அடையும். 'நமக்குத்தான் எத்தனை உயர்வும் பெருமையும்! இந்துமதி நமக்கே மாலையிடுவாள்' என்று நினைப்பான். இந்துமதி அவனைத் தாண்டிப் போகும் போது அவன்முகம் இருண்டுவிடும்; ஏமாற்றமும் கோபமும் சூழ்ந்து கொள்ளத் தலை நிமிராமல் உட்கார்ந்திருப்பான்!

எல்லோரையும் தாண்டிக் கொண்டு சுநந்தை அஜனிடம் வந்தாள். உத்தரகோசலத்து இளவரசனைக் கண்டதும் இந்துமதியின் முகம் மலர்ந்தது. அவளுடைய முகபாவத்தை உணர்ந்து, சுநந்தை அஜனை உற்சாகமாக வர்ணிக்கத் தொடங்கினாள்.

"தேவி, இந்திரனுக்குப் பேருதவி செய்த புரஞ்ஜயரின் வழித் தோன்றல் இவ்விளவரசர். அசுரர்களுடன் தேவர்கள் யுத்தம் செய்த காலத்தில் மாடாக மாறிநின்ற இந்திரனின் திமில்மேல் அமர்ந்து போர் புரிந்து அசுரர்களை முறியடித்தார் புரஞ்ஜயர். அன்றுமுதல் அவருக்குக் ககுத்ஸ்தன் என்று பெயர் அமைந்தது. அவர் வம்சத்தவர்கள் காகுத்ஸ்தர்கள் ஆனார்கள்.

"காகுத்ஸ்த குலத்தில் தோன்றிய திலீபர் இருபத்தொரு நாட்கள் காமதேநுவின் கன்றை

மேய்த்து அதன் அருளால் ரகுவெனும் குழந்தையைப் பெற்றார். இந்த நாடு முழுவதையும் திக்விஜயத்திலே வென்ற அந்த ரகுவின் புத்திரரே இந்த இளவரசர்.

“விதர்ப்ப நாட்டின் மடக்கொடியே! நீ இவரை மணந்துகொள்வாயாக. இவருடன் நீ சேர்வது ரத்தினத்தைத் தங்க நகையில் பதிப்பது போல் சிறப்புடையதாக இருக்கும்” என்றாள்.

இந்துமதி தன் கண்களை அஜன்மேல் பதித்து விட்டாள். பேசும் திறமை இழந்த அவள் மலர்ந்த முகத்துடன் அங்கு நிலைபெற்று நின்று விட்டாள் - கையில் உள்ள மாலையையும் மறந்து.

தோழி சந்தர்ப்பத்தை நழுவ விடுபவளா? “நேரமாயிற்றம்மா; மேலே போகலாமா?” என்று குறும்பாகக் கேட்டபடி அவள் முகத்தையே பார்த்தாள். தோழியைச் சுட்டுவிடுவாள் போல் பார்த்துவிட்டு அரசிளங்குமரி மெல்ல ஓர் அடி முன்னே வைத்து மாலையை அஜன் கழுத்திலே அணிவித்தாள்.

பிறகு அஜனுக்கும் இந்துமதிக்கும் திருமணம் சிறப்பாக நடக்கிறது. அவர்களுடைய இன்ப மயமான மணவாழ்க்கையின் பயனாகத் தசரதன் பிறக்கிறான். தசரதனின் வரலாறு சற்று விரிவகாக் கூறப்படுகிறது. ராமனின் கதையை ஆறு சர்க்கங்களில் காளிதாசன் சொல்கிறான். ராவண வதம் ஆனபிறகு ராமன் தன்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும் புஷ்பக விமானத்தில் ஏற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாக

அயோத்தி திரும்புகிறான். வழியில் தெரியும் காட்சி களை ராமன் சீதையிடம் காட்டி வர்ணிப்பதாக ஒரு சர்க்கம் அமைந்துள்ளது. பதினான்கு வருடங்கள் காட்டில் தாம் அநுபவித்ததை எல்லாம் இக் காட்சிகள் நினைவூட்டுகின்றன. சிருங்கிபேரபுரத்தைக் கண்டதும் ராமன் சொல்லுகிறான்: "அன்பின் வடிவான வேடர் தலைவன் குகனின் ஊர் இது. நாம் இந்த ஊருக்கு வந்து தலைமயிரைச் சடையாக ஆக்கிக் கொள்ளும் போது கூடவே இருந்த சுமந்திரன் தன் துயரத்தை அடக்க முடியாமல் வாய்விட்டுக் கதறி விட்டான், "கைகேயி, உனது ஆசையும் நிறைவேறி விட்டதே!" என்று.

அயோத்தியை அடைந்த ராமன் அங்கே லட்சிய அரசியல் நடத்துகிறான்; சீதையுடன் ஆதரிச இல்லறம் நடத்துகிறான். ஆனால் அபவாதம் என்ற கொடும்பேய் குறுக்கிடுகிறது. சீதையைக் காட்டில் கொண்டுபோய் விடும்படி லட்சுமணனுக்கு ராமன் உத்தரவிடுகிறான். பூர்ண கர்ப்பிணியான சீதையைத் தேரில் ஏற்றி லட்சுமணன் காட்டில் கொண்டு போய் விடுகிறான். பிறகு தான் ராமனின் கடுமையான உத்தரவை லட்சுமணன் சீதையிடம் சொல்கிறான்; சொல்லி அவளுடைய மன்னிப்பை வேண்டுகிறான்.

சீதை தனக்கு ஏற்பட்ட பெருந்துயரத்தையும் மறந்து, அன்போடு பதில் சொல்கிறாள்: "குழந்தாய்! என்றும் நீ என்பால் பக்தி பூண்டு ஒழுகி வந்திருக்கிறாய். நீ நீண்ட காலம் பெருவாழ்வு வாழ

வேண்டும். நான் சொல்லும் வசனத்தை அந்த மன்னரிடம் நீ அறிவிக்க வேண்டும். துயரப்படாதே, எழுந்திரு.'' சீதையின் காற் சிலம்பைத் தவிர வேறு அணிகளைப் பார்த்திராத லட்சுமணனின் குண நலன்களை இப்பெருமாட்டி உள்ளவாறு அறிந்திருந்தாள். ஆனால் ராமன் தன் கணவன் என்ற உறவினை மறந்து, அரசன் என்ற முறையில் கடமைக்காகத் தன்னைப் புறக்கணித்தான் என்ற உணர்வினால் ராமனை 'அந்த அரசன்' என்ற கடுஞ்சொற்களால் குறித்தாள்.

லட்சுமணனின் மூலம் சீதை ராமனுக்கு அறிவித்த செய்தி இதுதான்: "உங்கள் கண்ணுக்கு எதிரில் தீக்குளித்து என் கற்பை நிரூபித்தேன். ஆனால் உலகத்தின் பழிச்சொல்லைக் கேட்டு என்னைப் புறக்கணித்தீர்கள். தாங்க முடியாத இந்தச் சோகத்தினால் என் உயிர் பிரிந்திருக்க வேண்டும். என் வயிற்றிலுள்ள சிசுவுக்காக நான் இன்னும் உயிர் வாழ்கிறேன். குழந்தை பெற்ற பிறகு நான் ஐந்து நெருப்பிடையே நின்று கடுமையான தவம் செய்யப்போகிறேன். 'அடுத்து வரும் பிறவிகளிலும் உங்களையே கணவராக அடையவேண்டும்: நம்மிடையே ஒரு கணமும் பிரிவு என்பதே இல்லாத இல்லறத்தை நாம் நடத்தவேண்டும்' என்பதே என் தவத்தின் நோக்கம்.''

தனக்குக் கொடுமையை இழைத்த கணவனையே அடுத்துவரும் பிறவிகளிலும் பதியாய் அடைய

வேண்டும் என்று விரும்பும் சீதையைக் கற்பின் சிகரமாகக் காட்டுகிறான் காளிதாசன்.

சீதைக்குக் குச லவர்கள் பிறந்து, வால்மீகி முனிவரிடம் அவர்கள் கல்வி கற்கிறார்கள். சிறப்பாக வால்மீகியின் வாக்கில் அமைந்த ராமனின் கதையை முழுதும் கற்றுத் தேர்ச்சி அடைந்தார்கள். ராமனுக்குப் பிறகு குச லவர்கள் கோசல நாட்டை நீதி பிறழாமல் ஆண்ட கதை தொடர்கிறது. அவர்களின் வழித் தோன்றல்கள் அலை அலையாக வந்த கதை சுருக்கமாகக் கூறப்பட்டு அக்கினிவர்ணன் என்ற கயவனின் கதையோடு காவியம் முடிவுபெறுகிறது.

சிவன் பார்வதியை மணந்த கதையைக் காளிதாசன் 'குமார சம்பவம்' என்ற காவியத்தில் பாடியிருக்கிறான். காவியத்தின் தொடக்கத்திலேயே வரும் இமய மலையின் வர்ணனை நூலின் தரத்தையே உயர்த்திவிடுகிறது; உயர்ந்த மனிதர்களையும், இறவாத தன்மை பெற்ற தேவர்களையும், அரிய செயல்களையும், ஆழ்ந்த காதலையும் எங்கும் காண முடியாத தியாகத்தினையும் சுவைப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கித் தருகிறது.

இமய மலையின் சரிவுகளில் சிங்கங்களை வேட்டையாடும் வேடர்கள் தாம் பின் தொடர்ந்து வந்த சிங்கத்தின் ரத்தம் தோய்ந்த காலடிச் சுவடுகள் ஓர் இடத்தில் பனி நீரால் கழுவப்பட்டு மறைந்து விட்டதால் திகைத்துப் போய் மேலே செல்ல முடியாமல் நின்றுவிட்டார்கள். சிங்கம் பல

யானைகளை அடித்துக் கொன்றதனால் யானைகளின் தலைகளில் இயற்கையாகவே உண்டாகி இருந்த முத்துக்கள் சிங்கத்தின் கைவிரல் இடுக்குகளில் சிக்கிக் கொண்டிருக்கும் அல்லவா? சிங்கம் தப்பித்து ஓடும்போது கீழே சிந்திய முத்துக்களின் ஒளியினால் சிங்கம் சென்ற வழியை அறிந்து அதைப் பின் தொடர்ந்து போவார்கள் இவ்வேடர்கள்!

இமயமலைக் காடுகளின் வளமும், சிங்கங்களின் வலிமையும், வேடர்களின் நெஞ்சுறுதியும், யானைகளின் சிறப்பும் இக் கம்பீரமான சொற் சித்திரத்தினால் வெளிப்படுகின்றன அல்லவா?

இமய மலையின் சரிவிலே சரளமரங்கள் செழித்து வளர்ந்திருக்கும். தம் உடலின் அரிப்பை நீக்க யானைகள் இம் மரங்களின் மேல் உரசித்தேய்க்கும். அதனால் பட்டை திறந்து பால் பீறிட்டடிக்கும். இதன் மணம் காடெங்கும் பரவி நிற்கும்.

இந்த மலைக்கு மகளாய்ப் பிறந்த பார்வதி, அழகும் குணங்களும் நிரம்பப் பெற்றவளாய் விளங்கினாள். லட்சுமி தேவி பார்வதியின் முகத்தைக் கண்டு மகிழ்ச்சியோடு அதில் குடிபுகுந்தாள்! தாமரையின் மேலும், சந்திரன் மேலும் லட்சுமிக்கு விருப்பம் அதிகம். தாமரை சூரியன் உதிக்கும் போது மலரும்; சந்திரன் தோன்றும் போது இதழ் கூம்பி நிற்கும். சந்திரனின் அழகும், தாமரையின் பொலிவும் பார்வதியின் முகத்தில் ஒருங்கே இருந்ததால் லட்சுமி அங்கே குடியேறி விட்டாள்.

சிவபெருமானை மணந்து கொள்ளவேண்டும் என்பது பார்வதியின் அவதார லட்சியம். நாரதரும் ஒருமுறை அவளைப் பார்த்துவிட்டு அவள் தந்தையிடம் சொன்னார்.

“இவளை மணந்துகொள்ளத் தக்கவன் சிவன் ஒருவனே. காதல் மிகுதியால் தன் உடலின் ஒரு பகுதியை இவளுக்கு ஆக்கித் தருவான் அவன்” என்ற முனிவரின் ஆசியை ஏற்று மகிழ்ந்திருந்தாள் பார்வதி. இமவானும் வேறு வரனைப்பற்றிய எண்ணத்தையே மனத்திலிருந்து அகற்றிவிட்டான்.

இப்படி இருக்கையில் ஒரு முறை பரமசிவன் தவம் செய்வதற்காகத் தம் பேய்க் கணங்களுடன் இமாலயத்திற்கு வந்தார். வந்த விருந்தினரை மலையரசன் அன்போடு வரவேற்றான். தவம் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான். அவற்றோடு அவருக்குக் குற்றேவல்கள் புரியப் பார்வதியையும் அனுப்பினான். முனிவர்களின் தவத்துக்கெல்லாம் தகுந்த பலனை அளிக்கும் தெய்வம் இமய மலைச் சாரலில் தானே தவம் செய்யத் தொடங்கிற்று!

இதற்கிடையில் தாரகன் என்னும் அசுரன் தவம் செய்து, வரம் பெற்று அதன் பலத்தினால் மூவுலகங் களையும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தான். “சூரியன் என் தலைநகரில் தாமரைகள் மலரத் தக்க உஷ்ணத்துக்கு மீறி ஒளி வீசக்கூடாது. என் நந்தவனத்

திலுள்ள மலர்கள் அங்கிருந்து அகலாத வண்ணம் காற்றும் தணிந்து வீச வேண்டும். சந்திரன் தேய்வில்லாமல் என்றும் முழு நிலவாகப் பிரகாசிக்க வேண்டும்'' என்று இவ்வாறு தேவர்களையும் அடக்கி ஆட்சி செலுத்தினான் தாரகன்.

அக்கொடுமை தாங்காத தேவர்கள் பிரமனிடம் சென்று முறையிட்டார்கள். பிரமன் மனமிரங்கி, “தேவர்களே, உங்கள் சேனை பலத்தில் குறைந்த தல்ல. ஆயினும், தாரகனை உங்களால் வெல்ல முடியவில்லை. சேனைக்கு ஏற்ற தளபதி இல்லாமல் இருப்பதே இதற்குக் காரணம். சிவபிரானுக்கும். பார்வதிக்கும் திருமணம் நிகழ்ந்து, அவர்கள் மகனாகக் குமரக் கடவுள் தோன்றிவிட்டால் உங்கள் துயர் நீங்கும். குமரன் தலைமையில் உங்கள் சேனை வீரம் விளைத்துத் தாரகனை அழிக்கும். அமரப்பெண்களைச் சிறைமீட்டு வரும்'' என்று கூறி மறைந்தார்.

சிவபெருமானை மணந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே பார்வதி இந்த மண்ணில் வந்து பிறந்தாள்; இந்த உண்மையை உணராத தேவர்கள் இவ்விருவர்க்கு இடையே காதலை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தார்கள். காதற் கடவுளான மன்மதனை வசந்தனுடன் இதற்காக இமய மலைக்கு அனுப்பினார்கள்.

வசந்தன் வருகையால் காடுகள் தளிர்விட்டுப் பூத்தன. காலம் தப்பிவந்த வசந்த ருது எல்லோர் மனத்திலும் காதல் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது.

வண்டு தம்பதி தேன் உண்ணும் போதும் பிரியக் கூடாது என்ற எண்ணத்தால் ஒரே புஷ்பத்தில் தேன் குடித்தன. கலைமான் தன் கொம்பினால் பிணையை மெல்லச் சொறிந்து கொடுக்கப் பிணையும் இன்ப அநுபவத்திலே கண்களை மூடிக்கொண்டு நின்றது.

அதே சமயம் பார்வதி சிவபெருமான் இருந்த ஆசிரமத்துக்குள் நுழைந்தாள். சிவபெருமானும் தவம் கலைந்து நிமிர்ந்தார். தருணம் பார்த்திருந்த மன்மதனும் சிவபெருமான் மேல் மலர் அம்பை விடுத்தான்.

சிவபெருமான் உறுதி தளர்ந்து. தம் மூன்று கண்களாலும் பார்வதியை நோக்கினார். பார்வதியும் காதலின் கலவரத்தை முகத்தில் காட்டிய படி அழகே உருவாக எதிரில் நின்றாள்.

அதே கணம் சிவபெருமான் தாம் நிலை பிறழ்ந்த காரணத்தை உணர்ந்துகொண்டார். மலரம்பை விட்ட மன்மதன் மேல் அவருக்குக் கரையில்லாத கோபம் உண்டாயிற்று. நெற்றிக் கண்ணைத் திறந்து அவர் மன்மதனைப் பார்க்க, அக்கண்ணின் தீயிலே அவன் எரிந்து போனான்!

“தவத்திற்கு இங்கே இடையூறு ஏற்படுகிறது” என்று சிவபெருமான் வேறிடம் சென்றார், மன மொடிந்த பார்வதியும் வீடு திரும்பினாள். ஏமாற்றத் தினால் மனம் இடிந்து போய்த் தேவர்களும்செய்வது அறியாமல் திகைத்து நின்றார்கள்.

அழகினால் உள்ளத்தில் மயக்கத்தை உண்டாக்கும் காமன் அழிந்துவிட்டால் இனி அழகினால் இறைவனை அடைய முடியாது என்பதைப் பார்வதி உணர்ந்து கொண்டாள். உலகத்தில் இணையற்ற மணவாளன், சிருஷ்டி தொடங்கி இன்றுவரை பார்த்திராத ஒரு காதல் பிணைப்பு இவ்விரண்டும் நிலைக்கவேண்டும் என்றால், கடுந்தவம் செய்யத் தான் வேண்டும் என்று பார்வதி தீர்மானம் செய்து கொண்டாள்.

தாயின் வேண்டுகோளையும் உதறித் தள்ளிவிட்டு ஒரு தோழியுடன் தபோவனம் சென்று, அவள் தவம் செய்ய ஆரம்பித்தாள். தவத்தின் கடுமையால் உடல் இளைத்துக் கண்களைச் சுற்றிக் கருமை நிறம் தோன்றியது. மழைக் காலத்திலே அவள் நீரில் நின்று கொண்டு தவம் செய்தாள்; குளிரில் திறந்த வெளியில் கல்லின்மேல் கண் துயின்றாள்; கோடையில், "ஐந்து நெருப்பிடையே" நின்று தவம் செய்தாள். பார்வதியின் தவத்தைக் கண்டு முனிவர்களும் வியப்பு அடைந் தார்கள். தவம் செய்யும் போது பழங்களையும் உதிர்ந்த இலைச் சருகுகளையும் தின்று அவர்கள் பசியாறுவது வழக்கம். உலர்ந்த சருகுகளையும் விலக்கித் தவம் செய்ததால் பார்வதிக்கு அபர்ணா என்ற பெயரும் ஏற்பட்டது.

ஒருநாள் மான் தோலும், பலாச தண்டமும் தாங்கிய ஒரு பிரம்மச்சாரி தபோவனத்தில் தோன்றினார். அவரைப் பார்வதி அன்புடன்

வரவேற்று உபசரித்தாள். பார்வதியின் உபசாரத்தை ஏற்றுக் கொண்ட பிரம்மசாரி தபோவனத்தின் வசதிகளைப் பற்றி விசாரித்துவிட்டு அவளிடம் சொன்னார்: "பெண் இனத்தின் ரத்தினமே! எதை விரும்பி நீ இப்படித் தவம் செய்கிறாய்? உன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தவம் செய்யவும் வேண்டுமா? நீ வேண்டினால் கிடைக்காத பொருளே இவ்வுலகில் இல்லை. ஏற்ற கணவனை நோக்கியே தவம் செய்கிறாய் என்று நான் ஊகிக்கிறேன். ஆயினும், சந்தேகம் வளர்கிறதே யன்றிக் குறையவில்லை. உன் காதலுக்காக ஆண் மக்கள் தவம் கிடக்கும் போது, யாருடைய அன்பைப் பெறுவதற்காக நீ தவம் செய்கிறாய்? சொன்னால் என் தவத்தின் பாதியை உனக்குக் கொடுத்து உதவலாம் என்று நான் எண்ணியிருக்கிறேன்."

பார்வதி வெட்கத்தினால் விடை கொடுக்க வில்லை. அவள் தோழியின் வாயிலாக உண்மையை அறிந்து கொண்ட பிரம்மசாரி படபடப்போடு பேச ஆரம்பித்தார்.

பிரம்மசாரி: சிவனா? சிவனை விரும்பியா தவம் செய்கிறாய்? அமங்களமான வழக்கங்களை உடையவன் அவன். அவன்மேல் உனக்கு உண்மை யான காதல் ஏற்பட்டிருக்க முடியாது என்றே நான் நினைக்கிறேன்.

பார்வதி: வேதம் பயின்றவரே, தோழி கூறியது உண்மைதான். எனக்கு எட்டாத அந்த உயர்

பதத்தையே விரும்பித் தவம் செய்கிறேன். கோரியது கிடைக்காவிட்டாலும் ஈடுபடுவதில் தவறில்லையே?

தோழி: ஐயா, இவளுக்கு அந்தப் பிறைசூடியின் மேல் கரையில்லாக் காதல் ஏற்பட்டிருப்பது உண்மையே. அவனையே நினைத்து என் தோழி பகலெல்லாம் உருகுவாள். இரவில் உறக்க மில்லாமல் புரண்டு புரண்டு படுப்பாள். திடீரென்று விழித்துக் கொண்டு, “என்னை விட்டு எங்கே போகிறீர், நீலகண்டரே?” என்று குழறிய வண்ணம் வெறும் வெளியைக் கைகளால் நெருக்கி அணைத்துக் கொள்வாள். என்றைக்குத்தான் அவனுடைய அருள் இவளுக்குக் கிடைக்கப் போகிறதோ, தெரியவில்லை!

பிரம்ம: சிவனின் அருள் கிடைத்துத் திருமணம் நடக்கிறது என்றே வைத்துக் கொள்ளலாம். உன் தளிர் போன்ற வளைக் கையால் பாம்பணிந்த சிவன் கையை மணப் பந்தலில் பிடித்துக் கொள்வது எப்படி? சிவன் அணிந்திருக்கும் யானைத் தோலிலிருந்து ரத்தத் துளிகள் உன் பட்டுப் புடவையின் மேல் சிந்திப் பாழக்கிவிடுமே! இதையெல்லாம் நீ நினைத்துப் பார்த்தாயா?

பார்: பரம்பொருளின் உண்மை நிலையை நீர் அறியவில்லை என்றே நினைக்கிறேன். அவன் பாம்பை அணிந்திருந்தால் என்ன? தோலை அரைக் கசைத்தால் என்ன? உலகத்தோருக்கு மங்களத்தையே கொடுக்கும் அவன் தியாகத்தின் உறைவிடம். ஆகையால், தனக்கு என்று நல்ல பொருளை அவன் நாடுவதில்லை.

பிரம்ம: கிழட்டு மாட்டின்மேல் அல்லவா ஏறி வருவான் உன் மணாளன்? உன் உறவினர்களும் ஊரிலுள்ள மற்றவர்களும் இந்த மாப்பிள்ளைக் கோலத்தைப் பார்த்து நகையாடுவார்களே!

பார்: என் பசுபதி எருதேறி வருவான் என்பது உண்மையே. ஆனால் விடையூர்ந்து வரும் சிவனைக் கண்டு இந்திரனும் ஐராவதத்திலிருந்து கீழிறங்கிக் கை கட்டி வாய்புதைத்து நிற்பான். என் நாதனின் அருளுக்காக இந்திரனுள்ளிட்ட தேவர் குழாம் எல்லாம் இறைஞ்சி நிற்கும் என்று அறிவிலிகளும் உணர்ந்திருக்கிறார்கள். உமக்கு ஏன் இது விளங்க வில்லை?

பிரம்ம: பிடிவாதம் உள்ளவளே! அழகற்ற வடிவம் உள்ளவன் அவன். அவன் பிறப்பின் வரலாற்றை அறிந்தவர்கள் ஒருவரும் இல்லை. திகம்பரமாக நிற்கும் அவனது செல்வ நிலைபற்றி நான் சொல்லவும் வேண்டுமா? கணவனிடத்தில் கன்னியர் விரும்பும் குணங்களில் ஒன்றையும் சிவனிடத்தில் காணமுடியாது. சிவனை மறந்துவிட்டு உயர்குலத்தில் பிறந்த ஒரு மணாளனை நீ அடையவேண்டும். உன் நலத்தைக் கோரும் நண்பன் என்ற முறையில் இதை நான் சொல்கிறேன்.

பார்: தோழி, நிறுத்தச் சொல் இவன் பேச்சை! இது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. பொய்யே பேசுகிறான் இவன்! ஆனால் இவன் சொல்லிலும் ஓர் உண்மையைக் கண்டேன் நான். பிறப்பில்லாத என் நாதனின் பிறந்த வரலாற்றை

யாரால் அறியமுடியும்? ஆனால் பெரும்பகுதி தூஷணையே பேசும் இவனுடன் பேசிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. இதோ போகிறேன் இங்கிருந்து.

இப்படிக் கூறியவளாய்ப் பார்வதி அங்கிருந்து போக முயன்றாள். போக முடியாமல் தன்னை யாரோ தடுப்பதை உணர்ந்த பார்வதி திடுக்கிட்டுத் திரும்பினாள். எதிரே பிரம்மசாரியைக் காணவில்லை. அவர் நின்ற இடத்தில் தாழ்சடையும் ஒண் மழுவும், பிறை மதியும், பாம்பணியுமாய்க் கைலாயநாதரே புன்சிரிப்புடன் நின்றார்!

திகைப்பும், மகிழ்ச்சியும், வெட்கமும் குமிழிட்டு நின்ற பார்வதியைப் பார்த்து அவள் மனத்தில் இன்ப ஊற்றைப் பெருக்கவிடும் சொற்களை அப்போது அவர் கூறினார்: "பார்வதி உன் தவத்தால் என்னை அடிமைப் படுத்திவிட்டாய். இன்றிலிருந்து நான் உனக்குக் கையாள் ஆகிவிட்டேன். பிரம்மசாரியாக வந்து உன் மன உறுதியைச் சோதித்ததற்காக என்னை நீ மன்னிப்பாயா?"

தோழியின் எதிரில் தன் நாதன் இப்படிப் பேசியது கேட்டுப் பேச முடியாமல் பார்வதி வெட்கத்தினால் தலை குனிந்து விட்டாள். நினைத்த பலன் கைகூடியதும் தவம் செய்த களைப்பெல்லாம் நீங்கி விட்டது அவளுக்கு. எல்லையில்லாத இன்பத்திலே ஆழ்ந்து நின்றாள் பார்வதி.

உரிய காலத்தில் உலகில் நன்மை பிறக்கத் தீயன எல்லாம் அழிந்திடப் பார்வதிக்கும் சிவனுக்கும்

திருமணம் நடந்தது. உலகத்தின் பெற்றோர்களான இவர்களின் இல்வாழ்க்கையின் பயனாகக் குமரக் கடவுள் குழந்தையாய்ப் பிறந்தான்; தேவருக்குத் தளபதியாகித் தாரகனைப் போரில் வென்று உலகின் துயர் களைந்தான்.

காளிதாசனின் மூன்றாவது காவியம் மேகதூதம். ஒரு யட்சனுக்கு ஏற்பட்ட சாபத்தால் அவன் தன் மனைவியிடமிருந்து ஒரு வருஷ காலம் பிரிந்திருக்க வேண்டியதாயிற்று. ராமகிரி என்ற மலையில் வசித்து வந்த யட்சன் ஒருநாள் ஒரு மேகம் மலைச் சரிவில் வந்து தங்குவதைப் பார்த்து, அதை நெருங்கினான். அன்றலர்ந்த புஷ்பங்களால் அதனைப் பூசித்து வடக்கே அளகாபுரியில் இருக்கும் தன் மனைவிக்குத் தனது தூதனாக மேகம் செல்ல வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அசேதனப் பொருளாகிய மேகம் எப்படித் தூது போக முடியும் என்பதையும் யட்சன் நினைத்துப் பார்க்கவில்லை. 'அன்புடை யாரைப் பிரிவுறும் நோய்' நல்ல அறிவுள்ள மனிதர்களையும் எப்படிச் செய்து விடுகிறது!

மேகத்தைப் பார்த்து யட்சன் சொல்கிறான்: "புஷ்கரம், ஆவர்த்தகம் என்ற உயர்ந்த மேகங்களின் வழிவந்தவன் நீ; அதனாலேயே இவ்வுதவி செய்யும் படி உன்னை நான் மன்றாடிக் கேட்கிறேன். உயர்ந்தவர்களிடம் உதவி கேட்டு மறுக்கப்பட்டாலும் அதில் இழிவு இல்லை. கீழ்மக்களிடம் வேண்டுவதே இழிவாகும். அதனால், மேகமே நீ செல்லவேண்டிய

வழியைக் கூறி விட்டுப் பின் தூத வாக்கியத்தைச் சொல்லுவேன். வழியில் நீ இளைப்பாற வேண்டிய இடங்களையும், நீர் முகந்து செல்ல வேண்டும் இடங்களையும் தவறாமல் கூறுவேன். காதால் பருகத் தக்க இதைக் கவனத்துடன் கேட்பாயாக.''

பிறகு மேகம் செல்லவேண்டிய வழியை யட்சன் அழகாக வர்ணித்துச் சொல்கிறான். ''கார்மேகமே, உன் வருகையைக் கண்டு குடியானவர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். கார் காலத்திலுல் திரும்பி வருவேன் என்று கூறிச் சென்றவர்களின் மனைவியர் உன் வரவால் நம்பிக்கை அடைந்து புத்துயிர் பெறுவார்கள். கொக்குகளும் சாதகப் பட்சிகளும் உனக்கு நல்வரவு கூறும். மானஸ ஸரோவரத்துக்குப் போகும் ராஜ ஹம்ஸம் - வழியில் ஆகாரத்துக்காகத் தாமரைத் தண்டுகளை மூக்கில் கௌவிக்கொண்டு செல்லும் பட்சி இனத்தில் அரசு - உனக்கு வழித் துணையாகத் தோன்றும்.

''வழியில் ஆம்ரகூடம் என்னும் மலை எதிர்ப் படும். முன்பு ஒருமுறை அந்த மலையின் காடுகள் எல்லாம் நெருப்புப் பற்றி எரியும்போது நீ மழையைப் பொழிந்து அதன் துயரத்தை நீக்கினாய். நன்றி மறவாத அந்த மலையும் இப்பொழுது உனக்குத் தங்க இடங்கொடுத்து உன் களைப்பை ஆற்றும். அங்கிருந்து கிளம்பி நர்மதையில் நீர் முகந்து, காலதாமதம் இல்லாமல் மேலே செல்ல வேண்டும்.

"ஆயினும், ஒரு வேண்டுகோள்: வழியிலிருந்து சற்றுத் திரும்பிப் போயாகிலும் நீ உஜ்ஜயினி நகரத்தைக் கட்டாயம் பார்க்கத்தான் வேண்டும். அந்நகரின் மாடிகளில் எல்லாம் அழகான பெண்கள் நின்று உன்னையே பார்க்கும்பொழுது உன்னிடம் தோன்றும் மின்னல்களைக் கண்டு அவர்களுக்கு அச்சம் ஏற்படும். அப்பெண்களுடைய கண்ணோட்டத்தை அப்போது நீ பார்த்து ரசிக்கா விட்டால் கண்களைப் பெற்ற பயனை அடையாதவன் ஆவாய். அழகிற் சிறந்த இந்நகரத்தின் காட்சிகளையும் அவந்தி நாட்டின் இயற்கை எழிலையும் அநுபவித்துக் கொண்டு சண்டீசுவரம் என்ற சிவ ஸ்தலத்தில் உள்ள ஈசனை வழிபட வேண்டும். பிரதோஷ காலத்தில் இடி முழக்கத்தால் முழவோசை போல் சத்தத்தை உண்டாக்கிச் சூலபாணியை முறையாய் வழிபடும் பேறு உனக்கு மற்றொரு சமயம் கிடைக்கும்.

"நண்பனுக்கு உதவி செய்ய வேண்டி இருப்பதால் அவ்விடம் தங்காமல் மேலே சென்று தேவகிரியை அடைவாய். அங்கே கோயில் கொண்டுள்ள குமரக் கடவுளை நீ மலர்களை மழை போல் தூவி வழி படவேண்டும். நந்திதேவனின் புகழ், நதி உருவம் கொண்டதோ எனத் தக்க சர்மண்வதி நதியின் நீர் முகந்து குருக்ஷேத்திரம் என்ற புண்ணிய பூமியைக் கடந்து இமாலயத்தை அடைவாய்.

"சிவபெருமானின் திரிபுர வெற்றியைக் கின்னரப் பெண்கள் பாடும் மலைச் சரிவுகளில் பாட்டுக்கு வாத்தியமாக மூங்கில்கள் காற்றில் சத்தமிடும்;

தாளத்துக்கு உன் இடி ஓசையைச் செய்து நீ உதவ வேண்டும் அங்கே. அந்த மலைச் சரிவுகளில் பனி உறைந்து கிடப்பது சிவபெருமானின் கோரச் சிரிப்பு மேன்மேலும் வந்து குவிந்து உறைவதால் ஏற்பட்டதோ எனும்படி தோன்றும். அந்த மலையில் சிவபெருமானையும் பார்வதியையும் வழிபட்டு நீ மேலே சென்று என் நகரை அடைய வேண்டும்."

வழியை வர்ணித்தபின் யட்சன் தன் ஊரான அளகாபுரியைப் பற்றி உற்சாகமாகப் பேசுகிறான். அளகாபுரியில் தன் வீட்டின் விலாசம் கூறி அங்கே விரகதாபத்தால் உருகி நைந்து போயிருக்கும் தன் மனைவியை வர்ணிக்கிறான். இது உள்ளத்தைப் பிழிந்துவிடும் சோக சித்திரமாக அமைந்துவிட்டது. "என் நினைவாகவே இருக்கும் அவள் என் பெயர் அமைந்த பாட்டை வீணையில் வாசிக்க முயல்வாள். சோகத்தால் கண்களில் நீர் பெருகும்; கண்ணீர் வீணையின் கம்பிகளை நனைத்துவிடும். ஈரமான கம்பிகளில் நாதம் எழும்பாமல் போகவே எப்படியோ முனைந்து அவற்றை மறுபடியும் வாசிக்கும் பதத்துக்குக் கொண்டு வருவாள். மறுபடியும் தந்திகளை மீட்டும்போது, பாட வந்த கீதம் மறந்து போய்விடும்! அவள் மீளாத சோகத்தில் மூழ்கிவிடுவாள்!

மேகம் அவளைச் சமாதானப்படுத்தி ஒரு நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று யட்சன் வேண்டுகிறான். சமாதானம் அடைந்த மனைவியிடம் சொல்லவேண்டிய தூத வாக்கியம் இதுதான்:

"மங்கலம் உடையவளே, உன் கணவன் சுகமாக இருக்கிறார் என்றசெய்தியைத் தன் நண்பனான என் மூலம் உன்னிடம் தெரிவிக்கும்படி சொன்னான். அன்புடையாரைக் காணுவதற்கு அடுத்தபடியாக அவர்களைப் பற்றிய செய்தியை அறிவதுதான் மகிழ்ச்சியைத் தரக்கூடியது. உன் கணவன் உன் நினைவாகவே இருக்கிறான். பிரிவில் உன் உருவத்தை வரைவதிலும் உன் மேல்பட்டக்காற்று தன்மேல் படாதா என்று ஏங்குவதிலும் காலத்தைக் கழிக்கிறான். இத்துயரம் நீடித்திருக்காது, விரைவில் இன்பம் தோன்றும் என்று நம்புகிறான் அவன். 'முடிவில்லாத சோகமும் இல்லை; எல்லை இல்லாத இன்பமும் கிடையாது இவ்வுலகில்; இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதே உலக இயல்பு. ஆகவே, சாபத்தின் முடிவில் நாம் மீண்டும் சந்திப்போம். அந்த நாளை நினைத்து இன்றைய துக்கத்தை மறந்திருப்போம். அது வரை என் மேல் நம்பிக்கை குறையாமல் இருக்க வேண்டியதே உன் கடன்' என்று கூறியனுப்பினதாகச் சொல்."

கடைசியாக யட்சன் மேகத்தைப் பார்த்துச் சொல்வான்: "உன் நண்பனுக்கு இந்த அருந் தொண்டைச் செய்து முடித்த பின் நீ மனதுக்கின்பமான இடங்களில் எல்லாம் சஞ்சரிப்பாயாக. உனக்கு மழை நாட்களில் செல்வம் பெருகட்டும். என்னைப் போல் அல்லாமல் என்றும் மின்னல் பிராட்டியுடன் பிரிவில்லாமல் நீ இன்பவாழ்க்கை வாழ வேண்டும்." இந்த ஆசியுடன் நூல் முடிவுபெறுகிறது.

மொத்தத்தில் 125 சுலோகங்களுக்குள் அடங்கிவிடும் இந்தச் சிறு காவியம், பல முகப்புகள் வைத்துச் செதுக்கப்பட்ட உயர்ந்ததொரு வைரம்போல் ஒளி வீசுகிறது. இதில் ஒவ்வொரு சுலோகமும் ஒரு சொற் சித்திரம். ஆகாயத்திலே மிதந்து செல்லும் மேகம்; கூட்டமாகப் பறந்துவரும் கொக்குகள்; கீழே பூமியில் நீலமணி ஹாரம்போல் நதிகள்; மரங்கள் அடர்ந்த மலைச்சரிவுகள்; மலர்களைக் கொய்யும் மங்கைகள்; கிராமத்துப் பெண்களின் கபடமில்லாத பார்வையும், நகரத்து நாரிகளின் ஒய்யார நோக்கும், இமயத்தின் பனி முடியும், அளகாபுரியின் அமைப்பழகும் - இவை ஒவ்வொன்றும் கவிதைச் சுவையின் பேரெல்லையிலே நம்மைக் கொண்டு போய் நிறுத்திவிடக் கூடியவை. இந்தக் காட்சிகளெல்லாம் விரகத்தால் வருந்தும் யட்சனின் நோக்கிலே பார்த்து வர்ணிக்கப் பட்டவை. ஆகையால், ஒவ்வொரு காட்சியும் ஜீவன் நிறைந்து, உயிர்ப் பொலிவுடன் தோன்றுகிறது.

இந்த மூன்று காவியங்களைத் தவிர காளிதாசன் மாளவிகாக்கினிமித்திரம். விக்கிரமோர்வசீயம், சாகுந்தலம் என்ற மூன்று நாடகங்களையும் இயற்றியிருக்கிறான். இவற்றில் முன்னவை இரண்டும் கவர்ச்சியுள்ளனவேயானாலும், காளிதாசரின் உயர்ந்த சிருஷ்டிகள் ஆகமாட்டா. மாளவிகாக்கினிமித்திரம் கவியின் இளமைப் பிராயத்திலே இயற்றப்பட்டது என்று திறனாய்வாளர் ஊகிக்கிறார்கள். இதற்குக் காரணம் நாடகத்தின் தொடக்கத்தில் காளிதாசன் சூத்திர தாரனின்

வாயிலாக வெளியிடும் அழகான ஒரு கருத்துத்தான். "இன்று என்ன நாடகம் நடிக்கலாம்" என்று நடி கேட்டதற்குச் சூத்திரதாரன் காளிதாசனின் மாளவி காக்கினிமித்திரத்தை நடித்துக் காட்டலாம் என்று பதில் சொல்லுகிறான். "பாஸன், சௌமில்லன், கவிபுத்திரன் என்ற புகழ்பெற்ற கவிகளின் நாடகங்கள் இருக்கும்போது, யாரோ பேர் தெரியாத ஒரு கவியின் கிருதியை நடிக்கலாம் என்று சொல்வது ஏன்?" என்று கேட்கிறாள் நடி. அதற்குச் சூத்திரதாரன் சொல்லுகிறான்: "பழைய நூல் என்பதனாலேயே சிறப்பும், புதிய நூல் என்ற காரணத்தாலேயே தாழ்வும் ஏற்படுவதில்லை. சான்றோர் எந்த நூலையும் ஆய்ந்து பார்த்துத்தான் தராதரத்தை மதிப்பிடுவார்கள். மற்றவரின் கருத்தை ஆராயாமல் ஏற்றுக்கொண்டு தன்னுடையதேபோல் வெளியிடுபவன் மூடனே."

விக்கிரமோர்வசீயம் என்ற நாடகத்தில் நடிப்புக்கு அதிக இடம் இல்லை; கதையம்சம் குறைவு; சுலோகங்கள் அதிகம். அதனால் இது நாடகம் என்ற முறையில் அதிகப் பெருமை அடையவில்லை. ஆயினும், இதில் உள்ள சுலோகங்கள் மிக அழகாக அமைந்துள்ளன. வெயிலின் கடுமையை வர்ணிக்கும் ஒரு சுலோகத்தைப் பாருங்கள்: "வெயிலின் கடுமையைத் தீர்த்துக் கொள்ள மயில் மரங்களின் அடிப்பாகத்தில் புதிதாக ஊற்றப்பட்டிருக்கிற தண்ணீரில் அமருகிறது. கர்ணிகாரப் பூக்களின் மொட்டுக்களைப் பிளந்து வண்டுகள் அவற்றின் உள்ளே படுத்து உறங்குகின்றன.

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண் படுப்பது போல காரண்டவம் என்ற ஒரு வகை வாத்து வெப்பமான குளத்தின் நீரையும் விட்டு அதில் பூத்திருந்த தாமரை மலரைப் புகலடைகிறது. அன்போடு வளர்க்கப் படும் கூண்டுக்கிளியும் வெப்பத்தின் கடுமையால் தாக்கப் பட்டு, "தண்ணீர், தண்ணீர்" என்று கூவுகிறது.

தலைவனான புரூரவஸ் ஊர்வசியின் பிரிவினால் வருந்தும்போது பாடும் சுலோகங்கள் உயர்ந்த காதல் உணர்ச்சியோடு அமைந்திருக்கின்றன. அவர்களுக்குப் பிறக்கும் ஆயுஸ் என்ற குழந்தை ஓர் அழகான குணசித்திரம். நாடகத்தில் அப்சரப் பெண்களும், தேவர்களும் நடமாடுகிறார்கள். சந்திர வெளிச்சத்தில் காதற் காட்சிகள் நடக்கின்றன. உயர்ந்த பாட்டுக்கள் அழகான முறையில் அமைக்கப் பட்டிருக்கின்றன. நாடகத்தில் கதையம்சம் இல்லை, வேகம் குறைவு என்ற குறைபாடுகள் இவற்றால் ஓரளவு மறைக்கப்படுகின்றன.

'அபிக்ஞான சாகுந்தலம்' என்ற நாடகத்தின் கதை எல்லோரும் அறிந்ததே. சகுந்தலை என்ற தபோவனத்துப் பெண்ணுக்கும், துஷ்யந்தன் என்ற அரசனுக்கும் காதல் ஏற்படுகிறது. துஷ்யந்தன் ஒரு சாபத்தின் பயனாக அவளை மறந்துவிடுகிறான். பெண்வீட்டார் சகுந்தலையைத் துஷ்யந்தனிடம் அழைத்துப் போகிறார்கள். சகுந்தலை தன் மனைவி அல்ல என்று மன்னன் மறுக்கவே, அவள் தாயான மேனகை என்ற அப்சர மாது அவளைத் தன்

இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்கிறாள். போரில் இந்திரனுக்கு உதவி செய்வதற்காக மேல் உலகத்திற்கு வந்த துஷ்யந்தன் சகுந்தலைக்குப் பிறந்த, தன் குழந்தையைக் கண்டு பாசம் கொண்டு அவன் மூலமாகச் சகுந்தலையை அடைந்து மகிழ்கிறான்.

தபோவனத்தில் சகுந்தலையைத் துஷ்யந்தன் கண்டவுடன் காதல் தோன்றிவிடுகிறது. முதல் சந்திப்பில் அதிகம் பழகாத நிலையில் காதலின் எல்லையை அடைந்துள்ள ஒரு குலப்பெண் எப்படி நடந்து கொண்டாள் என்பதைத் துஷ்யந்தன் வாயிலாக அறிகிறோம். "பெண் என்ற காரணத்தாலும், நான் பழகாத ஒரு புது மனிதன் என்பதாலும் அவள் என்னுடன் பேசுவதில்லை; ஆனால் நான் பேசும் போது காது கொடுத்து ஊன்றிக் கேட்கிறாள் இவள். நாணத்தால் இவள் என் முகத்தை நிமிர்ந்து பார்ப்ப தில்லை என்பது உண்மையே. ஆனால் இவள் கண்கள் வேறு எதையும் உற்று நோக்குவ தில்லை."

'நாணாக்கால் பெண்மை நலனழியும் முன்நின்று
காணாக்கால் கைவளையும் சோருமால்"

என்று முத்தொள்ளாயிரத்துத் தலைவி தவித்தது போல் சகுந்தலையின் நிலையும் வர்ணிக்கப்படுகிறது. ஒழுக்கம் பிறழாமல் உயர்ந்த காதல் உணர்வை வெளியிடும் சகுந்தலை காளிதாசனின் தலைசிறந்த பெண் பாத்திரம் ஆவாள்.

இத்தகைய பண்புடைய சகுந்தலை, 'நுகரப்படாத ஒரு மலர்; நகத்தால் கிள்ளப்படாத ஒரு தளிர்;

கடையப் படாத ஒரு வைரம்; ஒருவராலும் சுவைக்கப் படாத கொம்புத்தேன்' என அரசன் பரவசமடைந்து கூறுகிறான். நகரத்தின் பகட்டுக்களை அறியாத சகுந்தலையின் தூய மனப்பண்பை இந்த நான்கு உவமைகளால் வெளிக்காட்டுவது கவிதையின் சிகரமாக அமைகிறது.

வீட்டுத் தோட்டத்தில் கருத்துடன் வளர்த்த செடிகளை விடக்காட்டில் இஷ்டம்போல் வளர்த்த கொடிகள் பார்க்க அழகாய் இருக்கின்றன.தோட்டத்துக் கொடிகள் பலவற்றை அநுபவித்திருந்த துஷ்யந்தன் சகுந்தலை என்ற காட்டுக்கொடியைக் கண்டு மோகித்ததில் என்ன ஆச்சரியம்? இந்தக் காதல் நோயினால் பீடிக்கப்பட்ட துஷ்யந்தனுக்கு மன்மதனின் புஷ்ப பாணங்களும் வஜ்ரம்போல் கடினமாகத் தோன்றுகின்றன: சந்திரனின் தண்ணொளியும் நெருப்பாய் எரிக்கிறது.

"உன் மனோவியாதிக்குக் காரணம் என்ன?" என்று தோழிகள் சகுந்தலையைத் தனிமையில் கேட்கும்போது ஒளிந்திருந்த துஷ்யந்தன் தவிக்கிறான். "என்மேல் இவளுக்குள்ள காதல் மிகப் பெரிது; இவள் நோய்க்கு இதுவே காரணம் என்பதையும் நான் அறிவேன். ஆயினும் தோழிகளுக்கு இவள் என்ன விடை கூறுவாளோ என்று அஞ்சுகிறேன்" என்று தனக்குள் சொல்லிக் கொள்கிறான். விளையாட்டாக அவள் வேறு காரணத்தைச் சொன்னாலும் துஷ்யந்தனின் வாழ்வு இடிந்து

துகளாகிவிடும். "காதல்தானோ கடலினும் பெரிதே" என்ற நிலையில் இருக்கிறான் துஷ்யந்தன்.

வேட்டை முடிந்ததும் அரசன் தலைநகர் திரும்புகிறான். விரகத்தினால் மனங்குலைந்து நிற்கிறாள் சகுந்தலை. வளர்ப்புத் தந்தை கண்வர் சகுந்தலையை அரண்மனைக்கு அனுப்பத் தீர்மானிக் கிறார். வளர்த்த பாசம் புலன்களை அடக்கிய முனிவரின் உள்ளத்தையும் உருக்கி விடுகிறது. 'சகுந்தலை இன்று எம்மை விட்டுப் பிரிந்து போகிறாள். இந்த எண்ணத்தினால் என் இதயம் சோகம் நிறைந்து இருக்கிறது. கண்ணீர் வெள்ளத்தை தடுக்க முயல்கிறேன். இதனால் சோகம் தொண்டையை அடைக்கிறது. கண்கள் திறந்திருந்த போதிலும் எந்தப் பொருளும் கண்ணில் படுவதில்லை. துக்கத்தால் அவை வெறும் வெளியையே நோக்குகின்றன."

சகுந்தலை கண்வரிடமிருந்தும், தோழிகளிடமிருந்தும் பிரிய முடியாமல் பிரிகிறாள். அவள் அன்புடன் வளர்த்த மான் நட்பினால் அவளைப் பின்தொடர்ந்து வருகிறது. சகுந்தலை கணவன் வீட்டில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற கண்வர் புத்திமதி சொல்லித் துஷ்யந்தனிடம் அறிவிக்க வேண்டிய வாசகத்தையும் தெரிவிக்கிறார். முடிவில் ஆசியும் கூறுகிறார்: "நெடுநாள் நீ துஷ்யந்தனின் பட்ட மகிஷியாக இருந்து பெருவாழ்வு வாழ வேண்டும். ஒப்பற்ற ஒரு மகனைப் பெற்று அவனுக்கு வயது வந்ததும் அவனிடம் அரசையும் குடும்ப பாரத்தையும் ஒப்படைத்து விட்டு, நீயும் உன்

கணவனும் இந்த ஆசிரமத்தில் நிலையாக வாசம் செய்ய வருவீர்களாக!"

கர்ப்பிணியாக வந்த சகுந்தலையைத் துர்வாச சாபத்தினால் மனம் குழம்பிய மன்னன் நிராகரிக்கிறான். சகுந்தலையும் அவளை அழைத்து வந்த முனி குமாரரும் சொல்வன எல்லாம் பொய்யாகத் தோன்றுகின்றன அரசனுக்கு. கடுமையாகப் பேசுகிறான். சபை நடுவில் நிற்கும் சகுந்தலையைக் குறித்து: "படிக்காத பெண்களுக்கும் ஒருவகையான கல்லா அறிவு உண்டு. இதை மனித இனத்தில் மாத்திரம் அல்ல; கீழான பிராணி களிடத்தும் பார்க்கலாம். காக்கையின் உதவியால் தன் குஞ்சுகளை வளர்த்துக் கொள்ளும் பெண் குயிலின் திறமை யாவரும் அறிந்ததே அல்லவா?" சபையிலே நிராதரவாய் விடப்பட்ட சகுந்தலை கதறுகிறாள். சபையோரின் மனம் உருகுகிறது; ஆயினும், ஏதும் உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவள் தாய் மேனகை திடீரென்று ஒளி வடிவமாகத் தோன்றி அவளை ஹேமகூட மலைக்கு அழைத்துப் போகிறாள்.

சாபம் விடுபடுகிறது. அரசன் சகுந்தலையை நினைத்து உருகுகிறான். சோகத்தில் மூழ்கியிருந்த துஷ்யந்தனுக்கு இந்திரனிடமிருந்து அழைப்பு வருகிறது. இந்திரனின் எதிரிகளைப் போரில் வென்று பூமிக்குத் திரும்பும்போது வழியில் ஹேமகூட மலையில் இறங்குகிறான். ஓர் அழகிய குழந்தை இரண்டு மூன்று சிங்கக் குட்டிகளோடு கொஞ்சமும்

பயமில்லாமல் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்ததும் அரசனின் மனக்கிடை திறக்கிறது. பிள்ளைக் கனியமுதின் பெருமையை இறவாத சொற்களில் வெளிப்படுத்துகிறான்: "காரணம் இல்லாத ஒரு மகிழ்ச்சியில் தன் முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டும், பொருளற்ற சொற்களைப் பேசிக் கொண்டும் குழந்தைகள் மண்ணிலே புழுதியோடு அளைந்து பின் ஓடிவந்து ஆவலுடன் தந்தையின் மடியில் ஏறி அமர்ந்து கொள்வார்கள். இவர்களைப் பெற்ற தந்தை என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்.!"

இந்தக் குழந்தையின் உதவியாலேயே அரசன் சகுந்தலையோடு ஒன்றுபடுகிறான். அழுக்கடைந்த நீரில் பிரதிபிம்பம் விழாததுபோல் சாபத்தால் கலங்கிய துஷ்யந்தனின் மனத்தில் காதலின் பிரதிபலன் ஏற்படவில்லை. சாபம் நீங்கியதால் தெளிவுபெற்ற அரசனின் உள்ளத்தில் சகுந்தலையின் காதல் நிலைபெறுகிறது. பெரியோரின் ஆசியுடன், துஷ்யந்தன் மனைவியையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வந்து லட்சிய வாழ்க்கை நடத்துகிறான்.

காளிதாசனின் நூல்களைத் திரும்பத் திரும்பப் படிக்கும் ரசிகர்களை, "ஏன் படிக்கிறீர்கள்?" என்று கேட்டால் பலவிதமான விடைகள் கிடைக்கும். "அவனுடைய கவிதையில் உள்ள ஓசையின்பம் எம்மைப் பரவசப்படுத்துகிறது" என்பர் சிலர். ஒரு சிலருக்கு அவனுடைய கவிதையில் உள்ள அணிகள்-

முக்கியமாக உவமைகள் - கவர்ச்சியாகத் தோன்று கின்றன. "காளிதாசன் மிக உயர்ந்த குணநலம் படைத்த பாத்திரங்கள் பலவற்றை எடுத்து ஆள்கிறான். அவற்றின் மூலமாக நம் எல்லோருக்கும் நல்ல வாழ்க்கை முறையை ஆதரிசமாகக் காட்டுகிறான். சகுந்தலையைப் பாருங்கள்! சீதையைப் பாருங்கள்! பார்வதியைப் பாருங்கள்! ரகு வம்சத்து மன்னர் வரிசையை மனத்தில் தியானித்துக் கொள்ளுங்கள். எத்தனை உயர்ந்த தரம்! ஆன்மிகத் துறையில் நம்மை ஊக்குவிப்பதும், நாம் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழத் துணை செய்வதுமே காளிதாசனின் நோக்கம். இதற்காகவே அவன் கவிதையை விரும்பிப் படிக்கிறோம்" என்று பெரும்பாலோர் விடை கூறுவார்கள்.

8. நாடக இலக்கியம்

சம்ஸ்கிருத மரபிலே நாடக இலக்கியம் சிறப்பான ஓர் இடம் பெற்றிருக்கிறது. பாரத பூமியிலே பிறந்து அதன் பண்பில் ஊறி வளர்ந்தது இவ்விலக்கியம். கிரேக்க நாடகங்களைப் பார்த்துத் தான் இந்தியர் நாடகம் எழுதவும் நடிக்கவும் கற்றுக் கொண்டனர் என்று கிரேக்கப் பண்பாட்டில் ஆழ்ந்த பக்தியுள்ள ஆங்கிலேய ஆராய்ச்சியாளர்களில் சிலர் சொல்லிப் போனார்கள். இந்தக் கொள்கைக்கு யாதோர் ஆதாரமும் இல்லை. சம்ஸ்கிருத நாடகம் முழுமையும் நம் நாட்டுப் பயிரே என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன. 'கிரேக்கக் கொள்கை'யை நம்புபவர்கள் நம் நாட்டில் இன்று மிக மிகக் குறைவு. பரத முனிவரின் மிகப் பழமையான நூலில் நாடகத்தின் அமைப்பு, தலைவர் தலைவியரின் வார்ப்பு, கதை, சுவைகள் (ரசங்கள்) இவற்றுக் கெல்லாம் இலக்கணம் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. பரத சாஸ்திரத்தைத் தழுவி எழுதப் பட்ட நாடக இலக்கண நூல்களில் 'தசரூபகம்' என்பது முதன்மையானது. சம்ஸ்கிருத மொழியில் உள்ள எல்லா நாடகங்களும் நாடக இலக்கண விதிகளுக்கு உட்பட்டே இயற்றப்பட்டன. உதாரணமாக மரணம்,

யுத்தம் முதலிய காட்சிகளை மேடையில் நடப்பதாகக் காட்டுவது சுவைக் குறைவு என்பது இலக்கண விதி. இதையொட்டியே பாஸன் பிரதிமா நாடகத்தில் ஜடாயுவின் மரணத்தை மேடையில் காட்டாது இரண்டு முனிவர்களது பேச்சின் வாயிலாக அச்செய்தியை வெளியிடுகிறான். பாரத யுத்தத்தைப் பற்றி எழுந்த 'வேணீ ஸம்ஹாரம்' என்ற நாடகத்தில் போரின் போக்கை நேரில் காண முடியாது. போர்க்களத்தில் நடந்தவற்றைக் குறித்து இரண்டு பாத்திரங்கள் பேசுவதன் மூலமாகவே நாடகாசிரியர் நடந்த செய்திகளை அறிவிக்கிறார். இதனால் நாடகத்தின் சுவை ஓரளவு குறைந்து போகிறது; என்றாலும், இலக்கண விதிகளை மீறாமல் நாடகம் இயற்றுவதுதான் முறை என்பது கவிகளின் நம்பிக்கை.

நாடக மேடைக்கு ஏற்றபடி கலைச் சுவையைப் பெருக்கக்கூடிய மரபுகள் சம்ஸ்கிருத நாடகங்களில் பல அமைந்துள்ளன. நாடகத்தின் தொடக்கத்திலேயே சூத்திரதாரன், நடிக்கவிருக்கும் நாடகத்தைப்பற்றியும், அதன் ஆசிரியரைப் பற்றியும் சில செய்திகளைச் சபையோருக்குச் சொல்வான். இந்த அறிமுகத்தி லிருந்து இயற்கையாக எழும் ஒரு சம்பவத்தோடு நாடகத்தின் முதல் காட்சி ஆரம்பமாகும். சாகுந் தலத்தில் சூத்திரதாரன் நடியைப் பாடும் படி சொல்ல, அவள் இனிமையாகப் பாடுகிறாள். பாட்டில் ஈடுபட்ட சபை மெய்ம்மறந்து இருப்பதைப் பார்த்து சூத்திரதாரன். "உன் பாட்டினால் மனம் எங்கோ இழுத்துச் செல்லப்படுகிறது - இந்தத் துஷ்யந்த

மன்னன் வேட்டையின் போது மானினால் வழியை விட்டு வெகு தூரம் இழுக்கப்பட்டதுபோல" என்று கூறிவிட்டு வெளியேறுகிறான். உடனே மானைத் தொடர்ந்து வரும் மன்னன் மேடையில் பிரவேசிக்கிறான். இதனால் சபையோருக்கு நாடகத்தோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு மேலே நடக்கும் காட்சிகளில் அவர்கள் மனம் ஒன்றி ஈடுபட்டு விடுகிறது.

சம்ஸ்கிருத நாடகங்கள் பெரும்பாலும் ஐந்திலிருந்து பத்து அங்கங்கள் கொண்டனவாக இருக்கும். ஓரங்க நாடகங்களும் சம்ஸ்கிருதத்தில் உண்டு. பாஸனின் 'தூத கடோத்கசம்', 'தூதவாக்கியம்' என்பவை ஓரங்க நாடகங்களே. சில நிகழ்ச்சிகளை மேடையில் நடத்திக் காட்டுவதற்கு நாடக விதிகள் இடம் தராமையினால் அவற்றை இரண்டு பாத்திரங்களின் சம்பாஷணை மூலமாகச் சூசனையாகக் காட்டுவார்கள். இத்தகைய காட்சிகள் அங்கத்துக்கு முன்னால் வரும்; இவற்றிற்கு விஷ்கம்பகம் என்று பெயர். பல மாதங்களில் நடந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கிக் கூறவும் சுவையில்லாத செய்திகளைக் கதையின் போக்கை நிறுத்தாமல் தொடர்ச்சியாக அறிவிக்கவும் இம்முறை கையாளப் படுகிறது.

சம்ஸ்கிருத நாடகங்களில் கவிதை சிறப்பான இடம் பெறுகிறது. உயர்ந்த கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளியிடும்போதெல்லாம் பாத்திரங்கள் கவிதையிலேயே பேசுவார்கள். சாதாரணக் கருத்துக்களைச் சொல்லும்போதுதான்

வசன முறை கையாளப்படுகிறது. சில நாடகங்களில் கவிதையே மிகுந்திருக்கும்: அவற்றில் வசன பாகம் கவிதைப் பகுதிகளை இணைக்கும் கருவியாகவே பயன்படுகிறது. இத்தகைய நாடகங்களை நடிப்பதை விடப் படிப்பதால் பயன் மிகுதியாகப் பெறலாம். காவியத்தைவிட நாடகமே மக்களுக்குக் கவர்ச்சி கரமாகக் கருதப்பட்டதால் நாடகத் திறன் இல்லாத சில கவிகள் நாடகம் எழுதப் புகுந்து இத்தகைய நூல்களை இயற்றினார்கள் என்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது.

பாஸன் என்ற நாடக ஆசிரியனைப்பற்றிக் காளிதாசனும் அநேக அணி இலக்கண நூலாசிரியர்களும் பாராட்டும் குறிப்புகள் சம்ஸ்கிருத இலக்கியத்தில் விரவி இருக்கின்றன. ஆனால் சமீப காலம் வரையில் அவனுடைய நூல்கள் கிடைக் காமலே இருந்துவந்தன. 1909 - 10 ஆம் ஆண்டுகளில் மகாமகோபாத்தியாய ஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் பாஸனின் பதின்மூன்று நாடகங்களைக் கண்டு பிடித்து வெளியிட்டார்கள். இவைகளை முதலில் இலக்கிய உலகம் ஆவலுடன் வரவேற்றது. சில ஆராய்ச்சியாளர், "இவை பாஸனின் முழு நூல்களல்ல; சுருக்கி எழுதப்பட்டவையே" என்று சொல்லத் தொடங்கினார்கள். வேறு சிலர், "இவை பாஸனின் நூல்களே அல்ல" என்றும் எழுதினார்கள். இந்தச் சர்ச்சை இப்போது பெரும்பாலும் அடங்கிவிட்டது. சாஸ்திரிகள் வெளியிட்ட பதின் மூன்று நாடகங்களும் பாஸனுடைய முழு நூல்களே

என்றும் சம்ஸ்கிருத உலகம் ஏற்றுக் கொண்டு விட்டது. மறைந்துபோன இந்த இலக்கிய நிதிகளை வெளிக்கொணர்ந்த சாஸ்திரியார் அவர்களுக்கு இலக்கிய உலகம் என்றும் கடன் பட்டதே ஆகும்.

பாஸனின் நாடகங்களில் சிறந்தது 'ஸ்வப்ன வாசவ தத்தம்.' வத்ஸ ராஜன் உதயணன், அரசி வாசவதத்தையின் காதலில் மூழ்கிக் கிடக்கிறான். ராஜ்ய காரியங்களை மந்திரி யௌகந்தராயணனே திறம்படக் கவனித்து நடத்துகிறான். ஆருணி என்ற கொடிய மன்னனின் சூழ்ச்சியால் வத்ஸ நாட்டுக்குப் பேராபத்து நிகழவிருக்கிறது. மகத நாட்டின் மன்னன் தரிசகன் உதவி கிடைத்தால் இந்த ஆபத்தைத் தவிர்க்கலாம் என்று உணர்ந்த யௌகந்தராயணன், தரிசகனின் தங்கை பத்மாவதிக்கும் உதயணனுக்கும் மணம் முடிக்க நினைக்கிறான். வாசவதத்தையிடம் மந்திரி கலந்து யோசித்து அதன் விளைவாக ஒரு பெரிய கபட நாடகத்தை நடத்துகிறான்.

லாவாணகம் என்ற கிராமத்தில் அரச தம்பதி தங்கி இருக்கும்போது, அரசன் வேட்டைக்காகச் சென்றிருந்த சமயத்தில் கிராமம் தீப்பிடித்து எரிய, அதில் அரசி இறந்துவிட்டாள் என்று மந்திரி அரசனை நம்பச் செய்து விடுகிறான். சந்நியாசி வேடம் தரித்த யௌகந்தராயணன் வாசவதத்தையைப் பத்மாவதியிடமே ஒப்படைத்து, 'என் தங்கையைச் சிலகாலம் காப்பாற்றி வரவேண்டும். சீக்கிரமே அவளை அழைத்துப்போகிறேன்'' என்று சொல்லிப் போகிறான். உயர்குணம் படைத்த பத்மாவதியும்

தூய அன்போடு அரசியைக் கருத்தாகக் கவனித்து வருகிறாள்.

உதயணன் மகத நாட்டுக்கு வந்து பத்மாவதியை மணந்துகொள்கிறான். வாசவதத்தையின் பெண் மனம் துக்கத்தால் கிடந்து தவிக்கிறது. ஆனால் உதயணன் தன்னை மறக்கவில்லை, தன்னையே நினைத்து நினைத்து உருகுகிறான் என்று அறிந்து வாசவதத்தை ஆறுதல் பெறுகிறாள்.

தரிசகனின் உதவியால் வத்ஸ நாட்டுப் படைகள் எதிரிகளை முறியடித்து, இழந்த நாட்டைக் கைப் பற்றுகின்றன. "இழந்த நாடும் திரும்பிவிட்டது; இறந்து போன அரசிதான் மீண்டும் தோன்ற மாட்டாள்" என்று உதயணன் வருந்திக் கொண்டிருக்கும் போது மந்திரி தோன்றிப் பத்மாவதியின் தோழியாக இருந்து வரும் வாசவதத்தையைக் காட்டி அரசனை இன்பத்தில் ஆழ்த்துகிறான்.

உதயணன் மகத நாட்டில் வசிக்கும்போது ஒரு நாள் இரவு சமுத்திரக்கிருகம் என்ற அரண்மனையில் பத்மாவதியின் தோழியாக இருந்துவரும் வாச வதத்தை அரசனைக் காணும் ஆவலால் அங்கு வந்து அவனுடன் மெல்லப் பேசுகிறாள். நீட்டப்பட்ட அவன் கையைப் படுக்கையின் மேல் வைத்து விட்டு மறைகிறாள். அரசன் பதற்றத்துடன் எழுந்து போகும் போது கதவுச் சட்டத்தில் இடித்துக் கொண்டு கலங்கி நிற்கிறான். கண்டது கனவா நனவா என்பது அவனுக்கு விளங்கவில்லை. வாசவதத்தையை விட்டுப் பிரிந்த துக்கத்தை உதயணன் ஓரளவு ஆற்றிக்

கொள்ள இக்காட்சி பயன்படுகிறது. நாடகத்திற்கு இக்காட்சி சிறப்பான அம்சமாக அமைவதால் நாடகமே 'ஸ்வப்ன வாசவதத்தம்' என்று பெயர் பெற்றது.

வாசவதத்தையின் மேல் அரசன் வைத்த அன்பு இந்நாடகத்துக்கே ஜீவனை ஊட்டுகிறது. வாசவதத்தையை அரசன் நினைந்து நினைந்து நெகிழ்ந்து சொல்லும் சொற்கள் பார்ப்பவர் மனத்தை உருக்கி விடும். அவள் இறக்கவில்லை என்ற உணர்வு சபையோருக்கு இருந்து வருமாகையால் சோக உணர்ச்சி அளவுக்கு மீறாமல் கலையின் எல்லைகளுக்கு உட்பட்டே நிற்கிறது.

வாசவதத்தையின் அன்புக்கு உரியதாயிருந்த கோஷவதி என்னும் வீணையைக் காட்டிலிருந்து யாரோ கண்டெடுத்து அரசனிடம் கொடுக்கிறார்கள், பறவையின் எச்சமும் புழுதியும் நிறைந்த அவ்விசைக் கருவியைப் பார்த்த அரசன் பரிவின் மிகுதியால் கூறுகிறான், "செவிக்கு இன்பமான நாதமுடையவளே, வாசவதத்தையின் மார்பிலும் மடியிலும் துயில்வாய், முன்பு: பயங்கரமான காட்டிலே அருவருக்கத் தக்க பொருள்களின் சேர்க்கையி ல் நீ இதுகாறும் எப்படி இருந்தாயோ?"

தேவியின் மார்பகமும் மடியும் மென்மையான பஞ்சணைபோல் இருந்தன வீணைக்கு என்று சொல்லும்போது, மன்னனின் காதல் முழுதும் வெளிப்படுகிறது. காதல் நோயால் வருந்துபவர்கள்

தம் காதலுக்கு உரியவர்களிடம் நெருங்கிப் பழகும் மனிதர்களிடத்தும் உயிரற்ற பொருள்களிடத்திலும்கூடப் பொறாமை கொள்வது வழக்கம். 'உலகளந்தான் வாயமுதத்தையே' உண்டு, 'கடல் வண்ணன் கைத்தலத்தே' கண் வளரும் பாஞ்சசன்னியம் என்னும் சங்கைப் பார்த்து, 'பெண் படையார் உன் மேல் பெரும்பூசல் சாற்று கின்றார்' என்று ஆண்டாள் குறை கூறுகிறாள். அது போலவே அரசனும் முன்பு வாசவதத்தையுடன் இணை பிரியாமல் உடலோடு ஒன்றி இருக்கும் பேறு பெற்ற வீணையைப் பார்த்துப் பொறாமைப் பட்டிருக்க வேண்டும். "வாத்தியம் வாசித்த பிறகு உன்னுடன் புன்சிரிப்போடு என் தேவி கொஞ்சிப் பேசுவாளே, அதை மறந்து விட்டாயா?" என்று அடுத்த சுலோகத்தில் கேட்பது இதே ரசத்தை அழகாக வெளியிடுகிறது.

ருமண்வான் என்ற பாத்திரம் இந்த நாடகத்தில் மேடையில் தோன்றுவதில்லை. ஆனால் விரகத்தால் நொந்த மன்னனுக்கு இரவும் பகலும் இடைவிடாது ருமண்வான் செய்த பணிவிடையை மற்றப் பாத்திரங்கள் மூலமாக அறிகிறோம். இவ்வாறு பாத்திரங்களின் குணவர்ணனையைச் சூசனையாகச் செய்து காட்டுவது பாஸனின் சிறப்பியல்பு. நாடகத் தலைவன் கவலையில் ஆழ்ந்திருக்கும் கட்டத்திலெல்லாம் விரைவிலேயே துயர் நீங்கப் போவதை அற்புதமான ஒரு தந்திரத்தால் ஆசிரியர் உணர்த்துவார். 'ஸ்வப்னவாசவதத்'த்திலும் 'பிரதிமா நாடக'த்திலும்

ஆறாவது அங்கத்தில் பிரதிஹாரி (காவற்பெண்டு), "நான் தான் விஜயா" என்று சொல்லிக் கொண்டு மேடையில் தோன்றுவாள். நாடகத் தலைவனுக்கு 'இனி வெற்றியே (விஜயம்) தோன்றும்' என்பதைப் பளிச்சென்று இது சபையோருக்கு உணர்த்தி விடுகிறது.

பாஸனுக்கு அடுத்தபடியாகத் தோன்றிய நாடக ஆசிரியன் சூத்திரகன் என்னும் மன்னன். இவனது 'மிருச்சகடிகம்' என்னும் நாடகம் 'மண்ணியல் சிறுதேர்' என்ற தலைப்புடன் பண்டிதமணி மு. கதிரேச செட்டியாரால் தமிழாக்கப்பட்டுள்ளது. உயர்ந்த கதையம்சம்; விறுவிறுப்போடு செல்லும் நாடக அமைப்பு; அழுத்தமாக வரையப்பட்ட குண சித்திரங்கள் - இவையே இந்த நாடகத்தின் சிறப்பியல்புகள். கவிதை குறைவாகவும், வசனம் மிகுதியாகவும் இருப்பதால் சம்பவங்கள் தடை யில்லாமல் விரைவாகச் செல்கின்றன. சம்ஸ்கிருத இலக்கியத்திலேயே சிறந்த நாடகப் பண்பு அமைந்த நாடகம் இதுதான். சாருதத்தன், வசந்தசேனை, மைத்திரேயன் இம்மூன்று முக்கிய பாத்திரங்களும் மறக்க முடியாத குணசித்திரங்கள். சூத்திரகனின் காலத்தில் இந்தியாவின் நிலையை ஓரளவு அறிய இந்த நூல் பயன்படும்.

இந்த நாடகத்தின் ஒரு தனித்தன்மை, இதில் அரசனைப் போன்ற உயர்ந்தோரைக் காட்டாமல் சமூகத்தில் தாழ்ந்த படியில் உள்ளவர்களையே பெரும்பாலும் மேடையில் ஏற்றி நடமாட விடுவார், இந்நாடகாசிரியர். ஓரங்கத்தில் சூதாடிகளின் சண்டை

மிக இயல்பாகக் காட்டப்பெறும். நாடகத்தின் தலைவியே வேசியர் குலத்தில் தோன்றிய வசந்த சேனை. அரசனின் மைத்துனன் சகாரன் என்பவன் மிகக் கொடியவன். அவன் ஒரு முறை நீதி மன்றத்துக்கு வர நேர்கிறது. தன்னை யார் என்று சொல்லிக் கொள்ள வேண்டியநிலையில், "நான் இந்த நாட்டு மன்னனின் மைத்துனன்! என் தமக்கைதான் இந்நாட்டின் அரசி ஆவாள். என் தந்தையின் மருமகப்பிள்ளை இந்நாட்டின் மன்னன்!" என்று திருப்பித் திருப்பித் தன் உயர்ந்த நிலையை வற்புறுத்திக் காட்டுவான். இதனால், இவன் அரசனின் மைத்துனன் என்பதைத் தவிர இவனுக்கு வேறு ஒரு தகுதியும் இல்லை என்பது நாடகம் பார்ப்போருக்குத் தெளிவாக விளங்கிவிடும், அல்லவா?

இந்த நாடகத்தில் சூதாடிகளைத் தவிரவும் ஒரு விடபுருஷன் (ஸ்திரிலோலன்) வருகிறான். ஒரு பிராம்மணத் திருடனும் இதில் தோன்றுகிறான். இவன் தன் பூநூல் திருட்டு வேலைக்கு எப்படி எல்லாம் பயன்படுகிறது என்பதை ஒரு சுலோகத்தின் வாயிலாக அறிவிப்பான்! இப்படி ஒரு சீர்கெட்ட சமூகத்தை வெகு திறமையாக வருணித்து நாடகம் பார்ப்போருக்கு வெகு சுவையாக நாடகத்தை அமைத்தான், சூத்திரகன். இதில் வசந்தசேனை (நாடகத்தின் தலைவி) சாருதத்தனால் கொல்லப் பட்டதாக வழக்கு நீதி மன்றத்தில் நடக்கிறது. சாருதத்தனுக்கு எதிராகச் சில தடயங்கள் கிடைக் கின்றன. நீதிபதி வழக்கின் முடிவில் சாருதத்தனே

கொலையாளி என்று முடிவு செய்து அவனுக்கு மரணதண்டனை விதிக்கிறார். அவனைக் கொல்ல அரசனின் ஆட்கள் அழைத்துச் செல்லும் பொழுது வசந்த சேனை உயிருடன் எதிர்ப்படுகிறாள்! அவளைக் கொல்ல முயன்றவன் அரசனின் மைத்துனனே என்பது முடிவாகிறது. இவ்வகையில் பரபரப்பும் அதிர்ச்சிகளும் திருப்பங்களும் நிறைந்த இந்த நாடகம் சம்ஸ்கிருத நாடக இலக்கியத்தின் தலை சிறந்தவை களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இத்தனை விறுவிறுப்பும் துடிப்பும் நிறைந்த நாடகம் நாடகாசிரியர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் சில நூற்றாண்டு களுக்குப் பின் வந்த முராரி, ராஜசேகரன் போன்றவர்கள் சிறிதும் நாடகப் பண்பு இல்லாத நாடகங்களை இயற்றினார்கள். கதிரவன் தோன்றி விட்டான் என்பதற்கு 6 சுலோகங்கள்! பல இடங்களில் இரு பாத்திரங்கள் பேசிக்கொண்டே போவார்கள்; அரைமணி நேரம் மேடையில் பேச்சு, பாட்டைத் தவிர ஒன்றுமே நடக்காது! இத்தகைய நூல்களைக் காவியம் என்றழைக்கலாம்; நாடகம் என்ற பெயருக்கே தகுதியற்றவை இவை.

காளிதாசனுக்குப் பின்னால் 8- ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பவபூதியை வணங்கி, வாய் புதைத்து நிற்கிறோம். மொழி அறிவிலும் சாஸ்திர ஞானத்திலும் தலைசிறந்த பவபூதிக்கு எந்த நாளிலும் பெருமதிப்பு இருந்திருக்கிறது. ஆனால் உயர்வைக் கண்டு பொறாமையினால் தாழ்மையாகப் பேசும்

கூட்டத்தினர் அந்நாளிலும் இருந்திருக்கிறார்கள் என்பது பவபூதியின் சுலோகத்திலிருந்து தெளிவாகிறது: "நம்மை அவமதிப்பவர்கள் எல்லோரும் மெத்தப் படித்தவர்களே: அவர்களைக் குறித்து இந்நூல் எழுதப்படவில்லை. என்னைப் போன்ற மனப் பண்பு உள்ளவன் ஒருவன் என்றைக்காவது ஒருநாள் ஏதோ ஒரு மூலையில் தோன்றுவான். அவனுக்காகவே இதைப் புனைகிறேன். கால தத்துவம் முடிவற்றது; இவ்வுலகமும் எல்லை இல்லாமல் விரிந்ததே அல்லவா?"

பவபூதி 'மாலதீ மாதவம்,' 'மகாவீர சரிதம்,' 'உத்தர ராம சரிதம்' என்ற மூன்று நாடகங்களை எழுதியிருக்கிறான். முதல் நாடகம் கவியின் கற்பனையில் தோன்றிய ஒரு கதையை அடிப் படையாகக் கொண்டது. பின்னிரண்டும் ராமாயணத்தி லிருந்து எழுந்தவை. மாதவன் மேல் காதல் கொண்ட மாலதி தன் காதல் நோயை வளர்ப்புத் தாயிடம் வர்ணிக்கிறாள்: "என் மனத்தில் தோன்றும் உணர்ச்சிப் பெருக்கு ஒவ்வொரு கணமும் உடலில் கொடிய விஷம் போல் பரவுகிறது. தூண்டப்பட்ட நெருப்புப் போல் புகையே இல்லாமல் இது என்னை எரிக்கிறது. உடம்பின் எல்லா அங்கங்களையும் கொடிய சுரம்போல் உருக்குகின்றது. இந்த நிலையில் என்னைக் காக்க என் தாய் தந்தையராலும் இயல வில்லை. தன் உயிரைவிட என்னைக் கருத்தாகக் காக்கும் தங்களாலும் முடியவில்லை" காதலால் பிணைக்கப்பட்ட இருவரில் ஒருவருக்கொருவர்

ஆதரவாகவும் நோய்க்கு மருந்தாகவும் தோற்றுவது இயல்பு. இதுவே காதலர் உள்ளம் படர்ந்த நெறி. "அணியிழை தன் நோய்க்குத் தானே மருந்து" என்றும், "மருந்து பிறிதில்லை யானுற்ற நோய்க்கே" என்றும் கூறப்பட்ட மனநிலை இதுவே அல்லவா?

காதலர் உள்ளத்தில் காதல் குடி ஏறி ஆதிக்கம் கொண்டு விட்டால் அவர்களுக்கு இன்பம் பெருமளவில் தோன்றும் என்பது ஒன்று. ஆனால் அவர்களை ஆட்டி வைக்கும் வேறுசில உணர்ச்சிகளும் தோன்றும் என்பதைக் காதல் இலக்கியத்தில் நாம் படிக்கின்றோம். "இந்தக் காதல் வெளியாகிப் பெரியோர்கள் இதைத் தடுத்து விடுவார்களோ?" என்ற அச்சம் இயல்பாக எழுகின்றது. "என்னை இவள் விரும்புகின்றாளா?" என்ற பெருங்கவலை தலைவனை ஓயாமல் வாட்டுகின்றது. தன்னைச் சந்திக்கத் தலைவன் குறித்த நேரத்தில் வரவில்லை என்றால் அவன் மேல் தலைவிக்குச் சினம்; அவனுக்கு என்ன நேர்ந்துவிட்டதோ என்ற அச்சம். ஆகவே காதலர் சுவைக்கின்ற இன்பத்தூடு இனியதல்லாத வேறு உணர்ச்சிகளும் கலந்தே வருகின்றன என்பதை மாதவனின் கூற்றாகப் பவபூதி கூறுவான்.

"தாமரைத் தண்டினால் இவள் என்னைக் கட்டி விட்டாள் என்பது உண்மை: ஆனால் என்னை எப்படி இறுகக் கட்டி விட்டாள்! பால் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றில்தான் என்னைக் குளிப்பாட்டினாள்; ஆனால் மூச்சு முட்டும்படி என்னை முழுக்கி எடுத்து விட்டாளே! அகல

விழித்த தன் கண்களால் என்னை முற்ற விழுங்கி விட்டாளே! அமுதமே நிரம்பிய மேகம் மழை பெய்யத் தொடங்கிய பொழுது என்னை அந்த மழையில் சொட்டச் சொட்ட நனைத்து விட்டாளே!"

உத்தரராம சரிதத்தில் பவபூதியின் திறன் பூரணத்துவம் அடைகிறது. கருணை ரசத்தை இந்த நாடகத்தின் ஒவ்வொரு சுலோகமும் கலைச் சுவையுடன் வெளியிடுகிறது. முதல் அங்கத்தில் ராமனும் சீதையும் இன்பமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது புதிதாய் எழுதப்பட்ட பல சித்திரங்களை லட்சுமணன் கொண்டு வந்து காட்டுகிறான். ராம கதையின் சம்பவங்களையே வரிசையாய்க்காட்டும் இந்தச் சித்திரங்கள், ராமன், லட்சுமணன், சீதை இவர்களின் மனத்தில் பழைய நினைவுகளைக் கிளறி விடுகின்றன. சீதையை ராவணன் கவர்ந்து சென்றபின் ராமன் மனநிலையைக் கூறும் பாட்டுக்கள் உள்ளத்தை உருக்கும்படியாக அமைந்துள்ளன. "ராமனின் சோகத்தைக் கண்ட கல்லும் கதறி அழும்; வஜ்ரத்தின் இதயமும் பிளந்து விடும்" என்று லட்சுமணன் சொல்லுகிறான்.

அவலச் சுவையை வெளிக்காட்டவே ஆசிரியன் இந்தச் சம்பவத்தைச் சிருஷ்டித்தான். அவனது நோக்கம் எப்படிப் பூரணமாக நிறைவேறிவிட்டது, முதல் அங்கத்திலேயே!

லட்சிய தம்பதியின் வாழ்க்கை நெறி எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப் பவபூதி, ராமன்

வாயிலாக வெளியிடுகிறான். "சதிபதிகளுக்கு இடையே உள்ள காதல் உறவு இன்பத்திலும் துன்பத்திலும் மாறாது; எந்நிலையிலும் ஒரே சீராக அமைந்திருக்கும். இரு உள்ளங்களும் இந்த உறவிலே சாந்தியைப் பெறுகின்றன. இளமைப் பருவம் கழிந்து போய்ப் புறத்தில் தோன்றும் உடல் அழகு நீங்கிய பிறகு அன்பின் அடிப்படையிலே இவ்வுறவு நிலைபெறும். பெறற்கரிய இந்த லட்சியக் காதலை ஓரளவிலாவது தம் வாழ்க்கையில் அடையவேண்டும் என்று இம் மண்ணிலே பிறந்த யார்தாம் விரும்ப மாட்டார்கள்!"

புற அழகைக் கண்டுதான் முதலில் காதல் அரும்புகிறது. ஆனால் மணமான பிறகு சதி பதிகளுக்கிடையேயுள்ள உறவு குணநலனைக் கொழுகொம்பாகப் பற்றிக் கொண்டு வளர்கிறது. அங்கங்களின் அழகு குன்றிய பின்பும் இந்த உறவு பழுதுபடாமல் இருப்பதைக் காண்கிறோம். லட்சியத் தம்பதியாகிய ராமனும் சீதையும் நடத்தும் இல்லறத்தில் இந்த லட்சிய உறவு நிறைவு பெற்றுவிட்டது என்று நாம் நமக்குள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மக்களிடையே சீதையைப் பற்றி உலவி வந்த அவதூறு என்னும் பேரிடி இந்த உறவைத் தகர்த்துவிடுகிறது. ராமன் மனத்தில் சீதையின் கணவன் என்ற கட்சிக்கும், நாட்டின் அரசன் என்ற கட்சிக்கும் கடும் போராட்டம் நிகழ்கிறது. முடிவில் கடமை உணர்ச்சியே வெற்றிபெறுகிறது. 'கசாப்புக் கடைக்காரன் வீட்டில் அன்போடு

வளர்க்கப்பட்ட பெண் பறவையை மாமிசத்திற்காகக் கொல்வதுபோல் சீதையை மரண தேவதையிடம் கயவன் கொடுக்கின்றேன்" என்று கதறியவண்ணம் சீதையைக் காட்டுக்கு அனுப்புகிறான் ராமன்.

உலகமெங்கும் எல்லா நிலைகளிலும் அவலச் சுவையே மேலோங்கி நிற்கிறது என்பது பவபூதியின் கொள்கை. இதைத் தாமஸா என்ற நதி தேவதையின் கூற்றாகக் கவி வெளியிடுகிறான்.

கருணைச் சுவையையே முதன்மையாக அமைத்துக் கலையழகு கெடாமல் நாடகம் எழுதிய பெருமை பவபூதி ஒருவனுக்கே உரியது.

பவபூதியின் காலத்துக்குச் சற்று முன்னால் வாழ்ந்த ஹர்ஷதேவன் என்ற கன்னோசி மன்னன் மூன்று நாடகங்களை இயற்றியுள்ளான், பிரியதரிசிகா, நாகானந்தம், ரத்தினாவளி என்பன அவை. இவற்றில் ரத்தினாவளியே புகழ்பெற்றது. ஹர்ஷனின் நாடகங்களில் கதையம்சமும் நாடகத்திறனும் குறைவு. ஆனால் பாட்டில் உயர்ந்த கவிதைச்சுவை அமைந்திருக்கும். ரத்தினாவளியில் அரசன் மேல் காதல் கொண்ட சாகரிகையின் நிலையை அரசன் வர்ணிக்கிறான்: "தன் காதல் எல்லாருக்கும் தெரிந்துவிட்டதே என்று இவள் வெட்கத்தினால் முகத்தை மறைத்துக் கொள்கிறாள். அங்கங்கே யாரோ இருவர் ஏதோ ஒன்றைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பதை இவள் பார்த்து விட்டால் கஷ்டம்! 'தன்னைப்பற்றியே பேசுகிறார்கள்' என்று இவள் நினைத்துக் கொள்கிறாள். தோழிகள் சிரித்தால்

துடித்துப் போகிறாள் இவள், தன் நிலையைப் பார்த்துச் சிரிக்கிறார்கள் என்ற எண்ணத்திலே. இவளுடைய இதயத்தினடியிலிருந்து கிளம்பும் காதல் தீ இவளை உருக்கி நிலை குலைத்துவிட்டது."

'நாகானந்தம்' என்ற நாடகம் புத்தமதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டது. போதிஸத்துவன் ஜீமூதவாஹனன் ஒரு பாம்புக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்ய முற்பட்ட கதையை இதில் ஹர்ஷதேவன் சொல்கிறான். தியாகத்தை வர்ணிக்கும் கட்டங்களில் நாடகம் உணர்ச்சியின் சிகரத்தை அடைகிறது.

பல வகைகளில் புதுமை நிறைந்த நாடகம் 'முத்திரா ராக்ஷஸம்.' இதில் பெண் பாத்திரமே மேடையில் தோன்றுவதில்லை. சந்திரகுப்த மௌரியனின் குருவும், ஆலோசகருமான சாணக்கியர் மௌரிய அரசுக்கு எதிராகச் சதி செய்த விரோதிகளையெல்லாம் தந்திரத்தால் வென்ற வரலாற்றைக் கூறுவது இந்நாடகம். முக்கியமாக ராக்ஷஸன் என்ற ஒரு ராஜதந்திரியை ஒரு முத்திரையின் உதவியால் தன் வசப்படுத்தியதைக் கூறுவதால் இதற்கு முத்திராக்ஷஸம் என்ற பெயர் அமைந்தது. இதை எழுதிய விசாகதத்தன் 8 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன்.

பாண்டவர்கள் கௌரவர்களைக் கொன்று, விரிந்து கிடந்த பாஞ்சாலியின் கூந்தலை முடித்து வைத்த கதை 'வேணீ ஸம்ஹார'த்தில் சொல்லப்படுகிறது. இதன் ஆசிரியரான பட்டநாராயணர் வங்க தேசத்தவர்

என்று அறிகிறோம். யுத்தத்தைப் பொருளாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நாடகத்தில் இலக்கண விதிகளை மீறத்துணியாத ஆசிரியர் யுத்தக் காட்சி ஒன்றையும் மேடையில் காட்டுவதில்லை. நாடகத்தின் சுவை இதனால் ஓரளவு கெட்டு விடுகிறது. இவருடைய கவிதைநடை மிடுக்காக இருக்கும். பீமன் கூற்றாக வரும் பகுதி:

"என் கதையால் துரியோதனன் துடையைப் பிளந்து அதிலிருந்து பீறிட்டடிக்கும் ரத்தத்தைத் தடவி உன்கூந்தலை முடிப்பேன்"

என்ற பொருள்கொண்ட சுலோகத்தில், பீமனின் அடிவயிற்றிலிருந்து கிளம்பும் ஆத்திரத்தை ஒலி வேகத்திலிருந்தே காணலாம்.

இதைவிட ஆவேசமான பெருஞ்சினத்தைக் காட்டும் சுலோகம் இந்நாடகத்தின் மூன்றாம் அங்கத்தில் அமைக்கப்பெற்றது. துரோணர் தந்திரத்தால் கொல்லப் பட்டார் என்பதை அறிந்த அவர் மகன் அசுவத்தாமன் போர்க்களத்தில் புகுந்து என்ன செய்வேன் எப்படி யெல்லாம் பழி வாங்குவேன் என்று மார்தட்டிக் கூறும் சுலோகம் இந்த இனத்தில் புகழ்பெற்ற ஒன்றாகும்.

"பாண்டவர் கட்சியிலே தனது உடல்வலியால் மிகுந்த ஆணவத்தோடு ஆயுதந்தாங்கி வருப வனை எல்லாம் சினம் மிகுந்த நான் கொன்று தீர்ப்பேன். பாஞ்சால கோத்திரத்தைக் கொண்டவன் யாராக இருப்பினும், அவன் பெரியவன் ஆனாலும் குழந்தையானாலும்

தாயின் வயிற்றில் வளரும் கருவென்றாலும் அழித்து முடிப்பேன். என் தந்தையைக் கொன்ற காட்சியைப் பார்த்துக் கொண்டிருந் தவனையும் எனக்கெதிரே போர்க் களத்தில் எதிர்த்து நின்றவனையும் இரக்க மின்றி மரண தேவதையைப் போல் கொன்று குவிப்பேன்!"

என்பதே இதன் பொருளாகும். சம்ஸ்கிருதத்தில் மிக நீளமான விருத்தத்தில் கம்பீரமான சொற்கள் இட்டுப் பாடப்பெற்ற இந்த சுலோகம் வீர ரசத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

பால ராமாயணம், பால பாரதம் என்ற நாடகங்கள் எழுதிப் புகழ்பெற்ற ராஜசேகரன் 10- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவன். நாடகத்திறனே சற்றும் இல்லாத இக்கவிக்கு வாக்குமட்டும் அழகாய் அமைந்திருக்கிறது. நாடகம் எழுதினால் தான் புகழ்பெறலாம் என்ற நம்பிக்கை அவன் காலத்தில் வேரூன்றி இருந்திருக்க வேண்டும். அதனால் நான் நல்ல காவியம் எழுதி இருக்கக் கூடிய ராஜசேகரன் நாடகங்களை எழுத நேர்ந்தது என ஊகிக்கலாம்.

11 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிருஷ்ணமிச்ரர் என்ற கவி 'பிரபோத சந்திரோதயம்' என்ற நாடகத்தை இயற்றியிருக்கிறார். இந்த நாடகத்தில் மனிதனுடைய குணங்கள் பாத்திரங்களாக உருவம் பெற்று மேடையில் உலவுகின்றன. ஆழ்ந்த மத உண்மை களைப் போதிக்கும் இந்த நாடகம் படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்றதாக அமைந்துள்ளது. பக்திச்

சுவையை ஊட்டும் 'அநர்க்க ராகவம்' என்ற ராமாயண நாடகம் முராரி கவியால் இயற்றப்பட்டது. இவரது நடை கம்பீரமாக இருக்கும்; சுலோகங்களை இயற்று வதில் திறமை மிக்கவர்.

> **முராரியின் கவிதைத் திறனுக்கு ஓரு தாரணம்: "காட்டில் முனிவர்கள் வாழும் பகுதியில் விலங்குகள் சற்றும் அச்சமின்றித் திரிவதை லஷ்மணன் கவனித்தான். அச்சமே வடிவான மான்களுக்கும் அஹிம்ஸையின் அடிப்படையில் வாழ்கின்ற முனிவர்களைக் கண்டால் சிறிதும் பயமில்லை. ஆசிரமம் ஒன்றன் முன்னால் யாகத்துக்குப் பயன்படும் படி அரிசியை வெயிலில் உலர்த்தி வைத்திருந் தார்கள்; அந்த அரிசியை உண்பதற்கு மான்கள் வந்ததைப் பார்த்து ரிஷிபத்தினிகள் அவற்றை விரட்டத் தடிகளை ஏந்தி வந்தார்கள். மான் களுக்குச் சற்றும் அச்சமே தோன்ற வில்லை; மாறாக முனிவர்களின் மனைவிகள் கொணர்ந்த தடிகள் தாம் தின்னக் கூடிய உணவாக இருக் கலாமோ என்று பார்ப்பதற்காக அந்த மான்கள் அவர்களுக்கருகே வந்து தடிகளைச் சர்வ சுதந்திரத்துடன் முகர்ந்து பார்க்கத் தொடங்கின. இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த முனிவர்கள் நகைத்தனர்"**

என்பது பாடலின் பொருள்.

ஒரு பாட்டில் ராவணனைவிட ராமன் கணக்காகப் பத்துமடங்கு வீரியமும் போர்த் திறமையும் உடையவன் என்று கூறப்படுவது நாம் நுகரத் தக்க ஒன்று.

"ராவணன் இருபது கைகளினால் அம்புகளை எய்தான் என்றால் ராமன் தன்னிரண்டு கை களாலேயே அவற்றை எல்லாம் தடுத்து நிறுத்தி விடுகிறான். பலனை வைத்துப் பார்க்கும் பொழுது இருவரும் சமம் என்று கருதினாலும் [இருவரில் ஒருவரும் வெல்லவும் இல்லை தோற்கவும் இல்லை என்பதனால் சமம் என்று வைத்துக் கொண்டாலும்] ராமன் இரு கைகளால் ராவணனின் இருபது கைகள் செய்வதைத் தடுத்து விடுவதால் பின்னவனைவிட ராமன் பத்து மடங்கு திறன் பெற்றவனாகிறான்!"

இப்படிச் சாதுரியம் சிறிதளவு, கவிதை நயம் இவற்றை வைத்துக்கொண்டு சம்ஸ்கிருத மொழியில் தான் பெற்றிருந்த சிறந்த புலமையைக் காட்டிப் பண்டிதர்களிடம் முராரி பாராட்டுகளைப் பெற்றான். அவனது நாடகத்தைக் காவியமாகப் படிக்கலாம்; நாடகமாக அரங்கேற்ற முடியாது என்பதே ரசிகர்களின் முடிவு.

ராமாயணப் பிரசங்கிகளிடையே 'ஹனுமன்னாடகம்' என்ற மகாநாடகப் பாடல்கள் சில அறிமுகமாகியுள்ளன; அவர்கள் தம் உரைகளில் இவற்றை மேற்கோள் காட்டிச் சுவையைக் கூட்டுவது வழக்கம். இதை ஹனுமானே இயற்றனான் என்ற நம்பிக்கை சிலரிடம் இருந்து வருகிறது; ஆனால் தாமோதர மிஸ்ரர் என்பவரே இதைப் படைத்தார் என்பது உறுதியாகத் தெரிகிறது. இதில் பல பாடல்கள் சுவைக்கத் தக்கனவாக உள்ளன.

ராமனின் காலில் உள்ள தூசி பட்டதனால் கல்லாக இருந்த அகலிகை பெண்ணாக ஆகிநின்றாள் என்பதைச் சொல்லும் இடத்தில் கவிஞன் வியந்து கூறுவான்,

> **"இனி ராமன் பாறைகள் அடர்ந்த விந்திய மலை வழியே தெற்கு நோக்கி நடக்கப் போகிறான். அவனது கால் தூசி பட்டு எத்தனை எத்தனை முனிவர்களுக்கு மனைவியர் திரும்பக் கிடைக்கப் போகிறார்களோ?"**

என்று. காட்டில் சீதையை இழந்த பெருந்துயரோடு ராமன் செல்லும் பொழுது சீதை அணிந்திருந்த புடவையின் ஒரு பகுதி மண்ணில் தென்படுகிறது. இந்தக் கிழிந்த துணி ராமன் மனத்தில் பற்பல இனிய சம்பவங்களை நினைவூட்டி அவனைப் பெரிதும் வதைக்கிறது. அயோத்தியிலும் சித்திர கூடத்திலும் அவர்கள் இனிய இல்லறம் நடத்துகையில் இந்தத் துணி சோழியாட்டம் போன்ற விளையாட்டுகளுக்கு வெற்றியின் பரிசாகப் பயன்பட்டது. இருவரும் இனிய வகையில் கூடி இன்புற்றபின் உடலின் களைப்பை நீக்க விசிறியாகவும் உதவியது இந்தத் துணி. இரவில் ராமன் படுத்துறங்க வசதியாக இது ஓர் விரிப்பாகவும் பயன் பட்டது. முன்பு துய்த்த இன்பத்தை நினைவூட்டி இன்றையத் துயரத்தை மிகுதிப்படுத்தினாலும் ராமன் இதை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வைத்துக் கொண்டான் என்பான் நாடகாசிரியன்.

இவ்வாறு சில நயமான சுலோகங்களை இயற்றி வைத்தான் கவிஞன், என்பது உண்மையே; ஆனால்

இரண்டு இடங்களில் சற்றும் யோசியாது, "வால்மீகி சொல்லாததை நான் புனைந்து சொல்வேன்" என்ற இறுமாப்பில் அவன் சேர்த்த இரு சம்பவங்களைப் பார்க்குமிடத்து அவனைக் குறித்த மதிப்பு தாழ் வடைகிறது. லஷ்மணனை உயிர்ப்பிக்கச் சஞ்சீவி பருவதத்தை உடைத்து எடுத்துக் கொண்டு வந்த ஹனுமான் அயோத்தியில் இறங்குகிறான். அவனை ராட்சசன் என்று எண்ணிய பரதன் அவனைத் தாக்குகிறான். பின்னர்தான் அவன் ராமனின் பணியாள் என்றறிந்து நடந்தவைகளை எல்லாம் கேட்டறிகிறான். இதன் பின் ஹனுமன் மூலிகை மலையைக் கொணர்ந்து லக்ஷ்மணனை உயிர்ப் பிக்கிறான் என்றெழுதி வைத்தான், இந்நாடகா சிரியன். உயிர் நீங்கி வரும் ஒருவனுக்கு மிக விரைவாக மருந்தைக் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்துக்கு மாறாக ஹனுமானின் அயோத்தி விஜயம் நுழைக்கப்பட்டது.

தவிரவும் ராமனும் லஷ்மணனும் காட்டில் சீதையை இழந்ததையும் ராவணனுடன் போர் நடப்பதையும் ஹனுமன் வாயிலாகக் கேட்டறிந்த பின்னும் பரதன் ராமனுக்கு உதவியாகக் கோசல நாட்டின் படையுடன் செல்லவில்லை என்ற பெருங் குற்றச்சாற்றுக்குப் பரதன் ஆளாகிறான். இந்தச் சம்பவத்தின் விளைவுகள் இத்துணை கொடுமை யானவையாக இருக்கும் என்பதை உணராமல் கவிஞன் இதைப் புனைந்து நாடகத்தில் நுழைத்திருக்கிறான்.

லங்கைப் போரில் வெற்றி பெற்று ராமன் சீதையுடன் திரும்பி வருகையில் திடீரென்று அங்கதன் உயரத்தாவி நின்று கொண்டு, "ஏ ராமா, நீ என் தந்தையைக் கொன்றதற்கு உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன். சுக்ரீவனும் ஹனுமனும் வானரப் படை முழுதும் உன்பக்கம் இருந்து போரிட்டாலும் நான் அஞ்சாது போரிட்டு வஞ்சம் தீர்த்துக் கொள்வேன்!" என்று வீரியம் பேசுகிறான்! இது அங்கதனின் தன்மைக்கு ஏற்றதல்ல. முழுதும் தவறான ஒரு செருகலாகும். இப்படி அங்கதன் வீரம் பேசிப் பெரும் போருக்குத் தயாராகும் போது ஓர் அசரீரி வாக்கு எழுகிறது: "அங்கதா, நீ ஒன்றும் வருந்தத் தேவையில்லை. ராமன் அடுத்த பிறப்பில் கண்ணனாக வருவான். இறுதியில் உன் தந்தை ஒரு வேடனாக வந்து அவனைக் கொல்வான்! ஆகவே நீ பழிவாங்கத் தேவை இல்லை!" இதனால் அங்கதன் மனத்தில் சமாதானம் ஏற்படுகிறது. தன் படைப்புத் திறனைக் காட்டவே இதை நாடகாசிரியன் இங்கு நுழைத்திருக்க வேண்டும். சிறிதும் தேவையில்லாத சுவையற்ற சேர்க்கை இது என்பதை அறிவில் சிறந்த வாசகர்கள் ஒத்துக் கொள்வார்கள்.

கேரள நாடகாசிரியனாகிய சக்திபத்திரன் ஆச்சரிய சூடாமணி என்ற தலைப்பில் ஒரு ராமநாடகம் இயற்றினான். இதில் நாடகத்தின் வெற்றிக்கு வேண்டிய கூறுகளும் அமைந்துள்ளன; நல்ல கருத்துடைய சுலோகங்களும் இதில் உள்ளன. ராவணனை இதில் மிகச் சிறந்த முறையில் ஆசிரியன்

குண சித்திரமாக வரைந்து காட்டியுள்ளான். மற்ற ஆசிரியர்கள் அவனை முரடன் அகம்பாவம் பிடித்தவன் என்று வருணித்துவிட்டுப் போவார்கள். சக்திபத்திரன் புதிய வழியில் அவனைச் சித்தரித்ததை இரண்டு சுலோகங்களில் காண்போம்.

ஒன்றில் ராவணன் சீதையுடன் மன்றாடுகின்ற நிலையில் அவள் கற்புக்குப் பழுது வராமல் தன்னைக் காத்துக் கொள்ளவே முனைகிறாள் என்பதை அறிந்து பேசுவாள்.

> **"எனக்கு மனைவியாகி விட்டாய் என்றால் சுவர்க்க போகங்களை நீ உரிமையுடன் அனுபவிக்கலாம். ஆகாய கங்கையில் நீராடிக் கற்பக விருட்சத்தின் கனிகளை உண்டபின் கைலாயத்திலோ இந்திரனின் நந்தனம் என்ற வனத்திலோ மனம் போல் விளையாடி இன்புற லாம். இப்படி இன்பம் நுகர்வதற்கு உனக்குத் தடையாக இருப்பதே உன் கற்புணர்ச்சிதான். உன் கற்பினால் நீ முயன்று, பல கஷ்டங் களை அநுபவித்து அடையக் கூடிய இன்பங் களை எளிதில், என்னை மணம் செய்து கொள்வதால் பெற்று விடலாம்!"**

என்று. ராவணனின் மந்திரி அறத்தில் பற்றுள்ளவன், ராவணன் செய்யத் திட்டமிட்டவை எல்லாம் பாவகரமானவையே என்று அச்சமின்றிச் சுட்டிக் காட்டி அவற்றைச் செய்ய வேண்டாம் என்று நல்லுரை வழங்குவான். அவனுக்கு ராவணன் கொடுத்த மறுமொழி ஆழமாகச் சிந்திக்கத்தக்கது.

"அறத்தின் வழியே செல்வதால் கிடைக்கும் பயன் சுவர்க்கம். சந்திரஹாஸம் என்ற என் சக்தியால் இந்திரனை வென்று சுவர்க்கத்தின் அரசனாக ஆகும் திறமை என்னிடம் உள்ளது. ஆகவே அறம், அறம் என்று என்னிடம் வற்புறுத்திப் பேசாதே! அது பலமற்றவர் களுக்குப் பயன்படும் கருவியேயாகும். என் போன்ற பெரு வீரர்களுக்கு அறம் என்ற தடை தேவையே இல்லை; நான் செய்வதுதான் அறம்!"

என்பதே ராவணின் விடை. பல துன்மார்க்கர்கள் தாம் செய்வது அறத்தின் வழியேயன்றி அதை மீறிச் செய்யப்படுவதல்ல என்றே வாதாடுவார்கள். ராவணனுக்கு உலகத்தோர் பின்பற்றும் அற நூல் தேவையில்லை. அவன் உலகத்தோர் பின்பற்றும் அறநூல்படி நடக்க மாட்டான். அவன் செய்வதும் சொல்வதுமே அறம். இதன் விளைவுகள் எத்துணை ஆபத்தானவை என்பதை வாசகர்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

ராவணனைத்தவிர மற்ற பாத்திரங்களையும் தெளிவாக, ரசிகப் பெருமக்கள் ஏற்றுக்கொள்ளும் படியாக சக்திபத்திரன் அமைத்திருக்கிறான். ராம நாடகங்களில் தரத்தால் உயர்ந்தவைகளுள் ஒன்றாக இது மதிப்பிடப் பட வேண்டும். இதைத் தவிர ஜயதேவர் என்பவர் 'பிரசன்ன ராகவம்' என்ற தரமான நூலை எழுதிஇருக்கிறார், ராம கதையை மையமாகக் கொண்டு. இதில் ராவணன் சீதையிடம் சொல்லுவதாக அமைந்த ஒரு பாடல் சிக்கலான

கருத்தைக் கொண்டது. நாடகாசிரியனின் நுட்பமான அறிவுத்திறனைக் காட்டும் இந்த சுலோகத்தின் பொருள் இதுவே:

"என் பத்துத் தலைகளும் உன்னை வணங்கு கின்றன என்றாலும் அவற்றுள் இந்தப் பத்தாவது தலை உன்னை வணங்கு வதில் தனிச் சிறப்பு உள்ளது. நான் முன்பு சிவனைக் குறித்து யாகம் செய்யும் பொழுது என் தலை களை ஒவ்வொன்றாக அறுத்து நெருப்பில் இட்டு வந்தேன். சிவன் ஆசுதோஷி அல்லவா! அன்பர் வழிபாட்டில் விரைவிலேயேமகிழ்ச்சி அடைந்து அருள் செய்பவன் அல்லவா? என் ஒன்பதாவது தலையைத் தீயில் இட்டதுமே அவன் என் எதிரே தோன்றி, 'அன்ப! நிறுத்து, உன் பயங்கரமான யாகத்தை!' என்று அருள் பொழிந்த வண்ணம் நின்றான். இதற்குள் நான் நெருப்பிலிட்ட ஒன்பது தலைகளும் திரும்பவும் உயிர் பெற்றுக் கழுத்தில் வந்தமர்ந்து கொண்டன. இவை ஒன்பதும் எதிரே நிற்கும் சிவபிர்ானுக்கு வணக்கம் செலுத்தின. ஆனால் இந்தப் பத்தாவது தலைக்குச் சிவன் மேல் கோபம்; தன்னையும் சிவனுக்கு அர்ப்பணமாகத் தீயில் இட்டுப் புனிதமாக்கு வதற்குள் அவசரப்பட்டு எதிரே தோன்றி இந்தத் தலை ஆஹுதியை நிறுத்தி விட்டானே, எனக்கு அந்த பாக்கியம் கிடைக்காமல் செய்து விட்டானே என்ற வகையில் சினம். ஆகவே அது சிவனை வணங்க மறுத்து விட்டது. சிவபெருமானுக்கே வணக்கம் செலுத்தாத அந்தத் தலை இன்று, சீதையே, உன்னை வணங்குகிறது, பார்!"

இந்தச் சிக்கலான கருத்து ஒரே சுலோகத்தில் ஆசிரியரால் தெளிவாக விளக்கப் பட்டது.

இவை தவிர ராமபத்திர தீட்சிதர் 'ஜானகீ பரிணயத்'தையும், ராம பாணிவாதர் 'சீதாராகவம்' என்பதனையும் இயற்றி வழங்கி இருக்கிறார்கள். 'உன்மத்த ராகவம்' என்ற தலைப்பில் இரு ஓரங்க நாடகங்களும் கிடைத்திருக்கின்றன. ராமனைத் தலைமகனாக வைத்து இத்தனை நாடகங்கள் இயற்றப்பட்டன என்பதை நினைக்கும் பொழுது பாரத மக்களின் பேரன்புக்குப் பாத்திரமான ராமன் மீதும் அவன் வரலாற்றை முதன் முதலாக உலகுக்கு அழகுடன் எழுதிக்காட்டிய வால்மீகி முனிவர் மீதும் நமக்கு அன்பும் மதிப்பும் பெருகி ஓடுகின்றன.

9. காவியம்

'கவிதை எங்கிருந்து பிறக்கிறது? புலவன் எதன் உதவியைக் கொண்டு கவிதை பாடுகிறான்?" என்ற கேள்விகளை நம் பெரியவர்கள் நுணுக்கமாக ஆராய்ந்து விடை கண்டிருக்கிறார்கள். "இயற்கையில் மனிதனிடத்தில் தோன்றும் அறிவின் ஒளியும், ஆழ்ந்த படிப்பும், விடாமுயற்சியும் ஒன்று சேரும் இடத்தில் தான் கவிதை பிறக்கிறது" என்று தண்டி தமது அலங்கார நூலாகிய 'காவியாதரிச'த்தில் கூறுகிறார். இம் மூன்றினுள் 'பிரதிபா எனப்படும் அறிவின் ஒளியே காவியத்தின் விதை' என்பது வாமனன் கூற்று. "பிரதிபா இருந்தால் கவிதை உதயமாகிவிடும். சிறந்த சொல்லாட்சி பெற்ற புலவன் தன் அறிவின் ஒளியால் தோன்றிய கவிதையைப் பின்னும் அழகு படுத்துகிறான். படிப்பும் முயற்சியும் கவிதையின் பெருக்கத்திற்கு உதவுகின்றன" என்று பெரும்பாலான அலங்கார நூலாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். நாடோடிப் பாடல்களைப் பாடிய புலவர்களுக்கு நுலறிவு இல்லை. இப்பாடல்களில் பொலியும் கவிதை அழகுக்கு இக் கவிஞர்களின் பிரதிபா மட்டுமே காரணமாகிறது. நாடோடிப் பாடல்களைச் சுவைத்

தவர்களுக்கே இக்கல்லாப் புலவர்களின் பிரதிபா எத்தகையது என்று விளங்கும்.

கவிதையின் தன்மையைப் பற்றி ஆராய்வதுடன் நில்லாமல் சம்ஸ்கிருத அலங்கார சாஸ்திரம் காவியத்தின் பொது இயல்புகளையும் விரித்துக் கூறும். எதற்குமே நுண்ணிய விதிகளை ஏற்படுத்தும் வழக்கமுடைய நம் பெரியோர்கள் காவிய அமைப்புக்கும் விரிவாக இலக்கணம் அமைத்தார்கள். உயர்குணம் படைத்த தலைவன் ஒருவனைக் குறித்து எழுதப்படுவது காவியம்; இந்நூல் வகை பல்வகைச் சுவைகளையும் கொண்டதாய் விரிந்த அளவில் அமைகிறது. ஒரு காவியத்தில் பாடல்கள் பல விருத்தங்களில் இயற்றப்பட வேண்டும். ஒவ்வொரு சர்க்கத்திலும் முடிவில் ஒரு பாட்டு அல்லது இரு பாட்டுக்கள் அந்தச் சர்க்கத்தில் பெரும்பான்மையாகக் கையாண்ட விருத்தமல்லாது வேறு விருத்தத்தில் அமையவேண்டும். மலை, காடு, கடல், நாடு, போர் முதலியவை பற்றிய வர்ணனைகள் செறிந்து இருக்க வேண்டும். யமகம், திரிபு போன்ற சொல்லணிகள் அமைந்த சித்திரக் கவிதையும் விரவி வரவேண்டும். இத்தகைய இலக்கணங்கள் அனைத்தையும் கொண்டது மகா காவியம் எனப்படும். ரகு வம்சம், குமாரசம்பவம், கிராதார் ஜுனியம், சிசுபால வதம், நைஷதீயம் என்பவை முக்கியமான மகா காவியங்கள். மேற் சொல்லிய இலக்கணங்கள் அமையப் பெறாத காவியங்கள் 'கண்ட காவியங்கள்' என்று பெயர் பெறும் உதாரணங்கள்: மேக சந்தேசம், கடகர்ப்பரம், சௌர பஞ்சாஸிகா என்பவை.

பாரவி எழுதிய கிராதார்ஜுனீயம் புகழ்பெற்ற ஒரு மகா காவியம். பாரவி ஆறாம் நூற்றாண்டின் முடிவில் மத்திய இந்தியாவில் இருந்தவன் என்று ஊகிக்கின்றோம். சாளுக்கிய மன்னனாகிய புலிகேசியின் அரச அவைப் புலவனாகப் பாரவி அப்புலிகேசியுடன் காஞ்சிக்கு வந்தான் என்றும், "நகரேஷு காஞ்சீ' என்ற வரியில் அந்நகரின் சிறப்பைப் பாடினான் என்றும் ஒரு கதை வழங்குகிறது. பாரவியின் கவிதைக்குப் பொருள் தெரிவது கடினம். அது நீண்ட சொற்றொடர்களால் ஆனது; கருத்து ஆழம் மிக்கது. "பொருட் சிறப்புக்குப் பாரவி" என்ற கருத்து இக்காரணத்தால் ஏற்பட்ட ஆன்றோர் மொழி. கிராதார்ஜுனீயத்தில் முதல் இரண்டு சர்க்கங்கள் முழுதும் அரசியல் முறைகள் வருணிக்கப்படுகின்றன. காட்டில் வாழும் ஒருவன் யுதிஷ்டிரனிடம் துரியோதனனின் ஆட்சிமுறைபற்றிச் சொல்லும்போது. "அண்டியுள்ள தலைமகனுக்குத் தக்க சமயத்தில் நல்லுரை சொல்லாத ஆலோசகனும். அதைக் கேளாத தலைமகனும் அழிவையே அடைகிறார்கள். இடித்துரைப்பது மந்திரியின் கடமை. அதைக் கேட்டு நன்றெனத் தெரிந்தால் அதன்படி நடப்பது தலைவனின் கடன்" என்று கூறுகிறான். இதைக் கம்பராமாயணத்திலும் காண்கிறோம். அரசன் தவறு செயதால் இடித்துரைக்க வேண்டியது அரசனை அண்டி வாழ்பவர்களின் கடமை. இதை ஒட்டியே இலங்கையில் 'அடுக்கும் ஈது, அடாது ஈது என்று... இடிக்கு நர் இல்லை" என்று சீதை ராவணனிடம் சொல்கிறாள். இலங்கையில்

"இடிக்கு நர்" இருந்திருந்தால் ராவணன் இத்தீய செயலில் இறங்கி இருக்கமாட்டான் என்பது சீதையின் தீர்மானம்.

சிவனை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெறுவதற்காக அர்ஜுனன் இமாலயத்திற்குப் போகிறான். அந்த மலையில், மதம் பிடித்த தேவ லோகத்து யானைகள் கன்னத்தை மரக் கிளைகளில் தேய்ப்பதால் மத ஜலம் கிளைகளில் தேங்கி, மாம் பூவின் மணமோ என்னும்படியான வாசனையைப் பரப்புகிறது. இந்த மணத்தினால் ஏமாந்த குயில்கள் வசந்தகாலம் வந்து விட்டது எனக் கூவத் தொடங்கு கின்றன! இங்கே அர்ஜுனனின் நோக்கம் நிறை வேறுமா என்ற கேள்விக்கு சூசகமாய் விடை அளிக்கிறார் கவி. ஈசனே தனக்குக் கணவனாக வேண்டும் என்ற தன் ஆவல் நிலைவேறுவதற்காகப் பார்வதி கார் காலத்தில் நீரில் நின்று தவம் செய்தாள், இந்த மலையில். நீரில் சஞ்சரிக்கும் மீன்களை விடச் சலனம் உடையவை அவள் கண்கள். தவத்தினால் மகிழ்ந்த சிவபெருமான் காதலின் மிகுதியால் வியர்த்திருந்த தம் கையால் பார்வதியைக் கைப் பிடித்தார் என்ற வரலாற்றை நினைப்பூட்டி, அர்ஜுனனின் தவமும் இவ்வாறே கோரிய பலனைக் கொடுத்துவிடும் என கவி காட்டுகிறார். இடத்தின் சிறப்பு அத்தகையது!

பொருளாழம் நிறைந்த சுலோகங்களைப் பாடுவதுடன் பாரவி சித்திரக் கவிதையிலும் தேர்ந்த நிபுணர்; கிராதார்ஜுனீயத்தில் 15 - ஆம் சர்க்கத்தில் இவர் பல 'கழைக்கூத்தாடி' வேலைகளைச் செய்து

காட்டியிருக்கிறார். ஒரு சுலோகத்தில் 'ந' என்ற எழுத்தைத் தவிர வேறு ஓர் எழுத்தும் இல்லாமலேயே பாடியிருக்கிறார்! ஒரு சுலோகத்தில் முதலிரண்டு பாதங்களைப் போலவே பின்னிரண்டு பாதங்களும் வரும்; ஆனால் இரண்டையும் வெவ்வேறாகச் சந்தி பிரிக்க வேண்டும். மற்றொரு சுலோகத்தில் முதல் பாதத்தைக் கடைசியிலிருந்து திருப்பிப் படித்தால் அதுவே இரண்டாம் பாதம்! மூன்றாம் பாதத்தைத் திருப்பி அமைத்தால் நான்காம் பாதம் வரும். ஒரு சுலோகத்தில் ஒவ்வொரு பாதத்திலும் முதல் நான்கு எழுத்துக்களைத் திருப்பி எழுதினால் அந்தப் பாதத்தின் கடைசி நான்கு எழுத்துக்களாக அமையும். இப்படியே ஒவ்வொரு பாதத்திலும்!

பாரவிக்குச் சுமார் நானூறு ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய மாக கவி பாரவியை எல்லாத் துறைகளிலும் பின்பற்றியிருக்கிறான். கவி இயற்றும் முறையிலும், கோணற் கவி பாடுவதிலும்கூட, மாகன் பாரவியைத் தனக்கு வழிகாட்டியாகக் கொண்டான். சம்ஸ்கிருத இலக்கியத்தில் புகழ்பெற்றுள்ள பஞ்ச மகாகாவியங்களில் மாகனின் 'சிசுபால வதம்' ஒன்றாகும். மாகனைச் சிலர் காளிதாசனைவிடச் சிறப்பாகக் கொண்டாடுவதும் உண்டு. அவர்கள் கூற்று இது:

> **"தண்டியிடம் சொல்லழகும், பாரவியிடம் பொருளாழமும், காளிதாசனிடத்தில் உவமை நயமும் காணக் கிடைக்கும். ஆனால் இந்த மூன்று தன்மைகளும் ஒருங்கே பொருந்தியிருப்பது மாகனிடத்தில் தான்."**

மாகன் கூர்ஜர தேசத்தைச் சேர்ந்தவன். வியாகரண சாஸ்திரத்தில் இணையில்லாத புலமை பெற்று 'மாகவையாகரணன்' என்ற பட்டமும் பெற்றான். அவன் நூலில் அரசியல் தந்திரங்கள் முதல் வேதாந்த தத்துவங்கள் வரை எல்லாம் கையாளப்படுகின்றன. சிசுபால வதத்தில் கதையம்சம் குறைவு; வர்ணனைகள் எண்ணிக்கையிலும் நீளத்திலும் பெரியவை. கிருஷ்ணன் இந்திரப் பிரஸ்தத்திற்குப் போகும் வழியில் கண்ட ரைவதக மலையைக் கவி ஒரு சர்க்கத்தால் வருணிக்கிறான். ஒரு மலையைப் பற்றி அவ்வளவு தூரம் வர்ணிப்பதற்கு இடம் உண்டா என்றால். "அழகின் தன்மை அத்தகையது. உயர்ந்த அழகு படைத்த பொருள்கள் எல்லாம் பார்க்குந் தோறும் புதிதாகத் தோன்றவேண்டும்" என்கிறான் மாக கவி. ரைவதகம் இமாலயத்தைவிட ஒரு வகையில் சிறந்தது. அப்பனி மலையில் குளிரின் மிகுதியால் சர்வேசுவரனும் கூடக் கனமான யானைத் தோலைப் போர்த்துக் கொண்டுதான் உறங்குவான். ஆனால் எல்லா ருதுக்களிலும் உடலுக்கும் மனத்திற்கும் இன்பம் பயக்கும் இம்மலையில் பரம ஏழையுங்கூட வெப்பம், குளிர் இவைகளால் வருந்த வேண்டுவதில்லை.

ரைவதக மலையையும், வனங்கள் நாடு நகரங்கள் ஆகியவற்றையும் கடந்து கண்ணன் தன் சேனையுடன் இந்திரப்பிரஸ்தம் சேருகிறான். நகரத்தின் தெருவில் கண்ணன் பவனி வரும்பொழுது பெண்கள் எல்லோரும் கண்ணனின் திருவுருவத்தில்

ஈடுபட்டுத் தம்மையே மறந்து நின்றனர். அவர்களின் மனம் அவர்களை விட்டுப்போய் அச்சுதனிடம் லயித்து விட்டது. சென்ற மனம் திரும்பி வருவதை எதிர்நோக்கித் திறனழிந்து நின்றனர் பெண்மக்கள். காதலனிடம் மனத்தை இழந்து நிற்பதும், மனம் அவனை விட்டு இவளிடம் திரும்பிவர மறுப்பதும் காதலின் உயர்ந்த நிலையாகும். "என் மனமும் கண்ணும் ஓடி எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய" என்பதன்றோ பரகாலநாயகியின் அநுபவம்!

இப்படி உலகத்தோர் ஈடுபடும் அவதார மூர்த்தியிடம் பொறாமை கொண்ட சிசுபாலன் அவனைச் சபை நடுவே பலவாறாக அவமதிக்கிறான். தூற்றப்படுவதால் கண்ணனுக்கு ஏதும் குறைவில்லை; தூற்றும் கயவனுக்குத்தான் தாழ்வு. விலையுயர்ந்த ரத்தினத்தை மண்மூடியிருப்பதால் ரத்தினத்திற்கு, ஒரு பழுதும் ஏற்படுவதில்லை. மண் எளிதில் நீங்கிவிட, ரத்தினம் முன்புபோல் ஒளி வீசுகிறது. இந்த உவமையில் ரத்தினத்தோடு ஒப்பிடப்படுகிறான் கண்ணன். மணிவண்ணன் என்பது கண்ணனின் நிறத்தாலும் தன்மையாலும் அவனுக்கு ஏற்பட்ட சிறப்புப் பெயர். சிசுபாலன் புழுதியோடு ஒப்பிடப் படுவதால் அவன் விரைவிலேயே கண்ணனின் சக்கரத்திற்கு இலக்காகி மண்ணோடு மண்ணாகப் போகிறான் என்பது குறிப்பு.

கண்ணனின் சேனைக்கும் சிசுபாலனின் சேனைக்கும் பயங்கரமான போர் நடக்கிறது. கண்ணனின் துந்துபி இடைவிடாமல் முழங்கியதால்

சிங்கங்களெல்லாம் மலைக்குகைகளிலிருந்து பயந்து வெளியே வந்தன. பிரளய காலத்தில் காளியின் தோற்றம் போல யுத்த பூமியில் இரு தரத்தாரின் கொடிகளும் சிவந்து புழுதி படிந்து காட்சியளித்தன. போரில் இறந்தவரின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. போரின் முடிவில் யுத்தகளத்தில் எங்கும் துண்டிக்கப்பட்ட அவயவங்களும், தலையில்லாத உடல்களும் சிதறிக் கிடந்தன. அது பிரம்மாவின் பெரிய சிருஷ்டிசாலையில் சரியாக ஒன்றோ டொன்று பொருத்தப் படாமல் அங்கங்கே அவயவங்கள் சிதறிக் கிடப்பது போல் இருந்ததாம்! ஒரு சிருஷ்டியில் எத்தனை மக்கள் பிரம்மாவினால் பிறப்பிக்கப்படுவார்களோ அத்தனை மக்கள் அந்த யுத்தத்தில் உயிர் இழந்தனர் என்பது குறிப்பு. கடைசியில் கிருஷ்ணனுக்கும். சிசுபாலனுக்கும் துவந்துவ யுத்தம் நடக்கிறது. சிசுபாலன் மிக உக்கிரமாகப் போர் புரிகிறான். முடிவில் கண்ணன் சக்கராயுதத்தால் சிசுபாலனின் தலையைக் கொய்து தரையில் வீழ்த்திவிடுகிறான். கண்ணன் என்ற ஒப்பற்ற வைத்தியன், உலகத்தைக் காப்பாற்றினான் என்று காவியம் முடிவு பெறுகிறது.

எத்தனை வகையான சித்திரக் கவிதை சம்ஸ்கிருத மொழியில் உண்டோ அத்தனையையும் மாக கவி சிசுபால வதத்தில் அமைத்திருக்கிறான். பல வகை யான யமகங்கள், அர்த்த பிரமகம், சக்கர பந்தம், முரஜ பந்தம், கோமூத்திரிகா பந்தம், சர்வதோபத்திரம் என்று சித்திர வேலைகள் எல்லாவற்றையும் இக் காவியத்தில்

10 - ஆம் சர்க்கத்தில் காணலாம். இந்த விஷயத்தில் பாரவியின் திறமையையும் மிஞ்சிவிட்டான் மாககவி.

வராக அவதாரத்திற்கும், கிருஷ்ணாவதாரத்திற்கும் மாக கவி ஒரு சுலோகத்தில் சிலேடை அமைத்திருக்கிறான். "வராக அவதாரத்தின் உருவத்தையும் இடையன் உருவத்தையும் தரித்துப் பற்களையும் கைகளையும் இயக்கி நீரில் மூழ்கியிருந்த பூமண்டலத்தையும் மழையினால் வருந்திய பசுக்களின் கூட்டத்தையும் முறையே காப்பாற்றினான்" என்பது அச்சுலோகத்தின் பொருள்.

முன்னாளில் நல்ல சம்ஸ்கிருத அறிவு ஏற்பட வேண்டும் என்று விரும்புபவர்கள் 'சிசுபால வதம்' படிப்பார்கள். "இந்தக் காவியத்தில் ஒன்பது சர்க்கங்கள் படிக்கும் ஒருவனுக்குச் சம்ஸ்கிருத மொழியில் எல்லாச் சொற்களும் அறிமுகமாகிவிடும்; புதுச் சொல் என்பதே இருக்காது" என்று மாகனை நன்றாகப் படித்த ஒரு கவி கூறுகிறார். சொல்லிலும், இலக்கணத்திலும் இத்துணைத் திறமை பெற்ற மாகன், பண்டிதர்கள் மனம் களிக்கும் வண்ணம் சித்திரக் கவிதைகளை அமைத்தான். மாகன் காலத்தவர்கள் சித்திரக் கவிதையை மிகப் பெரிதாக மதித்தார்கள். இத்தகைய பாட்டுக்களைக் காளிதாசன் அதிகம் பாடவில்லை. ஏதோ சில பாடல்களில், ரகு வம்சத்தில் "எனக்கும் தெரியும்" என்ற வகையில் யமகம் அமைத்துக் காட்டினான். சித்திரக் கவிதை எழுதவில்லை என்ற காரணத்தால் சில பண்டிதர்கள் காளிதாசனைக் குறைவாக நினைக்கிறார்கள்;

சம்ஸ்கிருத மொழியிலேயே மாகன்தான் தலைசிறந்த கவி என்று எண்ணுகிறார்கள்.

மாக கவிகூடச் சித்திரக் கவிதைக்குத் தன் காவியத்தில் பெருமையான ஸ்தானத்தைக் கொடுக்க வில்லை. போரைப்பற்றிய வர்ணனையில் ஒரு சர்க்கத்தில் இத்தகைய சித்திர வேலைகளை எல்லாம் செய்து காட்டினான். ஏற்ற இடங்களிலெல்லாம் அழகிய கருத்துக்களை உயர்ந்த சொற்களால் அழியாத கவிதையாகப் பாடி வைத்தான். தன் காலத்தில் சித்திரக் கவிதைக்கு இருந்த மதிப்பை உணர்ந்த மாக கவி, இவ்வாறு எழுதாவிட்டால் தன்னை வாசகர் உலகம் புறக்கணித்துவிடுமோ என்ற பயத்தால் இதையும் பாடியிருக்க வேண்டும். ஒரு புலவன் காலத்துக் கருத்துக்கள் அப்புலவனை ஓரளவு கட்டுப் படுத்தாமல் விடுவதில்லை. ஆனால் உண்மைப் புலவன் தன் திறமையினால் தன் கருத்துப் படியே மற்றவர்கள் எண்ணும்படி செய்து விடுகிறான். சிசுபாலவதத்தை மாகன் பாடியபிறகு அவன் கவிபாடும் முறையை மற்றக் கவிகள் எல்லோரும் பின்பற்றினார்கள் என்பதே மாகனின் பெருமைக்குச் சான்றாகும்.

12 - ம் நூற்றாண்டில் பிறந்த ஸ்ரீஹர்ஷன் மகா பாரதத்தில் உள்ள நளன் கதையை நைஷதீயம் என்ற மகா காவியமாக எழுதினான். ஸ்ரீஹர்ஷனின் நடை கடுமையானது. சுலோகங்களின் பொருளை அரும் பாடுபட்டே பெற வேண்டியிருக்கும். கருத்துக்களும் இயற்கையாக மனித உள்ளத்தில் எழக் கூடியவையாக

இராமல் நுட்பம் மிகுந்தவையாச் சில இடங்களில் இயற்கைக்கு மாறாகவும் தோன்றும்.

நளனும் தமயந்தியும் நந்தவனத்தில் உல்லாஸமாகப் பொழுது போக்குகிறார்கள். தொடர்ந்த துன்பங்கள் எல்லாம் விலகி, வாழ்க்கை இன்பமயமாகத் தோன்றுகிறது. சந்திரனைவிடத் தமயந்தியின் முகம் அழகானது என்று சொல்லவந்த நளன் ஓர் உவமையால் இதை விளக்குகிறான்:-

“பரசுராமன் என்ற வேதியன் க்ஷத்திரிய குலத்தையே அழித்துவிடுகிறேன் என்று தீர்மானம் செய்து கொண்டு அநேக க்ஷத்திரியர்களை வென்றான். முடிவில் கோசல நாட்டில் அரசிளங் குமரனான ராமன் என்ற க்ஷத்திரிய வீரனிடம் தோல்வியை அடைந்தான். இதை ஒத்ததே சந்திரனின் நிலையும். மலர்ந்த தாமரைப் பூக்களையெல்லாம் சந்திரன் வென்று இதழ் கூம்பும்படி செய்துவிடுகிறான். ஆனால், தமயந்தி, உன் முகத் தாமரையிடம் தோல்வி அடைந்து விட்டான்.”

க்ஷத்திரியருள் சிறந்தவன் ராமன் என்பதுபோல் எல்லாத் தாமரைகளுள்ளும் அழகு நிறைந்தது தமயந்தியின் முகமாகிய தாமரை என்ற கருத்தைக் கவி இங்கு அழகாக வெளியிடுகிறான்.

மேலே குறிப்பிட்ட மகா காவியங்களுக்கு உரை எழுதிய பல உரை ஆசிரியர்களில் மல்லிநாத சூரியே சிறந்தவர். இவர் உரைகளில் சுலோகத்தின் பொருள்

சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கும். இவர் உரை எழுதும்போது கடைப்பிடித்த கொள்கையை இவரே அரைச் சுலோகத்தில் அழகாகச் சொல்லி யிருக்கிறார். "ஆதாரம் இராமல் எதையும் நான் எழுதவில்லை. கவி நினைத்திராத எதையும் நான் உரையில் புகுத்தவில்லை" என்ற இந்தக் கொள்கை எல்லா உரை ஆசிரியர்களுக்கும் முன் மாதிரியாகவும் லட்சியமாகவும் விளங்குகிறது.

இடைக்காலத்தில் சொல்லின் பெருமையை மக்கள் உயிரெனப் போற்றினார்கள். அதனால் கம்பீரமான சொல்லாட்சி பெற்ற சில கவிகள் மிடுக்கான நடையில் வசன காவியங்களை எழுதினார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் தண்டி, பாணன், சுபந்து. 'தசகுமார சரிதம்' என்னும் பெரியதொரு வசன காவியத்தை எழுதினான் தண்டி; 'காவியாதர்சம்' என்னும் அலங்கார நூலை எழுதிய தண்டி இவனே என்று சிலர் நம்புகிறார்கள். உயர்ந்த கருத்துக்களைத் 'தசகுமார சரித'த்தில் காணமுடியாது. தண்டியின் காலத்து இந்திய மக்களின் வாழ்க்கையை இந்நூலிலிருந்து ஓரளவு தெரிந்து கொள்ளலாம். 'பிருகத் கதை'யிலிருந்து சுபந்து, 'உதயணன் - வாசவதத்தை'யின் கதையை 'வாசவதத்தா' என்ற பெயரில் ஒரு வசன காவியமாக எழுதினான். வசன காவியம் எழுதிய இம்மூவரில் பாணனே சிறந்த கவி என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். தன்னை ஆதரித்த ஹர்ஷவர்த்தனனின் திக் விஜயங்களை ஹர்ஷசரிதம் என்னும் வசன காவியத்தில்

வர்ணித்திருக்கிறான். ஆனால் பாணனின் புகழுக்குக் காரணமாக அமைந்தது 'காதம்பரி' என்னும் கற்பனைக் கதையே. சுவையான கதைப் போக்கும், காதுக்கினிய சொற்களின் சேர்க்கையும் அழகான வர்ணனைகளுமே இதன் சிறப்பான அம்சங்கள். இந்த இரு காவியங்களிலும் பாணன் எடுத்துக் கையாளும் விஷயங்களுக்குக் கணக் கேயில்லை. பாணனின் உலக அறிவு மிக விரிந்தது. 'பாணன் உண்டு உமிழ்ந்ததுதான் இந்தப் பரந்த உலகம்" என்ற மூதுரை இது பற்றியே ஏற்பட்டது.

சுபந்துவைப் போல் அநேகப் புலவர்கள் பிருகத் கதையிலிருந்து வரலாறுகளையும் சம்பவங்களையும் கடன் வாங்கிக் கொண்டார்கள். இந்தப் பிருகத் கதை குணாட்யர் என்பவரால் பைசாச பாஷையில் இயற்றப்பட்டது என்று அறிகிறோம். இந்நூலைத் தழுவி எழுதப்பட்ட இரு பெருங் கதைக் களஞ்சியங்கள் பாரத இலக்கியத்தை வளமாக்கின. இவற்றில் 'கதாஸரித் ஸாகரம்' என்ற நூல் நீளத்தில் ராமாயணத்தை ஒக்கும். இது சோமதேவர் என்ற காஷ்மீரக் கவியால் இயற்றப்பட்டது. பதினொன்றாம் நூற்றாண்டில் சோமதேவரின் காலத்திலேயே வாழ்ந்த க்ஷேமேந்திர வியாசதாசர் 'பிருகத் கதா மஞ்சரி' என்ற நூலை எழுதினார். அந்நாளில் இந்நாட்டில் வழக்கிலிருந்த எல்லாக் கதைகளும் இவ்விரு நூல்களில் ஏதோ ஒரு வடிவில் இடம் பெற்றுள்ளன என்று நிச்சயமாகக் கூறி விடலாம். தமிழில் காவிய வடிவில் உள்ள பெருங்கதை என்னும்

நூலும் பிருகத் கதையின் வழிநூலே யாகும். இதன் ஆசிரியர் இந்நூலைப் பிருகத் கதையிலிருந்து நேரிடையாகப் பெயர்த்து எழுதினாரா அல்லது பிருகத் கதையை ஒட்டி எழுதப்பட்ட சம்ஸ்கிருத வழி நூலின் தழுவலாக இயற்றினாரா என்பது ஆராய்ச்சிக்கு இடமான விஷயம். ஆனால் கவிதைத் தரத்தில், இந்தத் தமிழ் வழி நூல் சம்ஸ்கிருத மொழியில் உள்ள இரு முதல் நூல்களையும் விஞ்சி விட்டது என்பது ரசிகர்களின் முடிவு.

வசனமும் கவிதையும் கலந்த சம்பூ இலக்கியம் இடைக்காலத்தில் தோன்றியது. இவ்வகை இலக்கியத்தில் சம்பவங்களை விவரிக்கும் பாகம் வசனமாகவும் சற்று உயர்ந்த கருத்துக்கள் பாட்டாகவும் அமைந்திருக்கும். வசனத்தில் சுவை அதிகம் இருக்காது. நீண்ட சொற்களைக் கையாள்வதில் கவி தம் திறமையைக் காட்டியிருப்பார். சம்பூ நூல்களில் புகழ்பெற்றவை போஜமன்னனின் சம்பூ ராமாயணமும், ஆனந்த பட்டனின் பாரத சம்பூவுமே.

தாரா நகரத்தின் மன்னன் போஜன் ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால் இருந்தவன். இவனது சம்பூ ராமாயணம் வெகு காலமாகப் பாடசாலைகளில் சிறுவருக்குப் பாடப் புத்தமாகப் பயன்பட்டு வருகிறது. தவிர, ராமாயணச் சொற் பொழிவாளர்கள் இதிலிருந்து சில சுலோகங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவது வழக்கம். எல்லோருக்கும் தெரிந்த ராமகதையை இவர் புது நோக்கோடு பார்த்து எழுதியிருப்பதால் சுலோகங்கள்

சுவையாக இருக்கின்றன: "நீ காட்டுக்குப் போ, என் பரதனே நாட்டை ஆளப் போகிறான்" என்று ராமனிடம் கைகேயி சொன்னதும், ராமன் சொல்கிறான்: "தாயே, எப்போதும் உனக்கு என் மேல் அன்பு அதிகம். பரதனைக் காட்டிலும் என்னைத் தான் அதிகமாய் நேசிக்கிறாய்." கொடிய விலங்குகள் வாழும் காட்டுக்குப் போ என்று சொன்ன தாய்க்குத் தன் மேல் அன்பு அதிகம் என்றது ஏன்? அரசாள்வது என்பது ஒரு பெருமை, ஓர் உரிமை என்று பலர் நினைக்கிறார்கள். உண்மையில் அது பெரிய பாரம்; பளுவான ஒரு சுமை. "காட்டில் என் உடலை மாத்திரம் காத்துக் கொள்ளவேண்டும் என்று எனக்கு நியமித்தாய். குழந்தை பரதன் தலையில் இந்தப் பரந்த உலகின் அரசு என்ற பெரும் பாரத்தை ஏற்றிவைத்தாய். இதைப் பார்க்குமிடத்துப் பரதனைவிட என்மேல் தான் உனக்கு அன்பு அதிகம்" என்றான் ராமன்.

அரண்ய காண்டத்தில் ராவணன் சீதையைக் கவர்ந்த நிகழ்ச்சியைச் சுருக்கிக் கூறுகையில் போஜன், "ஆண்டவன் திருக்கோயிலில் இருந்த நீலோற்பல மாலையை மாமிசம் எனக் கருதி ஒரு நாய் கவர்ந்து கொண்டது போல் ராமனின் ஆசிரமத்திலிருந்து ராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான்" என்று உணர்ச்சியுடன் கூறுவான். இதுபோல் சுந்தர காண்டத்தில். "ராவணனின் மாளிகையில் உள்ள இருட்டை எல்லாம் பெண்கள் விளக்குகளாகிய துடைப்பங்களால் பெருக்கி எறிந்தார்கள். இப்படி நீக்கப்பட்ட அத்தனை இருட்டும் சீதையின் இசைவு

பெறாததால் வருந்திய ராவணனின் உள்ளத்தில் சேர்ந்து தங்கி விட்டது.!"

சம்பூ பாரதத்தை இயற்றியவர் அநந்த பட்டர் என்பவர். இந்நூல் பாரதம் பற்றிய தொடர் உரை ஆற்றும் வித்துவான்களுக்குப் பயன்படுகிறது. அங்கங்கே இயற்கை வருணனைகளோடு கண்ணனின் சிறப்பும் பாண்டவர்களின் குணநலனும் பேசப்படுகிறது. தென்னாட்டையும் சிறப்பாகக் காவிரியாற்றையும் அவர் தனித் தன்மையுடன் வருணித்த வகையைப் பார்த்தால் அவர் தமிழராக இருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது.

சம்ஸ்கிருத மொழியில் உள்ள சம்பூகாவியங்களுள் எல்லாம் சுவை மிகுந்தது - இன்றைய ரசிகர்களுக்குச் சிறந்த விருந்தாக அமைவது - விசுவ குணாதர்ச சம்பூ என்பதே. இதை இயற்றியவர் அரசாணிபாலை வெங்கடாத்வரி என்பவர். கிருசானு, விசுவாவசு என்ற இரு கந்தர்வர்கள் இந்திய நாட்டின் பல பகுதிகளை ஆகாய மார்க்கமாகவே சென்று கண்டு அவற்றைக் குறித்த தங்கள் கருத்துக்களை வெளியிடுவதாக அமைந்தது இந்நூல். இதில் முதலிற் கூறியவன் உலகை மேல்நோக்காகக் கண்டு அவசர மதிப்பீடு செய்பவன்; விசுவாவசு என்பவன் எதையும் ஆழமாகச் சிந்தித்துப் பட்சபாதமின்றி உண்மையைக் கண்டு அதனைக் கூறும் இயல்பினன். சென்னை நகருக்கு மேலே பறக்கும் பொழுது கிருசானு சென்னையில் வசிதியுள்ள செல்வர்களாக விளங்கிய ஆங்கிலேயரைத் தாழ்த்திப் பேசுவான்.

"ஆசாரப் படி நடவாதவர்களிடம் பண வசதி; ஒழுங்கு தவறாத வாழ்க்கை நடத்துவோரிடம் ஏழ்மை. குணங்கெட்டவர்கள் உலகை ஆள் கிறார்கள்; நல்லவர்கள், திறமையுள்ளவர்கள் பிச்சை எடுத்து வாழ்கிறார்கள். விதி இவ்வாறு விதித்து விட்டதே, என்ன செய்ய?" என்று வருந்திக் கூறுவான்.

இதற்கு விசுவாவசு சரியான விடை அளிப் பான். "வெள்ளையர்கள் அநியாயமாக மற்றவர் பணத்தை அபகரிப்பதில்லை. பொய் சொல்லும் பழக்கம் இல்லாதவர்கள். அற்புதமான பொருள் களைச் செய்கிறார்கள். அதிகாரத்தில் இருக்கும் ஆங்கிலேயர்கள், குற்றத்தை விசாரித்துச்சரியான தண்டனையை அளிக்கிறார்கள். ஆங்கிலேயரிடம் உள்ள இந்த நல்ல தன்மைகளை நாம் உணர வேண்டும்!"

இந்நூலில் ஆசிரியர் ஆங்கிலேயரைக் குறித்து இத்தனை பொருத்தமான தன்மைச் சிறப்புக்களை எப்படி உணர்ந்து எழுகிறார் என்பது வியப்புக்கிட மானது. மனத்தில் விருப்பு வெறுப்பு இன்றி இப்படிச் "சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல்" ஒரு பக்கம் சாயாது உண்மையைக் கண்டு எழுதும் நேர்மை உடையவர்களை எக்காலத்திலும் காண்பது அரிது.

இப்படிப் பல இடங்களில் கிருசானு தவறாகக் கணித்ததை விசுவாவசு திருத்திச் சரியான நோக்கு எது என்பதைக் காட்டி வருவான். இதுவே இந்நூலின் சிறப்பு. இத்துடன் இறைவனைக் குறித்துப் பல

அழகான பாடல்களைப் படைத்தளித்திருக்கிறார் இக்கவிஞர். ஒரு பாடலில் முதலையின் வாயில் அகப்பட்ட கஜேந்திரனைக் காக்க இறைவன் வெகு அவசரமாக வந்ததைப் படம் பிடித்துக் காட்டுவது, "தன்னுடன் ரமித்திருக்க விரும்பிய லஷ்மியை நிமிர்ந்து பார்க்காமல் பாம்புப் படுக்கையைத் துறந்து தன்னைச் சுமந்து செல்லும் வாகனமாகிய கருடனை இழுத்துக் கொண்டு வைகுண்டத்திலிருந்து ஓடி வந்தான், திருமால்!" என்ற இப்பாடல் அன்பர்களைக் காக்கக் கருணாகரனாகிய இறைவன் எத்தனை கரிசனம் காட்டுகிறான் என்பதை வருணிக்கிறது. இதே போலத் தந்தையின் கொடுமையால் பெரிதும் வருந்தும் பிரஹலாதனைக் காக்கத் திருமால் சிங்கத்தின் வேடம் புனையத் தொடங்கியவர் தாமதம் ஆனால் விபரீதம் நிகழ்ந்து விடுமோ என்றஞ்சிக் கழுத்துவரை சிங்க வடிவு தோன்றியவுடன் வைகுண்டத்திலிருந்து பக்தனைக் காக்க ஓடி வந்தனராம். "ஆகண்ட கண்டீரவ" என்ற சொல் மிக அழகானது; இறைவனின் எல்லை இல்லாக் கருணையை மிகச் சிறப்பாகச் சுருக்கிக் கூறுவது.

அடுத்து, நீலகண்ட தீட்சிதர் இயற்றிய நீலகண்ட விஜய சம்பூ நம் கவனத்துக்குரியது. இதில் பாற்கடலைக் கடந்து தேவர்கள் அமுதம் பருக நினைத்த போது நடந்தவைகளைக் கூறிய தீட்சிதர் பிரபஞ்சத்தையே அழிக்க வல்ல ஆலகால விஷத்தைச் சிவபெருமான் அருந்தி சிருஷ்டியைக் காத்த பேருதவியை விரிவாக வருணித்துச் சிவபெருமானின்

தனிச் சிறப்பைக் கூறுவார். நூலின் தொடக்கத்திலேயே இந்தக் கருத்தை அழகிய ஒரு சுலோகத்தில் காட்டி விடுவார். "கடையப் படும் பாற் கடலிலிருந்து பெற்ற கௌஸ்துபம், அப்ஸரசுகள் இத்தகு இன்பந்தருவனவற்றை 'எனக்கு, எனக்கு' என்று சண்டையிடும் தேவர்கள் மேலுலகுக்குப் பாரமாக இருப்பவர்கள் எத்தனை, எத்தனை பேர்! ஆனால் கொடுமையான ஆலகாலம் தோன்றியதும் தேவர்கள் எல்லாம் ஓடி மறைந்துவிட, 'அஞ்சேல்!' என்று அபயம் கூறி உதவ முன் வந்த தேவனுக்கே (சிவபிரானுக்கு) எங்கள் வணக்கங்கள்! " என்பதே இந்தப் பாடலின் பொருள். இப்படி எத்தனையோ! இறையன்பர்களுக்கிடையே இந்நூல் பெரிதும் மதிக்கப்படுகிறது.

ஒரு மகா காவியத்தின் முழு இலக்கணங்களும் நிறைவேறப் பெறாமல் அளவிலும் சிறியவையாய் அநேக காவியங்கள் சம்ஸ்கிருதத்தில் தோன்றி யுள்ளன. இவற்றிற்குக் கண்ட காவியங்கள் எனப் பெயர். காளிதாசனின் மேக தூதத்தை ஏழாம் அத்தியாயத்தில் விமரிசனம் செய்தோம். ஆறு ருதுக்களின் தன்மையையும், ஒவ்வொரு ருதுவிலும் மக்களின் மனப்போக்கு எவ்வாறு மாறுபடுகிறது என்பதையும் கவிதைச் சுவையோடு காட்டும் 'ருது ஸம்ஹாரம்' என்ற கண்ட காவியமும் காளிதாசனால் இயற்றப்பட்டதே என்று சில அறிஞர்கள் நம்புகிறார்கள். மாரிக் காலத்தில் காடுகளில் மழை பெய்து நின்றதும் இயற்கையே சிரிப்பது போன்ற தோற்றம் ஏற்படுவதைக்

கவனித்திருக்கிறீர்களா? கவி இயற்கையின் மகிழ்ச்சியை ஓர் இன்பமான நாட்டியமாகக் காட்டுகிறார். கதம்ப மலர்கள் எங்கும் மலர்ந்திருப்பதால் மகிழ்ச்சியினால் உடல் எங்கும் மயிர் சிலிர்த்து நிற்பது போல் தோன்றுகிறது. காற்றில் அசைப்பட்ட மரங்கள் தம் கிளைக் கைகளால் அபிநயம் செய்கின்றன. வெண்மையான தாழம்பூக்கள் நுனி பிளந்து விரியும் போது இயற்கையே புன் முறுவல் பூப்பது போல் காட்சி அளிக்கிறது. மழைக் காலம் ஒரு தலைவனாகவும், இயற்கைத் தேவி அவன் தலைவியாகவுமே இங்கே கற்பனை செய்யப் படுவதைக் காணலாம். காதலனின் வருகை மழை பெய்வதற்கு ஒப்பிடப்படுகிறது. இது,

"பீளொடு திரங்கிய நெல்லிற்கு

நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே"

என்ற நற்றிணைக் கற்பனையை நினைவூட்டுகிறது அல்லவா?

ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே தோன்றிய பர்த்ருஹரி என்ற கவிஞன் மூன்று சதகங்களை எழுதினான். அவனுடைய நீதி, வைராக்கிய சதகங்களைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் பேசுவோம். பெண்களின் கவர்ச்சி, காதலின் தன்மை ஆகிய இவற்றைப் பற்றி அவன் எழுதிய நூறு சுலோகங்கள் சிருங்கார சதகம் எனப்படும். அவற்றில் ஒன்று: இயற்கை இன்பகரமாக இருக்கும்பொழுது எல்லோர் மனத்திலும் காதல் உணர்ச்சி தோன்றுகிறது. ஆகாயத்தில் மேகம் நிறைந்து பூமியில் பயிர்கள்

முளைத்தெழும் காலம்; மலர்களின் மணத்தைச் சுமந்து வீசும்காற்று; மயில்களுக்கு மேகங்களின் வருகையால் பேரானந்தம் பொங்க அவை தம் தோகையை விரித்தாடிக் கொண்டு தம் இனிய குரலால் கூவத் தொடங்குகின்றன. இவற்றை யெல்லாம் தன் புலன்களால் நுகர்பவன் - சுகப்படுபவனானாலும், துக்கத்தில் இருப்பவனானாலும் - காதல் உணர்ச்சி நிரம்பப் பெற்றவனாக ஆகிறான்.

இருபத்திரண்டு சுலோகங்கள் கொண்டது கடகர்ப்பரம் என்ற கண்ட காவியம். 'என்னைப் போல் யாராவது கவி பாடிவிட்டால் நான் உடைந்த குடத்தால் (கடகர்ப்பரம்) தண்ணீர் எடுத்து அவருக்குச் சேவகம் செய்கிறேன்' என்று கடைசிப் பாட்டில் கூறியிருப்பதால் அந்த ஆசிரியருக்கே கடகர்ப்பரன் என்றும், நூலுக்குக் கடகர்ப்பரம் என்றும் பெயர் ஏற்பட்டது. சங்க காலத்தில் பெயர் தெரியாத தமிழ்ப் புலவர்களுக்குத் தேய்புரிப் பழங்கயிற்றினார், தனிமகனார் என்று பெயர் தோன்றியது போலத்தான் இதுவும். 14 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பில்ஹணன், காஷ்மீரப் புலவன் 'சௌர பஞ்சாஸிகா' என்ற அழகிய கண்ட காவியத்தைப் பாடியிருக்கிறான். ஓர் அரச குமாரியின் மீது காதல் கொண்டதற்காக அரசனால் மரண தண்டனை விதிக்கப் பட்ட பில்ஹணன் அவளுடன் தான் இன்புற்றிருந்ததை ஐம்பது சுலோகங்களால் பாடியதாகவும், கவிதையின் உயர்வைக் கண்ட மன்னன் மகிழ்ந்து தன் மகளை அவனுக்கு மணம் செய்து கொடுத்ததாகவும் கதை வழங்குகிறது. இக்கவி விக்கிரமாங்க தேவ சரிதம்

என்ற மகாகாவியத்தையும் பாடினான். வருணனைகளும் சொல்லணிகளும் செறிந்த இந்த நூல் மனத்தைக் கவர்வதாக அமையவில்லை. மகாகாவியத்தைப் பாடிய பில்ஹணனைக் கண்டகாவியத்தின் ஆசிரியன் என்றே இலக்கிய உலகம் போற்றுகின்றது!

சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் ஆந்திரப் பிரதேசத்தில் தைலங்கவ்ரஜநாதர் என்ற புலவர் சம்ஸ்கிருதத்தில் பல நூல்கள் இயற்றினார். அவற்றில் மனோதூதம் என்ற கண்டகாவியமும் ஒன்று. துரியோதனனின் சபையில் திரௌபதியின் சேலை நீக்கப்படும் பொழுது அவள் தன் மனத்தையே கண்ணனுக்குத் தூதாக அனுப்பித் தன்னைக் காக்கும்படி வேண்டினாள். அதில் மனத்தின் சிறப்பை எடுத்துக் காட்டும் ஒரு பாடலை இங்கு நுகர்வோம்: 'உருவத்தின் சிறப்பை முழுதாகக் கண்களால் உணர முடியாது; சுவைக்கத் தக்கவைகளை நாக்கினால் நன்கு அறியவும் இயலாது. காதும் மூக்கும் தோலும் ஆகிய புலன்களும் தத்தம் விஷயமாகிய ஒலி, வாசனை, தொடும் உணர்ச்சி இவற்றைத் தாமாக அறிய மாட்டா. மனமே, உன் உதவி இன்றி இந்த ஐந்து புலன்களாலும் அதனதன் விஷயத்தை நன்கு உணர முடியாது!" கவிஞன் தன் கற்பனையால் கண்ட இந்த உண்மையை அறிவியல் ஏற்றுக் கொள்கிறது.

தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் உள்ளன. இவற்றுள் தூது மிகவும் தலைமையானது. சம்ஸ்கிருதத்திலும் தூது இலக்கியம் நன்கு வளர்ச்சி

பெற்றுள்ளது. ஒருவர், தம்மனைவி தனது பிறந்தகம் சென்ற பின் அவளுக்குத் தூது அனுப்ப எண்ணுகிறார். அவளுக்குத் தூது அனுப்பாவிடில் அவள் பெரிதும் வருத்தப்படுவாள், கோபித்துக்கொள்வாள். ஆனால் அவள் தன்னை விட்டுப் பிறந்தகம் சென்ற பின் இந்த இளைஞருக்குத் தன் மனம் போல் நடந்து கொள்ளச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அதையும் விரைவில் இழக்க இஷ்டமில்லை. ஆகவே, "விரைவில் திரும்பி வா! நீ இல்லாமல் நான் பெரிதும் வருந்துகிறேன்!" என்ற செய்தியை மனைவிக்கு ஒரு தூதர் வாயிலாக அனுப்புகிறார்! அவர் தெரிந்தெடுத்த தூதர் யார் தெரியுமா? அவர் ஊரில் எப்போதும் குட்டையில் மூழ்கி நிலைத்திருக்கும் எருமையேயாகும்! இந்த நூலின் பெயர் மஹிஷ சந்தேசம்; இந்த நூல் ஆசிரியருக்குக் கிடைக்கவில்லை.

10. நீதி இலக்கியம்

ஒரு நோக்கில் பார்த்தால் சம்ஸ்கிருத இலக்கியம் முழுவதுமே நீதி புகட்டும் தன்மை யுள்ளது என்று தோன்றும். மனிதன், மண்ணில் நல்லவண்ணம் வாழ' உதவவேண்டும் என்பதே இலக்கியத்தின் குறிக்கோள். அறத்தைக் கருத்துடன் பேணி வளர்ப்பது சம்ஸ்கிருத இலக்கியத்தின் தனிச்சிறப்பு. "சீதையைத் திருப்பிக் கொடுத்துவிடு. ராமனின் பகை நமக்கு வேண்டாம்" என்று விபீஷணன் ராவணனுக்கு நல்லுரை கூறியது கேட்டு வெகுண்டு ராவணன் சொல்கிறான்: "மாடுகளிடம் ஐசுவரியம் நிறைந்திருக்கிறது. பிராம்மணனிடம் அடக்கமும், பெண்களிடம் சபல புத்தியும் குடி கொண்டிருக் கின்றன. அவை போல் பங்காளியிடம் எப்போதும் பயமே தோன்றும்; ஒருவனுக்குப் பங்காளியிட மிருந்து நன்மை கிடக்கவே இல்லை. இது உலக இயற்கை."

ஒரு செய்தியை வெளியிட, ஓர் உண்மையை ஸ்தாபிக்க, சம்ஸ்கிருதத்தில் ஒரு பொதுக் கூற்றைக் கூறி நிலைநிறுத்துவது மரபு.

பாரதம் ஒரு நீதிக் களஞ்சியம் என்றே சொல்லலாம். பகவத் கீதை, விதுர நீதி போன்ற முழு நூல்கள் தத்துவத்தையும் நீதியையும் கற்பிக்கும் நோக்கத்தோடு பாரதத்தில் செருகப்பட்டிருக்கின்றன. இவை தவிர உபாக்கியானங்களில் அங்கங்கே நீதி வாக்கியங்கள் செறிந்து கிடக்கின்றன. தர்மத்தையே கடைப்பிடித்து வந்த பாண்டவர்கள் விதியின் கொடுமையால் வனவாசம் செய்ய நேர்ந்தது; துக்கத்தின் மிகுதியால் திரௌபதி தர்மத்தை நிந்திக்கிறாள். யுதிஷ்டிரர் அவளுக்கு ஆறுதல் செல்லும் போது, "பலனை விரும்பித் தர்மத்தை நான் பரிபாலிக்கவில்லை. இயற்கையாகவே என் மனம் அறத்தில் நிலை பெற்றுவிட்டது. பலனை விரும்பி அறம் செய்பவன் - தர்மத்தைப் பசுவாக நினைத்து அதைக் கறக்க நினைப்பவன் - அறத்தின் பலனை உண்மையாக அடைவதில்லை" என்கிறார். வால்மீகி, வியாசர், இவர்களுக்குப் பின்வந்த கவிகளும் நீதி வாக்கியங்களை அங்கங்கே பாட்டுக்களில் தொடுத்துப் பாடியிருக்கிறார்கள். இவற்றுக்கு உதாரணங்களாகப் பல பாட்டுக்களை நாம் முன்பே பார்த்திருக்கிறோம். கதைப் போக்கிலே ஒன்றை விளக்க வரும்போது கவிஞன் ஒரு பொதுக் கூற்றை, ஒரு நல்லுரையை, ஒரு நீதி வாக்கியத்தைப் பாட்டின் இறுதியில் அமைத்துக் காட்டுவது வழிவழியாக வந்த ஒரு பழக்கம்.

ஆனால் நீதியை மாத்திரமே போதிக்கும் நூறு பாட்டுக்களை எழுதினான் பர்த்ருஹரி. இந்தச்

சதகத்தில், படித்தவர்களின் தன்மை, மூடர் இயல்பு. செய்வத்தின் சக்தி, பரோபகாரம், நெஞ்சுரம், உடைமை, விதியின் வலிமை என்ற பல விஷயங்கள் பேசப்படுகின்றன. ஒரு பொதுக் கூற்றை நிரூபிக்க இரண்டு மூன்று உதாரணங்களை இயற்கை யிலிருந்தோ, மனித வாழ்க்கையிலிருந்தோ எடுத்துக் காட்டுவது பர்த்ருஹரியின் முறை. ஒரு சிறு தந்தப் பதக்கத்தில் நான்கைந்து உருவங்களைச் செதுக்குவது போல் இருக்கும் இவரது கவிதை நெறி.

சூரியன் காலையில் தாமரையை மலரச் செய்கிறான்; தாமரை தன்னை இறைஞ்ச வேண்டு மென்று சூரியன் எதிர்பார்ப்பதில்லை. இவ்வாறே சந்திரன் இரவில் குமுத மலர்களை வாய் நெகிழச் செய்கிறான். பயிர்களின் கோரிக்கையை எதிர் பார்த்திருக்காமல் மேகமும் மழையைப் பொழிகிறது. நல்லவர்களின் தன்மையே இப்படித்தான்; தாமாகவே சென்று பிறர் துயரம் களைவார்கள். 'சூரியனும், சந்திரனும். மேகமும் கைம்மாறு கருதாமல் உதவுவது போல் நல்லவர்களும் உதவி செய்வார்கள்' என்ற குறிப்பும் பாட்டில் தொனிக்கிறது.

வேலையாளாகச் செயல் புரிவது எவ்வளவு கடினம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஒரு பணக்காரனின் காரியஸ்தனாகத் தொழில் புரிபவனி லிருந்து சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் வரையில் எல்லோரும் தம் வாழ்க்கையில் நாளும் உணர்ந்துவரும் உண்மையை

ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் கண்டறிந்த பர்த்ருஹரி பாடுகிறான்:

> **'வேலையாள் வேலையில் ஈடுபட்டுப் பேசாமல் இருந்தால் ஊமையோ என்பார்கள். பேசினால் வாயாடி என்று தூற்றுவார்கள். நெருங்கி வந்தால் அதிகப்பிரசங்கி என்றும், விலகியிருந்து பழகினால் கோழை என்றும் சாற்றுவார்கள். இந்த வசை மொழிகளை கேட்டும் வாய் திறவாமல் பொறுமை யோடு இருந்தால் பயங்காளி, முதுகெலும்பு இல்லாதவன் என்பார்கள். பொறுக்காமல் மனவருத்தத்தில் ஏதோ பேசி விட்டால் இவன் குலம், பிறப்பு இவைபற்றியெல்லாம் தூஷணை யாகப் பேசத் தொடங்குவார்கள். தொண்டு புரிதல் என்பது முனிவர்களுக்கும் அரியதொரு கலையாகும்!'**

உலகத்தில் உள்ளவர்களைப் பர்த்ருஹரி மூன்று பிரிவாகப் பிரிக்கிறான்: மேன்மக்கள், நடுத்தர வகுப்பினர், கீழ்மக்கள் என்று. தன்னலத்தைத் துறந்து மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதிலேயே ஈடுபட்டிருப்பவர் மேன்மக்கள். தன்னலத்துக்கு இடையூறு இல்லாமல் மற்றவர்க்கும் நன்மை புரிபவர் நடுத்தர வகுப்பினர். மற்றவரைக் கெடுத்தாவது தன்னலத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் கீழ்மக்கள்; மனிதர்களாகப் பிறந்தாலும் இவர்கள் ராட்சச இயல்புடையவர்களே. இந்த மூன்று பிரிவுகளிலும் சேராத ஒரு வகை மக்கள் இவ்வுலகத்தில் இருக்கிறார்கள்; மற்றவர் வாழ்க்கையில் அழையாமலே நுழைந்து அவர்கள்

நலத்தைக் கெடுப்பதே இவர்களது லட்சியம். இதனால் இவர்களுக்கு என்ன லாபம் என்று ஆராய்ந்தால் மற்றவர்களின் துக்கத்தைப் பார்ப்பதில் ஏற்படும் மகிழ்ச்சியைத் தவிர வேறொன்றும் இராது. "தமக்கு ஒரு பயனும் இல்லாமல் மற்றவர் நலத்தைக் கெடுக்கும் இத்தகைய மக்களை என்ன வென்று அழைப்பது? எனக்குத் தெரியவில்லை" என்கிறான் பர்த்ருஹரி.

கல்வியின் பெருமையைப் பற்றி மிக்க உற்சாகமாகப் பேசுகிறான் பர்த்ருஹரி:

> **கள்வர்கள் படிப்பு என்னும் செல்வத்தைக் கவரமாட்டார் [கேடில் விழுச் செல்வம் என்றபடி]. வேற்றூர் போகும் கல்வி மானுக்குக் கல்வியே உறவினனாகவும் நண்பனாகவும் உதவுகிறது. [கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்றவாறு] படித்தவன் மன்னர்களாலும் பூசிக்கப்படுகிறான். தங்கமும், வைரமும் மனிதர்களுக்கு அணிகள் ஆகா. கல்வியே சிறந்த அணியாகும். கல்வியில்லாதவர் மனிதரே அல்லர்; மனிதர் போல் தோற்றம் உடையவர்கள் ஆயினும் அவர்கள் விலங்குகளுக்கு ஒப்பாவார்:**

> **"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்**
>
> **கற்றாரோ டேனை யவர்"**

என்றபடி. விதியின் வலிமையைக் காட்டுவதற்குக் கவிஞர் ஒரு கதை சொல்கிறார். ஒரு வழுக்கைத் தலையன் வெயிலில் நடந்துபோனான். சூரியனின்

கிரணங்கள் வழுக்கைத் தலையில் கடுமையாகத் தாக்கியதால் அவன் வருந்தி நிழலிருக்குமா என்று பார்த்தான். ஒரு தென்னை மரத்தைத் தவிர நிழல் மரம் எதுவும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை தென்பட வில்லை. வழுக்கைத் தலையன் தென்னை மரத்தின் அடியில் போய் நின்றான். ஒரு கணநேரம் நிழலின் பத்தை அனுபவித்தான். அடுத்த கணம் மரத்திலிருந்து ஒரு பெரிய தேங்காய் அவன் தலையில் வீழ்ந்தது. வழுக்கைத் தலை படாரென்று பெரிய சத்தத்துடன் உடைந்துபோயிற்று! தெய்வத்தின் கோபத்திற்கு இலக்கானவன் உலகின் எந்த மூலைக்குப் போனாலும் ஆபத்து அங்கும் அவனைப் பின் தொடர்ந்து வரும். விதியைக் காட்டிலும் வலியுடையது மற்றொன்று இல்லை:

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினும் தான்முந் துறும்"

என்றவாறு. இந்திய நீதி நூல்களுக்குள் மிகப் புகழ்பெற்றது பஞ்ச தந்திரமே. தென் தேசத்தில் மகிளாரோப்யம் என்ற ஊரை ஆண்டுவந்த மன்னனுக்கு மூன்று குமாரர்கள். படிப்பு, குணம் ஏதுமற்ற கசடர்கள் அவர்கள். 'படிப்பில்லாத பிள்ளை வாழ்க்கை முழுதும் தந்தைக்குத் துக்கத்தையே தருவான்' என்று எண்ணி வருந்தினான் அவ்வரசன். பல ஆசிரியர்கள் அரச குமாரர்களுக்குக் கல்வி கற்பிக்க முயன்றும் தோல்வியே அடைந்தார்கள். முடிவில் விஷ்ணு சர்மா என்ற பிராம்மணர் அரசனிடம்

வந்து சொன்னார்: "அரசே! எனக்குப் பணத்தால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. கல்வியின் மேலுள்ள காதலால் சொல்கிறேன்: உங்கள் புத்திரர்களுக்கு ஆறு மாதத்திற்குள் நீதி சாஸ்திரம் முழுவதும் திருத்தமாகக் கற்பித்து விடுகிறேன்; இது சத்தியம்."

மகிழ்ச்சியடைந்த மன்னனும் அரச குமாரர்களைப் பிராம்மணரிடம் ஒப்புவித்தான்.

விஷ்ணு சர்மா ஐந்து நீதிகளைப் போதிக்கும் ஐந்து கதைகள் எழுதி அவற்றின் மூலம் அரச குமாரர்களுக்குப் பாடம் சொன்னார். இக்கதைகளில் ஒன்றுக்குள் ஒன்றாகப் பல உபகதைகள் பின்னப் பட்டன. ஒவ்வோர் உபகதையும் ஒவ்வொரு நீதியைத் தெளிவாகக் காட்டக் கூடியதாக அமைந்தது. மித்திரபேதம் (நட்பைப் பிரித்தல்), மித்திர சம்பிராப்தி (நட்புக் கூடுதல்), காகோலூகீயம் (காக்கைகளுக்கும் ஆந்தைகளுக்கும் போர்), லப்தப் பிரணாசம் (பெற்றதை இழத்தல்), அபரீக்ஷித காரகம் (ஆராயாது செயல்) என்ற ஐந்து தந்திரங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் இதற்குப் 'பஞ்ச தந்திரம்' என்ற பெயர் வழங்குகிறது.

பஞ்ச தந்திரத்திலுள்ள கதைகளெல்லாம் பெரும்பாலும் மிருகங்களையே பாத்திரங்களாக் கொண்டவை. காக்கையும்,நரியும்; சிங்கமும், எலியும் மனித குணங்களை ஏற்று உலவும் இக்கதைகளிலே. தவம் செய்யும் பூனையும், தங்கமாக எச்சமிடும் பட்சியும் இதில் காட்சி அளிக்கின்றன. நகைச்சுவை

ததும்பும் சம்பவங்களைச் சிருஷ்டித்து அவற்றின் மூலம் நல்ல நீதிகளை ஆசிரியர் போதித்து விடுகிறார். கதை சொல்லும் பாகம் வசனமாகவும், நீதிகள் சுலோகமாகவும் அமைந்திருக்கின்றன. சில முயல்கள் சொல்வதாக அமைந்துள்ள நீதி சுலோகத்தைப் பாருங்கள்:

> **'யானை தொட்டாலும் மரணம் ஏற்படுகிறது. பாம்பு மோந்தாலும் மரணமே. சிரித்துக் கொண்டே அரசன் கொன்று விடுவான். கெட்டவன் புகழ்வது போல் தோன்றினாலும் வஞ்சகமாக அழிக்கும் தன்மையுடையவன்."**

கதைகளின் எளிமையும், சுலோகங்களின் அழகும், நூலின் அமைப்பும் மிகக் கவர்ச்சிகரமாக இருப்பதால் மேல் நாடுகளில் அநேகர் இதை விரும்பிப் படிக்கிறார்கள். ஆறாம் நூற்றாண்டிலேயே அரபு, சிரியாக் மொழிகளில் பெயர்க்கப்பட்ட இந்நூல் உலகெல்லாம் சுற்றித் திரிந்து, போகுமிட மெல்லாம் மக்களைத் தன் வசப்படுத்தியுள்ளது. மேல்நாடுகளில் வழங்கும் நீதிக் கதைகள் பஞ்ச தந்திரக் கதைகளின் மாற்றுருவந்தான் என்பது அறிஞர்களின் தீர்மானம்.

பதினான்காம் நூற்றாண்டில் வங்காளத்தைச் சேர்ந்த நாராயண பண்டிதர் என்பவரால் இயற்றப் பட்ட 'ஹிதோபதேசம்' பஞ்ச தந்திரத்துக்கு ஒத்த அமைப்பும், தன்மையும் கொண்டது.

"பின்வரும் எட்டு விஷயங்களிலும் எவ்வளவு செலவு செய்தாலும் அதிகச் செலவு என்று தோன்றாது; யாகம், விவாகம், பெருந் துக்கம், எதிரிகளை அழித்தல், புகழுக்கான செயல், நண்பர்களின் குழாம், மனத்துக்கு இன்பம் தரும் பெண்கள், ஏழைகளான உறவினர்கள்"

என்ற பொருளுள்ள சுலோகத்தை உதாரணமாகக் கொள்ளலாம்.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் மதுரையை அரசாண்ட திருமலை நாயக்கரிடம் மந்திரியாகப் பணியாற்றிய நீலகண்ட தீட்சிதர் பற்றி முன்பே சிறிது பேசியிருக்கிறோம் அவர் சிறந்த சம்ஸ்கிருதப் புலவர்; சிவபக்தி மிகுந்தவர். பக்தி நூல்களைத் தவிர வேறு சில நூல்களும் இயற்றியிருக்கிறார். கலியுகத்தின் தன்மையைப் பற்றி நகைச்சுவை ததும்பும்படி பாடியிருக்கும் நூலாகிய 'கலிவிடம்பன'த்திலிருந்து ஒரு பாட்டு:

'புக்ககத்திலிருந்து தாய் வீட்டிற்கு ஒரு முறை வந்துவிட்டுப் போனால் பிறந்தகத்தைத் துடைத்துவிடுவாள் பெண். பிறந்தகத்தில் இருக்கும் பொழுது நகைகளாக வாங்கிப் பூட்டிக் கொள்வாள். தேவையில்லாவிட்டாலும், பார்க்க நன்றாக இருக்கிறது என்றோ, என்னிடம் இது மாதிரி இல்லையே என்றோ துணிகளும் பாத்திரங் களும் வாங்கிக் கொள்வாள். பிள்ளைக்கும் பெண்ணிற்கும் வேண்டிய பொருள்களைத் தாராளமாகவே வாங்கிச் சேமித்து வைப்பாள்.

இத்தனை பொருளையும் மூட்டை கட்டிக் கொண்டு பெண் புக்ககம் போன பிறகு தாய் வீடு துடைத்துவிட்டாற் போல் இருப்பதில் வியப் பென்ன?'

மனித வாழ்க்கைக்கு வேண்டிய நீதி வாக்கியங்கள் எல்லாம் வேதங்கள், சாஸ்திரங்கள் இவையிலேயே அடங்கியிருக்க, கவிஞர்களும் நீதியை ஏன் பாட வேண்டும் என்ற கேள்விக்கு நீலகண்டர் விடை கூறுகிறார்:

சாஸ்திரங்களில் சொல்லாட்சி கடுமையாக இருக்கும். பொருள் தெரிவது அரிதாகத் தோன்றும். அதே விஷயத்தைக் கவியின் வாக்காகச் சொல்லும் போது நாக்கிலே இனிக்கும்; பொருளும் எளிதாக விளங்கும். உள்ளங்கையில் ஒரு ரத்தினத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் அதன் அழகு முழுதும் நமக்குத் தெரிகிறது. பாம்பின் தலையில் உயர்ந்த நாகரத்தினம் இருக்கிறதே என்று அதை எடுத்து அநுபவிக்க நம்மால் முடியுமா?'

மிக உயர்ந்த நீதிக் கருத்துக்களும் தத்துவ உரையும் கொண்டது நீலகண்ட தீட்சிதரின் 'சாந்தி விலாசம்.'

"மனைவிக்காக நான் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தேன்; வயது சென்ற பின் வருவாயும் குறைந்து போனதால் என்னை என் மனைவி பஞ்சுக்கு ஒப்பாகவும் மதிப்ப தில்லை"

என்பது ஒரு பாட்டின் கருத்து.

பணத்தை மிகவும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறோம்; பத்திரம் என்ற ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி வாங்கிக் கொண்டு இந்தப் பொருளையெல்லாம் ஒருவரிடம் கொடுத்து விடுகிறோம். நூற்றுக்கு ஒரு பங்கு வட்டியாகக் கிடைக்கும் என்ற ஆசையே நம்மை இப்படிச் செய்யத் தூண்டுகிறது. ஆனால் எந்த விஷயத்தில் செலவிட்டால் பல நூறு மடங்கு பயனைப் பெறுவோம் என்று நூல்களெல்லாம் முறையிடுமோ அதில் நமக்குத் தம்படியும் செலவிட மனம் வருவதில்லை. பாத்திரமறிந்து பிச்சையிடுதல், ஆலயத்திருப்பணி செய்தல், அநாதை இல்லத்துக்கு உதவுதல் போன்ற நல்ல காரியங்களில் பணத்தைச் செலவிடுவதற்குத் தயங்கும் செல்வர்கள், வட்டிக்குக் கடன் கொடுக்கத் தாராளமாக முன் வருவதைப் புலவர் பரிகசிக்கிறார்,

இந்தப் பாட்டிலே.

இன்னும் பெயர் தெரியாத எத்தனையோ புலவர்கள் சம்ஸ்கிருதத்தில் நீதிக் கவிதையை ஏராளமாக எழுதியுள்ளார்கள். அவற்றில் சில பழைய கருத்துக்கள் கவர்ச்சியான புதிய உடையில் நடமாடுகின்றன. தேவர்கள் கடல் கடைந்த கதை எப்படி உருமாறிப் போகிறது என்பதை ஒரு பாட்டில் பார்க்கலாம்:

உடையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், பெருமைக்கும் சிறுமைக்கும் உடையே காரணமாகிறது என்பதே. 'சமுத்திர அரசனிடம் ஓர் அழகான பெண்ணும் கொடிய விஷமும் இருந்தன.

பீதாம்பரத்தை உடுத்துக் கொண்டு வந்த நாராயணனுக்கு அவன் பெண்ணைக் கொடுத்தான். அருவருக்கத் தக்க தோலைப் பரம சிவன் ஆடையாக உடுத்துவந்தான். அவனுக்கு விஷத்தைக் கொடுத்துவிட்டான் கடல் மன்னன்.'

சிவபெருமான் செய்த ஒப்பற்ற தியாகம் எப்படித் திரிந்துவிட்டது இந்தக் கதையிலே! ஆயினும் இந்த உருமாற்றத்திலும் திரிபிலும்கூட ஓர் அநுபவ உண்மை இருப்பதைக் காண்கிறோம்.

கடல் மன்னனைக் குறித்த நீதி சுலோகத்தைப் போன்ற நயம், நகைச்சுவை, திருப்பம், மாற்றம் இவை உள்ள நீதிகள் சம்ஸ்கிருத இலக்கியத்தில் அங்கங்கே காணப்படுவன. (இவ்வாசிரியர் பல்லாயிரம் நீதிப் பாடல்களை ஆராய்ந்து அவற்றில் இத்தகைய நயங்கள் நிறைந்தவற்றைத் தெரிந்தெடுத்து "நயம் நிறைந்த நீதிகள்" என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி இருக்கிறார். இது அல்லயன்ஸ் வெளியீடாக அண்மையில் வெளிவந்துள்ளது. அதில் இடம்பெறும் சிலவற்றை இங்கே நுகர்ந்து இன்புறுவோம்.)

ஒரு வீட்டுக்கு மாப்பிள்ளையாக வருபவன் தனக்கென்று தனியான ஒரு கோணற் பார்வை இருக்க விரும்பி விறைப்பாக நடந்து கொள்வதை நாம் வாழ்க்கையில் எங்கும் காண்கிறோம். இதை மிகச் சுருக்கமாக ஒரு நீதிக் கவிஞர், "மாப்பிள்ளை பத்தாவது கிரஹம்!" என்பார். நவக்ரஹ சந்நிதியிலே ஒவ்வொரு கிரஹமும் ஒவ்வொரு கோணத்தில் பார்த்துக் கொண்டிருக்கும். மாப்பிள்ளை பத்தாவது கிரஹம்

ஆகையால் தனக்கென்று வேறொரு திசையில்-பத்தாவது திசையில் பார்த்துக் கொண்டிருப் பார். மைத்துனனைப் பற்றிப் பல கேலிச்சித்திரங்கள் வரையப் பட்டன. மிருச்ச கடிகத்தில் அரசனின் மைத்துனன் படுத்தும் பாட்டைச் சுருக்கமாகப் பார்த்தோம். ஏழ்மை பற்றிப் பல பாடல்கள் பாடப் பெற்றன. இந்த ஏழ்மை என்பது மனிதனை மட்டுமா, தெய்வங்களையும் ஆட்டி வைக்கிறதே! சிவனின் நிலைமையைப் பாருங்கள்! அவனுக்கு ஐந்து முகங்கள், ஆகவே ஐந்து வாய்கள். பிள்ளைகளில் ஒருவர் யானை முகத்தவர்; மற்றொரு வருக்கு ஆறுமுகங்கள், ஆறு வாய்கள்! சிவன் இந்த நிலையில் நாள்தோறும் சாப்பாட்டுக்கு என்ன செய்வார், வீட்டில் அன்னபூர்ணா தேவி இல்லாவிடில்?

நீதி சுலோகங்களை இயற்றுவோர் ஏழைக் கவிஞர்கள். இவர்களுக்கு ஏழ்மை பற்றி மிக நன்றாகத் தெரியும். ஒருவர் பாடினார்:

> **"பிச்சை எடுத்து வாழ்பவனுக்குக் கனம் [சமூகத்தில் மதிப்பு] என்பதே இருக்க முடியாது. அவன் பஞ்சைவிட இலேசானவன். ஆனால் இத்தனை இலேசானவனை ஏன் காற்று அடித்துக் கொண்டு போவதில்லை என்றால் – அவனருகே வந்தால் தன்னிடமும் ஏதாவது பிச்சை கேட்டுவிடுவானோ என்று காற்று அஞ்சுவதே காரணம்!"**

தெய்வங்களை வம்புக்கிழுப்பதில் நீதிக் கவிஞர்களுக்கு இணையே இல்லை. மாமனார் வீட்டில் வாழ்வதே சுகம் என்பதை மனிதரிடையே

மட்டுமா, தெய்வங்களிடையிலும் காண்கிறோம். சிவன் (தன் மாமனார் வீடாகிய) இமாலயத்தில் தான் தங்கி வாழ்கிறார். திருமாலும் (தன் மாமனார் வீடாகிய) பாற்கடலில் தானே வசிக்கிறார்? இன்னொரு பாட்டில்,

> **"லக்ஷ்மி தாமரையில் வசிக்கிறாள்: சிவன் இமாலயத்திலும் பாற்கடலின் நடுவில் திருமாலும் வசிக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் தெரியுமா! தரையில் நம்மைப் போல் வாழ்ந்தால் மூட்டைப் பூச்சியின் தொந்தரவு தாங்க முடிவதில்லையோ?"**

என்பார் ஒரு கவிஞர்.

இது போன்ற பல சுலோகங்கள் அந்நாளில் புலவர் வாயிலும் பாமர மக்களிடையிலும்கூட நடையிட்டு வந்தன. சம்பாஷணையிலும் சொற் பொழிவிலும் இவற்றைச் சான்றோர் பெரு வாரியாகப் பயன்படுத்தினார்கள். இவற்றால் பேச்சில் ஒரு சுவை ஏற்படுகிறது. உள்ளமும் பண் படுகிறது, நாளடைவிலே.

11. அன்பிலக்கியம்

மிகத் தொன்மையான ரிக்வேதத்திலேயே இறைவனின் அன்பு தாயன்புக்கு ஒப்பிடப் பட்டுள்ளது. 'எல்லாம் கொடுத்து உதவுபவன் நீ' என்ற நன்றியுணர்ச்சி அன்பாக வெளிப்படுகிறது, வேதக் கவிதையிலே. ரிக் வேதத்தில் விசுவாமித்திரர் இந்திரனை நோக்கிப் பாடுவார்,

> **"இந்திரனே, இங்கிருந்து போய்விடாதே! உனக்கு வேண்டு மளவுக்குச் சோமரஸத்தைப் பிழிந்து தருகிறேன். என் பாட்டாகிய கையால், ஒரு குழந்தை தன் தந்தையின் துணியினுடைய நுனியைப் பிடித்துக் கொண்டு அழைப்பது போல் உன்னை நான் பிடித்துக் கொண்டு மன்றாடு கிறேன்"**

என்று. குலசேகராழ்வார், "அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்று அவள் தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவே போன்றிருந்தேனே!" என்று பாடிய வரிகள் இதனுடன் ஒப்பிடத்தக்கன.

யஜுர் வேதத்திலும் இறைவன் பக்தி உணர்ச்சியுடன் பேசப்படும் இடங்கள் பல. அவற்றுள்

ஒன்றில், "இறைவன் நமக்கு நண்பன், நம் தந்தை, நம்மைப் படைத்தோன்; நம் நிலைமையை முழுவதுமாக அறிந்தவன்!" என்று வேதரிஷி பாடுவார். பிற்காலத்தில் கீதாசாரியன் "நானே தாய், தந்தை, கணவன்" என்று கூறியதை நினைவூட்டு கின்றது இவ்வேதப் பாடல்.

ராமாயணமும் பாரதமும் பாகவதம் போன்ற புராணங்களும் பக்தி வெள்ளத்தைப் பாரத நாட்டில் பெருக்கெடுத்து ஓடச் செய்தன. அறத்தின் உருவான ராமனைத் தம் லட்சிய புருஷனாக மக்கள் வழிபடத் தொடங்கினார்கள்.

முருகனும் கண்ணனும் பாரத மக்களின் நோக்கிலே தீராத விளையாட்டுப் பிள்ளைகளாக, குன்றாத இளமையுடன் பொலியும் குழந்தைத் தெய்வங்களாகக் காட்சியளிக்கின்றார்கள். இவர்களின் திருமேனி அழகிலும் வீரச் செயல்களிலும் ஈடுபட்ட அன்பு மனம் தோத்திரம், பஜனை முதலியவற்றைத் தன் வழிபாட்டு முறையாக வகுத்துக் கொண்டது. ஆழ்வார்களும் நாயன் மார்களும் நாட்டின் திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனின் பெருமையைத் தமிழில் பாடிப் பக்திப் புனலைத் தேக்கிச் சென்ற பிறகு, தமிழ்நாட்டில் சமயப் பயிர்கள் தழைத்து வளரத் தொடங்கின. பாரதத்தின் பெரு மக்கள் அநேகர் தம் முழு உணர்வுடன் இவ்வருட் பாடல்களில் ஈடுபட்டுப் பக்திப் பெருஞ்செல்வர்கள் ஆனார்கள்.

ஞானத்தையே சிறப்பாகப் போதித்த சங்கரரும் இந்தச் சூழ்நிலையில் தோன்றிய காரணத்தால் பக்தி நிரம்பிய தோத்திரங்களைப் பாடிச் சிவபக்தியாகிய மகிழ்ச்சி அலை மோதும்படி செய்தார். அவற்றில் முதன்மையானவை இரண்டு அலைகள்: சிவானந்த லஹரி; சௌந்தரியலஹரி (லஹரி என்றால் அலை). சங்கரர் தமக்கு முன் தோன்றிய நாயன்மார்களின் பக்திப் பாடல்களில் பெரிதும் ஈடுபட்டார் என்பதை, சௌந்தர்ய லஹரியில் வரும் ஒரு குறிப்பால் அறிய முடிகிறது. உமாதேவியைப் பார்த்து, "தாயே! அன்று தமிழ்க் குழந்தைக்கு உன் பாலோடு ஞானமும் கலந்து ஊட்டினை! அதை உண்ட குழந்தையும் கவிகளுக் கெல்லாம் சிறந்த கவியாகப் புகழ் பரப்பியது உன் கருணையால் அல்லவா?" என்று வியந்து பாடுகிறார். சீகாழிக்குளக்கரையில் ஞானசம்பந்தக் குழந்தைக்குத் தோணியப்பருடன் வந்த உமாதேவி ஞானப்பால் கொடுத்த கதை சங்கரரின் மனத்தைக் கரையச் செய்து விட்டது.

சிவானந்த லஹரியில் பல அழகான விருத்தங்களில் அமைந்த நூறு சுலோகங்களால் சங்கரர் சிவபக்தியின் பேரெல்லையைத் தாண்டி நிற்கிறார். ஒரு பாட்டில்,

> **"புரவலரில் சிறந்தவன் நீ; ஏழைகளில் தாழ்ந் தவன் நான்; ஆகவே, உனக்கும் எனக்கும் சிறப் பான உறவு முறை அமைந்து விட்டது. அதனால் முயன்றாவது என்னை நீ காப்பாற்றத் தான் வேண்டும்"**

என்கிறார்.

மற்றொரு பாட்டில் மனத்தைக் குரங்காகக் காண்பித்து அழகான ஓர் உருவகம் செய்து காட்டுகிறார்: "என் மனக் குரங்கு மோகம் என்ற காட்டில் நாளும் அலைந்து திரிகிறது. இளம் பெண்களின் மார்பகமாகிய மலையில் நடமாடு கிறது. நொடிக்கு ஒரு முறை ஆசை என்ற கிளைக்குத் தாவுகிறது. கபாலம் ஏந்திப் பிச்சை எடுக்கும் சிவனே, நிலையற்ற தன்மையுள்ள என் மனக் குரங்கைப் பக்தி என்ற கயிற்றால் கட்டி உன் வசமாக்கிக் கொள்ள வேண்டும்." வெறும் கபாலத்தோடு பிச்சைக்கு அலைவதை விடக் குரங்காட்டியாகச் சென்றால் சிவனுக்குப் பிச்சை மிகுதியாகக் கிடைக்கும் என்ற கருத்து இங்கே தொனிவடிவாக உணர்த்தப்படுகிறது.

ஞானசம்பந்தரின் கதையைப் போல் கண்ணப்பரின் கதையும் சங்கரரின் மனத்தை உருக்கி விட்டது. அவரது வழிபாட்டின் நெறியைக் கூறிவிட்டு, இறுதியில் தம் முடிவைக் கூறுகிறார்: "ஒன்றும் அறியாத வேடன் பக்தர்களுக்கு எல்லாம் சிறந்த பக்தனாக ஆயினான். பக்தி என்றதொரு சக்தி பின் என்னதான் செய்யாது!" 'வேடன் மலராகும் நயனம் காய் கணையினால் இடந்து ஈசனடிகூடு காளத்திமலையே' என்ற சம்பந்தர் தேவாரத்திலும் வேடன் என்று கண்ணப்பரின் கல்லாத நிலையைக் குறிப்பால் உணர்த்தி, அவரது பக்தியின் பெருமையை நாட்டியிருப்பதை ஒப்பிடுக.

பக்தி என்பது என்ன என்று பல உவமைகளால் சங்கரர் விளக்கிக் கூறும் சுலோகம் ஒன்றினையும் நாம்

அனுபவிக்க வேண்டும். "அங்கோல மரத்தின் வித்துக்கள் தாய் மரத்தையே போய் அடைகின்றன; இரும்பாலான ஊசி காந்தத்தால் கவரப்பட்டு அதனைச் சேர்கிறது; பதிவிரதை கணவனை அன்புடன் நாடுகிறாள்; கொடி மரத்தையும் ஆறு கடலையும் அடைகின்றன. இவை போல் இயல்பாக இறைவனை நாடுவதே பக்தி எனப்படும்!" இதில் முதலிற் கூறிய உவமையில் சொல்லப்பட்ட அங்கோலம் என்பது என்னவென்று தெரியவில்லை. மற்ற உவமைகள் எல்லாம் எளிதாகவும் பொருத்தமாகவும் உள்ளன.

திருச்செந்தூரில் கோயில் கொண்ட செந்திலாண்டவன் மேல், சங்கரர் 'சுப்பிரமணிய புஜங்கம்' என்ற தோத்திரத்தைப் பாடியிருக்கிறார். சாதாரணத் துதிபோல் அன்றிப் பல சீரிய கருத்துக்கள் கொண்டு இயற்றப்பட்ட து இந்த நூல். திருச்சீரலை வாய் என்று பெயர்பெற்ற இந்தத் தலத்தில் கடற் கரையில் ஓரத்தில் உள்ள முருகன் திருவடிகளில் அலைகள் வந்து அடங்குவதைக் கண்டு சங்கரர் பாடுகிறார்: "இந்த உப்புக் கடலின் அலைகளும் உன்னிடம் வந்து சேவிக்கும் அன்பர்களின் துன்பங்களும் உன் அருளால் ஒடுங்கிவிடுகின்றன."

இவ்வாறு வழிபட்டவர்களின் இடர் நீக்கும் தன்மையுள்ள முருகனிடம் தம் புலன்களும் மனமும் ஈடுபட்டு நிற்பதை வியந்து கூறுகிறார்: "கந்தனின் உருவச் சிறப்பில் கண்கள் நிலைத்துவிட்டன. காதுகள்

அவன் புகழ் தவிர மற்றேதும் கேட்பதில்லை. வாயும் அதையே பாடுகிறது. கையால் அவனது பூசனையே செய்கிறேன். உடலும் அவனது குற்றேவல் புரிவதிலேயே முழுதும் ஈடுபட்டுவிட்டது. என் முக்கரணங்களும் அவனிடமே நிலைத்து நிற்கின்றன. வேறு எதுவும் அவற்றுக்கு இலக்காகாமல் இருக்க வேண்டும் என்பதே எனது லட்சியம்!"

புஜங்கம் என்ற விருத்தத்தை இறைவன் புகழ் பாடும் கருவியாகச் சங்கரர் ஆக்கித் தந்தபின் அநேகக் கவிகள் அவரைப் பின்பற்றிப் புஜங்க ஸ்தோத்திரங்கள் பாடி இருக்கிறார்கள். ஆயினும், புஜங்கம் என்றாலே, சங்கரர் பாடிய சுப்பிரமணிய புஜங்கந்தான் பக்தர்களின் நினைவுக்கு வரும்.

இடைக்காலத்தில் நமது நாட்டில் பக்தியைப் பெருக்கிய பெரியோரில் லீலாசுகரும் ஒருவர். வெறும் காமுகராக இருந்த இவரைச் சிந்தாமணி என்னும் தேவதாசி இறைப் பணியில் ஈடுபடுத்தினாள் என்ற கதை வழங்கி வருகிறது. இவரது கிருஷ்ண கர்ணாம்ருதம் என்ற (முந்நூறு சுலோகங்கள் அடங்கிய) நூல் பக்திப்பெருஞ்சோலையாக நின்று வருவோர்க்கொல்லாம் அருட் கனியை வரையாது வழங்குகிறது. 'கஸ்தூரி திலகம்' என்று ஆரம்பிக்கும் சுலோகத்தை அறியாதவரே இல்லை என்று சொல்லத்தக்க நிலை சமீப காலம்வரை நம் நாட்டில் இருந்துவந்தது. கண்ணன்மேல் கொண்ட காதலினால் ஒரு கோபஸ்திரீ, தயிர், பாலை விற்கத் தலையில்

சுமந்துகொண்டு போகும் போது, "தயிரோ! பாலோ" என்று கூவ மறந்துபோய் "கோவிந்தா, தாமோதரா, மாதவா" என்று உரக்கக் கூவினாளாம்!

லீலாசுகருக்கு வேணுகோபாலன் மேல் தோன்றிய பக்தி பழுத்து முதிர்ந்துவிட்டது. அவன் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்னும் முடிவுக்கு வந்து விட்டார். ஆனால் இவருடைய நிலையை அவனிடம் போய்ச் சொல்லுவார் யாரும் இல்லை. 'யமுனை ஆற்றங்கரையில் ஒரு மூங்கிலாகப் பிறந்திருந்தேனா னாலும் கண்ணன் என்னைக் குழலாகச் செய்து தனது கனிவாயில் வைத்துப் பொங்கு நற்கீதம் படிப்பான். அந்தப் பேறும் நான் பெறவில்லையே" என்று பலவாறாக ஏங்கினார். முடிவில் கண்ணன் ஊதும் குழலைப் பார்த்து இறைஞ்சிவேண்டுவார்:

> **"இனிய குழலே, முகுந்தனின் வாய்ச் சுவையும் நாற்றமும் எப்போதும் உனக்குக் கிடைக்கின்றன. உன்னை நான் வணங்கிக் கேட்பது இது தான்: உன்னைக் கண்ணன் தன் உதட்டில் வைத்து ஊதும் போது உன் ஒரு முனை அவன் காதினருகில் வருமல்லவா? அப்போது என் நிலையை— நான் உற்ற துயரத்தை—அவன் காதில் ஒருவருக்கும் தெரியாமல் நீ சொல்லிவிடு."**

லீலாசுகர் கண்ணனையே பரப்பிரம்மமாகக் கருதினார். கண்ணனின் ஒவ்வொரு விளையாட்டும் அரிய பெரிய வேதக் கருத்துக்களை உள்ளடக்கியவை என்று அவர் நம்பினார். வெண்ணெய் திருடி அதற்குத்

தண்டனையாக உரலில் கட்டப்பட்ட கண்ணனை வர்ணிக்கும்போது "உபநிஷத்துக்களின் உள்ளுறையும் தெய்வம் இன்று உரலில் கட்டப்பட்டுக் கிடக்கிறது!" என்று வியந்து பாடுகிறார். ஈசனின் இந்தத் திருவிளையாட்டை நினைத்துத்தான் எத்தனை பக்தர்கள் மனமுருகிப் போயிருக்கிறார்கள்!

"மத்துறு கடை வெண்ணெய் களவினில்
உரலிடை யாப்புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந்
தேங்கிய எளிவே"

என்று பாடிய நம்மாழ்வார் இறைவனின் எளிமைக்கு ஆட்பட்டு ஆறு மாதம் மோகித்துக் கிடந்தாராம்! கண்ணனின் மேனியழகும் எளிமையும் எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளத் தக்கனவாக இருப்பதால் பக்தி இயக்கத்தில் ஈடுபட்ட பெரியோர் பெரும்பாலும் கிருஷ்ண பக்தியையே பரவச் செய்ததில் வியப்பில்லை.

மத்வ மதத்தைப் பரப்பியவர்களுக்குள் முதன்மை பெற்ற ஒருவரான வாதிராஜரும் சிறந்த கிருஷ்ணபக்தர் ஆவர். அவரது 'ருக்மிணீச விஜயம்' என்ற மகா காவியம் கண்ணனின் கதையை அழகான கவிதையில் சொல்லும். பத்தொன்பது சர்க்கங்கள் கொண்ட இந்த நூல் சம்ஸ்கிருத இலக்கியத்திலேயே மிகச் சிறந்த மகா காவியமாக அந்நாளையப் பண்டிதர்களால் கருதப்பட்டது என்று சம்பிரதாயக் கதைகள் கூறுகின்றன. கிருஷ்ணனிடம் மாறாத அன்பு பூண்ட வாதிராஜர், கிருஷ்ணனே பரப்பிரம்மம் என்றும்,

அவனே மற்ற அவதாரங்களையும் எடுத்தான் என்றும் உணர்த்துகிறார்.

வாதிராஜர் ஒரு பாட்டில் "என்னைக் கண்ணால் கண்டவர்க்கெல்லாம் முக்தி, விடுதலை' என்ற தத்துவத்தை மெய்யாக்குவான் போலக் கண்ணன் பிறந்தவுடனேயே சிறையில் இருந்த பெற்றோர்களின் விலங்குகள் நழுவி விழுந்துவிட்டன!" என்பார். கோகுலத்தில் அக்காலத்தில் வாழ்ந்த ஆய்ச்சியர் மெய்யாகவே பாக்கியம் செய்தவர்கள். அவர்களில் ஒருத்தி வீட்டுக்குக் கண்ணன் திருட்டுத்தனமாகச் சென்று வெண்ணெய் வைக்கப்பட்ட உறியில் கட்டப் பட்டிருந்த மணியை ஒரு கையால் பிடித்துக் கொண்டான். இன்னொரு கையால் பாத்திரத்தைப் பிடித்துக் கொண்டு வெண்ணெயை மூன்றாம் கையில் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே நான்காம் கையினால் கூட வந்த நண்பர்களுக்கு வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தான். இவன் வந்ததை அறிந்த ஆய்ச்சி மெல்ல மெல்ல வந்து அறைக்குள் எட்டிப் பார்த்தாள். அங்கே கண்ணன் சதுர்ப்புஜனாக - நான்கு கைகள் உடையோனாக அவளுக்குக் காட்சியளித்தான்! இதைத் தரிசித்தவள் உள்ளே சென்று கள்வனைக் கையும்களவுமாகப் பிடிக்க வேண்டும் என்ற தன் எண்ணத்தை அடியோடு கைவிட்டாள் என்பதில் என்ன வியப்பு?

ஒருமுறை கண்ணன் தன் நண்பர்களுடன் ஊரைவிட்டுச் சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு காட்டில்

மாடுகள் மேய்க்கச் சென்றான். பகல் வந்தது: வயிறு பசிக்கத் தொடங்கியது. "பசிக்கிறதே கண்ணா!" என்று நண்பர்கள் கூறத் தொடங்கினார்கள். கண்ணன் யோசித்தான். "பக்கத்தில் ஒரு பெரிய யாகம் நடக்கிறது. அங்கே சென்று உணவு கேளுங்கள்!" என்று நண்பர்களுக்குக் கட்டளை இட்டான். அவர்கள் போய்ச் சிறிது நேரத்தில் வெறுங்கையோடு திரும்பி விட்டார்கள். "யாகம் செய்து கொண்டிருந்தவர் களிடம் கேட்டோம். யாகம் முடிவதற்கு முன் ஒன்றும் கொடுக்க முடியாது" என்று சொல்லிஅனுப்பி விட்டார்கள்!" என்று கண்ணனிடம் நடந்ததைச் சொன்னார்கள் "அடே மடையர்களா! உணவைப் பெண்பாலாரிடம் தானே கேட்க வேண்டும்! போய்க் கேளுங்கள், யாகம் செய்வோரின் மனைவிகளிடம்! அவர்கள் கொடுப்பார்கள்!" என்றான் கண்ணன்.

அப்படியே அவர்கள் சமையல் பகுதியில் இருந்த பிராம்மண ஸ்திரிகளிடம் சென்று, "கண்ணன் அனுப்பினான். எங்களுக்கு உணவு வேண்டும்! கொடுப்பீர்களா?" என்று கேட்டார்கள். அந்த மாதர் ஒரு கணம் யோசித்தார்கள். "எல்லா யாகங்களுக்கும் தலைவனாக இருக்கும் தெய்வமே உணவு வேண்டும் என்று கேட்கும் பொழுது உடனே கொடுத்துவிட வேண்டாமா?" என்று தோன்றிற்று அவர்களுக்கு.

தயாராகியுள்ள உணவுகளை எல்லாம் எடுத்துக் கொண்டு யக்ஞ பத்தினிகள் புறப்பட்டுப் போனார்கள். கண்ணனுக்கும் அவன் தோழர்களுக்கும்

வேண்டிய உணவைப் பரிமாறி உண்ணச் செய்தார்கள். அவர்கள் திரும்பிப் போகப் புறப்பட்ட போது கண்ணன், "யாகம் சில நாட்கள் நடக்குமே? அது நடக்கும் வரை தினமும் எங்களுக்கு உணவு தர முடியுமா?" என்று கேட்டான். "அது நாங்கள் செய்த பாக்கியம்! கட்டாயம் கொண்டு வந்து கொடுக்கிறோம்!" என்று மகிழ்ச்சியுடன் சொல்லி விட்டுப் போனார்கள். பின்னர் யாகம் செய்த அந்தணர்கள் ஆட்சேபம் தெரிவித்தும் கேளாது நாள் தோறும் இடைச் சிறுவர்களுக்கு அந்தணப் பெண்கள் உணவு படைத்தார்கள். இதைக் குறித்து வாதிராஜர்,

> **"அந்தணஸ்திரிகள் இறைவனுக்குத் தயிர், பாயசம் இவைகளுடன் விருந்தளித்து முக்திப் பெரும் பேற்றினை அடைந்தார்கள். ஆண் என்றால் மட்டுமே தனிச் சிறப்பு ஒன்றும் இல்லை. மனத்தின் பக்குவமே பிரதானமானது"**

என்று பாடினார். இந்த சம்பவம் குறித்துப் பட்டாத்திரியும் தமது நாராயணீயத்தில் பாடி இருக்கிறார்.

பெரிய பிராட்டி பெண்களிற் சிறந்தவள். நாராயணன் புருஷோத்தமன் ஆவான். என்ன சேர்க்கை இவ்விருவருடையது! 'வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு' என்றபடி திருமகள் நாராயணனின் கௌஸ்துபம் விளங்கும் திருமார்பை விட்டு ஒரு நாளும் நீங்கமாட்டாள். சிருஷ்டியெல்லாம் பிரளயத்தில் ஒடுங்கும்போதும் இந்தத் திவ்விய தம்பதி பிரிவை அடையமாட்டார்கள். திருமால் என்பது பெருமாளும்

பிராட்டியும் சேர்ந்தே இயங்கும் தத்துவம் என்று ஸ்ரீ சகுண தர்ப்பண ஸ்தோத்திரத்தில் பாடுகிறார்.

சொல்லை வைத்தே விளையாடும் வித்தையில் திறமை பெற்றவர் வாதிராஜர். 'ருக்மிணீச விஜய'த்தில் இந்தத் திறமை முழுவதையும் காண்பித்து விடுகிறார். நவக்கிரக ஸ்தோத்திரத்தில் "ராகு நோய்களைத் தீர்க்கட்டும். கிரகங்களெல்லாம் என்னைக் கைதூக்கி விடட்டும். புதிது புதிதான செல்வத்தையும் எனக்கு ஆக்கி அருளட்டும்" என்ற பொருளில் அவர் இயற்றியுள்ள சுலோகத்தில் இந்தச் சொல்லமைப்புத் திறமையைக் காணலாம்.

துவைதம் என்ற தத்துவத்தைப் பிரசாரம் செய்வதில் வாழ்க்கையைச் செலவிட்டவர் வாதிராஜர். ஆயினும், வறண்ட தத்துவம் மோட்ச மார்க்கத்தைக் காட்டாது என உணர்ந்து , அவர் விஷ்ணு பக்தியில் பெரிதும் ஈடுபட்டார். ஞானத்தோடு இசையும் இத்தகைய பக்தி சங்கரர், ராமாநுஜர், மத்வர் என்ற மூன்று ஆசாரியர் களிடமும், அவர்கள் வகுத்த வழியில் செல்லும் உண்மை உணர்வு பெற்ற எல்லாப் பெருமக்களிடமும் சிறப்பாகத் தோன்றுவதைக் காணலாம்.

ராமாநுஜரின் ஆசாரிய புருஷராகப் புகழ் பரப்பிய ஆளவந்தார் என்ற யாமுனாசாரியர் ஸ்தோத்திர ரத்தினத்தைப் பாடியிருக்கிறார். இதில் உள்ள சுலோகங்கள் எல்லாம் பொருட்செறிவு மிக்கன. கூரத்தாழ்வார் இயற்றிய அதிமானுஷஸ்தவத்தில் இறைவனின் லீலைகள் எல்லாம் அவனுடைய இறைத்தன்மையை - மனித சக்திக்கு அப்பாற்பட்ட

அதிமானுஷத் திறமையைக் காட்டுவன என்பதைத் தெளிவாக விளக்குவார். ஒரு பாடலில், "வெண்ணையைத் திருடித்தின்னவே ஆய்ச்சி வீட்டுக்குச் சென்றாய். திருடர்கள் சாதாரணமாக உலகில் தாங்கள் வந்து போன தடயமே இல்லாமல் எச்சரிப்பாக நடந்து கொள்வார்கள் அல்லவா? அதுபோல் அல்லாமல் திருடிய வெண்ணெயில் ஒரு பகுதியை உன் உடலெல்லாம் தடவிக் கொண்டு வந்தாயே, இது ஏன்? நான் தான் திருடினேன் என்று உலகுக்கெல்லாம் காட்டிக் கொள்ளவா!" என்று பாடினார். அதே கருத்தில் இன்னொரு பாடலில். "திருட வந்தவன் ஓசைப்படாமல் எச்சரிக்கையாகப் போவது உலகியல் வழக்கம். ஆனால் நீ வெண்ணெய் உண்ட பின் அந்தப் பாத்திரத்தைப் புழைக்கடையில் ஒரு பாறையின் மேல் போட்டு உடைத்தாய்! இப்படிச் செய்வதற்கு என்ன காரணம்? நீ திருடிச் சென்றதை உலகுக் கெல்லாம் விளம்பரமாகக் காட்டிக் கொள்ளவா!' என்ற பொருளில் பாடுவார். இவருக்குப் பின் வந்த வேதாந்த தேசிகன் தத்துவ ஆராய்ச்சி யிலிருந்து காவியம் வரை, நீதி சுலோகத்திலிருந்து ஸ்தோத்திரங்கள் ஈறாக இலக்கியத்தின் எல்லாப் பகுதிகளையும் திறம்படக் கையாண்ட பேரறிஞர். இவரது 'யாதவாப் யுதயம்' என்ற மகா காவியத்தைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். 'கோபால விம்சதி' என்ற ஸ்தோத்திரத்தில் கண்ணனின் லீலைகளை வருணிக்கும் பொழுது. 'மூவுலகு உண்டுமிழ்ந்த முதல்வன்' திருவாய்ப் பாடியில் எளிமை ஒன்றே தோன்ற நின்ற காட்சியை வியப்புடன் பாடுகிறார்:

'சுவையான புத்துருக்கு நெய்யைப் பாத்திரத்திலிருந்து ஓசையில்லாமல் எடுக்கக் கண்ணன் முயன்றான். இவன் குணம் நன்றாகத் தெரிந்த தாய் இவன் வரவை எதிர்பார்த் திருந்தாளாகையால், இவனை உள்ளே போகவிட்டுப் பின் இவனை அடிக்கக் கயிற்றோடு அந்த அறைக்குள் நுழைந்தாள். கண்ணன் செய்யும் தொழில் கண்டு கோபம் பொங்கியவளாய், நடுங்கும் கையை ஓங்கிக்கொண்டு வந்தாள். அப்பொழுது பயத்தை எல்லாம் முகத்தில் தேக்கி அங்கிருந்து போக முடியாதவனாய், அச்சத்தால் கால் எடுத்து வைக்கவும் முடியாதவனாய் நின்றான் கண்ணன். இந்தப் பாசாங்குக்காரன் – தாயைக் கண்டு பயந்தவன் போல் கண்களை மூடிக்கொண்டு நிற்கும் இந்தக் கள்ளன் – அண்ட சராசரங் களையும் காக்கும் இந்தத் தெய்வம் – நம்மையும் காக்க வேண்டும்.'

தண்டிக்கும் தெய்வத்தைவிட மன்னிக்கும் தெய்வமே வசீகரமான தத்துவம். தவறு செய்வதே மனிதனின் இயல்பு; தவற்றைத் தன் கருணையால் மன்னித்து ஆட்கொள்ளும் தன்மை இறைவனிடம் நிரம்பி இருப்பதால்தான் நம் போன்றோருக்கு வழிபாட்டினால் பயன்கிடைக்கிறது. தவறு செய்யாத தூய மனம் உடையவர்களைக் காப்பதில் இறைவனுக்கே பெருமை இல்லை. பாவம் செய்தவர்களையும் காப்பதால் தான் இறைவனுக்கு இறைத்தன்மை உண்டாகிறது. தேசிகன் இறைவனின் தயை என்பதையே ஒரு தேவதையாக்கி அவள்மேல் ஒரு சதகம் பாடியிருக்

கிறார். உயர்ந்த கருத்துக்கள் செறிந்த இச்சதகம் அநேக சிந்தனையாளர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது; சொற்பொழிவுகளிலும் நூல்களிலும் தயாசதக சுலோகங்கள் மேற்கோளாகப் பரக்க வருவன.

பாவங்கள் பல செய்துவிட்டுத் திருமாலின் முன்னிலையில் நிற்கும் மனிதனின் குணா குணங்களை அவர் சீர்தூக்கிப் பார்ப்பார். அவர் பட்சபாதம் அறியாதவர். இவ்வாறு அந்த மனிதனின் பாவ புண்ணியம் பற்றிய ஆராய்ச்சி நடக்கும்போது திருமாலின் திருச்சபையில் பல குணங்களுக்கு நடுவே வீற்றிருக்கும் கருணை என்ற தேவி எழுந்து, "குற்றங்களை மன்னித்து இவனை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வாதாடுவாள்.

தேவி சொல்லிவிட்டாள்; தேவதேவனும் அதை ஏற்காமல் புறக்கணிக்கத் துணிவானா? பெரியாழ்வார் கூறியபடி, "என்னடியார் அது செய்யார்; செய்தாரேல் நன்று செய்தார்" என்பதே இறைவனின் திருவுள்ளமும் அல்லவா?

தயாசதகத்தில் அற்புதமான பல சமயக் கருத்துக்கள் அடங்கியுள்ளன. ஒரு பாட்டில் "திருவேங்கட முடையானின் பற்பல விசேஷ நற்குணங்கள்-ஞானம், பலம் , வீரியம், திறமை போன்றவை எல்லாம் (நம்மைப் பொறுத்தவரையில்) தோஷங்களே; அவை அவ்வாறு தோஷங்களாக இல்லாமல் அவற்றை அரிய நற்குணங்களாகச் செய்வது அவனுடைய தயை என்ற தன்மையே யாகும்!" என்று பாடினார். கருணை இல்லாதவரிடம் ஞானம் முதலிய மேன்மைகள் எல்லாம் அவருக்கும் நமக்கும்

இடையே உள்ள தூரத்தை மிகுதியாக்குவன. அவர் உயர உயர நம்மால் எட்டமுடியாதபடி ஆகிவிடுவார்; தயை என்ற தன்மை இருப்பதால் தான் அவரே நமக்காக இறங்கி வந்து நமக்குப் பேருதவி புரிகின்றார். இந்தக் கருத்தைச் சமய இலக்கியத்தில் இவ்வாசிரியர் வேறு எங்குமே கண்டதில்லை.

இன்னொரு பாடலில் "வேடர் தலைவனாகிய குகன், குரங்கரசன் சுக்கிரீவன், சபரீ என்ற பெண் (ராமாவதாரத்திலும்) குசேலர், கூனி. ஆய்ச்சி மார்கள், மாலைகட்டுவோன் (கிருஷ்ணாவதாரத்திலும்) உன் அருள் பெற்றுப் பெரியவர்கள் ஆனார்கள். இவர்கள் உன்னை விட எத்துணை தாழ்ந்தவர்கள்! நீ எவ்வளவு உயர்ந்தவன்! உங்கள் இடையே உள்ள இந்த உயர்வு தாழ்வு வேறுபாட்டை நீக்கிச் சமமாக ஆக்கியது உன்னிடமிருந்து அலைமோதி நுரைத்துக் கொண்டு புறப்பட்ட கருணைப் பிரவாஹமே அன்றோ?" என்று பாடினார். மேற்சொன்ன வரிசையில் விலங்குகளும் படிப்பறிவில்லாதவர்களும் பரம ஏழைகளும் உள்ளனர். இறைவன் உயர்வைத் தாழ்த்தி இவர்களுடன் அவன் சமமாகப் பழகி அருள் செய்ய உதவியது அவனுடைய கருணையே அன்றோ?

இந்தத் தயாசதகத்தில் இன்னும் எத்தனை எத்தனையோ அழகிய, ஆழமான கருத்துடைய பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றை எல்லாம் பற்றி இந்தச் சிறு நூலில் எழுதி விட முடியாது. அறிவும் பக்தியும் மிக்க வாசக அன்பர்கள் தயாசதகத்தை ஊன்றிப் படிக்க வேண்டும் என்று அவர்களை

மன்றாடி வேண்டுகிறேன். வயது முதிர முதிர 'நாம் நல்லது ஒன்றும் செய்யவில்லையே! இறந்தபின் நம் கதி என்னாகுமோ?' என்ற கவலை பெரிதாக வளர்கிறது. இதை மாற்றி நமக்குப் பெரு நம்பிக்கையை ஊட்டி முதுமையில் மகிழ்வுடன் வாழச் செய்வது இறைவனின் கருணைபற்றிய சிந்தனையே ஆகும். இதற்குத் தயாசதகம் பெருமளவில் பயன்படும்; இது உறுதி.

இவ்வாறு நம் பாவ புண்ணியங்களைக் கணக்கிட்டு அவற்றின்படி தெய்வம் பலன்களைக் கொடுக்கும் முறையைக் கண்டித்து நீலகண்ட தீட்சிதரும் பாடியிருக்கிறார். உலகத்தின் தாயாகிய மீனாட்சி தேவியைப் புகழ்ந்தேத்தும் ஆனந்த சாகர ஸ்தவத்தில், "என்னிடம் கருணை இருந்தால், நான் உன் அருளுக்கு ஏற்ற பாத்திரம் என்ற எண்ணம் உனக்கு இருந்தால் - பாவ புண்ணியங்களை ஆராயாமல் என்னைக் காப்பாற்ற வேண்டும். உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் சக்தியுள்ளவள் நீ. அப்படியிருக்க, என் கர்ம வினைக்கேற்ற கதியே எனக்குக் கிடைக்கும் என்றும், தெய்வத்தாலும் கர்மவினையே மாற்ற முடியா தென்றும் சொல்லி ஏன் என்னை வஞ்சிக்க நினைக்கிறாய்?" என்று கேட்கிறார்.

உலகின் தாயாகிய அம்பிகை பற்றிய பேச்சு எழுந்தாலே நினைவுக்கு வருவது சங்கர பகவத் பாதரின் ஸௌந்தரிய லஹரியேயாகும். இதன் முதல் சுலோகத்தின் கருத்து:

"தன் எல்லாக் காரியங்களையும் செய்யும் திறமை சிவனுக்கே சக்தி தேவியுடன் கூடிய பின் தான் தோன்றுகிறது. இல்லை என்றால் அவரும் ஓரங்குலம் நகரவும் இயலாது. உன்னைச் சிவனும் திருமாலும் பிரம்மனும் ஆராதிக் கிறார்கள். அத்தகைய உன்னை எவ்வகை யிலும் புண்ணியம் செய்யாத நான் வணங்கவோ துதிக்கவோ திறமை உடையவனா?"

இன்னொரு சுலோகத்தில் மிக அருமையான ஒரு கருத்து அமைக்கப்பட்டது:

"முதுமையையும் மரணத்தையும் வெல்லும் திறமையுடைய அமுதத்தை விழுங்கிய பிரம்மனும் இந்திரனும் தேவர் குழாமும் அழிந்து போகி றார்கள். கடலிலிருந்து கிளம்பிய கொடிய ஆல காலத்தை விழுங்கிய சிவபெருமான் காலத்தை [மரணத்தை] வென்றுவிட்டான். இந்த முற்றிலும் முரணான நிலைகளுக் கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? உலகின் தாயாகிய தேவி! உன் காதுகளில் அணியப்படும் [ஸெளமங்கல் யத்தின் அடை யாளமான] தாடங்கம் என்னும் காதணிகளே!"

நீலகண்ட தீட்சிதரின் பெரிய பாட்டனாராகிய அப்பைய தீட்சிதர் தேசிகனைப் போலவே இலக்கியத்தில் பல துறைகளிலும் அரிய பல நூல்களை இயற்றியிருக்கிறார். அத்வைத சித்தாந்தத்தில் அவர் ஆழ்ந்த பற்றுடையவர். சிவன், திருமால் என்ற பேத உணர்ச்சி இல்லாமல் இரு

மூர்த்திகளையும் பாடியிருக்கிறார். இவருடைய தகப்பனாரைப் பெற்ற பாட்டி ஒரு வைஷ்ணவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்! வேதாந்த தேசிகனின் யாதவாப்யுதயத்துக்குத் தீட்சிதர் சிறந்ததோர் உரையை எழுதியிருக்கிார். தமது 'பரிமளம்' என்ற ஒப்பற்ற அத்வைத நூலின் காப்புச் சுலோகத்தில் முகுந்தனின் புகழைப் பேசுகிறார். கச்சி அருளாளன் விஷயமாக இவர் 'வரதராஜஸ்தவம்' என்ற துதியைப் பாடி யிருக்கிறார். ஆயினும், சிவனின் திருவுருவத்தில் இவரை அறியாமல் இவரது மனம் ஈடுபட்டது. 'அறிஞர்கள் சக்திநிறைந்த ஈசனின் ஒரு சிறிய பகுதியிலே இந்தப் பரந்த பிரபஞ்சம் அடங்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தச் சிவனுக்கு - கழுத்தில் நீலோற்பல வண்ணமான ஒரு கறையைத் தாங்கி யிருக்கும் அந்த உமையின் கேள்வனுக்கு என் நமஸ்காரம்" என்று பாடுகிறார். சிவனின் பெருமையும் ஆற்றலும் மற்ற அறிஞர்களுக்குக் கவர்ச்சியாயிருக்க, நம் தீட்சிதருக்கு மேனியழகே இதயத்தைக் கொள்ளை கொண்டது.

தீட்சிதர் சித்தியடையும் சமயத்தில் பாடிய சுலோகத்தில் தம்மைப்பற்றிக் கூறும்போது, "சில நல்ல நூல்களையும் நான் இயற்றியிருக்கிறேன்" என்று அடக்கமாகக் கூறுகிறார். இவர் தமது வாழ்நாளில் ஜகந்நாத பண்டித ராஜன் போன்ற சிறந்த அறிஞர்களுடன் சொற்போர் நிகழ்த்தி, வாகை சூடியிருக்கிறார். இலக்கண நூலாசிரியரான

பட்டோஜி தீட்சிதர் போன்ற அநேக சிஷ்யர்களுக்குப் பல ஆண்டுகள் பாடம் சொல்லியிருக்கிறார். இவற்றோடு தீட்சிதர் ஒப்பற்ற நூல்கள் 104 இயற்றியிருக்கிறார் என்றால், அவரது அறிவு வளத்தையும் ஊக்கத்தையும் என்னவென்பது!

"இறைவனின் சக்திக்கு அளவே இல்லை; அவன் ஊமையையும் பேசவைப்பான்' என்று ஒரு சுலோகம் இறைவனின் கருணைத் திறத்தை வியப்பதாக அமைந்திருக்கிறது. பிறவியிலேயே ஊமையாய்க் காஞ்சியிலே வாழ்ந்து வந்த ஒரு பக்தனைக் காமாட்சியின் கடைக்கண், அமுதக் கவிதையைச் சொரியும் புலவனாக்கிவிட்டது! இவருடைய இயற்பெயரை மறந்துவிட்ட பக்தர் உலகம், இவரை மூக கவி என்றே அன்புடன் அழைக்கிறது. காஞ்சி காமாட்சியின் மேல் இவர் பாடிய ஐந்நூறு பாடல்கள் 'மூக பஞ்சசதி' என்று பெயர் பெறும். இதில் ஸ்துதி சதகத்தின் தொடக்கத்தில் அளவிட முடியாத இறைவியின் திறனைச் சொல்லால் அடக்கத் தாம் முற்பட்டதைக் குறித்துப் பாடுகிறார்:

> **"நான் முகனின் வாய்ச் சொல்லாக வெளிப் படும் வேதங்களும் உன் பெருமையைக் கூறும் முயற்சியில் தம் திறனை இழந்து கர்வ பங்கம் அடைக்கின்றன. என் போன்றவர்களால் உன் பெருமையை எப்படிப் பாடமுடியும்? என்றாலும், உன் திருவடிகளைச் சேவிக்கும் பேராவல் என்னை வாசாலனாகச் செய்து விடுகிறது"**

என்று பாடுகிறார். வேதாந்த தேசிகனும் இப்படியே, "இறைவனைப் பாடும் முயற்சியில் இறங்கிய வேதங்கள் அவனது ஒரு குணத்தின் ஓர் அம்சத்தைச் சொல்லி முடிப்பதற்குள் களைத்து விடுகின்றன" என்று கூறுவதை இங்கே ஒப்பிடலாம். இறைவனைப் பாடுவதே வேதங்களின் தொழில். இருந்தும் அவன் பெருமை விரிந்து கிடப்பதால் வேதங்களின்தொழிலும் நிறைவுறுவதில்லை. பக்தி இலக்கியத்தில் இக்கருத்து, பல இடங்களில், பல வடிவங்களில் வெளியாகிறது.

மூக கவியின் பஞ்சசதியில் ஒரு பாடல் தேவியின் காலிலிருந்து கிளம்பும் தூசிப் படலத்தின் பெருமையைப் பேசும்:

> **"சிவபெருமானின் தலையின் சடையாகிய காட்டில் வாழும் சந்திரன் மேல் இத்தூசி படிவதால் அது மாலை நேரத்துச் சூரியனைப் போல் சிவந்து காட்சியளிக்கும். இந்திராணியின் தலை வகிட்டிலே அது குங்குமம் போல் அமர்ந் திருக்கும். அவளை வழிபடுவோரின் புண்ணியத் தை அது பக்குவப் படுத்தும். காஞ்சியில் வீற்றிருக்கும் தாயின்– பரமேச்வரரின் இல்லக் கிழத்தியினுடைய கால் தூசி எம்மைக் காக்கட்டும்! "**

பிறப்பிலிருந்து பேசாமல் இந்த மூக கவி இறைவியின் அருளால் பேச்சுப் பேற்றை அடைந்த வுடன் அவர் வாயிலிருந்து கவிதை வெள்ளமாகப் புறப்பட்டது. இதன் உண்மை அவர் பாட்டுக்களைப் படிப்பவர்களுக்கே எளிதில் புலனாகும். சற்றுக்

கடு நடையில் அமைந்துள்ள அவரது கவிதை சம்ஸ்கிருதச் சொற்களின் கம்பீரமான சப்த ஜாலங்களை முழக்கிச் செல்லும். அவரது சொல் ஆட்சியை சுவைத்தவர்கள் இறைவியிடம் அவர் கொண்ட ஆழ்ந்த பற்றையும்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"

என்ற அவரது உரமான நெஞ்சுறுதியையும் உணர்ந்து கொள்வார்கள்.

இதுவரை நாம் பார்த்த கவிஞர்களிடமிருந்த வேறுபட்ட ஒரு கவிஞரை - ஒரு கிருஷ்ண பக்தரை இந்நிலையில் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். தில்லியில் அரசாண்ட முகலாயச் சக்கரவர்த்தி அக்பரின் மிக முக்கியமான தளபதி அப்துல் ரஹீம் என்பவர்தாம் அவர். அக்பர் அவருடைய தொண்டைப் பாராட்டுவாராகி அவருக்குக் கான்- இ - கானான் (தலைவருக்குள் சிறந்த தலைவன்) என்ற பட்டத்தை அளித்தார். இந்தத் தளபதி சம்ஸ்கிருத மொழியில் நல்ல புலமை பெற்று அதில் கவிபாடும் திறமையை வளர்த்துக் கொண்டவர். காலை முதல் மாலைவரை போர்க்களத்தில் போரிட்டு அரசுக்கு எதிராகக் கிளம்பும் விரோதிகளை விரட்டியடித்தபின் இரவில் தன் கூடாரத்தில் சம்ஸ்கிருதப் புலவர்களை அழைத்து வைத்துக் கொண்டு இலக்கிய சர்ச்சை நடத்தும் பழக்க முடையவர்.

அப்துல் ரஹீமுக்குக் கண்ணன் மீது பக்தி அதிகம். அவன் மேல் பல சுலோகங்களை இயற்றி இருக்கிறார். அவற்றுள் ஒன்றில்,

"கண்ணா, இரத்தினங்களின் இருப்பிட மாகிய கடலே உன் வீடாகும்; செல்வத்தின் தேவதை யாகிய லக்ஷ்மி உன் மனைவி. ஆகவே உன்னிடம் இல்லாதது எது? எதை நான் உனக்குக் கொடுக்க முடியும்! ஆனால் ராதை என்பவள் உன் மனதைத் திருடிக் கொண்டாள் என்றறிகிறேன். ஆகவே என் மனதை உனக்கு அளிக்கிறேன். ஏற்றுக் கொள்வாயாக!"

என்று பாடினார்.

இன்னொரு சுலோகத்தில் இதைக் காட்டிலும் நுண்ணியமான அரியதொரு கருத்தை அமைத்துப் பாடினார், அப்துல் ரஹீம்.

"க்ஷேத்திரங்களுக்கு அன்பர்கள் யாத்திரை செய்வதன் வாயிலாக நீ சர்வவியா பகன் [எங்கும் இருப்பவன்] என்பதைப் பொய்யாக்கி இருக்கிறார்கள். தெய்வங்களிடையே வேற்றுமை காட்டுவதால் இறைவன் ஒருவனே என்பதையும் அவனைத் துதி செய்வதால் அவன் சொல்லுக்கு அப்பாற்பட்டவன் என்பதையும் அவனைத் தியானம் செய்வதால் அவன் மனித புத்திக்கு அப்பாற்பட்டவன் என்பதையும் அவன் மண்ணில் பிக்கிறான் [அவதாரம் செய்கிறான்] என்பதால் அவன் பிறப்பிலி என்பதையும் பொய்யாக்கி விடுகிறோம். இந்தத் தவறுகளை மன்னிப்பாயாக!"

என்பதே அதன் கருத்தாகும். சகுணமாக இறைவனை வழிபடுவதால் அவன் நிர்க்குணன் என்பதை மறந்து விடு கிறோம் என்பதே இதன் கருத்து. இத்தகு கருத்தாழத்தைப் பல பக்திக் கவிஞர்களிடம் நாம் காண்பதில்லை.

அப்துல் ரஹீம் இயற்றிய ரஹீம் காவியம் என்பதிலிருந்து எடுக்கப்பெற்றவை இவை. இந்நூலைத் தவிர 'மதனாஷ்டகம்' என்ற நூலையும் 'கேதகௌதுகம்' என்ற சோதிட நூலையும் ரஹீம் இயற்றியுள்ளார். இந்த வியக்கத்தக்க மனிதரை உலகம் மறந்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் ருத்திர கவி என்பார் 'கானகானான் சரிதம்' என்ற பெயரில் இவருடைய வாழ்க்கைச் சரிதத்தை ஒரு சம்பூ காவியமாகப் படைத்து வழங்கியுள்ளார்.

12. இன்றைய நிலை

கடந்த இருநூறு ஆண்டுகளாக ஆங்கிலேய ஆட்சியில் இந்தியரின் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் க்ஷீணித்து விட்டது. சம்ஸ்கிருத இலக்கியத்தின் வளர்ச்சி இந்த இரு நூற்றாண்டுகளில் அடியோடு நின்றுவிட்டது என்றே சொல்லலாம். 'வரிசை அறிதலோ அரிதே' என்று பாடிய கபிலரைப் போல் கவிதைப் பெருமை அறியாத செல்வர்களிடம் புலவர்கள் அல்லல்பட்டு அழிந்தனர். மேல்நாட்டு நாகரிகத்தின் செயற்கை ஒளி இந்திய மக்களின் கண்களைப் பறித்து அறிவையும் இழக்கச் செய்து விட்டது. இந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ளச் செலவிடும் நேரத்தில் ஆங்கிலத்தைப் பயின்றால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையலாம் என்ற மயக்கம் நம் நாட்டவர்க்கு ஏற்பட்டது. தமிழையும் சம்ஸ் கிருத்தையும் கற்பதே இழிவு, இந்தியன் என்று சொல்லிக் கொள்வதே ஓர் அவமானம் என்றும் நம் நாட்டவர் நினைக்கத் தொடங்கினர்.

இப்படி ஒரு நூற்றாண்டு கழிந்தது. இரவும், பகலும் மாறி மாறி வருவதே உலகின் இயல்பு. நம்

நாட்டிலும் நெடிய இவ்விரவு கழிந்து மெல்ல மெல்ல அருணன் உதிக்கத் தொடங்கினான். 'நம் நாடு நமதே' என அரசியல் துறையில் மக்களுக்கு உணர்வு தோன்றியது. இதை ஒட்டியே எழுந்தவை மதப்பற்றும், மொழிப்பற்றும் எனலாம். நம் முன்னோர்களின் சமயம், தாய்மொழி என்ற முறையில் மக்களுக்கு இவற்றின் மேல் அன்பு தோன்றி வளரலாயிற்று. மேலை நாட்டு நாகரிகம் உள்ளத்திற்கு நிலையான சாந்தியைத் தருவதில்லை. பணத்தை மலையாகக் குவிப்பதாலும், இயந்திரங்களை விருத்தி செய்து கொண்டு போவதாலும் வாழ்க்கையில் இன்பத்தை அடைந்துவிட முடியாது. மேல்நாட்டு அறிஞர்களும், நம் நாட்டுப் பெரியோர்களும் இதனை உணர்ந்து வெளியிட்டபொழுது இந்தியர்களிடையே பெருத்த பரபரப்பு ஏற்பட்டது. அமைதியைத் தராத மேல்நாட்டு நாகரிகத்தை விட்டு, ஆயிரம் தலைமுறைகளாக மக்கள் மனச் சாந்தியை அளித்து வரும் நம் சமயம், நம் பண்பாடு, நம்முடைய வாழ்க்கை முறை இவற்றில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார்கள்.

இச் சூழ்நிலையில் மேல்நாட்டிலிருந்து வந்த சர் வில்லியம் ஜோன்ஸ், மாக்ஸ்முல்லர் போன்ற அறிஞர்கள் சம்ஸ்கிருத இலக்கியத்தைக் கற்றுணர்ந்து பல நுல்களை இயற்றி அவற்றின் வாயிலாக இதன் பெருமையை உலகிற்குப் பறை சாற்றினார்கள். 'மேல் நாட்டவனே புகழ்கிறான்' என்ற காரணத்தால் நம்மவர்கள் சம்ஸ்கிருத இலக்கியத்தில் கருத்தைச்

செலுத்தத் தொடங்கினார்கள். விவேகானந்தரும், காந்தியும் ராஜாஜியும் சம்ஸ்கிருதத்தின் பெருமையைத் தமது பேச்சிலும் எழுத்திலும் பாராட்டியதால் மக்களுக்குப் பின்னும் இத்துறையில் ஊக்கம் ஏற்பட்டது. அரசியல் சுதந்திரம் கிடைத்த பிறகு இந்த ஊக்கம் பெரியதாக வளர்ந்து ஒரு மறுமலர்ச்சியாக இன்று இதழ் விரிந்து நிற்கிறது.

ஆனால் இந்த இருண்ட உலகத்திலும் - புரவலர் இல்லாது புலவர் வாடிய காலத்திலும் - சில புலவர்கள் சம்ஸ்கிருதத்தில் உயர்ந்த கவி பாடியிருக்கிறார்கள். திருவிசைநல்லூர் ஸ்ரீதர வேங்கடேசர் சம்ஸ்கிருதத்தில் ஒப்பற்ற புலமை பெற்றவர். சிறந்த ரமண பக்தரான காவியகண்ட கணபதி சாஸ்திரியின் கவிதை, பக்தர்களையும் ரசிகர்களையும் ஒருங்கே மெய் சிலிர்க்கச் செய்கிறது. கௌடம் என்ற வங்கத்திலும், மகாராஷ்டிரத்திலும், கோதாவரி தீரத்திலும், காவிரிக் கரையிலும் சம்ஸ்கிருதப் பயிர் செழித்து வளர்ந்தது. வங்கக் கவி ஹேமசந்திர ராய், மகாராஷ்டிரத்து இலக்கண வித்துவான் பாண்டாரகர், காசிப் பண்டிதர் பகவான்தாஸ், மன்னார்குடி ராஜு சாஸ்திரிகள், ★மூன்று நாராயணர்கள், மகா மகோபாத்தியாய லக்ஷ்மணசூரி போன்ற அறிஞர்களை இங்கு நினைவு கூர்வோம்.

★மேதா ஸ்ரீ நாராயண சாஸ்திரிகள், பட்ட ஸ்ரீ நாராயண சாஸ்திரிகள், சுவேதாரணியம் நாராயண யஜ்வா.

இன்றைய சம்ஸ்கிருதப் புலவர்களில் சிலர் பழைய மரபை ஒட்டியே கவி பாடுகிறார்கள். சிலர் புது யுகத்தின் கருத்துக்களைத் தம் கவிதைகளில் வெளியிடுகிறார்கள். மகாமகோபாத்தியாய பண்டித ராஜ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், முன் வகையைச் சேர்ந்தவர்கள்; இவர்கள் சாவித்திரியின் கதையைச் 'சதி சரிதம்' என்ற மகா காவியமாகப் பாடியிருக்கிறார்கள். இயற்கை வருணனையாக அமைந்த 'ப்ரகிருதி விலாச'மும் இறைவியின் துதியாக இயற்றப்பட்ட 'ஸ்தவரத்தினத் திரயமும் உயர்ந்த கலை சிருஷ்டிகள். பழைய மரபை ஒட்டி எழுதும் மற்றொரு புலவர் பங்களூர் ஸ்ரீ நாகராஜன்; இவர்கள் 'சீதா ஸ்வயம்வரம்', 'சபரி விலாசம்' என்ற காவியங்களை இயற்றியிருக்கிறார்கள். எளிய நடையில் அழகிய சொற்களைக் கையாண்டு கவிதை புனையும் மிகச் சிலரில் ஸ்ரீ நாகராஜனும் ஒருவர்.

புதிய கருத்துக்களைச் சம்ஸ்கிருதக் கவிதையில் இயற்றி வெளியிடும் கவிகளில் ஸ்ரீ வியாசராய சாஸ்திரி, டாக்டர் ஸ்ரீ. வே. ராகவன், ஸ்ரீ. வி. சுப்பிரமணிய ஐயர் இவர்களை முதன்மையாகக் கூறலாம். ஸ்ரீ ராகவனின் கவிதையில் உயர்ந்த கருத்துக்கள் நல்ல நடையிலே அமைந்திருக்கக் காணலாம் .சங்கீதத்திலும்

சம்ஸ்கிருதத்திலும் ஒருங்கே புலமை பெற்ற ஸ்ரீ ராகவன் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துசுவாமி தீட்சிதரைப் பற்றிச் சிறந்ததொரு காவியம் இயற்றியிருக்கிறார்.

காளிதாசனின் மேல் மாறாத அன்பு பூண்டவர் ஸ்ரீ ராகவன். "காளிதாசன் விரும்பியது என்ன?" என்ற சிறு நூலில், காளிதாசன் தன் காவியத் தலைவிகளைப் பற்றிச் சிந்திக்க நேரிட்டிருந்தால், அவன் என்ன கருத்தை வெளியிட்டிருப்பான் என்ற கேள்விக்கு விடையாக ஸ்ரீ ராகவன் கூறுகிறார்:-

"சகுந்தலையும் மாளவிகையும் குணங்களெல்லாம் நிரம்பப் பெற்றவர்களே. ஆயினும் அவர்களை நாம் முதலில் பார்க்கும்போது அவர்களின் மேல் நமக்கு ஏற்படும் அன்பை விட முடிவிலே பற்றுப் பெரிதும் அகிமாகி விடுகிறது. இதற்குக் காரணம் தலைவனிடமிருந்து பிரிந்திருந்த பொழுது பிரிவுத் தீ அவர்களின் குண நலன்களைப் பண்படுத்தி விட்டதுதான். உலையில் இடுவதால் அல்லவா மண் பாத்திரத்துக்கு உறுதி ஏற்பட்டு விடுகிறது?"

ஸ்ரீ வியாசராய சாஸ்திரிகள் மகாத்மா காந்தியின் பெருமைபற்றிப் புனைந்துள்ள 'மகாத்ம விஜயம்' என்ற சிறு காவியத்தில் நவீனக் கருத்துக்களைச் சம்ஸ்கிருதத்தில் அழகாக வெளிக் கொண்டு வந்திருக்கிறார்கள். உப்பு சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தவுடன் மகாத்மா இந்திய மக்களுக்குப் பின்வருமாறு உபதேசிக்கிறார்: "ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுபவர்கள் விதேச வஸ்துக்களை விலக்கவேண்டும். அரசினரின் சிறைச் சாலைகளில் விருந்தினராக இடம் பெற வேண்டும் வரி கொடுப்பதையும் மது அருந்துவதையும் தவிர்க்க

வேண்டும். அடி பட்டாலும் கைகூப்பி வணங்கும் பண்பாட்டினை நீங்கள் எல்லோரும் பெற வேண்டும்.''

அஹிம்சையைக் கைக்கொண்டால் என்ன பலன் என்று கேட்பவர்களுக்குக் கவி உறுதியுடன் சொல்வது இதுதான்:

"அஹிம்சை எல்லா விருப்பங்களையும் ஈடேற்றி வைக்கும் காமதேநு என்று அறிய வேண்டும். ஹிம்சையால் சாதிக்க முடியாத வற்றை எல்லாம் அஹிம்சையின் உதவியால் செய்து முடிக்கலாம்."

ஸ்ரீ. வி. சுப்பிரமணிய ஐயரின் 'பத்ய புஷ்பாஞ்சலி' யில் நகரங்களில் சப்தத்தால் ஏற்படும் தொந்தரவுபற்றி வரும் ஆறு சுலோகங்கள் நகைச் சுவையுடன் கூடிய வாழ்க்கை விளக்கமாக அமைகின்றன:

'மிருகங்களின் சப்தங்களுக்கு மேல் காதைக் கிழித்துக் கொண்டு கிளம்புகிறது நகரத்தின் செயற்கையான சப்தம். விற்பவர் களின் கூக்குரலும், பிச்சைக் காரர்களின் கூப்பாடும், மணிகளின் நாதமும். வண்டிகளின் ஓசையும் சேர்ந்து நகரவாசிகளின் மனத்தைச் சுழலச் செய்துவிடுகின்றன. அந்த நாளில் நகர வாழ்க்கை பிடிக்காவிட்டால் சாந்தியை விரும்புபவர்கள் காட்டுக்குப் போய் வசிப் பார்கள். இந்நாளில் இந்தப் பேரரவத்தில், பெரிய நகரத்தில் குடியிருப்பவன் ஒருவன் சாந்தியைக் கண்டுவிட்டான் என்றால், அவனைத் தெய்வமாகத் தான் மதிக்க வேண்டும்!'

இன்றும் இத்தனை இடையூறுகளுக்கிடையிலும் இந்த மொழியில் பல கவிஞர்கள் கவிதைகளைப் படைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சம்ஸ்கிருதக் கவிதையை அச்சிட்டு வெளியிட்டால் யாரும் அதை விலைகொடுத்து வாங்கமாட்டார்கள் என்பதால் இந்தக் கவிதை நூல்களில் பெரும்பகுதி அச்சில் வருவதில்லை. இவ்வாசிரியர் பாலக் காட்டில் இருந்தபொழுது ஒரு கவிஞர் 40 கவிதை நூல்களை இயற்றி வைத்திருப்பதாகச் சொன்னார். இவற்றில் ஒன்றாவது வெளி வந்ததா என்பதே ஐயப்பாடு. வசதியுள்ளவர்கள் சம்ஸ்கிருதத்தில் கவிதை எழுதுவ தில்லை. ஆகவே கவிஞர்கள் தம் நூல்களைத் தாமே தம் செலவில் அச்சிடுவது என்பது நடக்காத ஒன்று. இம்மொழியின் தொண்டுக்காக நிறுவப்பட்ட சங்கங்களும் புதிய நூல்களை வெளியிடுவதில்லை. சம்ஸ்கிருதக் கவிதை நூல்களை வெளியிடுவதில் அரசும் வசதியுள்ள செல்வர்களும் ஊக்கம் செலுத்த வேண்டும்.

இத்தகைய பயங்கரமான சூழலிலும் சிற்சில கவிதை நூல்கள் வெளிவருகின்றன என்பது தான் வியப்புக்குரியது. திரு சுவாமிநாத ஆத்ரேயா காஞ்சி மகாபெரியவர்கள் பற்றி இயற்றிய காவியமும் அவருடைய மற்ற சம்ஸ்கிருதப் படைப் புக்களும் பராட்டத்தக்கவை. மகாமகோ பாத்தியாய பண்டிதராஜ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளும் உயர்ந்த கவிதை புனைந்து உதவி இருக்கிறார்கள்.

ருக்மிணி கண்ணனுக்குத் தூதாக ஒரு அந்தணரை அனுப்பிய கதையை டி. சீனிவாசாச்சாரியார் "விப்ர சந்தேசம்" என்ற தலைப்பில் ஒரு கண்ட காவியமாகப் புனைந்திருக்கிறார். இதில் அந்தத் தூதர் கடந்து செல்ல வேண்டிய பகுதிகளை வருணித்துப்பின் இரண்டாம் பகுதியில் தன் மனக்கிடையைத் திறந்து காட்டிய ருக்மிணியின் காதல் வேகத்தை அழகுறக் காட்டுவார்.

ஆந்திரப் பிரதேசத்தினராகிய புல்லேல ஸ்ரீராமசந்த்ருடு என்னும் சிறந்த புலவர் பல சிறு காவியங்களைத் தொகுத்து சம்ஸ்கிருத தேவிக்கு அணிவித்திருக்கிறார். ஒரு பாடலில்

"நாமே சிந்தித்துப் பெற்ற ஒரு கருத்து பின்னர் சற்றுத் தவறுடையது என்று நமக்குத் தோன்றலாம். அதை நாம் மாற்றிக் கொள்கிறோம். ஆனால் நம் கருத்தைத் தவறுடையது என்று வேறு ஒருவர் சொல்லி விட்டால் நமக்கு அவர் மீது எத்தனை கோபம் வருகிறது! இது [அகங் காரத்திற் பிறந்த] மடமையே அல்லவா?"

என்று பாடுவார். இன்னொரு பாட்டில்,

"காபி சாப்பிட்டுப் பின் தூக்கம், பிறகு தேநீர்ப் பானம், நண்பர்களுடன் அரட்டை, பின் இரவு உணவு, தூக்கம் – இப்படியே காலம் கழிந்து போகிறது! இன்று என்ன சாதித்தேன்? என்ன செய்து முடித்தேன்? என்ற சிந்தனையே மனத்தில் தோன்றுவ தில்லை!"

என்று வீணர்களை நையாண்டி செய்து பாடுவார்.

ஜவஹர்லால் நேருவைக் குறித்த சரமசுலோகப் பகுதியில் ஓரிடத்தில்,

> **"ஒரு நாட்டின் தலைவர்கள் புகழப் பெறு வதற்குக் காரணம் அந்த நாட்டின் சிறப்பும் பலமும்; ஆனால் நேருவே, தங்களது பெயராலும் புகழினாலும் இந்தியாவுக்கு மதிப்பு ஏற்பட்டிருக் கிறது!"**

என்று பாடினார். இன்றைய சமூகத்தைப் பற்றியும் சம்ஸ்கிருத மொழியின் இன்றைய நிலை பற்றியும் இவர் மனம் வருந்திப் பாடிய பாடல்கள் பல. கவிதைகள் புனைவதுடன் இப்புலவர் சம்ஸ்கிருதத்தின் அழகியலைக் குறித்து ஆராய்ச்சி செய்து நூல்களை இயற்றியுள்ளார்.

கடைசியாக, இந்த நூலாசிரியர் (அ.வெ. சுப்பிரமணியன்) இயற்றியுள்ள சம்ஸ்கிருதக் கவிதை நூல்களைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம். அவர் இயற்றிய சில சிறு கவிதைகளை ஒரு நண்பர் தொகுத்துக் "கல்பனா ஸௌரபம்" என்ற தலைப்பில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டார். இதில் ஒரு சிறு கவிதை, ஏழையின் கதையைக் கூறுவது. அவருக்குப் பண வசதி இல்லாததால் ஏற்பட்ட வெறுப்போடு கடைகளில் பண்டங்கள் கலப்புச் செய்யப்பட்டு விற்கப்படுவதால் தோன்றிய வெறுப்பும் சேர்ந்து கொண்டது. "சே, என்ன உலகம்! பால் வாங்கினால் அதில் தண்ணீர்க்கலப்பு! மண்ணையும் கல்லையும் கலந்துதான் உணவுப்

பண்டங்களை விற்கிறார்கள்! வாழ்க்கையே அலுத்து விட்டது! தற்கொலை செய்து கொள்வதே நல்லது!" என்ற முடிவுக்கு வந்தார். யாரிடமோ ஒரு தொகை கடனாக வாங்கிக் கொண்டு 20 தூக்க மாத்திரைகளை வாங்கி வந்தார். 5,6 மாத்திரைகள் சாப்பிட்டாலே மரணம் உறுதி. ஜாக்கிரதைக்கு 20 மாத்திரைகளையும் சாப்பிட்டுப் படுத்தார். காலையில் பார்த்தால் அவர் சாகவில்லை! நன்றாகத் தூங்கியதால் நல்ல தெம்புடன் எழுந்து, "என்ன ஆயிற்று? நான் ஏன் சாகவில்லை?" என்று தன்னையே கேட்டுக் கொண்டார். விடை மனத்தில் பளிச்சிட்டது. தூக்க மாத்திரைகளில் அநியாயக் கலப்பு! "இங்கு வாழ்வது கஷ்டம் என்றால் இறப்பதும் கஷ்டமாக இருக்கிறதே!" என்று புலம்பிய வண்ணம் வாழ்க்கையைத் தொடர்ந்தார், அந்த வறியவர்!

அடுத்து இந்நூலாசிரியர் தமிழில் சிறந்த கவிதை நூல்களில் ஒன்றாகிய முத்தொள்ளாயிரத்தை சம்ஸ்கிருதக் கவிதையாக மொழிபெயர்த்தார். இதை மயிலை குப்புசாமி சாஸ்திரி ஆராய்ச்சி நிறுவனத்தார் அச்சிட்டு வெளியிட்டனர். இது தவிரக் குறுந் தொகையிலிருந்து 200 பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றை 300 சம்ஸ்கிருத சுலோகங்களாக மொழி பெயர்த்ததைத் தில்லி சாகித்ய அகாதமி அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இந்நூலில் இந்தப் பாடல்களுக்கு ஆங்கிலத்திலும் கவிதை வடிவில் மொழி பெயர்ப்புச் செய்து அளிக்கப்பட்டிருக்கிறது. நூலின் பெயர் 'சிருங்கார பத்யா வளி'.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தத்துவக் கருத்துக்களை வெளியிடுவதற்குச் சம்ஸ்கிருத மொழி ஒப்பற்ற சாதனமாக இருந்தது; இன்றைய இயந்திர உலகத்தின் நவீனக் கருத்துக்களையும் அழகாக வெளியிட முடியும் என்றும், அநேகர் வெளியிடும் முயற்சியில் இன்னும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் மேற்சொன்ன உதாரணங்களினால் அறிந்து கொள்கிறோம். இது மொழியின் ஜீவனையும் வளப்பத்தையும் காட்டுகிறது. இது உண்மையில் இறவாத அமரமொழியே யாகும் என்பதும் நன்கு புலனாகிறது.

சம்ஸ்கிருத மொழியில் அந்த நாளிலிருந்தே இலக்கிய நூல்களைத் தவிர ஞானத்தைப் போதிக்கும் நூல்களும் இடையறாமல் வரிசையாக இயற்றப் பட்டு வந்திருக்கின்றன. அரசியல் - பொருளா தாரத்துக்குச் சாணக்கியனின் அர்த்த சாஸ்திரம், ஆயுர்வேத நூல்களாகிய சரகஸம்ஹிதை, அஷ்டாங்க ஹ்ருதயம், ஜோதிஷத்துக்கு வராக மிஹிரரின் ஹோரை, ஆரியபட்டர், பாஸ்கராசாரியர் இவர்களின் கணித நூல்கள், கல்ஹணனின் வரலாற்று நூலாகிய ராஜதரங்கிணி, பரத முனிவரின் நாட்டிய நூல், அசுவ சாஸ்திரம், கந்தர்வ வேதம், தநுர் வேதம், வாத்ஸ்யா யனரின் காம சூத்திரங்கள் உள்ளீடாகச் சம்ஸ்கிருத நூல்கள் பல, எல்லா அறிவுத்துறைகளிலும் புனையப் பட்டிருக்கின்றன. அந்த அந்தத் துறைக்கு வேண்டிய கலைச்சொற்கள் எல்லாம் சம்ஸ்கிருத மொழியில் வழங்கிவருகின்றன. அந்நாளைய பாரத

சமுதாயத்தின் தினசரி வாழ்க்கையில் இம்மொழி வழிகாட்டியாக அமைந்துள்ளன; இன்றியமையாத ஒரு பெருஞ் சாதனமாகத் தொழில் புரிந்து பாரத சமுதாயத்தின் ஆக்கத்துக்கு இம்மொழி பல வகைகளிலும் உதவியாக இருந்தது. இன்று பல காரணங்களினால் இதன் உதவியை நாம் இழந்து வருகிறோம்.

பாரத நாடு உயர்ந்த நிலையைத் திரும்பவும் அடைய வேண்டுமானால் - நம் பண்பாட்டையும், நமக்கே உரிய ஒப்பற்ற வாழ்க்கை முறையையும் திரும்பவும் நடைமுறையில் கொண்டுவர வேண்டு மானால் - சம்ஸ்கிருத மொழியை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் ஆக்கத்தினால் சமுதாயத்தின் நிலையை உயர்த்தி விடலாம். அதை நம் நாட்டவர்கள் பெருவாரியாகக் கற்றுக் கொள்வதனால், அறிவுத் துறையிலும், ஆன்மிகத் துறையிலும் நம் வாழ்க்கையை வளமாக்கலாம். இன்று மேனாட்டிலும் இங்கும் கணினிப்பொறி பற்பல பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது; இதற்கு உலக மொழிகளில் சம்ஸ்கிருதமே சிறப்பாகப் பயன்படும் என்று மேனாட்டவர் பலர் கருதுகிறார்கள்! இந்த மொழியைக் கற்பதாலும் கற்றவர்களைக் கௌரவிப் பதனாலும் நம் நாட்டின் நிலையை உலக மக்களின் நோக்கிலே உயர்த்தி விடலாம்.

இந்தப் பணியில் முழு மனத்துடன் ஈடுபட வேண்டும் என்று நவபாரதத்தின் பெருமக்களை இறைஞ்சி வேண்டுகின்றேன்.